# தமிழ் நூல் அறிமுகம்

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் சென்னை-14

# தமிழ் நூல் அறிமுகம்

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
46, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
சென்னை-600 014.

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | THAMIZH NOOL ARIMUGAM |
| Author | : | K. V. JAGANNATHAN |
| Publisher & Copy right | : | Amudha Nilayam Ltd., 46, Royapettah High Road, Madras-600 014. |
| Language | : | Tamil |
| Date of Publication | : | December 1991. |
| Paper Used | : | 10.5. k.g. Double Crown |
| Types Used | : | 10pt. |
| Number of Copies | : | 1000 |
| Number of Pages | : | xii + 276 |
| Price | : | Rs 36/- (Rupees Thirty Six only) |
| Printer | : | Sri Gomathy Achagam Madras-600 005. |
| Wrapper | : | Manian Selvan |
| Subject | : | Introduction to Sangam Literature |

# முன்னுரை

தமிழில் உள்ள நூல்கள் எண்ணிறந்தன. தமிழில் இலக்கியம் தோன்றிப் பல நூற்றாண்டுகள் ஆயின; ஆகவே ஆயிரக் கணக்கான நூல்கள் தமிழில் தோன்றியிருக்க வேண்டும். தோன்றுகின்ற நூல்கள் யாவும் நிலைநிற்ப தில்லை. கால வெள்ளத்தில் அழியாமல் நிற்பவை சிலவே. தகுதிகாரணமாக அந்த நூல்கள் மங்காமல் ஒளிர் கின்றன.

இப்போது தமிழில் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம். அது இலக்கண நூல். பழமையான நூலாயினும் இன்றும் அது பயன்படுவதாக இருக்கிறது. அதற்கு அடுத்தபடி பழமையானவை சங்க நூல்கள். தமிழிச் சங்கங்கள் மூன்று இருந்தன என்றும், அந்த மூன்றிலும் பல பெரும் புலவர்கள் இருந்து தமிழாராய்ந்தார்கள் என்றும், பல நூல்களை இயற்றி னார்கள் என்றும் ஒரு வரலாறு வழங்குகிறது. கடைசியில் மூன்றாவது சங்கம் பாண்டி நாட்டில் மதுரையில் இருந்தது. அந்தச் சங்கத்தினரால் இயற்றப் பெற்ற நூல் களில் இப்போது கிடைப்பவை பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்பன. அவற்றை அடுத்துத் தோன்றியவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

பாரத நாட்டில் வழங்கும் மொழிகளில் வடமொழியும் தமிழ்மொழியும் மிகப் பழமையானவை. தமிழ்நாகரிகம் தொன்மையானது. ஸிந்துநதி வெளியில் மொகெஞ்சதடோவில் பல்லாயிரம் ஆண்டுகளுககு முன் இருந்தது பழம் திராவிடர் நாகரிகமென்றும், பழந்தமிழ் நூல்களிற்

காணும் சொல்லுக்கும் பொருளுக்கும் அங்கே காணப்படுவனவற்றுக்கும் பல ஒப்புமைகள் இருக்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இப்போது கிடைக்கும் பழந்தமிழ் நூல்களிலிருந்து அக்காலத் தமிழர் வாழ்க்கையை ஒருவாறு தெரிந்து கொள்ள இயலும். தனிமனிதன்; சமுதாயம் என்ற இரண்டு வகையிலும் தமிழர் எவ்வாறு சிறந்து நின்றனர் என்பதைக் காட்டும் கண்ணாடிகள் அந்த நூல்கள்.

பொதுவாகப் பாடல்களை அகமென்றும் புறமென்றும் இருபிரிவாகப் பிரிப்பது தமிழ் மரபு. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் இன்பத்தோடு தொடர்புடையது அகமென்றும், மற்ற மூன்றையும் பற்றியவை புறமென்றும் வகுக்கப்பெறும்.

அப்பொருளமைதியுள்ள நூல்களில் காதல் வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் சொல்லப் பெறுகின்றன. தமிழுக்கே சிறப்பானது, வரையறையானது என்று சிறப்பித்து இந்த அகப்பொருளைச்சொல்வார்கள். உலகம் முழுவதற்கும் காதல் வாழ்க்கை பொதுவானதென்றாலும் இலக்கியமாக அந்த வாழ்க்கையைச் சொல்லும்போது இன்னவாறு அமைக்கவேண்டும் என்ற வரையறை தமிழில் இருக்கிறது. அந்த வரையறைதான் தமிழுக்கே உரியது. அகப்பொருள் நூல்களில் வரும் காதல் காட்சிகள் யாவும் அப்படி யப்படியே தமிழ் நாட்டில் நிகழ்ந்தவை என்று கொள்ளக் கூடாது. 'இல்லது, இனியது, புலவரால் நாட்டப் படுவது' என்று அந்த முறையைச் சொல்வர், இறையனார் அகப்பொருள் உரையாசிரியர்.

காதல் உணர்ச்சியை மிகத்தூய்மையாக வைத்துப் போற்றினர் தமிழர். "மலரினும் மெல்லிது காமம்" என்பது திருக்குறள். பெயர் குறித்துச்சுட்டிய ஒருவருடன் தொடர்புடையதாகக் காதல் இருக்குமாயின் அது அகப்பொருளாகாமல் புறத்தே நின்றுவிடும். கடவுள் சம்பந்த

மான காதலாக இருந்தாலும் அது புறம்தான். "சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் படா" என்று இலக்கண நூல் கூறுகிறது.

காதல் உள்ளத்தின் துடிப்புகளைத் தமிழ்க்கவிதை நுட்பமாகச் சொல்கிறது. காதலைக் களவு என்றும் கற்பு என்றும் இரு பிரிவாகப் பிரிப்பர். அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிக் கட்டிளங்காளை ஒருவனும் அழகிய பெண் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பி ஈடுபட்டு மனம் ஒன்றி இன்புறுவது களவுக் காதல். திருமணம் செய்து இன்புறுவது கற்புக் காதல். ஒருவனும் ஒருத்தியுமாக மனம் ஒன்றி இணையும் இந்த உறவு ஒரு பிறவியில் அமைவது அன்று; பிறவிதோறும் தொடர்ந்து வருவது. 'கண்டதும் காதல்' என்பதனால், இது அப் பொழுதைக்கு உணர்ச்சி வசப்படுவதனால் அமைவது என்று எண்ணக் கூடாது. அது நிலத்தினும் பெரியது; கடலினும் ஆழமானது; வானத்திலும் உயர்ந்தது; தேனினும் இனியது.

இயற்கைச் சூழ்நிலையில் காதலர்கள் ஒன்றுவதும் பிரிவதும் பல்வேறு நிலைகளில் பல பல காட்சிகளாக விரியும். அவர்களுடைய காதல் வாழ்க்கையாகிய நாடகத்துக்கு நிலைக்களமாக நிலமும் காலமும் மரமும் செடியும் மலரும் மணமும் மயிலும் குயிலும் மானும் மரையும் புலியும் சிங்கமும் தோற்றம் அளிக்கும். அருவியும் ஆறும் சுருதி போடும். இயற்கையை எவ்வளவு நுட்பமாகப் பண்டைக் கவிஞர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதை அவர்களின் கவிதை எடுத்துக் காட்டும். உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை எவ்வாறு கூர்ந்து கவனித்திருக்கிறார்கள் என்பதும் அவற்றால் புலனாகும்.

புறப்பொருளில் வீரம் தலைசிறந்து நிற்கும். அந்தக் காலத்துப் போர் முறைகளையும் போரிலும் அறம் இருந்த பாங்கையும் புறத்திணை பற்றிய நூல்களில் காணலாம். அரசர்கள், வள்ளல்கள், வீரர்கள், மகளிர் முதலியோரின் இயல்புகளை அவை சொல்கின்றன. புலவர்களைப்

புரவலர்கள் போற்றி ஆதரித்த வகைகளெல்லாம் அவற்றால் தெரிய வரும். வள்ளன்மை எவ்வெவ்வா றெல்லாம் உருப்பெறுகிற தென்பது சிந்திக்கச் சிந்திக்க வியப்பைத் தரும். தமிழ் மக்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் புறத்துறைப் பாடல்கள் மிகவும் உதவியாக உள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பல நீதிநூல்கள் உள்ளன. அவற்றில் தலைசிறந்து நிற்பது திருக்குறள். மனித வாழ்க்கை உயர்வதற்குரிய நெறி முறைகளை அந்த நூல் மிக அருமையாகச் சொல்கிறது. நீதி நூல்கள் காலத் தாலும் இடத்தாலும் வேறுபடும்; பயன் இல்லாமலும் போய்விடும். ஆனால் திருக்குறளோ மனிதசாதியின் அடிப்படைப் பண்புகளைத் தொகுத்து உரைக்கிறது. அதனால் உள்ளவற்றில் பெரும்பாலான கருத்துக்கள் இன்றும் உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் உள்ளன. தமிழுக்குத் திருக்குறள் கிடைத்தது ஒரு வரப்பிரசாதம்.

தமிழ் நாட்டில் பழந்தமிழ் நூல்களைப் படிக்கவும் அவற்றைப் பற்றிக் கேட்கவும் அவற்றை ஆராயவும் ஆர்வம் உள்ளவர்கள் மிகுதியாகி வருகிறார்கள். மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் சங்க நூல்களை வெளிக்கொணர்ந்த காலத்திலேயே தமிழில் ஒரு புது யுகம் தோன்றி விட்டது இப்போது பழந்தமிழ் நூல்களின் பெருமையைப் பேசுவது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது.

பிற நாட்டினர் சங்க நூல்களை மொழி பெயர்க்கிறார்கள்; ஆராய்கிறார்கள்; ஆராய்ச்சியின் பயனை நூல்வடிவில் வடித்துத்தருகிறார்கள். உலகத் தமிழ்மா நாடுகளில் சங்க இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கிறார்கள். மேலை நாடுகளில் உள்ள பல பல்கலைக் கழகங்களில் தமிழைப் பயிற்றுகிறார்கள். தமிழ் ஆராய்ச்சித் துறையும் உண்டு.

இவ்வாறு நாளடைவில் விரிவாகவும், ஆழமாகவும் பரவிவரும் தமிழறிவும் தமிழார்வமும் தமிழருக்குப்

பெருமிதத்தை உண்டாக்குவன. பிறநாட்டார் பழந்தமிழ் நூல்களில் ஆர்வம் கொண்டு பயிலும்போது தமிழர்கள் பின்னும் அன்போடு பயிலவேண்டும். தமிழ்த் துறையில் பணிபுரிவோரும் பயில்வோரும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நூல்களை ஆழமாக ஆராய்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. வாழ்க்கையில் வெவ்வேறு துறையில் ஈடுபட்டவர்களுக்கும், தமிழல்லாத பிறதுறைகளில் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்கும் எல்லா நூல்களையும் பயில்வதென்பது இயலாத காரியம். என்றாலும் தமிழில் என்னதான் இருக்கிறதென்று தெரிந்து கொண்டால் உதவியாக இருக்கும். தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு என்று வெறும் பெயர்களைச் சொல்லிக் கொண்டு பெருமையடிப்பதைவிட, பழைய தமிழ் நூல்களைப் பற்றிச் சுருக்கமாக ஓரளவு தெரிந்திருப்பது நல்லது. ஆராய்ச்சித் துறையில் ஈடுபடும் மாணாக்கர்கள் கூட முதலில் இவ்வாறு பொதுவகையில் தமிழ் இலக்கியங்களைப் பற்றிப் பிழம்பாகத் தெரிந்து வைத்திருப்பது பயன் தரும்.

இந்தக் கருத்தை மனத்தில் கொண்டே, ''அறிமுகம்'' என்ற தலைப்பில் தமிழ் நூல்களைப் பற்றித் தனித்தனியே சுருக்கமாகத் தெரிவிக்கும் கட்டுரைகளை **''மஞ்சரி''**யில் எழுதத் தொடங்கினேன். அந்தக் கட்டுரைகளைப் படித்த பலர் அவை பயனுடையனவாக இருக்கின்றன என்றனர். மாணாக்கர்கள் படித்துப் பாராட்டினர். புத்தக வடிவில் வந்தால் எப்போதும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பலர் கூறினர்; எழுதினர் பலர்.

அவர்கள் விருப்பத்தை அறிந்துகொண்டு, இந்த நூலை வெளியிடுகிறேன். **''தமிழ் நூல் அறிமுகம்''** என்று சற்று விளக்கமான பெயரை இந்த நூலுக்கு வைத்தேன்.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல்களைப்பற்றிய

விளக்கங்களைக் கூறும் கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கி யுள்ளன. 'மஞ்சரி'யில் வெளிவந்த கட்டுரைகளைச் சிறிது செப்பம் செய்து இந்த நூல் வடிவில் அமைத்தேன்.

இந்தக் கட்டுரைகள் நூல்களைப்பற்றி ஓரளவு அறிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்று எண்ணு கிறேன். ஆழமான ஆராய்ச்சி நூலாகவோ, விரிவான திறனாய்வாகவோ, எல்லாப் பகுதிகளையும் பற்றி விளக்கும் விளக்கமாகவோ இதைக் கொள்ளக் கூடாது: தமிழ்ப் பண்டை நூல்களில் என்ன என்ன எப்படி எப்படிச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பதையும், நூலாசிரியர் களைப்பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ள இந்தக் கட்டுரைகள் உதவவேண்டும் என்பதே என் நோக்கம்.

இதில் உள்ள கட்டுரைகளை வெளியிட உதவிய 'மஞ்சரி' ஆயிரியர் திரு **த. நா. சேனாபதி** யவர்களுக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கி. வா. ஜகந்நாதன்**

'காந்தமலை'
சென்னை-28

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | ... | I |
| தொல்காப்பியம் | ... | 1 |
| சங்க நூல்கள் | ... | 7 |
| திருமுருகாற்றுப்படை | ... | 12 |
| பொருநராற்றுப்படை | ... | 20 |
| சிறுபாணாற்றுப்படை | ... | 26 |
| பெரும்பாணாற்றுப்படை | ... | 35 |
| முல்லைப்பாட்டு | ... | 40 |
| மதுரைக் காஞ்சி | ... | 45 |
| நெடுநல் வாடை | ... | 54 |
| குறிஞ்சிப் பாட்டு | ... | 61 |
| பட்டினப் பாலை | ... | 69 |
| மலைபடுகடாம் | ... | 75 |
| நற்றிணை | ... | 81 |
| குறுந்தொகை | ... | 91 |
| ஐங்குறு நூறு | ... | 97 |
| பதிற்றுப் பத்து | ... | 104 |
| பரிபாடல் | ... | 110 |
| கலித்தொகை | ... | 118 |
| அகநானூறு | ... | 125 |
| புறநானூறு | ... | 133 |
| நாலடியார் | ... | 143 |
| நான்மணிக் கடிகை | ... | 152 |
| இன்னா நாற்பது | ... | 161 |

| | | |
|---|---|---|
| இனியவை நாற்பது | ... | 167 |
| கார் நாற்பது | ... | 173 |
| களவழி நாற்பது | ... | 180 |
| ஐந்திணை ஐம்பது | ... | 186 |
| ஐந்திணை எழுபது | ... | 194 |
| திணைமாலை நூற்றைம்பது | ... | 203 |
| திணைமொழி ஐம்பது | ... | 210 |
| திருக்குறள் | ... | 219 |
| திரிகடுகம் | ... | 227 |
| ஆசாரக் கோவை | ... | 234 |
| பழமொழி | ... | 241 |
| சிறுபஞ்ச மூலம் | ... | 251 |
| முதுமொழிக் காஞ்சி | ... | 257 |
| ஏலாதி | ... | 263 |
| கைந்நிலை | ... | 269 |

# தமிழ் நூல் அறிமுகம்

# தமிழ் நூல் அறிமுகம்

## 1. தொல்காப்பியம்

"பழைய காலத்தில் உரை நடையில் நூல்கள் இருந்தனவா? ஆங்கிலேயர்கள் இந்த நாட்டுக்கு வந்த பிறகு தான் உரைநடை நூல்கள் எழுந்தனவா?"

இப்படி ஒரு கேள்வி.

"பாட்டும் பாட்டுக்கு உரையுமாக இருக்கலாம். தனியே உரைநடையில் நூல்கள் இருந்தன என்று தெரியவில்லை."

இப்படி ஒரு சமாதானம்.

இந்தச் சமாதானம் சரியா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? தக்க ஆதாரத்துடன் சொன்னால் தெரிந்து கொள்ளலாம்.

"பாட்டுக்கு உரை எழுதுவது அல்லாமல் உரை நடையில் நான்கு வேறு வகைகள் இருந்தன. பாட்டும் உரை நடையுமாகச் சில நூல்கள் உண்டு. அவற்றில்

பாட்டுக்களுக்கு இடையில் உரைநடை வரும். அது ஒரு வகை. பாட்டே இல்லாமல் கருத்தைத் தொடர்ந்து உரைநடையில் தெரிவிப்பது ஒரு வகை. புனைந்துரையாக அமைந்த கதை ஒரு வகை. உள்ளதைப் பரிகசித்து எழுதியது ஒரு வகை. இப்படி நான்கு வகையில் உரைநடை பயன்பட்டது; உரைநடை நூல்கள் இருந்தன.''

இப்படிச் சொன்னால், ''எந்த நூற்றாண்டில்?''என்று கேள்வி உடனே எழும். ''மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே தமிழில் இப்படி உரைநடை நூல்கள் நான்கு வகையாக இருந்தன'' என்றால் நம்பாதவர்களே பெரும்பான்மையாக இருப்பார்கள்; நம்புபவர்கள் மூக்கின் மேல் கை வைப்பார்கள்.

உரைநடையைப் பற்றிய இந்தக் கருத்து உண்மையானது; கற்பனை அன்று. ஆதாரம் வேண்டுமா? தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை எடுத்துப் பாருங்கள்.

தொல்காப்பியனார் என்ற பெரும் புலவர் இயற்றியது தொல்காப்பியம் என்ற இலக்கணம். அதுதான் இப்போது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிக மிகப் பழமை யானது. அதன் காலத்தைப் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சங்க காலத்து நூல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை. அவற்றுக்கும் முந்தியது தொல்காப்பியம்; இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டு முதல் மூவாயிரம் ஆண்டுவரை முந்தியது என்று சொல்லலாம்.

தொல்காப்பியர் அகத்தியருடைய மாணாக்கர் என்று ஒரு வரலாறு உண்டு. அகத்தியர் மூன்று தமிழுக்கும் ஓர் இலக்கணம் இயற்றினார். அதற்கு அகத்தியம் என்று பெயர். அவருடைய மாணாக்கராகிய தொல்காப்பியர் இயல் தமிழுக்கு இலக்கணம் இயற்றினார். ஆசிரியர்

பெயர் காரணமாகத் தொல்காப்பியம் என்ற பெயரை அது பெற்றது. மிகப் பழங்காலத்தில் அது தோன்றினாலும் இன்றும் புலவர்கள் படிக்கும் நூலாகவும், இலக்கண அமைதியைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற ஆதார நூலாகவும் அது விளங்குகிறது.

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும் பகுதிகளை உடையது அது. ஒவ்வொரு பகுதியையும் அதிகாரம் என்ற பெயரால் வழங்குவர். எழுத்ததிகாரம் முதலிய மூன்று அதிகாரங்களிலும் தனித்தனியே ஒன்பது ஒன்பது பிரிவுகள் உள்ளன. அவற்றை இயல்கள் என்று சொல்வார்கள்.

எழுத்ததிகாரத்தில் தனியெழுத்துக்களின் பெயர் தன்மை, பிறப்பு முதலியவற்றைக் காணலாம். எழுத்தும் எழுத்தும் சேர்வதைப் புணர்ச்சி என்று சொல்வது இலக்கண பரிபாஷை. அவ்வாறு சேரும்போது உண்டாகும் மாற்றங்களை மூன்று இயல்கள் சொல்கின்றன. விழா + ஆட்டம் = விழாவாட்டம்; மரம் + ஒடிந்தது = மரமொடிந்தது; இலை + தடுக்கு = இலைத்தடுக்கு; கால் + தடுக்கிற்று = காறடுக்கிற்று. இப்படியெல்லாம் ஏன் மாற வேண்டும்? இவற்றுக்குரிய விதிகளை இந்தப் பகுதிகளில் காணலாம். எந்த எழுத்துக்கும் பின்னால் எந்த எழுத்தும் வரலாம் என்று பொதுவாக நமக்குத் தோன்றும். க் என்ற எழுத்துக்குப் பின் ழ வருமா? வராது. க் என்ற எழுத்தும் க என்ற எழுத்தும் தக்க என்பதில் சேர்ந்து வருகின்றன. அப்படியே சகரம் தச்சன் என்பதில் வருகிறது. ழகரம் அப்படி வருமோ? பழ்ழம் என்பது போலச் சொல் உண்டா? இல்லை. இதைப் பற்றி யோசிக்கிறபோதுதான் உண்மை தெரிகிறது. இவற்றையெல்லாம் எழுத்ததிகாரத்தில் காணலாம்.

சொல்லதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரிஎன்று உள்ள நால்வகைச் சொற்களைப் பற்றிய இலக்கணம் வருகிறது. மனிதர்களில் ஆண் பால் என்றும், பெண் பால் என்றும் வேறுபாடு தெரிகிறது. இரண்டு பாலும் அல்லாத அலி ஒருவர் இருக்கிறார். அவரை எந்தப் பாலில் சொல்கிறது? இது ஒரு சிக்கல். ஆணும் அல்லாமல் பெண்ணும் அல்லாயல் இருந்தாலும் அந்தப்பேர்வழி ஒன்று ஆணோடு சேர்ந்திருப்பார்; அல்லது பெண்களோடு சேர்ந்திருப்பார். அலி யென்று தனியாக இருப்பது வழக்கம் அன்று. எந்தப் பாலோடு சேர்கிறாரோ அந்தப் பாலைச் சொல்லி விடு என்று தொல்காப்பியம் வாழ்க்கையை ஒட்டி வழி வகுக்கிறது. கடவுள் ஆண் பாலா, பெண் பாலா; ஒன்றன் பாலா? அவர் எல்லாம் கடந்தவர். எப்படிச் சொல்வது? எப்படிச் சொன்னாலும் ஏற்பார். எப்படி வழக்கமோ அப்படியே சொல்லலாம்; தவறு இல்லை. இப்படிப் பல செய்திகள் சொல்லதிகாரத்தில் வருகின்றன.

மூன்றாவது பகுதியாகிய பொருளதிகாரந்தான் பெரியது. பொருள் இலக்கணம் தமிழுக்கே சிறப்பாக அமைந்தது என்று சொல்வார்கள். பொருளை அகப் பொருள் என்றும், புறப்பொருள் என்றும் பிரிப்பார்கள். காதலைப் பற்றிச் சொல்வது அகப்பொருள். பெரும் பாலும் வீரத்தைப் பற்றிச் சொல்வது புறப்பொருள். அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லும் உறுதிப் பொருள்கள் நான்கில் இன்பத்தைப் பற்றிச் சொல்வது அகம் என்றும் மற்ற மூன்றையும் பற்றிச் சொல்வது புறம் என்றும் ஒரு வகையில் கூறுவது வழக்கம்.

ஒருவனும் ஒருத்தியும் சந்திக்கும் போது; முன் பிறவிகளில் அமைந்த தொடர்பினால் அவர்கள் உள்ளத்தே

அன்பு உண்டாகும். யாரும் அறியாமல் அவர்கள் மனம் ஒன்றிக் காதல் செய்வார்கள். இந்தக் காதலுக்குக் களவுக் காதல் என்று பெயர். பிறகு அவர்கள் மணந்து கொண்டு இல்லற வாழ்வை மேற்கொள்வார்கள். அதைக் கற்பொழுக்கம் என்று சொல்வார்கள். இந்த இரண்டையும் பற்றிய இலக்கணங்களைப் பொருள் அதிகாரத்தில் காணலாம். காதலனைத் தலைவனென்றும், காதலியைத் தலைவி யென்றும் வழங்குவது மரபு. காதலிக்கு ஓர் உயிர்த் தோழி இருப்பாள். காதலியைப் பெற்ற தாயை நற்றாய் என்றும், வளர்த்த தாயைச் செவிலி என்றும் சொல்வார்கள். காதலனுக்கும் தோழன் உண்டு. அவனுக்குப் பாங்கன் என்று பெயர். காதல் வரலாறாகிய நாடகத்தில் வரும் இத்தகைய பாத்திரங்களின் இயல்புகளை யெல்லாம் விரிவாகத் தொல்காப்பியம் சொல்கிறது.

புறப்பொருளைப் பற்றிச் சொல்லும் பகுதியில் போர் பற்றிய பலவேறு நிலைகளைக் காணலாம். "சண்டைக்கு எடு பிடி மாடு பிடி" என்பது ஒரு பழமொழி. போர் நிகழ்வதற்கு முன்பு, பகைவர் நாட்டில் உள்ள மாடுகளை பிடித்துக்கொண்டு வருவார்கள். இதை வெட்சித்திணை என்பார்கள். பாரதத்தில் விராட பர்வத்தில் வரும் கதை போல் இருக்கிறதல்லவா? மாட்டைப் பகைவர் பிடித்துப் போகும்போது அவற்றை மீட்டு வருவதும், பின்பு போர் மூளுவதும், மதிலை முற்றுகையிட்டுச் சண்டையிடுவதும் போன்ற பலவேறு உத்திகளும் நிலைகளும் இந்தப் பகுதியில் விரிக்கப்பெறுகின்றன. காதலுக்கும் வீரத்துக்கும் எவ்வளவு சிறப்பை அளித்தனர் தமிழர் என்பதை அகப்பொருள் புறப்பொருள் இலக்கணங்கள் காட்டுகின்றன.

இவற்றை யன்றிக் கவியின் இலக்கணம், நூல்களின் இலக்கணம், இலக்கியங்களின் வகை, உவமைகளின் வகை, குணங்களைக் காட்டும் பாவங்களாகிய மெய்ப்பாடு களின் இலக்கணம், எந்தப் பொருளை எந்த எந்தச் சொல் லால் சொல்ல வேண்டும் என்ற மரபு ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களையும் பொருளதிகாரத்தில் காண லாம். இலக்கிய வகைகளைப் பற்றிச் சொல்லும் பகுதியில் அடி வரையறை இல்லாதவை இவை என்று ஒரு பிரிவு வருகிறது. அதில்தான் உரைநடையைப் பற்றிய இலக்கணம் வருகிறது. முதலில் சொன்ன நால் வகை உரைநடைகளைப் பற்றிய செய்திகள் அங்கேதான் இருக்கின்றன.

பொருளதிகாரத்தில் உள்ள சில கருத்துக்கள்;

பெண்களோடு கடலைக் கடந்து செல்லக் கூடாது.

காதலன் தன் காதலியோடு வாழும்போது அவள் உணவு பரிமாறுகிறாள். வேப்பங் காயைப் போலக் கசப் பாக உணவு இருந்தாலும், "நீ கை தொட்டது வானோர் அமுதத்துக்கு ஒப்பானது" என்று பாராட்டுகிறான்.

அப்பர் என்பது ஆட்டுக்குப் பெயர். புறத்தில் வயிரம் உடைய மரங்களுக்குப் புல் என்று பெயர். அகத்தில் வயிரம் உடையவை மரமெனப் பெயர்பெறும்.

நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகிய ஐந்தும் கலந்த கலப்பு உலகம்.

1610 சூத்திரங்களை உடையது தொல்காப்பியம். அது தமிழ்ப் புலவர்களுக்கு ஆணை நூலாக வழங்குகிறது.

"தொல்காப்பியன் தன் ஆணையின் தமிழ் நூல் அறிந் தோர்க்குக் கடனே" என்று ஒரு புலவர் சொல்கிறார்.

# 2. சங்க நூல்கள்

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் தமிழ் மிகச் சிறந்த நிலையில் இருந்தது; தமிழ் நாட்டுக்கே அது பொற்காலம்' என்னும் வார்த்தை அடிக்கடி நம் காதில் விழுகிறது. அந்தக் காலத்தைத்தான் சங்க காலம் என்று சொல்கிறோம். மதுரையில் பாண்டிய மன்னர்களுடைய ஆதரவில் பல புலவர்கள் ஒன்று கூடித் தமிழ் நூல்களை இயற்றினார்கள்; ஆராய்ச்சி செய்தார்கள். அவர்கள் பிறர் இயற்றிய நூல்களையும் பார்த்து நல்லனவாக இருந்தால் பாராட்டினார்கள். இவ்வாறு எழுந்த நூல்களையே சங்க நூல்கள் என்று சொல்கிறோம்.

சங்கம் என்ற சொல் தமிழ் அன்று பழைய. நூல்களில் அந்தச் சொல் இல்லை. இறையனாரகப் பொருள் என்ற அகப்பொருள் இலக்கண நூலின் உரையில் உரையாசிரியர் மூன்று சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் இருந்தன என்று எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டில் குமரிக்கும் தெற்கே இருந்த மதுரையில் முதல் சங்கம் இருந்ததாம். அந்த நகரத்தைக் கடல் விழுங்கிவிட்டது. பிறகு அதற்குச் சற்று வடக்கே இருந்த கபாடபுரத்தில் இரண்டாவது சங்கம் இருந்ததாம். அதை இடைச் சங்கம் என்பார்கள். கபாடபுரத்தையும் கடல் கொண்டது. பிறகு இப்போதுள்ள மதுரையில் மூன்றாம் சங்கத்தைப்

பாண்டிய மன்னன் அமைத்தான். அதைக் கடைச் சங்கம் என்பார்கள். கல் வெட்டுக்களில் பாண்டிய மன்னரின் புகழைச் சொல்லும் மெய்க்கீர்த்திகளில்; "மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று வருகிறது. அப்பர் சுவாமிகள் தேவாரத்தில், "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி" என்ற அடி வருகிறது. பிற்காலத்து நூல்களிலும் சங்கத்தைப் பற்றிய செய்திகள் உண்டு.

ஆனால் சங்க காலத்தில் எழுந்த நூல்களில் அதைப் பற்றிய பேச்சே இல்லை. பல புலவர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து இன்புற்றார்கள் என்ற செய்திவருகிறதேயன்றி அவர்கள் ஒரு சங்கத்தில் இருந்தார்கள் என்று தெளிவாக எந்தப் பழைய நூலும் சொல்லவில்லை. "தொல்லாணை நல்லாசிரியர், புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் மதுரை" என்பது பத்துப் பாட்டு. என்றாலும், இறையனார் அகப்பொருளுரையினால் மூன்று சங்கங்களிலும் உண்டான நூல்களைப் பற்றிய செய்திகள்தெரிய வருகின்றன. தொல்காப்பியம் இடைச் சங்க காலத்திலேயே இலக்கணமாக இருந்தது என்று அந்த உரை சொல்கிறது.

கடைச் சங்க காலத்தில் தோன்றிய நூல்களில் இப்போது கிடைப்பவை முப்பத்தாறு நூல்கள். இவற்றையே இப்போது சங்க நூல்கள் என்று வழங்குகிறோம்.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்று மூன்று கொத்தாக இந்த முப்பத்தாறு நூல்களையும் பிரித்திருக்கிறார்கள் பத்துப் பாட்டு என்பது பத்து நெடிய பாட்டுக்களை உடைய தொகுதி. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை,

குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற பத்தும் அத்தொகுதியில் அடங்கியுள்ளன.

வறுமையால் வாடிய புலவனையோ, பாணனையோ, பொருநனையோ, விறலியையோ, கூத்தனையோ வள்ளல் ஒருவனிடம் சென்று பொருள் பெற்று நலம் எய்திய புலவனோ, பொருநனோ, பாணனோ, "நீயும் அவனிடம் போனால் உன் வறுமை தீர்ந்து இன்புறலாம்" என்று சொல்லும் முறையில் அமைந்தது ஆற்றுப்படை என்னும் நூல். பழங்காலத்தில் ஒரு வள்ளலுடைய பெருமையையும் அவனது ஊரின் வளப்பத்தையும் அதற்குப் போகும் வழியையும் தெரிவிப்பதற்கு ஏற்ற வகையில் புலவர்கள் ஆற்றுப் படைகளை மிகுதியாகப் பாடியிருக்க வேண்டும். தொல்காப்பியத்தில் ஆற்றுப் படைக்குரிய இலக்கணம் இருக்கிறது.

பத்துப் பாட்டில் படிக்குப் பாதி, அதாவது ஐந்து நூல்கள், ஆற்றுப்படைகள். முருகாற்றுப்படை புலவனை ஆற்றுப் படுத்தியது. பொருநராற்றுப்படை பொருநனையும், சிறு பாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப் படை இரண்டும் பாணர்களையும் ஆற்றுப்படுத்தியவை. மலைபடுகடாம் என்பது கூத்தரைப் பார்த்து ஆற்றுப் படுத்தியது; அதற்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

தனித்தனியே செய்யுட்கள் பலவற்றின் தொகுதியாக அமைந்த எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்னும் கொத்தில் அடங்கியுள்ளன. தமிழில் காதலைப் பற்றிச் சொல்வது அகப்பொருள். பெரும்பாலும், வீரம், கொடை முதலியவற்றைப் பற்றிச் சொல்வது புறப்பொருள். அகப்பொருளைப் பற்றிச் சொல்லும் நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை,

அகநானூறு என்ற ஐந்தும் எட்டுத்தொகையில் உள்ளவை. புறப்பொருள் அமைதியை உடையவை புறநானூறு, பதிற்றுப்பத்து என்ற இரண்டு நூல்களும். பரிபாடல் என்பது இரு வகையான பொருள்களையும் பற்றிய பாடல்கள் அமைந்தது.

அந்தக் காலத்தில் அகவல் என்று சொல்லும் ஆசிரியப் பாக்களையே மிகுதியாகப் புலவர்கள் பாடினார்கள். பத்துப் பாட்டிலுள்ள எல்லாப் பாடல்களும் ஆசிரியப்பாக்களே.

எட்டுத்தொகை நூல்களில் கலிப்பாக்களால் அமைந்தது கலித்தொகை; பரிபாடல்களால் அமைந்தமையால் பரிபாடல் என்ற பெயரை உடையதாக விளங்குகிறது மற்றொரு நூல். மற்றவை யாவும் ஆசிரியப்பாவால் அமைந்தவையே. இந்த நூல்களில் உள்ள பாடல்கள் வெவ்வேறு புலவர்களால் பாடப்பெற்றவை.

அங்கங்கே வழங்கிய பழம் பாடல்களைச் சேர்த்து வகைப்படுத்தித் தொகுத்து இந்த நூல்களை அமைத்தார்கள். ஒவ்வொரு நூலையும் இன்னார் தொகுத்தார் என்ற குறிப்பு நமக்குக் கிடைக்கிறது.

பதினெண் கீழ்க்கணக்கு என்ற வரிசையில் பதினெட்டு நூல்கள் அமைந்திருக்கின்றன. அவை சங்க காலத்துக்குப் பின்பு எழுந்தன என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்வார்கள். என்றாலும் பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்று இந்த மூன்று வரிசைகளையும் ஒன்றாகவே சேர்த்துச் சொல்வது ஒரு வழக்கம்.

கணக்கு என்பது நூலைக் குறிக்கும் சொல். சிறிய நூல் என்ற பொருளுடையது கீழ்க்கணக்கு என்பது. பத்துப் பாட்டையும் எட்டுத் தொகையையும் மேல் கணக்கு என்று ஒரு பழைய இலக்கண நூல் குறிக்கிறது.

பதினெண் கீழ்க்கணக்கில் பல நீதி நூல்கள் அடங்கியிருக்கின்றன. உலகப் புகழ் வாய்ந்த திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்ததே.

நாலடியார், நான்மணிக்கடிகை, கார் நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திணை மொழி ஐம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறு பஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பவை பதினெண் கீழ்க்கணக்காகிய நூல்கள்

இவற்றில் நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்னும் பதினொன்றும் நீதி நூல்கள்.

கார் நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, கைந்நிலை என்னும் ஆறும் அகப் பொருள் நூல்கள்.

களவழி நாற்பது புறப்பொருள் அமைதியை உடைய நூல்.

ஒவ்வொரு பாட்டிலும் மூன்று நீதிகளைச் சொல்வது திரிகடுகம்; நான்கு நீதிகளைச் சொல்வது நான்மணிக் கடிகை; ஐந்தைச் சொல்வது சிறு பஞ்ச மூலம்; ஆறைச் சொல்வது ஏலாதி.

இந்த மூன்று கொத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து,

**''மூத்தோர்கள்,**
**பாடி அருள்பத்துப் பாட்டும்எட் டுத்தொகையும்**
**கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்''**

என்று **தமிழ் விடுதூது** சொல்கிறது.

# 3. திருமுருகாற்றுப்படை

முருகன் அடியார்கள் ஆறு படைவீடுகளைத் தரிசித்து மகிழ்வது இந்தக் காலத்தில் வழக்கமாக இருக்கிறது. முருகனுக் குரியவை ஆறு படைவீடுகள் என்ற கணக்குப் பல காலமாக இருந்து வருகிறது. இந்த மரபை முதல் முதலில் உண்டாக்கியவர் நக்கீரர். பத்துப் பாட்டில் முதல் பாட்டாக உள்ள திருமுருகாற்றுப் படையில் ஆறு படைவீடுகளைச் சொல்கிறார் அந்தப் புலவர்,

ஒரு குகையில் மற்றவர்களோடு ஒரு பூதம் நக்கீரரைச் சிறையில் அடைத்து வைக்க, அப்போது அவர் திருமுருகாற்றுப்படையைப் பாட, முருகன் எழுந்தருளி அந்தப் பூதத்தைக் கொன்று எல்லாரையும் விடுவித்தான் என்பது புராண வரலாறு.

முருகப் பெருமானைத் தரிசித்து அவனுடைய அருளைப் பெறவேண்டும் என்ற ஆர்வமுடைய புலவன் ஒருவனுக்கு மற்றொரு புலவன், "அந்தப் பெருமான் இன்ன இன்ன இடங்களில் எழுந்தருளி யிருக்கின்றான். அந்த இடங்களில் சென்று அவனைத் தரிசித்து அருள் பெறலாம்" என்று சொல்லும் முறையில் 317 அடிகளால் அமைந்தது இந்த நூல்.

இது, முதலில் முருகப் பெருமானது சோதி வடிவத்தைச் சொல்லி, அவனது திருவடியையும் திருக்கரத்

தையும் காட்டி, தெய்வயானையையும் குறிப்பிட்டு, முருகன் மார்பில் அணியும் கடம்ப மாலையையும் தலையில் அணியும் காந்தள் கண்ணியையும் சிறப்பித்து, வேலால் சூரனைச் சங்காரம் செய்த அவனது வீரச் செயலை எடுத்துக் கூறுகிறது. "அத்தகைய செவ்வேலையுடைய முருகப் பெருமானுடைய சேவடியை அடையும் நல்ல உள்ளத்தோடு நீ புறப்படுகிறாய். உன்னுடைய விருப்பம் கை கூடும்" என்று முருகனைக் காண விரும்பும் புலவனுக்கு நம்பிக்கை ஊட்டி, "முருகன் இன்ன இன்ன இடங்களில் இருக்கிறான்" என்று சொல்லத் தொடங்கி முதலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிக் கூறுகிறார் நக்கீரர்.

மதுரையின் பெருமையைச் சுருக்கமாகக் கூறி அதற்கு மேற்கே இருப்பது திருப்பரங்குன்றம் என்று வழி காட்டுகிறார். அந்தக் குன்றத்தின் இயற்கை யெழிலைச் சில வரிகளிலே சொல்லி விடுகிறார். இது திருமுருகாற்றுப் படையின் முதற் பகுதி.

காந்தள் கண்ணியைச் சொல்லும் இடத்தில் காந்தள் வளரும் மலைச் சோலையை வருணிக்கிறார். தேவலோகத்து மங்கையர் ஆடையும் அணியும் சிறப்பாகப் பெற்றிருந்தாலும் தம்மை மேலும் அழகு செய்து கொள்வதற்குக் குறிஞ்சி நிலத்திலுள்ள மலைக்கு வந்து, அங்குள்ள பல வண்ண மலர்களால் கோலஞ் செய்து கொண்டு, மகிழ்ச்சியோடு முருகனை வாழ்த்தி ஆடுகிறார்கள். அவர்கள் ஆடும் மலைச்சோலையிலுள்ள காந்தளை முருகன் தன் தலையில் அடையாளப் பூவாகச் சூட்டியிருக்கிறான்.

இவ்வாறு அழகிய ஆரணங்கினர் ஆடும் இனிய ஆடலை வருணித்தவர் அடுத்துப் பேய் மகள் ஆடலைக் காட்டுகிறார். முருகன் சூரனைச் சங்கரித்த போர்க்

களத்தில் பேய் மகள் பிணத்தை உண்டு உவகை பொங்க ஆடுகிறாள். தேவ மகளிர் ஆடலும் பேய்மகள் ஆடலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நின்று சுவை ஊட்டுகின்றன.

திருப்பரங்குன்றத்தைச் சார்ந்த வண்டினங்கள் கூட நல்ல இன்பத்தைப் பெறுகின்றன. கரிய சேறுள்ள பரந்த வயலில் தேங்கியுள்ள நீரில் தாமரை விரிந்து வாயவிழ்ந்து விளங்குகிறது. அதில் வந்து தேனையுண்ட வண்டுகள், மாலை வரவும் அங்கேயே துயில்கின்றன. மேலுள்ள இதழ்கள் குவிகின்றன. கீழே முள்ளையுடைய தண்டு அவை துயிலும் மலர் மாளிகைக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. விடிந்தவுடன் மலர் விரிகிறது. வண்டுகள் அருகிலே நெய்தலில் உள்ள வெறியூட்டும் கள்ளை உண்டு உரம் பெற்று, மேலே பறக்கின்றன. இனிப்பகலில் அவற்றிற்கு உணவு அங்கே காத்திருக்கிறது. குன்றின்மேல் உள்ள சுனைகளில் கண்ணைப் போல மலர்ந்துள்ள சிறிய பூக்களில் தேன் இருக்கிறது. அந்தத் தேனை அவை உண்டு ரீங்காரம் செய்கின்றன.

இப்படி வண்டுகளின் இன்ப வாழ்வைக் காட்டுகிறார் நக்கீரர். வண்டுகளே இத்தகைய இன்பத்தைப் பெறும் போது மக்கள் இன்னும் மிகுதியான இன்பத்தைப் பெறுபவர்களாகவே இருக்கவேண்டும் என்ற குறிப்பு நமக்குத் தோன்றுகிறது.

அடுத்த பகுதி திருச்செந்தூராகிய திருச்சீரலைவாயைப் பற்றிச் சொல்கிறது.

முருகன் யானையின்மேல் எழுந்தருளி வருகிறான். அவனுடைய ஆறு முகங்களும் வெவ்வேறு செயல்களைப் புரிகின்றன. அவற்றிற்கு ஏற்ற காரியங்களை அவனுடைய திருக்கரங்கள் செய்கின்றன. இப்படி ஆறு முகங்களும்

பன்னிரண்டு கரங்களும் கொண்டு அன்பர்களுக்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டுத் திருச்சீரலைவாய்க்கு வந்து தங்கியிருக்கிறான் முருகன்.

திருவாவினன் குடியில் தன் தேவியோடு அவன் எழுந்தருளியிருக்கிறான். அகங்காரத்தால் தவறு செய்த நான்முகனை அவன் சிறையில் அடைத்து விட்டான்! படைப்புத் தொழில் நடக்கவில்லை யாதலால், எல்லாத் தொழில்களும் நின்று விட்டன. நான்முகனைச் சிறையி னின்றும் விடுதலை செய்தருள வேண்டுமென்று விண்ணப் பித்துக் கொள்வதற்காகத் தேவ லோகத்திலிருந்து சிவபிரான் முதலியவர்கள் திருவாவினன்குடிக்கு வருகிறார்கள்; முருகனுடைய அன்பர்களாகிய முனிவர் களை முன்னிட்டுக் கொண்டு வருகிறார்கள். முனிவர் களுக்குப் பின் ஆடல் பாடல் வல்ல தெய்வ மகளிர் வருகிறார்கள். அவர்களுக்குப் பின் திருமால், சிவ பெருமான், இந்திரன் ஆகியோர் வருகிறார்கள். அவர் களைப் பின்பற்றி முப்பத்து மூன்று தேவர்கள், பதினெண் கணங்கள் யாவரும் வருகிறார்கள். அவர்கள் தம் குறையைத் தீர்த்துக் கொள்வதற்கு வந்து வணங்கும் நிலையில் முருகன் திருவாவினன் குடியில் எழுந்தருளி யிருக்கிறான்.

அடுத்தது திருவேரகம். இப்போது சுவாமிமலை என்று வழங்கும் தலம் அது. அங்கே நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசாரியாக இருந்து விரதம் பூண்ட அந்தணர்கள் ஈர ஆடையை உடுத்தபடியே சடட்சர மந்திரத்தை உச்சரித்து முருகனை வழிபடுகிறார்கள்.

ஐந்தாவது படை வீடு பல குன்றுகளும் அமைந்த தொகுதி. முருகன் குன்று தோறும் அருளாடல் புரிகிறான். குன்றுதோறாடல் என்ற அந்தப் பகுதியில்

வேலனாகிய பூசாரி வழிபட, முருகன் எழுந்தருளும் காட்சியை வருணிக்கிறார் நக்கீரர். குறிஞ்சி நில மக்கள் விழா எடுக்க, முருகன் மயிலைப் போன்ற எழிலை யுடைய மகளிருடன் வருகிறான். சிவந்த மேனியும் சிவந்த ஆடையும் அசோகந்தளிர், தொங்கும் திருச் செவியும் உடையவனாக வருகிறான். இடையிலே கச்சையும் காலிலே கழலையும் மார்பிலே வெட்சி மாலை யையும் அணிந்திருக்கிறான். ஒரு கால் புல்லாங்குழலை வாசிக்கிறான்; ஒரு சமயம் கொம்பை ஊதுகிறான்; வெவ் வேறு சமயங்களில் வெவ்வேறு வகை வாத்தியங்களை வாசிக்கிறான்.

ஆட்டின் மேல் வருகிறான்; சில சமயங்களில் மயில் மேல் வருகிறான். சேவற்கொடியை ஏந்தியிருக்கிறான்.

இவ்வாறு குன்று தோறும் அவன் நின்றருளுகிறான்.

ஆறாவது பகுதி பழமுதிர்சோலையைச் சொல்வது. இப்போது அழகர் மலை என்று வழங்கும் இடம் அது. மேலே சொன்ன ஐந்து இடங்களிலும் முருகன் எழுந் தருளியிருக்கிறான் என்று சொன்ன ஆசிரியர் பழமுதிர் சோலையிலும் இருக்கிறான் என்று சொல்லி முடிக்கும் முன்பு அவன் வெளிப்பட்டும் மறைந்தும் உறையும் பல இடங்களை எடுத்துச் சொல்கிறார்.

ஒவ்வோர் ஊரிலும் கொண்டாடும் விழாவில் அவன் இருப்பான். அன்பர்கள் துதி செய்யும் இடத் தில் ஒளிர்வான். பூசாரி பூசை பண்ணும் இடத்தில் விளங்குவான். காட்டிலே இருப்பான். சோலையிலே இருப்பான் ஆற்றுக்கு நடுமேட்டில் இருப்பான். ஆற்றிலும் இருப்பான். குளத்திலும் இருப்பான். தெருக் கள் கூடும் சந்திகளிலும் கடம்ப மரத்திலும் மரத்தடியில் மக்கள் கூடும் மன்றத்திலும் பலர் கூடும் அவையிலும்

கம்பத்தை நட்டு வழிபடும் இடத்திலும் குறமகள் வழி படும் இடத்திலும் இருப்பான்.

''இப்படி நான் கூறிய இடங்களில் எங்கேயாவது நீ மனமுருகி அவனைப் போற்றி அவன் திருநாமங் களைக் கூறித் துதித்தால் அவன் எழுந்தருளி வந்து உனக்கு அருள் புரிவான்'' என்கிறார் நக்கீரர்.

இந்த இடத்தில், அருச்சனையைப் போல் முருக னுடைய திருநாமங்களை அடுக்கிச்சொல்கிறார். 'சரவண பவனே, கார்த்திகேயனே, சிவகுமாரா, உமை மைந்தனே, பகைவருக்குக் காலனே, காளியின் குழவியே, பராசக்தியின் மைந்தா, தேவ சேனாபதி, மாலை மார்ப, நூலறி புலவ, செருவில் ஒருவ, பெரு வீரனே, அந்தணருக்குச் செல்வ மாக இருப்பவனே, ஞானிகளின் துதியைப் பெறு பவனே, மங்கையர் கணவ, மைந்தர் ஏறே, வேலாயுதா, குறிஞ்சிக் கிழவ, புலவர் ஏறே, பெரும்பெயர் முருக, விரும்புவதை அளிப்பவனே, அநாத ரட்சகா, பரிசில ருக்கு வழங்குபவனே, பெரும்பெயர்க் கடவுளே, சூர சங்காரா, போர்மிகு பெருந, குரிசில் என்று பொருள் கொள்ளும் திருப்பெயர்கள் அங்கே உள்ளன.

தன்னை அண்டி வந்த புலவனுக்கு அருள் செய்ய முருகன் தோன்றுகிறான். தன் விசுவரூபத்தை அடக்கிக் கொண்டு முருகுத் திருவுருவத்தோடு காட்சியளிக்கிறான்.

**''அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்**
**மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி''**

என்று சொல்லும் இடத்தில் முருகன் என்ற திருநாமத் துக்குரிய நான்கு சிறப்பான பொருள்களைச் குறிப்பிடு கிறார். முருகை உடையவன் முருகன். முருகு என்ப தற்குப் பல பொருள்கள் இருப்பினும் மணம், தெய்வத்

தன்மையாகிய கருணை, என்றும் மாறா இளமை, எங்கும் காணாப் பேரழகு என்பவற்றை நக்கீரர் குறிப்பிடுகிறார். மணங்கமழ் என்பது ஞான மணத்தையும், தெய்வத்து என்பது தெய்வப் பண்பாகிய அருளையும், இள என்பது இளமையையும், நலம் என்பது அழகையும் குறிக்கும்.

இவ்வாறு எழுந்தருளி வரும் முருகன், எங்கும் தானேயாய்ப் பேதமின்றி அத்துவிதமாகத் தோன்றும் சீவன் முக்தியாகிய பரிசைத் தருவான் என்கிறார் நக்கீரர்.

அப்படித் தருபவன் பழமுதிர் சோலை மலைக்கு உரியவனாகிய முருகன் என்று முடிக்கிறார். அங்கே மலை மேலிருந்து அருவி வரும் அழகைப் புலப்படுத்துகிறார். மேலிருந்து அடிவாரம் வரையில் உள்ள பல்வேறு மரங்களையும் விலங்கினங்களையும் படிப்படியாகச் சொல்கிறார். அந்த அருவியோடு இறங்கி மலையின் வளம் முழுவதையும் ஒருவாறு பார்த்துவிடலாம்.

இவ்வாறு அமைந்த திருமுருகாற்றுப்படையில் முருகன் பல்வேறு வகை மக்களால் வெவ்வேறு வகையில் வழிபடப் பெறும் கடவுளாக இருப்பதைக் காண்கிறோம். சிவபெருமான் முதலிய கடவுளரும், தேவரும், தேவமகளிரும் அவன் அருள் பெற வேண்டி வருகிறார்கள். மறை பயில் அந்தணாளரும் வழிபடுகிறார்கள். நாட்டிலும் காட்டிலும் நகரிலும் சிற்றூரிலும் விழா எடுக்கிறார்கள். பூசாரியும் குற மகளும் போற்றுகிறார்கள். பேயும் அவனது வீரத்தைப் பாராட்டி மகிழ்கிறது.

பல வண்ணமும் வடிவமும் உள்ள மணிகளிடையே ஒரு சரடு புகுந்து கோத்து நிற்பது போல இத்தனை

பேருடைய உள்ளங்களிலும் முருகுணர்ச்சி ஊடுருவி நிற்கிறது.

முருகன்கோயிலிலும் இருக்கிறான்; கோயில் இல்லாத இடங்களிலும் இருக்கிறான். அவனுடைய திருவுருவம், வீரச்செயல், கருணைத்திறன், வரலாறு ஆகியவற்றை இந்நூல் சொல்கிறது.

இயற்கை வருணனையைச் சொல்லோவியமாகக் காட்டும் பகுதிகள் சில.

பத்துப்பாட்டில் முதல் பாட்டாகக் கோக்கப்பெற்ற திருமுருகாற்றுப்படை பதினோராந் திருமுறையிலும் சேர்ந்து விளங்குகிறது. இலக்கியச் சுவை மிக்கதாகையால் பத்துப்பாட்டிலும், முருகனது புகழைக் கூறுவதாதலின் திருமுறைகளிலும் இடம் பெற்று நிற்கிறது.

இதற்குப் புலவராற்றுப்படை என்ற பெயரும் உண்டு. இதைப் பல அன்பர்கள் நாள்தோறும் பாராயணம் செய்து நலம் பெற்று வருகிறார்கள்.

# 4. பொருநர் ஆற்றுப்படை

பாலைநிலம். ஒரு பொருநன், அவனுடைய மனைவியாகிய விறலி, அவர்களின் சுற்றத்தினர் ஆகியவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். விறலி தன் கையில் ஒரு யாழைத் தாங்கியிருக்கிறாள். பட்டினிப் பட்டாளமாகிய அவர்கள் தங்கள் கலையைச் சுவைக்கும் வள்ளல் எங்கே இருக்கிறான் என்று தேடிச் செல்கிறார்கள். பாலை நிலத்தில் எங்கே பார்த்தாலும் வறட்சி. நிழலே இல்லாத வெறும் பரப்பு. கல்லும் கரடும் நிரம்பிய பாதை.

அப்போது திடீரென்று சில வழிப்பறிக்காரர்கள் அங்கே வருகிறார்கள். இந்தப் பட்டினிப் பட்டாளத்தைச் சூழ்ந்து கொள்கிறார்கள். ''மடியில் இருப்பதைக் கீழே வையுங்கள்!'' என்று தம் கையிலுள்ள வேல், ஈட்டி முதலிய ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்துகிறார்கள்.

அவர்களிடம் என்ன இருக்கிறது? பாவம்! ''எங்களிடம் ஒன்றும் இல்லையே! எங்கள் கந்தைத் துணியைக் கண்டாலே எங்கள் நிலை உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று அழாத குறையாகக் கூட்டத்தின் தலைவன் சொல்கிறான்.

கள்வர்கள் விறலியைப் பார்க்கிறார்கள். அவள் கையில் உள்ள யாழின் மேல் அவர்கள் கண்கள் செல்கின்றன. ''என்ன அது?'' என்று ஒருவன் கேட்கிறான்.

முன் பின் யாழைப் பார்த்து அறியாதவன் அவன். ''அதற்குள் எதையாவது வைத்திருக்கிறாயோ?'' என்று மறுபடியும் கேட்கிறான். யாழின் குடத்துக்குள் எதையாவது வைத்திருக்கக் கூடும் என்பது அவன் எண்ணம்.

''இதுவா? இது யாழ். இதன் குடம் இது. இதற்குள் ஒன்றும் இல்லை.''

''யாழ் என்றால்?''

''இசை எழுப்பப் பயன்படுத்துவது.''

''அப்படி என்றால்?''

''இந்த நரம்புகளை மீட்டி இசை பாடலாம்.''

''எங்கே, செய்து காட்டு; பார்க்கலாம்.''

விறலி யாழைச் சுருதி கூட்டிப் பாடத் தொடங்குகிறாள். அந்த வெறிச்சோடிய பாலை நிலத்தில் இன்னிசை அலை பாய்கிறது. பாலைப் பண்ணை அவள் வாசிக்கிறாள். அதற்காகவே அமைந்த பாலை யாழ் அது. அதை மீட்டி விறலியும் பாடுகிறாள். அங்கே ஒரு வகையான தண்மை பரவுகிறது, கள்வர்கள் இது வரையில் அப்படி ஓர் இசையைக் கேட்டதில்லை. அவர்கள் அப்படி அப்படியே சிலை போல நிற்கிறார்கள். வாயைத் திறந்தபடி அதில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் கையில் உள்ள ஆயுதங்கள் தாமே நழுவுகின்றன. அவை மட்டுமா? அவர்கள் உள்ளத்திலுள்ள கொடுமையும் நழுவுகிறது. தம்மை மறந்து கேட்கிறார்கள்.

பாட்டு நிற்கிறது. கள்வர்கள் பிரமித்து நிற்கிறார்கள். அவர்கள் உள்ளம் குழைந்து தம் கையில் உள்ள பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து அனுப்புகிறார்கள். அந்த அற்புதமான பாலை யாழ், ஆறலை கள்வரின்

படைகளை நழுவச் செய்வதோடன்றி, அவர்கள் உள்ளத்தே இருந்த அருளுக்கு மாறாகிய வன்கண்மையை யும் நழுவச் செய்கிறது.

இதை மிகச் சுருக்கமாக இரண்டே வரிகளில் சொல்லி விடுகிறார், முடத்தாமக் கண்ணியார் என்னும் புலவர்.

**''ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை.''**

[வழிப்பறிக்காரர்கள் தம் கையில் உள்ள படைக்கலன் களை நழுவவிடவும், அவர்கள் உள்ளத்தில் அருளுக்கு எதிராக உள்ள கொடுமையை மாற்றவும் ஆற்றலுள்ள, கேட்பதற்கு இனிய பாலை யாழ்.]

கரிகாற் பெருவளத்தானாகிய சோழ மன்னனைப் பாராட்டி முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநர் ஆற்றுப் படையில் இந்த அடிகள் வருகின்றன. பொருநர் என்பவர் தடாரிப் பறை என்ற வாத்தியத்தை வாசிப்ப வர்கள். ஒரு கையால் அடித்து வாசிக்கும் வாத்தியம் அது. சோழ மன்னனிடம் பொருள் பெற்ற பொருநன் ஒருவன், எதிர்வந்த பொருநனைப் பார்த்து, ''நீயும் அவனிடம் போனால் நலம் பெறலாம்'' என்று பாடியது பொருநர் ஆற்றுப்படை. பத்துப் பாட்டில் கோக்கப் பெற்ற நூல்களில் இரண்டாவது இது.

கரிகாலனிடம் பரிசு பெற்று வரும் பொருநன், நடு வழியில் விறலியோடு வரும் பொருநனைப் பார்த்து, ''அழகிய பாலையாழை வாசிக்கும் எழிலுடைய விறலி பாடும் பாட்டுக்கு ஏற்பத் தடாரியை வாசித்துக் கடவுளை வணங்கி இருக்கும் பொருநனே, நீ புரவலரைக் காணுவ தற்குப் பல இடங்களுக்குச் சென்று திரியாமல் உன்னை நான் இங்கே எதிர்ப்பட்டது புண்ணியப் பயன்தான்'' என்று தொடங்குகிறான்.

"நானும் உன்னைப் போலத்தான் இருந்தேன். கரிகாலன் இருக்கும் இடத்தை அடைந்து விடியற்காலையில் என் கையில் உள்ள தடாரியை வாசித்தேன். மிக விரைவில் சோழ மன்னன் வந்து என்னை மிகவும் அன்போடு நோக்கி, இருக்கச் செய்து என் இடையில் இருந்த கந்தைத் துணியை நீக்கிப் பாம்பின் சட்டையைப் போன்ற மெல்லிய ஆடையைத் தந்து உடுக்கச் செய்தான், இனிய பானங்களை வழங்கினான். மகளிர் பொன் கலத்தில் அந்தப் பானங்களைத் தரத் தர உண்டு மகிழ்ந்தேன்.

'அவனுடைய அரண்மனையில் ஓரிடத்தில் தங்கினேன். இளைஞர்கள் அவன் இருக்கும் அவைக்களத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பல வகையான உணவுகளை அவன் அளித்தான். இரவும் பகலும் தெரியாமல் விருந்துண்டேன்.

"ஒருநாள், எங்கள் ஊருக்குப் போக வேண்டும் என்று சொன்னபோது சிறிதே கோபித்தவனைப் போலப் பார்த்து, 'எங்களை விட்டுப் போகப் போகிறீர்களா?' என்று சொல்லி யானைகளைப் பரிசிலாகக் கொடுத்தான். என் வறுமை ஒழிந்தது."

இவ்வாறு சொன்ன பொருநன் கரிகாலனது பெருமையை விளக்குகிறான். அந்த மன்னன் தாய் வயிற்றில் இருந்த போதே அவன் தந்தை இறந்தான், பிறந்த உடனே அரசுரிமையைப் பெற்றான், கரிகாலன். சின்னஞ்சிறு போதிலே சேரனையும் சோழனையும் வெண்ணி யென்னும் இடத்திலே போரிட்டு வென்றான்.

"நீங்களும் அவனிடம் போனால் நல்ல ஆடைகளைத் தருவான்; பானங்களையும் உணவுகளையும் தருவான்; பொன்னாலான தாமரையை உங்களுக்குச் சூட்டுவான்;

விறலிக்கு நல்ல அணிகலன்களைத் தருவான்; நாலு குதிரை பூட்டிய தேரை வழங்குவான். அவன் உங்களை எளிதில் விடை கொடுத்து அனுப்பமாட்டான்'' என்கிறான் வந்த பொருநன்.

கடைசியில் சோழநாட்டின் வளத்தையும் காவிரியின் வளத்தையும் எடுத்துச் சொல்லி, ''அந்தக் காவிரியால் வளம் பெற்ற சோழ நாட்டுக்குத் தலைவனாகிய கரிகாலன் உங்களுக்குப் பரிசில் தருவான்'' என்று கூறி முடிக்கிறான். 248 அடிகளில் இந்த ஆற்றுப்படை நடக்கிறது.

யாழின் வருணனை மிக அழகாக அமைந்திருக்கிறது. ''கல்யாணப் பருவமுள்ள மங்கைக்கு அலங்காரம் பண்ணி வைத்தது போல உள்ளது யாழ்; அதில் தெய்வம் வாழ்கிறது'' என்கிறார் புலவர். பொருநனுடைய பழைய கந்தையில் ஈரும்பேனும் வாழ்கின்றன. அது வேர்வையில் நனைந்திருக்கிறது. அதை வேறு நூலிழையால் தைத்து உடுத்துக் கொண்டிருக்கிறான்.

> **''ஈரும் பேனும் இருந்துஇறை கூடி**
> **வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த**
> **துன்னற் சிதாஅர்.''**

[இறை கூடி—தங்கி, வேர்—வேர்வை. துன்னல்—தைத்தல், சிதாஅர்—கந்தை ]

பொருநன் பானமும் உணவும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறுகிறான். அதற்குச் சீவன் முக்தர் நிலையை உவமை கூறுகிறான். 'தவம் செய்கின்ற ஞானிகள் தம் உடம்பைப் போட்டு மரணம் அடையாமலே தவத்தின் பயனாகிய மோட்சத்தை அடைந்தது போல' என்கிறான்.

> **''தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாது**
> **அதன்பயம் எய்திய அளவை மான.''**

எல்லாவற்றையும் உண்டு உண்டு பற்கள் தினைக் கொல்லையை உழுது தேய்ந்த கொழுப் போல ஆகி விட்டனவாம். காவிரியின் வளத்தைச் சொல்லும் போது, 'வேலிக்கு ஆயிரம் கலம் விளையும்' என்று சொல்கிறான்.

யாழின் வருணனை, விறலியின் வருணனை, கரிகாலன் செய்யும் உபசார வகை, பொருநனுடைய முன்னை நிலையும் பின்னை நிலையும், கரிகாலன் கருவிலே திருவுடையவனான வரலாறு, சோழ நாட்டில் உள்ள நாலு நிலங்களின் சிறப்பு, காவிரியின் சிறப்பு முதலியவற்றை அழகிய சொல்லோவியங்களாகக் காட்டுகிறார் புலவர்.

# 5. சிறுபாணாற்றுப்படை

இப்பொழுது திண்டிவனம் என்று வழங்கும் ஊர் முன்பு பெரிய நகரமாக இருந்தது. அதற்கு அப்போது கிடங்கில் என்று பெயர். இப்போதும் திண்டிவனத் துக்கு அருகில் கிடங்கால் என்ற ஊர் இருக்கிறது. அதை யும் இப்போது உள்ள திண்டிவனத்தையும் உள்ளிட்ட பெரிய நகரமாகக் கிடங்கில் இருந்தது. இன்றும் அங்கே இடிந்த மதில், அகழி முதலியன இருக்கின்றன.

இந்த நகரம் உள்ள நாட்டுக்கு அந்தக் காலத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஓய்மான் நாடு என்று பெயர். ஓய்மான் என்னும் பெயரை உடைய குலத்து மன்னர்கள் இருந்து ஆட்சி புரிந்தமை யால் அந்தப் பெயரைப் பெற்றது.

அங்கே ஆண்டிருந்த மன்னர்களில் ஒருவன் நல்லியக் கோடன் என்பவன். அவன் புலவர்களையும் பாணர்களை யும் கூத்தர்களையும் பாதுகாத்து அவர்களுக்கு ஏற்ற வகையில் பரிசுகளை வழங்குபவன்.

அவனுடைய அன்புக்கு உரியவராக விளங்கின புல வர்களில் ஒருவர் நத்தத்தனார். சென்னையை அடுத்த இடைக்கழி நாட்டில் உள்ள நல்லூர் என்ற ஊரைச் சார்ந்தவர் அவர். அவர் நல்லியக் கோடனைப் பாராட்டிப் பாடியது சிறுபாணாற்றுப்படை என்னும்

நூல், 269 அடிகளையுடைய இந்த நூல் பத்துப்பாட்டில் மூன்றாவது நூலாகக் கோக்கப் பெற்றிருக்கிறது. நல்லியக்கோடனிடம் பரிசு பெற்ற பாணன் ஒருவன் வறுமையால் நலிவுற்ற மற்றொரு பாணனைப் பார்த்து, 'நீயும் நல்லியக் கோடனிடம் சென்றால் பரிசு பெற்று வரலாம் என்று சொல்வதாக அமைந்தது இது.

பாணர்களில் சிறு பாணர் பெரும் பாணர் என்று இரு வகையினர். சிறிய யாழை வாசிப்பவன் சிறு பாணன்; பேர் யாழை வாசிப்பவன் பெரும் பாணன். சிறு பாணன் ஒருவனை நோக்கி அவனை ஆற்றுப் படுத்தியதாதலால் இதற்குச் சிறு பாணாற்றுப்படை என்ற பெயர் வந்தது.

அந்தப் பாணனைப் பற்றிச் சொல்லும்போது,

**"இன்குரல் சீறியாழ் இடவாயின் தழீஇ"**

என்று வருவதனால் இதனைத் தெரிந்துகொள்ளலாம்.

அழகிய விறலியர்களுடன் பாணர்கள் வள்ளல்களைத் தேடிக் கொண்டு வருகிறார்கள். பாணனுடைய மனைவிக்கு விறலி என்ற பெயர். அவள் அபிநயம் பிடித்து ஆடுகிறவள். அப்போது பலவகையான பாவங்களை அவள் காட்டுவாள். விறல் என்பது பாவத்துக்குப் பெயர். அதனால் விறலி என்ற பெயர் வந்தது.

அவர்கள் வறியவர்கள்; தம் கலையைச் சுவைத்து மகிழ்ந்து பரிசில் தரும் செல்வர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிச் செல்லும் இயல்புடையவர்கள். அவர்களை நல்லியக்கோடனிடம் பரிசு பெற்று வரும் பாணன் பாலை நிலத்தில் சந்திக்கிறான்.

காட்டாறு ஓடிய இடம் அது. இப்போது எல்லாம் வறண்டு போய் மணலாக இருக்கிறது. முற்பகல் நேரம்.

ஏறு வெயில். இந்த வெயில் தாங்காமல் அங்குள்ள கடம்ப மரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

விறலியர் அழகானவர்கள். அங்கே நடந்து வந்த வருத்தம் தாங்கவில்லை. அவர்கள் காலை இளைஞர்கள் மெல்ல வருடுகிறார்கள்.

அந்தக் கூட்டத்தின் தலைவனாகிய பாணனைப் பார்த்துச் சொல்கிறான் எதிர்வந்த பாணன்.

''பழங் காலத்தில், புலவர்களையும் கலைஞர்களையும் பாதுகாக்கும் பண்புடைய சேரன், பாண்டியன், சோழன் என்னும் மூன்று முடிமன்னர்கள் இருந்தார்கள். இப்போது அவர்கள் இல்லை. பேகன், பாரி, காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி என்னும் வள்ளல்கள் ஏழு பேர் இருந்தார்கள். அவர்களும் இல்லை. அவர்களுடைய ஈகைப் பண்பை இப்போது தான் ஒருவனே ஏற்றுக் கொண்டு விளங்குகிறவன் நல்லியக் கோடன்'' என்று சொல்லத் தொடங்குகிறான்.

சேரனைப் பற்றிச் சொல்லும்போது வஞ்சி மாநகரத்தின் சிறப்பு வருகிறது. மேல் கடற்கரையைப் பற்றிய வருணனையை அங்கே காணலாம். ''மீன்கள் துண்டாகப் போகும்படி எருமை நடக்கிறது. அங்குள்ள கழுநீர்ப் பூவை மேய்கிறது. பிறகு மிளகுக் கொடி படர்ந்திருக்கும் பலா மரத்தின் நிழலில் சென்று படுக்கிறது. அருகில் உள்ள மஞ்சள் செடியின் இலை அதன் முதுகைத் தடவுகிறது. அது படுத்திருக்கும் இடத்தில் மலை மல்லிகை உதிர்ந்து கிடக்கிறது. அந்த மலர்ப் படுக்கையில் படுத்தபடியே அசை போடுகிறது. அதன் வாயில் கழுநீர்ப் பூவிலிருந்து வந்த தேன் மணக்கிறது'' என்று

வருணிக்கிறான் பாணன். "இவ்வாறு அமைந்த மேலைப் புலமாகிய மலைநாட்டுத் தலைவன் சேரனுடைய வஞ்சி மாநகரம், இப்போது கொடுக்கும் மன்னன் இன்றி வறிதாக இருக்கிறது" என்கிறான்.

அடுத்தபடி, "மதுரையும் வறிதாகிவிட்டது; அங்கே பாண்டியன் இல்லை" என்று சொல்கிறான். பாண்டியனுடைய கடற்கரைப் பட்டினமாகிய கொற்கையின் வருணனை அங்கே வருகிறது.

"உப்பு வியாபாரிகள் வண்டியில் உப்பு மூட்டைகளைப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வளர்த்த மந்தி அவர்களோடு வருகிறது. அங்கே கிடக்கும் கிளிஞ்சில்களில் முத்தை இட்டு அந்த மந்தி உப்பு வியாபாரிகளின் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடுகிறது" என்கிறான். மதுரையை, "தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்...மதுரை" என்று சிறப்பிக்கிறான்.

சோழனுடைய உறையூரைப் பாராட்டும்போது சுற்றியுள்ள இயற்கையெழிலை விரித்துரைக்கிறான்.

தமிழ்நாட்டில் ஏழு பெருவள்ளல்கள் இருந்தார்கள். அவர்களுடைய பெருமைகளைச் சங்க நூல்களில் காணலாம். அந்த ஏழு பேர்களையும் ஒருங்கே சொல்லும் பாடல்கள் இரண்டு இப்போது கிடைக்கின்றன. நிகண்டுகளில் வரிசையாகப் பெயர்களைச் சொன்னாலும் அவர்களுடைய சிறப்பைச் சேர்த்து ஒருங்கே சொல்பவை சிறுபாணாற்றுப் படையும், புறநானூற்றில் உள்ள 158-ஆம் பாடலுமே.

அந்த ஏழு வள்ளல்களும் பூண்டிருந்த கைகையாகிய பொறுப்பை நல்லியக்கோடன் ஒருவனே தாங்குகிறானாம்.

**"ஏழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய ஓவியர் பெருமகன்."**

[ஏழு வள்ளல்கள் மேற்கொண்டகொடையாகியசிறந்த பொறுப்பை, விரிந்த கடலை எல்லையாக உடைய பரந்த உலகத்தில் விளங்கும்படியாகத் தான் ஒருவனே தாங்கிய ஓவியர் குலத்துத் தலைவன்]

நல்லியக் கோடன் பிறந்த குலம் ஓவியர் குலம். அவன் மாவிலங்கை என்ற ஊருக்குத் தலைவன். அவனிடம் சென்று அவனையும் அவன் தந்தையையும் சிறப்பித்துப் பாடினானாம், எதிர்வந்த பாணன். "எங்கள் பசித் துன்பம் போக, அவன் தந்த யானையோடும் தேரோடும் வருகிறோம்" என்கிறான். அவன் அங்கே போவதற்கு முன் இருந்த நிலை என்ன? "எங்கள் வீட்டில் அடுப்புப் புகைந்துபல நாள் ஆயின. அங்கே நாய் குட்டி போட்டிருக்கிறது. குட்டிகள் பால் குடிக்க முயல்கின்றன. தாய் நாயின் உடம்பில் என்ன இருக்கிறது? அது பாவம், குட்டிகள் வாய் வைப்பதனால் வலி உண்டாகவே, குரைக்கிறது. வீட்டின் மேலிருந்த கழிகளெல்லாம் கட்ட விழ்ந்து விழுகின்றன. சுவரெல்லாம் கறையான். கீழே புழுதி; அதனிடையே காளான் முளைத்திருக்கிறது, பசியினால் வருந்திய என் மனைவி குப்பையில் முளைத்த வேளைக் கீரையைக் கொண்டு வந்து உப்பில்லாமல் வேக வைக்கிறாள். உப்புக்குக் கூட வழியில்லை. அதை எல்லோ ரும் சேர்ந்து உண்ணுகிறார்கள். வறிய நிலையைக் கண்டு இரங்காமல் பரிகாசம் செய்யும் மூட்டாள்கள் பார்க்கப் போகிறார்களே என்று கதவைச் சாத்திக்கொண்டு அதை உண்கிறார்கள்.

"நீங்களும் அங்கே போங்கள். அவனுடைய நாட்டில் எயிற்பட்டினம் என்ற ஊர் இருக்கிறது; கடற்கரையாகிய

நெய்தல் நிலத்தில் இருக்கும் ஊர். கிடங்கில் கோமானாகிய நல்லியக் கோடனைப் பாடிக்கொண்டு நீங்கள் போனால் அங்குள்ள பரதவர் தமக்குரிய உணவைத் தருவார்கள். காடு அடர்ந்த முல்லை நிலத்தில் உள்ள உப்பு வேலூர் என்ற ஊருக்குப் போனால் அங்கே உள்ளவர்கள் சமைத்த புளிக்குழம்போடு கலந்த சோறும் ஊனும் கிடைக்கும்'' என்று மேலே சொல்கிறான்.

''மருத நிலத்தினிடையே உள்ளது ஆமூர். அங்கே அந்தணர்கள் வாழ்கிறார்கள். உழவர்கள் இருக்கிறார்கள். உழவர்கள் வீட்டில் ஆடவர்கள் இல்லாவிட்டாலும் அங்கே உள்ள மகளிர், குழந்தைகளை அனுப்பி உங்களை அழைத்து வரச் செய்து நல்ல அரிசிச் சோறும் நண்டுக் குழம்பும் கொடுப்பார்கள்.''

பிறகு நல்லியக் கோடன் இருக்கும் ஊரைப் பற்றிச் சொல்கிறான். ''அவனது யானைபோர்க்களத்தில் பகைவர் பிணங்களைத் துகைத்துக் கால் நகங்களெல்லாம் சிவந்திருக்கின்றன. பேய் மகள் மாமிசத்தை உண்டு சிரித்தால் எப்படி அவள் பற்கள் இருக்கும்? அப்படி இருக்கின்றன அந்த நகரங்கள்!

''அவனுடைய நகர வாயிலினில் எல்லோரும் போக முடியாது. தடாரிப் பறை கொட்டும் பொருநர் போகலாம்; புலவர் போகலாம்; வேதபாரகராகிய அந்தணர் போகலாம்; வேறு யாரும் உத்தரவன்றி உள்ளே புக முடியாது.''

நல்லியக் கோடன் அவைக்களத்தில் வீற்றிருக்கிறான். அவனைச் சுற்றி அறிஞரும் வீரரும் மகளிரும் பிறரும் இருக்கிறார்கள். அவர்கள் அவனைப் புகழ்கிறார்கள். அவனுடைய இயல்புகள் பல. எல்லா இயல்புகளையும் எல்லாரும் பாராட்ட முடியுமா? சங்கீதம் தெரியாதவன்

ராகத்தைப் பாராட்டினால் அது பைத்தியக்காரத்தனம் அல்லவா? இங்கே அந்த் அந்த இயல்புகளைத் தெரிந்த வர்கள் அவற்றைப் பாராட்டுகிறார்களாம்.

செய்ந்நன்றி அறிதல், சிறுமையுடைவர்களோடு சேராத பெருந்தகைமை, எப்போதும் இன்முகத்தோடு இருத்தல், யாவருக்கும் இனியவனாக ஒழுகுதல் ஆகிய குணங்களை அறிவுடைய சான்றோர்கள் பாராட்டு கிறார்கள். அஞ்சினவர்களை அஞ்சேல் என்று பாதுகாக் கிறான்; நெடுங்காலம் நிற்கும் சினம் அவனிடம் இல்லை; வீரர்களின் கூட்டத்தில் அவன் சிறந்து விளங்குகிறான்; கெட்டோடும் படைகளைத் தாங்கி நிறுத்துகிறான்; இந்த இயல்புகளைச் சொல்லி வீரர்கள் வாழ்த்துகிறார்கள். அழகிய பெண்களும் அவனை ஏத்துகிறார்கள். அவர்கள் எவற்றைச் சிறப்பிக்கிறார்கள் தெரியுமா? நினைத்ததை முடிக்கும் ஆற்றல், மகளிர் பலராலும் விரும்பப்படும் தன்மை, ஒருத்தியிடமே அடிமையாகாமை, மகளிர் வருந்தும் தன்மையை அறிந்து உதவுதல் ஆகியவற்றை அவர்கள் வியந்து பாராட்டுகிறார்கள். புலவர்கள் முதலிய பரிசிலர்கள், அறிவில்லாதவர் முன் ஒன்றும் அறியாதவனைப்போல இருப்பதையும், புலவர்களின் முன் மிக்க அறிவுடையவனாக விளங்குவதையும், தரம் அறிவதையும், எல்லை இல்லாமல் கொடுப்பதையும் சிறப்பிக் கிறார்கள்.

''அவனுடைய அவைக்களத்துக்குச்சென்று அவனைப் பாடுங்கள்'' என்கிறான் ஆற்றுப் படுத்தும் பாணன். ''யாழை வாசித்துப் பாடுங்கள். அப்படிச் சிலவற்றைப் பாடுவதற்கு முன்பே அவன் மூங்கிலை உரித் தாற் போன்ற மெல்லிய ஆடைகளைத் தந்து உடுத்துக் கொள்ளச் செய்வான். நல்ல மதுவைத் தருவான்

பல வேறு வகையான உண்டிகளை வழங்கி உடனிருந்து உண்ணச் செய்வான்'' என்கிறான்.

நளபாகம், வீம பாகம் என்று இரண்டு வகைப் பாக சாஸ்திரம் உண்டு. ''வீமன் இயற்றிய சமையற் கலை நூலின்படி அமைந்த பலவகை அடிசிலைத் தருவான்'' என்று சொல்கிறான் வழி காட்டும் பாணன்.

''காண்டவ வனத்தைக் கொளுத்திய அம்பையுடைய தூணியைப் பெற்றவனும் பூ வேலை செய்த கச்சைக் கட்டினவனும் புகழை உடையவனுமாகிய அருச்சுன னுக்கு முன்னவனாகிய மலை போன்ற மார்பையுடைய வீமன் தந்த நுண்ணிய பொருளையுடைய நூலிலுள்ள செய்முறைகளினின்றும் பிழை படாத பல வேறு உணவுகள்'' என்று விரித்துரைக்கின்றான்.

**''காளரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்**
**பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்.''**

''விருந்து வழங்கிய பிறகு பகைவர்களாகிய வீரர்கள் தந்த நிதித்திரளோடு குதிரை பூட்டிய தேரையும் அதை ஓட்டும் பாகனையும் வழங்குவான்'' என்று முடிக்கிறான்.

இந்த ஆற்றுப் படையில் பாலைநிலத்தின் வெப்பம் முதலில் தெரியும். பிறகு விறலியரின் தலைமுதல் கால் வரையிலுள்ள அழகு விரியும். நெய்தல், குறுஞ்சி, மருதம், முல்லை ஆகிய நிலங்களின் வளம் காட்சி தரும். ஏழு பெருவள்ளல்கள் வருவார்கள். வறுமையின் சித்திரம் தோன்றும். நல்லியக் கோடனின் வீரமும், ஈகையும், பிற நற்பண்புகளும் அடுக்கடுக்காக அலரும். அவனுடைய இசை எங்கும் சென்று நிலைத்திருக்கிறது. அதனால்,

**"சொல்இசை நிலைஇய பண்பின்**
**நல்லியக் கோடன்"**

என்று பாராட்டுகிறான் பாணன்.

பாணனா இவ்வளவையும் சொல்கிறான்? அவனுக்குள் புகுந்து கொண்டு இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இனிய செய்யுளாகப் பாடுகிறார். அதுதான் சிறுபாணாற்றுப்படை.

# 6. பெரும்பாணாற்றுப் படை

பெரிய யாழை இயக்கும் பாணன் பெரும்பாணன், அவனிடம் வேறு ஒரு பாணன், தொண்டைமான் இளந்திரையனிடம் போனால் உனக்குப் பரிசில் கிடைக்கும் என்று சொல்கிறான். இதுதான் பெரும்பாணாற்றுப் படையின் திரண்ட கருத்து. 500 அடிகளையுடைய இதைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பத்துப் பாட்டில் நாலாவது பாட்டாகக் கோக்கப் பெற்ற நூல் அது.

வழி காட்டும் பாணன் ஆற்றுப்படையில் வரும் வழக்கம்போல், போகும் வழியில் உள்ள காட்சிகளையும் அங்கே உள்ளவர்கள் செய்யும் உபசாரங்களையும் தொண்டைமான் இளந்திரையனுடைய பெருமையையும் விரிவாகச் சொல்லும் வகையில் பாட்டு அமைந்திருக்கிறது. "நான் அவனிடம் பெரும் பரிசில் பெற்று வருகிறேன். நீயும் போனால் பெறலாம்" என்று அவன் சொல்கிறான்.

தொண்டைமான் இளந்திரையன் பழியே இல்லாமல் செங்கோல் ஓச்சுபவன். அதனால் அவனுடைய நாட்டில் யாருக்கும் தீங்கே இராது. அவனுடைய நகருக்குப் போகிற வழியில் வழிப்பறி கள்வர் இருக்க மாட்டார்கள். இடி கூடப் பயங்கரமாக இடிக்காது.

பாம்பு கடிக்காது. காட்டு விலங்குகள் துன்புறுத்து வதில்லை. இப்படி இருப்பது ஏதோ தர்மயுகம் என்று தோன்றுகிறதல்லவா? "நீங்கள் எங்கெங்கே தங்க விரும்புகிறீர்களோ அங்கங்கே தங்கிப் போகலாம். அங்கங்கே உள்ள மக்கள் அவரவர்கள் வழக்கத்துக்கு ஏற்ற உணவுகளைத் தந்து உபசரிப்பார்கள்." இது வழி காட்டுபவன் கூற்று.

போகிற பாணன் சுத்த சைவன் அல்லன். சுவை உள்ள எந்த உணவையும் உண்ணுகிறவன். ஆகவே, அங்கங்கே கிடைக்கும் உணவு வகைகளைப் பற்றி வழி காட்டும் பாணன் சொல்கிறான்.

பாலை நிலத்தில் வண்டியிலே பாரம் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். அந்த வண்டிகளைக் காக்கும் காவலர்கள் அடியிலே செருப்பும் உடம்பில் சட்டையும் அணிந்திருக் கிறார்கள். செருப்பை அடிபுதை அரணம் என்று சொல் கிறார் புலவர். பாதரட்சை என்று வடமொழியில் சொல் கிறோம் அல்லவா? சட்டையைப் படம் என்கிறார்.

**அடிபுதை அரணம் எய்திப் படம்புக்குப்**
**பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்"**

என்று அவர்களை வருணிக்கிறார் புலவர். கழுதையின் மேல் மிளகுப் பொதியை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். மெல்லிய பையில் மிளகு இருப்பதனால் அதைப் பார்த் தால் பலாக்காயைப் போல முள்ளு முள்ளாகத் தெரி கிறது.

**"சிறுசுளைப் பெரும்பழம் கடுப் பமிரியல்**
**புணர்ப்பொறை"**

[மிரியல் - மிளகு; பொறை - பாரம்.]

பாலை நிலம், காடு முதலிய இடங்களில் அந்த அந்த இடங்களில் உள்ள உணவு வகைகள் கிடைக்குமாம்.

முல்லை நிலமாகிய காட்டுக்குப் போனால் அங்கே தினைச் சோறும் பாலும் கிடைக்கும். அங்கே உள்ள ஆய்க்குலப் பெண்களைப் பற்றிய வருணனை வருகிறது.

ஆய்க்குலப் பெண் விடியற்காலையில் எழுந்து தயிர் கடைகிறாள். கடையும்போது நாய்க்குடை போலக் கொப்புளம் எழுகிறது. தயிரைக் கடைந்து மோர் விற்கச் செல்கிறாள். மோரை விற்று அதனால் குடும்பச்செலவைச் செய்கிறாள். நெய்யை விற்றுப் பணம் சேர்க்கிறாள். அதைக் கொண்டு அவள் தங்கம் வாங்கி நகை செய்து கொள்வதில்லை. எருமை வாங்கி மேலும் வருவாய்க்கு வழி செய்கிறாள். அவளுடைய பொருளாதார அறிவை வியக்கத்தானே வேண்டும்?

**''அளைவிலை உணவிற் கிளையுடன் அருந்தி**
**நெய்விலைக்கு அட்டிப் பசும்பொன் கொள்ளாள்,**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்.''**

இதோ அந்தணர் வீடு. அங்கே பந்தற் காலில் கன்றுக் குட்டியைக் கட்டியிருக்கிறார்கள். வீட்டைச் சாணம் போட்டு மெழுகியிருக்கிறார்கள். அங்கே கோழியோ நாயோ அணுகுவதில்லை. அங்கே உள்ளே கிளி வேதத்தைச் சொல்கிறது.

**''மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது;**
**வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்.''**

அத்தகைய மறை காப்பாளர் உறை பதிக்குப் போய்த் தங்கினால் அருந்ததி போன்ற பெண் சமைத்த இராசான்னம் என்ற பெயருள்ள அரிசியால் சமைத்த சோற்றை வழங்குவாள். அது அவியாகத் தேவர்களுக்கு வழங்குவதற்கு உரியது. அந்தப் பிரசாதத்தை உண்ணலாம். நறுமோர், வெண்ணெய், கும்மட்டி மாதுளங்

காய்க்கறி, கறிவேப்பிலையும் மாங்சாய்த் துண்டும் போட்டுச் சமைத்த புளிக் குழம்பு இவை அங்கே கிடைக்கும். இப்படி உள்ள அந்தணர் வாழ்கின்ற நீர்ப்பெயறு என்ற ஊரைக் கடந்துபோக வேண்டும்.

பிறகு கடற்கரைப் பட்டினத்துக்குப் போகலாம். அங்கே கலங்கரை விளக்கம் இருக்கும்.

உழவர்கள் வீட்டுக்குப் போனால் அங்கே தென்னை ஓலையினால் வேய்ந்த வீடுகள் இருக்கும். மஞ்சட் பயிர் வளர்ந்திருக்கும். அங்கே இனிய பலாப்பழம். இளநீர், யானைத் தந்தத்தைப் போன்று நீண்டு வளைந்த வாழைப் பழம், பனை நுங்கு ஆகியவை கிடைக்கும். ஒரே தித்திப்பாக இருக்கும் இவை தெவிட்டிப்போனால், நல்ல சேப்பங் கிழங்குப் பொரியல் கிடைக்கும்.

அப்பால் காஞ்சி மரங்கள் அடர்ந்த காஞ்சிக்குப் போவீர்கள். அங்கே ஆதிசேஷ சயனத்தில் யதோக்த காரியாகிய திருமால் கோயில் இருக்கிறது. அவரை வாழ்த்திவிட்டுச் செல்லுங்கள்.

காஞ்சிமாநகரில் வீதிகளில் தேர்கள் சென்ற சுவடுகள் இருக்கும். பலவகைக் குடிகள் பலகாலமாக நிலைபெற்று வாழும் இடம் அது. பண்டங்களை வாங்குவாரும் விற்பாருமாகப் பெருங் கூட்டமாக அங்கே இருக்கும். நகரத்தின் வாசல் எப்போதும் திறந்தே இருக்கும்.

அந்த ஊர்த் தெருக்கள் வட்ட வட்டமாக ஒன்றைச் சுற்றி ஒன்று இருக்கும். அதைப் பார்த்தால் தாமரை மலரின் இதழ் வரிசைகளைப் போல இருக்கும். திருமாலினுடைய திருவுந்தியில் தோன்றிய தாமரைபோன்று தோற்றம் அளிக்கும். பூவாது காய்க்கும் மரங்களுக்குள் பலாமரம் எப்படிச் சிறந்து விளங்குகிறதோ அதுபோல

நகரங்களுக்குள்ளே சிறந்து விளங்கும் நகரம் அது. மிகப் பழைய நகரம். எப்போதும் விழா நடக்கும் ஊர். அந்த நகரத்தில்தான் பகைவர்களை வென்றவனும் ஈகையிற் சிறந்தவனும் ஆகிய இளந்திரையன் இருக்கிறான். அவன் முற்றத்தில் அவனைக் காண்பதற்குரிய செவ்வியை நோக்கிப் பலர் காத்திருப்பர்.

அவனது அவைக்களம் குறுகி அவனைப் புகழுங்கள்.

உடனே அவன் உங்கள் அழுக்கடைந்த உடையை மாற்றிப் பாலாவிப் போன்ற கலிங்கத்தை உடுக்கத் தருவான். பளபளப்பான பாத்திரங்களைப் பரப்பி அவற்றில் பலவகை உணவுகளை நிரப்பி உடனிருந்து உண்ணச் செய்வான். விருந்து வழங்கிய பிறகு உங்கள் தலையில் பொன்னாலான தாமரையைச் சூட்டுவான். உங்கள் மனைவியருக்குப் பொன்மாலை வழங்குவான். வெள்ளைக் குதிரை நான்கு பூட்டிய தேரைத் தருவான். வேறு பல பொருள்களையும் அளிப்பான். அன்போடு, ''ஊர் போய் வாருங்கள்'' என்று சொல்லி அனுப்புவான்.

இவ்வளவும் சொல்லிவிட்டு இளந்திரையன் நாட்டிலுள்ள மலைக் காடுகளைப் பற்றிக் கடைசியில் சொல்கிறான் பாணன்.

அங்கே கின்னரப் பறவைகள் சாரலில் முரலும். மயில்கள் மரங்களில் ஆடும். ஆண் குரங்குகள் மரங்களில் பாய்ந்து உதிர்ந்த மலர்களைப் பெண் குரங்குகள் பெருக்கிச் சுத்தமாக்கும். அங்கே மான்கள் அச்சமின்றி உறங்கும். அங்குள்ள முனிவர்கள் வேள்வி செய்வார்கள்.

வழிப்போவாருக்கு எங்கே போனாலும் உபசாரம் கிடைக்கிறது. தெய்வ உணர்ச்சியும் செல்வச் சிறப்பும் அறநெறியும் மல்கியிருக்கின்றன.

# 7. முல்லைப் பாட்டு

மழைக்காலம், திருமாலைப்போல மேகங்கள் கறுத்து, வானத்தில் படர்ந்து மழை பொழிந்திருக்கின்றன. மாலைக்காலம். போருக்குச் சென்றிருக்கும் மன்னன் வெற்றி பெற்று வருவானா என்பதைத் தெரிந்து கொள்ளச் சகுனம் பார்ப்பதற்காகச் சில முதிய பெண்மணிகள், காவல் நிறைந்த அந்தப்பழைய ஊருக்குப் புறம்பே போய், நெல்லையும் முல்லைப் பூவையும் தூவித் தெய்வத்தைத் தொழுகிறார்கள். அப்பொழுது நல்ல சகுனம் உண்டாகிறது.

மேய்ச்சலுக்குப் போன பசுமாட்டின் கன்று, தாய்ப் பசு வரும் நேரமாகி விட்டமையால் பரபரக்கிறது. அதன் வருத்தத்தைப் போக்க அதன் கழுத்தைத் தடவிக் கொடுத்த ஆய்மகள், "இதோ உன் தாய் வந்து விடுவாள்" என்று சொல்கிறாள். இதுவே அந்த முதிய பெண்டிருக்கு நல்ல சகுனமாகப் படுகிறது.

அரண்மனையில் அரசனுடைய மனைவி அவனுடைய பிரிவினால் வருந்திக் கொண்டிருக்கிறாள். 'கார்காலம் வந்துவிட்டதே!' என்று மனம் வாடுகிறாள். அவளிடம் அந்த முதிய பெண்மணிகள் சென்று, "நல்ல வார்த்தை களைக் கேட்டோம். நல்ல சகுனம் அது. அவர் வந்து விடுவார்" என்று ஆறுதல் சொல்கிறார்கள். ஆனாலும் அரசிக்கு மனம் ஆறுதல் பெறவில்லை. பிரிவுத் துன்பத்

தால் கண்ணீர் வடிக்கிறாள். இவள் இங்கே இப்படித் துயர் நிலையில் இருக்க, அங்கே மன்னன் எப்படியிருக் கிறான்?

அவன் பாசறையில் தங்கியிருக்கிறான். காட்டாறு ஓடுகிற காட்டுப் பிரதேசம் அது. அங்கே உள்ள செடி கொடிகளையெல்லாம் அழித்து முள்ளாலே வேலி கோலி விசாலமாக அந்தப் பாடிவீட்டை அமைத்திருக்கிறார்கள். யானைகள், குதிரைகள், வீரர்கள் யாவரும் அங்கே பாளையம் இறங்கியிருக்கிறார்கள். வரிசை வரிசையாகக் கூரைக் குடிசைகள் நிற்கின்ற தெருக்கள் சில எல்லாம் புதிதாக அமைத்தவை.

காவலாக யானைகள் நிற்கின்றன. கரும்பையும் நெற்கதிரையும் சேர்த்துக் கவளமாக அவற்றுக்குக் கொடுக்கிறார்கள். பசி இல்லாமையால் அவற்றைக் கொண்டு களிறுகள் தம் நெற்றியைத் துடைத்துக்கொள் கின்றன. பிறகு துதிக்கையில் வைத்துக் கொள்கின்றன. பாகர்கள் அங்குசத்தால் குத்தி வடமொழிச் சொற்களைச் சொல்லிக் கவளத்தை உண்ணச் செய்கிறார்கள்.

வில்லையும் தூணியையும் தொங்க விட்டுக் கழிகளைக் குத்தி அங்கங்கே கூடாரம் அமைத்து அந்தப் படை வீடு களில் வீரர்கள் தங்கியிருக்கிறார்கள்.

இவ்வளவு படை வீடுகளுக்கும் நடுவே நீண்ட படுதாக்களைக் கட்டிய பெரிய கூடாரத்தில் அரசன் இருக் கிறான். அங்கே கச்சுப் பூண்ட அழகிய மங்கையர் கையில் எண்ணெய்க் குழாய்களை வைத்துக் கொண்டு அங்குள்ள பெரிய விளக்குகளில் நீண்டதிரிகளை இட்டு, அணையாமல் எண்ணெயை அவ்வப்போது விடுகிறார்கள். விளக்குகளின் ஒளியால் அந்த இடம் பகல் போல இருக்கிறது.

மெய்க்காப்பாளர் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு உடம்பின்மேல் போர்வையைப் போர்த்துக் கொண்டு காவல் காக்கிறார்கள். அங்கே நாழிகை வட்டில் இருக்கிறது. அங்கிருந்து கவனிக்கும் நாழிகைக் கணக்கர், "இத்தனை நாழிகை ஆயிற்று" என்று அடிக்கடி அறிவிக்கிறார்கள்.

அங்கே அரசனுடைய பாசறை வீட்டை யவனர் கட்டியிருக்கிறார்கள். இடுப்பிலே பிரம்பு, சட்டையிட்ட உடம்பு, பார்த்தாலே பயந்தரும் தோற்றம், வலிமை இவற்றையுடைய யவனர் புனைந்த இல்லம் அது.

அங்கே திரை போட்ட அறைக்குள் பக்கத்தில் சைகையினால் கருத்தைப் புலப்படுத்தும் மிலேச்சர்கள் அருகில் நின்று காவல் காக்க, படுக்கையில் படுத்திருக் கிறான் அரசன்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் நெஞ்சில் போர்க்களத்தின் காட்சிகள் ஓடுகின்றன. வேல் பாய்ந்த தனால் புண்ணுற்றுப் பிடியை மறந்த ஆண் யானைகள், பகைவர் படையில் உள்ள யானையின் கைகளை வெட்டித் தாம் உண்ட செஞ்சோற்றுக் கடனைக் கழித்து உயிர் விட்ட வீரர். அம்பு பாய்ந்து எதையும் உண்ணாமல் வருந்தும் குதிரைகள்—இவற்றையெல்லாம் சிந்திக்கிறான்,

அவன் கை ஒன்றைப் படுக்கையில் வைத்திருக்கிறான். மற்றொரு கையிலுள்ள கடகத்தை முடியோடு சேர்த்துத் தலைக்கு அணையாக வைத்திருக்கிறான், நெடுநேரம் சிந்திக் கிறான். பகைவரை நினைத்து, வில்லில் அம்பு விடும் விரலால் தன் மார்பில் உள்ள மாலையை நெருடுகிறான்.

ஊரில் அவனைப் பிரிந்து அவன் காதலி இருக்கிறாள் ஆகவே, மிகவும் துயரத்துடன் இருக்கிறாள். என்ன

என்னவோ நினைக்கிறாள். தானே தேற்றிக்கொள்கிறாள். வளைகளைத் திருத்திக் கொள்கிறாள். மயங்குகிறாள். பெருமூச்சு விடுகிறாள். அம்பு பட்ட மயிலைப் போல நடுங்குகிறாள். உடம்பு இளைத்ததனால் அவள் இழைகள் நெகிழ்கின்றன.

அவள் உள்ள இடத்தில் பாவை விளக்கு எரிகிறது. எழுநிலை மாடம் அது. மழை பெய்கிறது. கூடுவாய் மூலையிலிருந்து மழை நீர் சடசட வென்று விழுகிறது. அரசனுடைய தேர் தான் வருகிறதோ என்று அந்த ஓசையைக் கவனித்துக் கொண்டு படுத்திருக்கிறாள் அரசி.

இப்போது அரசன் வெற்றிச் சங்கம் முழங்க வருகிறான்.

அவன் வருகிற வழி முழுவதும் ஒரே குளிர்ச்சி. எங்கும் பலநிற மலர்கள். எங்கும் காடு வளம் பெற்றிருக்கிறது. முறுக்கிய கொம்பையுடைய ஆண் மான்களோடு பெண் மான்கள் துள்ளிக் குதிக்கின்றன. அரசனது தேர்க் குதிரைகளின் ஒலி அரசியின் காது நிரம்ப ஒலிக்கின்றது!

பத்துப் பாட்டின் ஐந்தாவது பாட்டாகிய முல்லைப் பாட்டில் வரும் காட்சிகள் இவை. இதைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்.

தமிழில் சொல்லப்பெறும் ஐந்து திணைகளில் ஒன்று முல்லை. தலைவன் பிரிந்திருக்கும்போது, அவன் விரைவில் வந்து விடுவான் என்ற நம்பிக்கையோடு அவன் மனைவி வீட்டில் பொறுமையோடு இருப்பதைச் சொல்வது முல்லைத்திணையின் உரிப்பொருள். முல்லைத் திணைக் குரிய முக்கியமான நிகழ்ச்சி அது.

இந்தப் பாட்டு, காத்திருக்கும் அரசியின் நிலையை எடுத்துச் சொல்வதனால் முல்லைப் பாட்டு என்ற பெயர் பெற்றது. குறிப்பிட்ட ஒரு செல்வனைச் சுட்டிக்காட்டிப் பாடாமல் பொதுவாக இருப்பதனால் இந்தப் பாட்டு அகத்துறையைச் சேர்ந்தது. 104 அடிகளையுடைய இதுவே பத்துப் பாட்டில் உள்ளவற்றில் சிறியது. ஆனால் கவிச்சுவையில் மிக்கது.

## 8. மதுரைக் காஞ்சி

இளமைக் காலத்தில் அரியணை ஏறிய நெடுஞ் செழியனை அவனுடைய பகைவர்கள், இளையவன் ஆதலின் எளிதில் வென்று விடலாமென்று எண்ணினார் கள், சேரனும் சோழனும் குறுநில மன்னர்கள் ஐந்து பேர்களும் படை யெடுத்து வந்தார்கள். தலையாலங் கானம் என்ற இடத்தில் பெரும் போர் மூண்டது. யானைக் கூட்டத்தில் புகுந்த சிங்கக்குட்டி போல வீறுடன் பாண்டிய மன்னன் அவர்களோடு போர் செய்தான். முடிவேந்தர் இருவரும் குறுநில மன்னர்கள் ஐவரும் பெரும் படையுடன் வந்து போர் செய்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த பாண்டியன் நெடுஞ்செழியன் அவ்வளவு பேர்களையும் கால் வாங்கி ஓடச் செய்தான்; சேர அரசனைச் சிறைப்படுத்தினான்.

இளமையில் அவன் பெற்ற இந்த மாபெரும் வெற்றி யைத் தமிழுலகமே கொண்டாடியது. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று அவனைப் பாராட்டியது.

இவ்வாறு இளமையில் வீர விளையாடல் புரிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் மேலும் மேலும் பல பகை வர்களை ஒடுக்கினான். அவனுடைய தோள் தினவு தீரவில்லை, எங்கேனும் சிறு பகை தலை காட்டினாலும் உடனே அங்கே படையுடன் சென்று அடக்கினான்.

இப்படி வாழ்நாள் முழுவதும் போர் செய்வதிலே கழித்துவிட்டால், நாடு என்னாவது? அவன் ஆக்க வேலைகளைச் செய்ய வேண்டாமா? இந்த எண்ணம் பல சான்றோர்களுக்கு உண்டானாலும் பாண்டியனுடைய சமர வேட்கையைத் தடுக்க அஞ்சினார்கள்.

பாண்டியன் அவைக்களத்தில் பல புலவர்கள் இருந்தார்கள். அவர்களில் தலைமை தாங்கியவர் மாங்குடி மருதனார். அவர் எப்படியேனும் மன்னனைப் போர் நாட்டத்தினின்றும் திருப்ப வேண்டுமென்று எண்ணினார். பொருள், பதவி, உலகம், இளமை ஆகியவை நிலையாதவை என்று எடுத்துக் காட்டவேண்டும் என்று முடிவு செய்தார். 782 அடிகள் அடங்கிய மதுரைக் காஞ்சி என்ற நூலைப் பாடினார். அது பத்துப் பாட்டில் ஆறாவது நூலாகக் கோக்கப் பெற்றிருக்கிறது.

மதுரையில் உள்ள அரசனுக்குக் கூறிய காஞ்சியாதலால் அதற்கு மதுரைக் காஞ்சி என்ற பெயர் அமைந்தது. பொருளிலக்கணத்தில் புறப்பொருள் ஒரு பிரிவு. அதில் வரும் திணைகளில் காஞ்சித் திணை ஒன்று. அது பலவேறு நிலையாமையைச் சொல்வது.

**''பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே.''**

என்று தொல்காப்பியம் இதன் இலக்கணத்தைச் சொல்கிறது. 'மோட்சத்தைப் பெற வேண்டும் என்ற விருப்பத்தை உண்டாக்கும் பொருட்டாக, பொருள், இன்பம் என்றுள்ளவையும் இளமை முதலியனவும் நிலையாதன என்று சொல்லுவது' என்பது இதன் பொருள்.

பேரரசனிடம், ''இந்த ஊரும் சதமல்ல; உற்றார் சதம் அல்ல; உன் வாழ்வும் சதமல்ல'' என்று நேராகக் கூறமுடியுமா? அவனுடைய முன்னோர்களின் பெருமை

யையும் அவனுடைய சிறப்பையும் அவன் நாட்டின் வளப்பத்தையும் விரிவாக எடுத்துச் சொல்லிக் குறிப்பாக நிலையாமையைப் புலப்படுத்துகிறார் மாங்குடி மருதனார்.

முதலில் 205 அடிகளில் பாண்டியனுடைய வீரத்தையும் ஈகையையும் பாராட்டி விட்டு,

**''அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ?**
**கொன்ஒன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்!**
**கேட்டிசின் வாழி! கெடுகநின் அவலம்!''**

என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போலத் தாம் சொல்ல வந்ததைச் சொல்கிறார் புலவர்.

'அத்தகைய பெருமையை உடையவனே, ஐந்து பொறிகளாலும் அநுபவிக்கப்படுபனவும், உன் முன்னாலே நிற்பனவுமாகிய இந்தப் போகப் பொருள்களுக்கும் ஆன்மாவாகிய உனக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? பெரிதாக இருக்கும் ஓர் உண்மையான பொருளைச் சொல்கிறேன். போர்த் தொழிலில் பெருமை பெற்ற தலைவனே, உன்னுடைய அறியாமையாகிய அவலம் கெடுவதாக! நான் சொல்வதை இனிக் கேள்' என்பது அந்த அடிகளின் பொருள்.

அதற்கு மேல், ''உனக்கு முன்னால் இந்த உலகை ஆண்டு வீரச் செயலை விளைத்து வீணே மாண்டுபோன அரசர்கள் கடல் மணலைக் காட்டிலும் பலர். அவரைப் போல நீ இராமல் உயிர் உறுதி பெறுவதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார்.

**''பணைகெழு பெருந்திறற் பல்வேல் மன்னர்**
**கரைபொருது இரங்கும் கனைஇரு முந்நீர்த்**
**திரையிடு மணலினும் பலரே, உரைசெல**
**மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே.''**

(வெற்றி முரசை உடையவரும் பெரிய வலிமையையும் பல வேற்படையினையும் உடையவருமாகிய அரசர்கள், கரையோடு மோதி ஒலிக்கும் பெரிய கடலின் அலைகள் இட்ட மணலைக் காட்டினும் பலர்; அவர்கள் தம்முடைய ஆணை எங்கும் செல்ல, விரிந்த இடத்தையுடைய உலகத்தை ஆட்சி செய்து, பயனில்லாமல் கழிந்தோர்.)

மேலே சொன்ன ஏழு அடிகளே காஞ்சித் திணை என்பதைக் குறிப்பன. புலவர் இந்த ஏழு அடிகளைச் சொல்ல 782 அடிகளால் இந்தப் பெரிய பாட்டைப் பாடினார்.

நெடுஞ்செழியனுடைய செயல்களும் பண்புகளும், பாண்டி நாட்டின் வளமும், மதுரை மாநகரத்தின் அமைப்பும், அங்குள்ளவர்கள் காலை முதல் இரவு முடிய வாழும் வாழ்க்கை முறை என்று மூன்று பெரும் பிரிவுகளாக இந்தப் பாட்டில் வரும் செய்திகளைப் பகுத்துக் கொள்ளலாம்.

நெடுஞ்செழியன் நல்ல முறையில் உலகத்தை ஆண்ட மன்னர்களின் வழிவந்தவன், அகத்தியன் வாழ்ந்த பொதிய மலையைத் தனக்கு உரிமையாக உடையவன், அந்த முனிவருக்குப் பின்னே உலகம் புகழ நிற்பவன், வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழித் தோன்றல், பாரதநாடு முழுவதும் தன் ஆணையைச் செலுத்துபவன், சாலியூர் முதுவெள்ளிலை என்ற ஊர்களைக் கொண்டவன், தலையாலங் கானத்தில் வெற்றி கொண்டவன், கொற்கைக்குத் தலைவன் என்று நெடுஞ்செழியனின் பெருமைகள் வருகின்றன.

உலகத்தில் முதல் முதலாக மலை தோன்றியது என்ற உண்மையை இந்தப் பகுதியில் சொல்கிறார் புலவர்.

**"மலைஞாறிய வியல் ஞாலத்து"**

(முதல் முதலாக மலைகள் தோன்றிய அகன்ற உலகத்தில்,)

பாரத நாட்டின் எல்லையை இரண்டடிகளில் சொல்கிறார். இந்த எல்லைக்குள் உள்ள மன்னர்கள் பாண்டியனது ஏவலைக் கேட்பார்களாம்.

**"தென்குமரி வடபெருங்கல்**
**குணகுடகட லாஎல்லைத்**
**தொன்றுமொழிந்து தொழில்கேட்ப,"**

(தெற்கே குமரியும் வடக்கே பெரிய மலையாகிய இமயமும் கிழக்கும் மேற்கும் கடலும் எல்லையாக உள்ள நாட்டில் உள்ளவர் பழைய உறவைச் சொல்லி ஏவல்களைக் கேட்கும்படி.)

பாரத நாட்டின் ஒருமைப்பாடு இதிலே தொனிக்கிறது. பாண்டி நாட்டின் இயல்பைச் சொல்லும் பகுதியில் ஐந்து திணைகளிலும் உள்ள வளத்தை விரித்துரைக்கிறார் புலவர்.

இதோ மருதநிலம். எங்கும் வள்வயல்கள். அங்கே பல வகை ஓசைகள் காதில் விழுகின்றன. கரும்பாலையின் ஓசை ஒருபுறம்; சேற்றில் உழும் எருது பள்ளத்திலே நின்றுவிட அதை உழுபவர்கள் உசுப்பிவிட்டு ஓட்டும் ஓசை ஒரு பக்கம்; ஓரிடத்தில் நெல்லை அளப்பவர்கள் அடிக்கும் பறையின் ஒலி; பரங்குன்றத்தில் விழாக் கொள்ளும் ஆரவாரம் ஒரு பாங்கர்; ஆடவரும் மகளிரும் கூடிக் களியாட்டம் கொள்ளும் ஓசை ஒரு பால்; இப்படிப் பல ஓசைகள்.

முல்லை நிலத்தில் ஒரு பக்கத்தில் தினையை அறுவடை செய்கிறார்கள்; ஒரு பக்கம் எள் முதிர்ந்து நிற்கிறது;

வேறொரு பக்கத்தில் வரகு கதிர் முற்றியிருக்கிறது. குறிஞ்சி நிலத்தில் தோரை, ஐயவி, வெண்ணெல், இஞ்சி, மஞ்சள், மிளகு ஆகியவை பயிராகின்றன.

ஒரு பகுதியில் வறண்ட பாலை நிலம் காட்சி அளிக்கிறது.

நெய்தல் நிலத்தில் கடற்கரையில் வெளிநாட்டிலிருந்து குதிரைகள் மரக்கலங்களில் வந்து இறங்குகின்றன.

மதுரைமாநகரின் வருணனை மிக விரிவாக அமைந்திருக்கிறது. முதலில் அந்த மாநகரின் ஓவியத்தைக் காண்கிறோம். பெரும்பாணர்கள் வாழும் பகுதி வையைக் கரையில் அமைந்திருக்கிறது. அகழியும் மதிலும் புறத்தே விளங்க உள்ளே பெரிய தெருக்களில் மாடங்கள் ஓங்கி நிற்கின்றன.

நாளங்காடி, அல்லங்காடி என்று இருவகைக் கடை வீதிகள் இருக்கின்றன. பகலில் வியாபாரம் நடைபெறும் இடம் நாளங்காடி; இரவில் வாணிகம் நடப்பது அல்லங்காடி.

பல வகைக் கொடிகள் அங்கே காட்சியளிக்கின்றன; கோயில்களுக்கு விழா எடுக்க உயர்த்திய கொடிகள், போரில் வென்றதைக் காட்டும் வெற்றிக் கொடிகள், விற்கும் இடம் இது என்று காட்டும் கொடிகள், கல்வியாளர் உயர்த்திய கொடி, தியாகக் கொடி, தவத்தினர் நாட்டிய கொடி இப்படிப் பல கொடிகள்.

நாளங்காடியில் பூ, சுண்ணம், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு முதலியவற்றை விற்கிறார்கள்.

இறைவனுக்குத் திருவிழா நடக்கிறது. ஏழுநாள் நடக்கிறது. ஏழாம் நாள் தீர்த்தவாரி நடைபெறுகிறது. அன்று ஒரே ஆரவாரம்.

பௌத்தப் பள்ளியும் அந்தணர் உறைவிடமும், சமணப் பள்ளியும், அறங்கூரவையமும் அங்கங்கே உள்ளன. காவிதிப் பட்டம் பெற்ற அமைச்சரும், பண்டங்களை விற்கும் வணிகரும், புரோகிதரும், சேனைத் தலைவரும், தூதர்களும், ஒற்றர்களும் நம் கண்ணிற்படுகின்றனர்.

எத்தனைவிதமான கலைஞர்கள்! சங்கு கடைவார், இரத்தின வேலை செய்பவர், பொன் நகை செய்பவர்கள், பொன்னை நோட்டம் பார்ப்பவர்கள், ஆடையை விற்பவர்கள், செம்பு வேலை செய்வார், பூவையும் புகையையும் ஆயும் மாக்கள், சித்திரகாரர்கள் இவர்கள் அங்கங்கே தெருக்களில் இருக்கிறார்கள்.

இந்த நகரில் மக்கள் வாழ்க்கை அந்தி முதல் காலை வரையில் எவ்வாறு நடக்கிறது என்பதையும் புலவர் விரிவாகக் காட்டுகிறார்.

இரவின் முதல் சாமத்தின் நிகழ்ச்சிகள் பலப்பல. பெண்கள் பூவும் சாந்தும் புனைகின்றனர். பரத்தையர் இயல்பு பல அடிகளில் வருகிறது. புதல்வரை ஈன்ற மகளிர், பலர் காணாமல் இந்த முதல் சாமத்தில் நீராடுகிறார்கள். சூல் மகளிர் பூசாரிச்சியோடு சென்று இறைவனுக்கு நைவேத்தியத்தைப் படைக்கிறார்கள். சிலர் குரவைக் கூத்தாடுகிறார்கள்.

இப்படியே இரண்டாம் சாம நிகழ்ச்சிகளும் மூன்றாம் சாம நிகழ்ச்சிகளும் வருகின்றன. மூன்றாம் சாமத்தில் கள்வர்கள் வராமல் காக்கும் காவலர்களின் நிலையைச் சொல்கிறார் புலவர்.

கள்வர்கள் கல்லையும் மரத்தையும் வெட்டும்வாளைக் கையிலே வைத்திருக்கிறார்கள். காலில் செருப்பை அணிந்திருக்கிறார்கள். கரிய கச்சை இடையில் அணிந்

துள்ளனர். நூலேணியை இடுப்பில் சுற்றியிருக்கிறார்கள். பூமியை அகழும் கன்னக்கோலை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வருவதைக் கவனமாகக் காவலர் பதுங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**"துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர்,**
**அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த**
**நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி**
**ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்"**

என்று அவர்களின் திறமையைச் சொல்கிறார். களவு நூலும் காவல் நூலும் நன்கு அறிந்தவர் அவர்கள்.

விடியற்காலம் தாதுண் தும்பி பூவில் முரன்றாற் போல, 'ஓதல் அந்தணர் வேதம் பாடு'கிறார்கள். யாழ் வல்லவர்கள் மருதப் பண்ணைப் பாடுகிறார்கள். கதவுகள் திறக்கும் ஓசை காதில் விழுகிறது. இன்னும் பல பல நிகழ்ச்சிகள்.

இரவில் துயில் கொண்ட மன்னன் பள்ளி யெழு கிறான். நீராடிய பின் சந்தனத்தைப் பூசிக் கொண்டு முத்து மாலையை அணிந்து, மலர் மாலையையும்புனைந்து மோதிரம் கடகம் ஆகியவற்றை அணிந்து, மெல்லிய துகிலை உடுத்துக் கொள்கிறான். "பல வகையான வீரச் செயல்களைச் செய்த வீரர்களை அழைத்து வாருங்கள்! பட்டி மண்டபத்தில் உள்ளாரையும் அறங்கூறவையத் தாரையும் அழைத்து வாருங்கள்! பாணர் வருக! பாட்டுப் பாடும் மகளிர் வருக! புலவர்கள் வருக! கூத்தர்கள் வருக!" என்று எல்லோரையும் அழைத்து வரச் சொல்கிறான். அவரவர்களுக்கு வேண்டிய பரிசு களைக் கொடுக்கிறான். குதிரை, யானை, தேர் ஆகியவற் றையும் பொன்னையும் வழங்குகிறான்.

இப்படி நலம் செய்யும் நெடுஞ்செழியனை. "பலரும் உன்னைப் பாராட்ட மகளிர் ஏந்திய பொற்கலத்தில் உள்ள மதுவை நுகர்ந்து நாள்தோறும் மகிழ்ந்து நீடுழி வாழ்வாயாகா!" என்று வாழ்த்திப் பாட்டை முடிக்கிறார் மாங்குடி மருதனார்.

பாண்டி நாட்டில் ஐந்து வகை நிலத்திலுள்ளார் செயல்களையும், மதுரைமாநகரத்தின் மாட்சியையும், பாண்டியனுடைய வரலாற்றையும், அவனுடைய முன்னோர்களின் பெருமையையும் விளக்கும் இந்த நூலைப் பாடியதனால் மாங்குடி மருதனாருக்கு மதுரைக் காஞ்சிப் புலவர் என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

# 9. நெடுநல்வாடை

பத்துப்பாட்டில் ஏழாவது பாட்டாக இருப்பது நெடுநல் வாடை என்ற நூல். 188 அடிகளை உடைய அந்த நூலை இயற்றியவர் நக்கீரர். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை என்ற இரண்டு நூல்கள் பத்துப்பாட்டில் உள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியன் போர்த் தொழிலில் விருப்பமுடையவனாகி இருந்தமையால், அவன் போகத்தை மறந்து போர்க்களப் பாசறையில் இருக்கிறான். அவனுடைய மனைவி அவன் பிரிவை ஆற்றாமல் தனிமைத் துயரால் வாடுகிறாள். 'அவளுடைய வாட்டம் தீருமாறு பாண்டியன் போரில் வெற்றி பெற்றுத் திரும்புவானாக!' என்று மகளிர் துர்க்கையை வேண்டிக் கொள்ளும் பாணியில் அமைந்துள்ளது, இந்தப் பாட்டு.

நெடுஞ்செழியனை வெளிப்படையாக இந்தப் பாட்டில் எங்கும் நக்கீரர் குறிப்பிடவில்லை. "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என்று, அவனுடைய வேலையும் அதில் அவனுடைய அடையாளமாலையாகியவேப்பந்தார் இருப்பதையும் சொல்லியிருக்கும் குறிப்பினால் நெடுஞ்செழியனைப் பற்றிய பாட்டு என்பது தெரியவரும். அந்தக் குறிப்பு இல்லாவிட்டால் இந்தப் பாட்டு அகத்துறை அமைந்தது என்று சொல்லலாம். குறிப்பாக வேனும் வெளிப்படையாகவேனும் ஒரு குறிப்பிட்ட தலைவனை

உணர்த்துவதாக இருந்தால் அது அகத்திணையிற் சேராமல் புறத்திணை ஆகிவிடும். ஆகவே, இதுவும் புறத்திணைகளுள் வாகைத் திணையில் கூதிர்ப் பாசறை என்னும் துறையைச் சார்ந்தது என்று உரையாசிரியர் இலக்கணம் வகுத்திருக்கிறார்.

வாடை வீசும் கூதிர் காலத்தில் அரசன் மனைவியைப் பிரிந்து பாசறையில் இருக்கிறான். அந்தக் காலம் அவளுக்கு மிக நீண்டதாக இருக்கிறது. ஆதலால் அது நெடுவாடை. மனைவியைப் பற்றிய நினைவே இல்லாமல் வெற்றி பெறும் நோக்கோடு போக உணர்ச்சியை வென்றுள்ள அரசனுக்கு அது நல்ல வாடைக் காலமாக இருக்கிறது. அதனால் இதற்கு நெடுநல்வாடை என்ற பெயர் வந்தது. பாட்டின் நடுவில், "வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கி" என்று வாடைக் காற்று வீசுவதைப் பற்றிய செய்தி வருகிறது.

கவிதைச் சுவை நிரம்பிய பாட்டு இது. உள்ளதை ஓவியமாகக் காட்டும் தன்மை நவிற்சியே பாட்டு முழுவதும் ஊடுருவி நிற்கிறது. வாடைக் காலத்தின் வருணனை முதலில் வருகிறது. பிறகு பாண்டியனுடைய மனைவி பிரிவுத் துயரால் அமளியில் படுத்தபடியே வருந்தும் நிலையைக் காட்டுகிறார் புலவர். இறுதியில் பாசறையில் அரசன் இருக்கும் கோலத்தைச் சொல்கிறார்.

வாடைக் காற்று வீசும் இந்தக் கூதிர் காலத்தில் மக்களும் விலங்குகளும் குளிரினால் நடுங்குகிறார்கள் மக்கள் கைகளை நெருப்பிலே காய்ச்சிக் கொண்டு கன்னத்தில் வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பற்கள் தாளம் இடுகின்றன. ஆடு மாடுகள் மேய்ச்சலுக்குப் போகவில்லை. குரங்குகள் கையை முடக்கிக் கொண்டு குந்தியிருக்கின்றன. மரத்திலே உள்ள பறவைகள் காற்று

மிகுதியால் தரையிலே விழுகின்றன. பசு மாடுகள் கன்றுகளை உதைக்கின்றன. மலை முழுவதுமே குளிரும்படி வீசுகிறது, வாடைக் காற்று.

முசுண்டைப் பூவும் பீர்க்கம்பூவும் செடிகளில் மலர்கின்றன. கொக்கும் நாரையும் ஈர வெண்மணலில் தத்தித் தத்தி நடந்து மீன்களைக் கவ்வுகின்றன. மீன்கள் நீரின் எதிரே செல்கின்றன. சிறு துளிகளை மேகங்கள் வீசுகின்றன. நெல்லின் கதிர் வளைந்து நிற்கிறது. கமுகில் பாக்கு முற்றுகிறது.

இத்தகைய கூதிர் காலத்தில் அந்தப் பழைய நகரத்தில் ஆறுகள் கிடந்தாற் போன்ற தெருக்களில் வலிமையுடைய மிலேச்சர்கள் மதுவை அருந்திவிட்டு மழைத் தூறலையும் பொருட்படுத்தாமல் திரிகிறார்கள்.

பொழுதே தெரியவில்லை. என்றாலும், அழகிய மகளிர் பூந்தட்டில் வைத்திருந்த பிச்சிப் பூ மலர்வதைக் கண்டு மாலை வந்துவிட்டது என்று அறிந்து கொள்கிறார்கள். விளக்கை ஏற்றி இறைவனைத் தொழுகிறார்கள்.

வீட்டினுள் புறாக்கள் ஆணும் பெண்ணும் ஒன்றனை ஒன்று பாராமல் கொடுங்கைப் பலகைகளில் இருக்கின்றன. உணவுண்ண அவை வெளியில் போகவில்லை. வடநாட்டிலிருந்து வந்த சந்தனக் கல்லுக்கும் தென் பொதிகையிலிருந்து வந்த சந்தனத்துக்கும் இப்போது வேலையில்லை; அவை சும்மா கிடக்கின்றன. பெண்கள் தம் கூந்தலில் மாலைகளைச் சூடாமல் சில மலர்களை மட்டும் அணிந்து கொள்கின்றனர். நெருப்புக் கும்மட்டியில் அகில் முதலியவற்றை இட்டுப் புகைக்கிறார்கள். விசிறிகளை உறையிலிட்டு மாட்டியிருக்கிறார்கள். அவற்றில் சிலந்தி வலை பின்னியிருக்கிறது. கதவுகளை இறுகச் சாத்தியிருக்கிறார்கள். யாரும் தண்ணீரைக் குடிக்க

வில்லை. கும்மட்டி அடுப்பில் உள்ள நெருப்பையே சாப்பிடுகிறார்கள்! அவ்வளவு கொதிக்கக்கொதிக்க உணவை உண்ணுகிறார்கள். யாழ் வாசிக்கும் மகளிர் குளிரால் சுருதி கலைந்த நரம்புகளைத் தம் மார்பில் தடவிச் சூடு ஏற்றிச் சுருதி சேர்க்கிறார்கள். காதலரைப் பிரிந்த பெண்கள் வருந்தும்படி கூதிர் காலம் வந்து குடி கொண்டிருக்கிறது.

பாண்டியன் மனைவி கட்டிலில் படுத்திருக்கிறாள். பெரிய சக்கரவர்த்திக்கு ஏற்றபடி கட்டிய அரண்மனை அது. அதன் வாயிலில் கொடியை உயர்த்திய யானை புகும்; அவ்வளவு உயரமானது. அரண்மனை முற்றத்தில் கவரி மானும் அன்னங்களும் உலவுகின்றன. குதிரைகள் புல்லை உண்ணாமல் குதப்புகின்றன. கூடுவாய் மூலைகளில் மழை நீர் விழுகிறது. மயில் அகவுகிறது.

அந்த அரண்மனையில் யவனர் இயற்றிய பாவை விளக்குகளில் அடிக்கடி நெய் பெய்து திரியை நிமிண்டி விடுகிறார்கள். பாண்டிய அரசனை அல்லாமல் வேறு யாரும் புகாத அந்தப்புரத்தில் அரசி இருக்கிறாள். தந்தத்தால் செய்த கால்களை உடைய கட்டிலல் படுத்திருக்கிறாள். மென்மையாக விரித்த மெத்தென்ற படுக்கையில் அதிக அணிகளைப் புனையாமல் வண்ணம் தீற்றாத ஓவியத்தைப் போல அவள் படுத்திருக்கிறாள்.

அவளுடைய அடிகளைச் சில மகளிர் வருடிக் கொண்டிருக்கிறார்கள். செவிலித் தாய்மார் பல கதைகளையும் நொடிகளையும் சொல்லி நேரத்தைப் போக்க முயலுகிறார்கள். "இதோ விரைவில் உன் கணவர் வந்துவிடுவார்" என்று தேற்றுகிறார்கள். ஆயினும் அவள் ஆறுதல் பெறவில்லை; வருந்துகிறாள்; அழுகிறாள். கட்டிலின்

மேற்கட்டியில் மெழுகுச் சீலையில் அழகிய படங்களை எழுதி யிருக்கிறார்கள். சந்திரனும் உரோகிணியும் சேர்ந்திருப்பதாக ஒரு படம். அதைப் பார்த்துப் பெருமூச்சு எறிகிறாள். தன் கண்ணில் துளிக்கும் நீரை விரலால் வழித்துத் தெறிக்கிறாள். இப்படித் தனிமைத் துன்பத்தோடு இருக்கிறாள் பாண்டியன் மனைவி.

> ''உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுஉயிரா
> மாயிதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி
> செவ்விரல் கடைக்கண் சேர்த்துச்சில தெறியாப்
> புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை''

என்று அவளைச் சொல்கிறார் புலவர்.

அரசன் எப்படி இருக்கிறான்?

அவன் பாசறையில் இருக்கிறான். அங்கங்கே பல கூடாரங்கள். தன்னுடைய கூடாரத்திலிருந்து மன்னன் வெளியே வருகிறான். யானைகளைக் கொன்று மார்பிலே பட்ட விழுப்புண்களோடு படுத்திருக்கும் வீரர்களைப் பார்க்கும் பொருட்டுப் புறப்பட்டு வருகிறான்.

அங்கே பெரிய விளக்குகள் எரிகின்றன. வாடைக் காற்று வீசுவதால் சுடர்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிகின்றன. முன்னாலே சேனாபதி தன் கையில் வேப்ப மாலையை அணிந்து வேலை எடுத்துக்கொண்டு செல்கிறான். அவன் புண்பட்ட வீரர்களை, இன்னார் இன்னார் என்று அரசனுக்குக் காட்டிக்கொண்டு செல்கிறான். போகும் வழி தெரு மாதிரி இருக்கிறது. இரண்டு பக்கமும் கூடாரங்கள். அங்கே உள்ள குதிரைகள் மழை துளி வீசுவதனால் உடம்பை உதறிக்கொள்கின்றன. அரசன் மேலே போட்டிருக்கும் உத்தரீயம் நழுவுகிறது. அதை

இடப்பக்கத்திலே இடுக்கிக் கொள்கிறான். வாளைக் கையிலே எடுத்து அருகில் வரும் வீரனுடைய தோளிலே வலக்கையை வைத்துக் கொண்டு வருகிறான். கொற்றக் குடையை ஒருவன் பிடித்துக் கொண்டு வருகிறான். மழையில் நனையாமல் வருகிறான் அரசன். நள்ளிர வாயிற்றே என்று பாராமல், புண்பட்ட வீரர்களைக் கண்டு முகமலர்ச்சியோடு அவர்களைப் பாராட்டுவதற்கு அவன் கூடாரந்தோறும் போகிறான்.

**"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்"**

என்று வேந்தனைக் கூறுகிறார் புலவர்.

'இவ்வாறு பாசறையில் இருக்கும் மன்னனுடைய போர்த் தொழில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்போதே முடியட்டும்!' என்று கொற்றவையை வேண்டு வதாக அமைந்திருக்கிறது, நெடுநல்வாடை.

மலர்களைக் கொண்டு காலம் அறியும் வழக்கம், மாலைக் காலத்தில் மகளிர் விளக்கை ஏற்றித் தெய்வத்தை வழிபடுதல், அரசருக்கு ஏற்ப அளவிட்டு அரண்மனை கட்டுதல், சுவர்களில் கொடிகளைப் போன்ற சித்திரம் வரைதல், தந்தத்தால் கட்டில் அமைத்தல், மெழுகுச் சீலை யில் ஓவியங்களை எழுதுதல் முதலிய பல செய்திகள் இப் பாட்டின் இடையிடையே வருகின்றன.

கூதிர் காலத்தில் நகரில் காணும் காட்சிகளாகிய ஓவிய மும், அரண்மனைக்குள் அரசியின் நிலையாகிய சித்திரமும் அரசன் பரிவுடன் பாசறையில் உலவும் படமும் நெடுநல் வாடையைப் படிப்பவர்களின் அகக் கண்ணில் நன்றாகப் பதியும். நாமே வாடைக் காற்றின் 'குளிரை அநுபவிப் போம். பாண்டியன் மனைவியின் அவலத்தில் பங்கு கொள் வோம். தன் படை வீரர்களிடம் கொண்ட பேரன்பினால்

நள்ளிரவிலும் தூங்காமல் அவர்களை விசாரிக்கச் செல்லும் அரசனுடைய அரிய பண்பை எண்ணியெண்ணி வியப்போம்.

காதலால் உறங்காமல் சிறந்த கலைவளம் செறிந்த அரண்மனையில் படுத்துக் கிடைக்கும் பெண்ணரசியின் நிலையும், வீரத்தால் உறங்காமல் புதிதாக அமைக்கப் பட்ட பாசறையில் கூடாரந்தோறும் உலவும் அரசனின் நிலையும் நெடிய வாடையையும் நல்ல வாடையையும் ஒருங்கே தோற்றுவிக்கும் இப்பாட்டு, நமக்கு இரண்டும் இணைந்த நெடுநல்வாடையாக நின்று சுவை யூட்டுகிறது.

# 10. குறிஞ்சிப் பாட்டு

வடநாட்டிலிருந்து ஆரிய அரசன் பிரகத்தன் என்பவன் தமிழ் நாட்டுக்கு வந்தான். பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்து அங்கிருந்த பாண்டிய மன்னனோடு அளவளாவினான். சங்கப் புலவர் களைக் கண்டு பேசினான். தமிழர் நாகரிகத்தையும் அவர் களுடைய இலக்கிய வளத்தையும் அறிந்து கொண்டான்.

பெரும் புலவராகிய கபிலர் அக்காலத்தில் மதுரையில் இருந்தார். பிரகத்தின் அவரோடு பழகினான். தமிழில் உள்ள பொருட் பகுதி மிகவும் சிறப்பான தென்பதை அவன் உணர்ந்தான். ஒருவனும் ஒருத்தியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிக் காதல் செய்து பிறகு திருமணம் செய்து கொண்டு வாழும் முறையை இலக்கியங்கள் பலபடச் சிறப்பித்துச் சொல்வதைக் கேட்டறிந்தான். களவுக் காதலின் பெருமையை அவன் நன்கு அறிந்தான். இலக்கணத்தில் அந்த நெறியை அடைவு படுத்திச் சொல்லியிருக்கிறார்கள். களவுக் காதலை நன்கு விளக்கும் வகையில் தொடர்ந்த கதை போல அமைத்து ஓர் இலக்கியம் செய்து தரவேண்டும் என்று கபிலரை வேண்டிக் கொண்டான். தமிழ் நெறி யாகிய இந்தக் களவுக் காதலை ஆரிய அரசனுக்கு உணர்த்துவதற்காக 261 அடிகளில் குறிஞ்சிப் பாட்டு என்ற நூலைப் பாடினார் கபிலர். அது பத்துப் பாட்டில் எட்டாவது நூலாக இணைந்து விளங்குகிறது. அதன்

இறுதியில் '**ஆரியஅரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு**' என்ற குறிப்பு இருக்கிறது. தமிழ் என்றது, தமிழுக்கே சிறப்பாக அமைந்த இலக்கிய மரபை.

ஐந்து வகையாக அகப் பொருளைப் பிரிப்பார்கள் அதனால் அதை அகனைந்திணை என்று சொல்வது புலவர்களின் வழக்கம். அந்த ஐந்து திணைகளில் முதலாவது குறிஞ்சி. புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய பொருளைச் சொல்வது அது; அதாவது, காதலனும் காதலியும் இணைந்து இன்புறுவதையும் அதற்குக் காரணமாக நிகழும் செயல்களையும் சொல்வது.

குறிஞ்சிப் பாட்டு ஒரு காதலியைக் காதலன் கண்டு அன்பு செய்யும் கதையைச் சொல்கிறது. களவுக் காதலில் ஈடுபட்ட அந்தப் பெண் தன் காதலனைச் சில நாள் சந்திக்க முடிவதில்லை. அதனால் அவள் வருந்துகிறாள். அவனுடன் களவிலே தொடர்பு கொண்டிருத்தலை யாரேனும் அறிந்தால் என்ன செய்வது என்று அஞ்சுகிறாள். இவற்றால் அவள் உடம்பு மெலிகிறது. அது கண்டு தாய் அவள் மெலிவுக்குக் காரணம் என்ன வென்று குறி சொல்பவர்களிடம் கேட்கிறாள்.

அந்தச் சமயத்தில் அந்த இளம் பெண் தன் நிலையைத் தோழிக்குச் சொல்ல, தோழி காதலியை வளர்த்தசெவிலித் தாய்க்கு, அந்தப்பெண் ஒரு கட்டிளங் காளையிடம் காதல் கொண்டிருப்பதையும் அதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளையும் சொல்கிறாள். இவ்வாறு சொல்வதை '**அறத்தொடு நிற்றல்**' என்று இலக்கணம் சொல்லும். அறம் என்பது கற்பு. காதலியின் கற்புக்குத் துணையாக நின்று உண்மையை வெளிப்படுத்துவதால் அந்தப் பெயர் வந்தது.

செவிலிக்குத் தோழி கூறும் கூற்றாக அமைந்தது குறிஞ்சிப் பாட்டு. இதற்குப் பெருங் குறிஞ்சி என்ற பெயரும் உண்டு.

"தாயே, நீ வாழ்வாயாக! நான் சொல்வதை விரும்பிக் கேள்" என்று தோழி தொடங்குகிறாள்.

**"அன்னாய், வாழி வேண்டு அன்னை"**

"நீ இவளுடைய துயரத்தைப் பார்த்து இதற்குக் காரணம் என்னவென்று குறி சொல்வாரைக் கேட்டும், கடவுளை வாழ்த்தியும், வழிபட்டும் ஒன்றும் அறியாமல் நீயும் வருந்துகிறாய். முத்து, மணி, பொன் ஆகியவற்றால் அமைந்த அணிகலன் கெட்டால் செப்பஞ் செய்து கொள்ளலாம். ஆனால் ஒழுக்கமும் குணமும் கெட்டுவிட்டால் அவற்றைப் பொருத்துவது எளிதன்று. ஆகவே, அந்த நிலை வராமல் இதைச் சொல்ல வருகிறேன். 'நம் தந்தையின் காவலைக் கடந்து சென்று தனியே நாம் அமைத்துக் கொண்ட மணம் இது. இதை அறியச் செய்தால் பழி உண்டா? முறைப்படி இது நிறைவேறாவிட்டால் மறுமையிலாவது நமக்கு இது இயையட்டும்' என்று உன் மகள் சொல்லி வருந்தி எனக்கு உண்மையைச் சொன்னாள். இரண்டு பெரிய மன்னர்களுக்கிடையே நின்று சமாதானம் செய்துவைக்கும் சான்றோரைப் போல நான் இருக்கிறேன்" என்ற முன்னுரையுடன் தோழி இந்தக் காதற் கதையைச் சொல்லப் புகுகிறாள்.

"தினைப்புனத்துக்குச் சென்று கிளி முதலிய பறவைகளை ஓட்டிக் காவல் புரிந்து பகல் போனவுடன் வாருங்கள்" என்று தாய் சொன்னாள். அதன்படியே அந்த இளம் பெண்ணும் அவள் தோழியும் சென்று

தினைப்புனத்தில் ஒரு பரணின் மேல் இருந்து தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகளைக் கொண்டு கிளிகளை ஓட்டினார்கள். பிறகு மலையிலிருந்து வரும் அருவியில் நீராடி மனம் போனபடி பாட்டுப் பாடிக் கூந்தலை நன்றாகப் பிழிந்து ஈரம் புலர்த்திக் கொண்டார்கள். பின்பு அங்கே உள்ள பலவித மலர்களைப் பறித்துப் பாறையில் பரப்பினர். இடையில் உடுக்கும் தழையாடையைக் கட்டி அணிந்தும், மாலை கட்டி அணிந்தும், தலையில் பூவை அணிந்தும் ஓர் அசோக மரத்தின் அடியில் அமர்ந்திருந்தார்கள்.

அப்போது கட்டிளங்காளை ஒருவன் வந்தான். மலர்களை அணிந்து சந்தனத்தைப் பூசிக்கொண்டு அகன்ற மார்பில் மாலையும் அணிகலனும் விளங்க வந்தான். அவன் கையில் வில்லும் அம்பும் இருந்தன. அவனுடன் சில வேட்டை நாய்கள் வந்தன.

அந்த நாய்களைக் கண்டு அஞ்சிப் பெண்கள் எழுந்து ஓடத் தலைப்பட்டார்கள். அப்போது அவன் அவர்களை அணுகி இனிய வார்த்தைகளைக் கூறி. "நான் வேட்டையாடித் துரத்திய விலங்குகள் இங்கே வந்தனவோ?" என்று கேட்டான். அவர்கள் விடை கூறவில்லை. "அவற்றைப் பற்றிச் சொல்லாவிட்டாலும் என்னோடு பேசுவது கூடப் பழியோ?" என்று கூறி, அவர்கள் மேல் மொய்க்கும் வண்டுகளை ஓட்டி, உடன் வந்த நாய்களையும் அடக்கி அவர்கள் சொல்லைக் கேட்கும் ஆவலோடு நின்றான்.

அப்போது மதம் பிடித்த யானை ஒன்று அங்கே ஓடி வந்தது. அதைக் கண்ட பெண்கள் இருவரும் அஞ்சிச் செய்வதொன்றும் அறியாமல் அந்த இளைஞனுக்கருகில் சென்று ஒட்டி நின்று நடுங்கினார்கள். அவன் அம்பினால் அந்தக் களிற்றை எய்து வெருவி ஓடும்படி செய்தான்.

பிறகு அந்தப் பெண்கள் அங்கே உள்ள காட்டாற்றில் பாய்ந்து நீராடினார்கள். கால் தளர்ந்து ஆற்றோடு போனார்கள். அப்போது அவர்களை மீட்டுக் கரையில் விட்டான். அந்த வீரன், இளம் பெண்ணைத் தேற்றி, "உன்னுடைய இன்பத்தை நான் நுகர்வேன்" என்று சொல்லி நெற்றியை நீவி, தோழியைப் பார்த்துச் சிரித்தான்.

பிறகு அந்தப் பெண்ணைத் தழுவி, "விருந்தினரை ஓம்பிப் பிறகு எஞ்சியதை உன்னோடும் உண்ணுவது உயர்ந்த அறமாக இருக்கும்" என்று சொல்லி, "நான் உன்னை என்றும் பிரியேன்" என்று உறுதிமொழி கூறினான். அவ்வாறு சொல்லி ஆணையிடும் அடையாள மாகத் தண்ணீரை எடுத்து ஒரு கை குடித்தான்.

இவ்வாறு யானை காரணமாக அந்தப் பெண்ணுக்கும் அவனுக்கும் தொடர்பு உண்டாயிற்று. இதைக் களிறு தரு புணர்ச்சி என்பார்கள்.

அந்தப் பகல் முழுவதும் அவன் அவளோடு இருந்து இன்புற்றான். மாலைவந்தது. "பெண்ணே, நீ வருந்தாதே, உன்னுடைய பெற்றோர்கள் திருமணம் செய்துகொடுக்க, உன் கையைப் பற்றி நாடெல்லாம் நாம் கணவனும் மனைவியுமானோம் என்பதை அறியும்படி நன்மணம் செய்து கொள்வோம். சிறிது காலம் கலங்காமல் இரு" என்று சொல்லி அவர்களை ஊரளவும் கொண்டு வந்து விட்டுச் சென்றான்.

அது முதல் ஒவ்வொரு நாளும் இரவில் அவன் அவளை எண்ணி வீட்டின் புறத்தே வந்து அவளைச் சந்தித்து அவளோடு அளவளாவினான். அப்படி வரும்

போது ஊர் காவலர் வந்தாலும், நாய் குரைத்தாலும், தாய் துயில் எழுந்தாலும், நிலா ஒளி வீசினாலும் அவளைச் சந்திக்க முடியாமல் போய்விடும். அவ்வாறு முடியா விட்டாலும் அவன் வெறுக்காமல் மறுபடியும் மறுபடியும் வந்தான். இளமை மிடுக்குடையவன், வளம் மிக்கவன் அவன்.

அவன் வருவதில் உண்டாகும் இன்னல்களை நினைந்து அவன் காதலி கண்ணீர் விடுகிறாள். 'அவர் வரும் காட்டு வழியில் விலங்குகளும் பாம்பு முதலியனவும் ஆறும் குழியும் இருக்குமே!' என்று எண்ணும்போதெல்லாம் அழுகிறாள்.

இந்த வரலாற்றைத் தோழி சொல்லி, அந்த வீரனுக்கு அந்தப் பெண்ணைத் திருமணம் செய்விக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் செவிலித் தாய்க்கு உண்டாக்குகிறாள்.

களவுக் காதலில் நிகழும் பல வகை நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியாகப் பின்னிச் சொல்கிறது இந்தப் பாட்டு; கவிச்சுவை செறிந்ததாகவும் அமைந்திருக்கிறது.

''அணிகலன்கள் சிதைந்தால் செப்பஞ் செய்யலாம் ஒழுக்கம் பிறழ்ந்தால் நேர் படுத்த முடியுமா?'' என்று தோழி சொல்லும்போது, காதலியின் கற்பொழுக்கம் நிலைநிற்க வேண்டுமானால் காதலர் இருவரையும் ஒன்று படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறாள்.

**''முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை**
**நேர்வரும் குரைய கலம்கெடின் புணரும்;***

---

*குரைய: அசை; பொருள் இல்லாத சொல். கலம் - பாத்திரம். காட்சி - அறிவு.

**சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்**
**மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்**
**ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை**
**எளிய என்னார் தொன்மருங்கு அறிஞர்.''**

பெண்கள் இருவரும் பாறையின்மேல் குவிக்கும் மலர்களின் பெயர்கள் அடுக்கடுக்காக வருகின்றன. 35 அடிகளில் 99மலர்களைச் சொல்கிறார். இதைக் கேட்ட ஆரிய அரசன் பிரகத்தன், "அடே யப்பா! எத்தனை மலர்கள்!'' என்று வியந்திருப்பான். குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவராகிய கபிலர் சிறிதும் சிரமம் இன்றி ஆற்றொழுக்காக அந்த மலர்கள் அடுக்குகிறார்.

வருகிற வீரனும் மலர்களைப் புனைந்து கொண்டு வருகிறான். அவனுடைய அழகை அவை மிகுதியாக்குகின்றன. 'தமிழர் மலர்களின் அழகை எப்படியெல்லாம் நுகர்கிறார்கள்!' என்று பிரகத்தன் வியந்திருப்பான்.

மாலையின் வருணனையும் மிக அழகாக இருக்கிறது.

'ஏழு குதிரை கட்டிய தேரில் ஊர்ந்து கதிரவன் மலையிலேயே சென்று மறைகிறான். மான் கூட்டம் மரத்தின் அடியிலே வந்து கூடுகின்றன. ஊது கொம்பைப் போல ஒலிக்கும் ஆண் அன்றில் பனையின் மடலில் இருந்து பெண் அன்றிலை அழைக்கிறது. பாம்பு தன் மாணிக்கத்தை உமிழ்ந்து அதன் ஒளியில் இரை மேயப் புறப்படுகிறது. இடையர்கள் புல்லாங்குழலில் ஆம்பல் என்னும் பண்ணை ஊதுகிறார்கள். ஆம்பல் மலர்கள் மலர்கின்றன. அந்தணர்கள் அந்திக்குரிய கடன்களைச் செய்கிறார்கள். செல்வம் நிரம்பிய மனைகளில் மகளிர் விளக்கை ஏற்றுகிறார்கள். காட்டில் உள்ள வேடர்கள் பரணின்மேல் தீக்கடை கோலால் நெருப்பை உண்டாக்கி, யானை முதலியன வராமல் எரிக்கிறார்கள். மேகம்

மலையைச் சூழ்ந்து கறுக்கிறது. காட்டிலுள்ள விலங்குகள் முழங்குகின்றன. பறவைகள் கூட்டுக்குள் ஆரவாரிக்கின்றன'

காட்டு வழியில் உள்ள இன்னல்களையெல்லாம் நினைந்து, 'அவர் வரும் வழியில் இந்த இடையூறுகள் இருக்குமே' என்று எண்ணிக் காதலி வருந்துகிறாள். அவள் எண்ணிப் பார்க்கும் இடையூறுகள் எவை தெரியுமா?

மலைக் குகையில் உள்ள புலிகள், யாளிகள், கரடிகள் காட்டுப் பசுக்கள், யானை, இடி, காட்டுத் தெய்வம், இரை தேடித் திரியும் பாம்பு, கழியில் திரியும் முதலை வகைகள், வழிப்பறிக்காரர், கொலை செய்யும் இடம், வழுக்கு நிலம், வழி தெரியாத இடங்கள், பிசாசு, மலைப்பாம்பு முதலியவற்றை எண்ணி எண்ணி வெதும்புகிறாள்.

இவ்வாறு களவுக்காதற் கதையை இயற்கை நிலைக்களத்தே வைத்துக் காட்டும் குறிஞ்சிப் பாட்டு, தமிழ் மரபைத் தெளிவாக விளக்குகிறது.

# 11. பட்டினப்பாலை

பண்டைக்காலச் சோழர்களில் மிகவும் புகழ் பெற்றவன் கரிகாலன். அவனுடைய பெருமையைப் பத்துப் பாட்டில் உள்ள இரண்டு நூல்கள் கூறுகின்றன: ஒன்று, பொருநர் ஆற்றுப்படை; மற்றொன்று பட்டினப்பாலை.

பத்துப் பாட்டில் ஒன்பதாவதாகக் கோக்கப் பெற்ற பட்டினப்பாலை 301 அடிகளை உடையது; கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது இந்த நூலில் வஞ்சியடிகளும் ஆசிரிய அடிகளும் கலந்து வருகின்றன. மிகுதியாக வஞ்சியடிகள் இருப்பதனால் இதற்கு வஞ்சி நெடும்பாட்டு என்ற பெயரும் உண்டு.

இதைப் பாடியதற்காகக் கரிகாற் பெருவளத்தான் உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறு லட்சம் பொன் பரிசு அளித்தானாம்; பதினாறு கோடி என்று சொல்வதும் உண்டு.

பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம். பிரிவைப் பற்றிச் சொல்லும் அகத்துறைப் பாட்டைப் பாலைத் திணையைச் சார்ந்தது என்று வகுப்பர் புலவர். தன் காதலியைப் பிரிவதற்கு மனம் இன்றி, "நான் இவளைப் பிரிந்து போக மட்டேன்" என்று சொல்லும் முறையில் அமைந்தது இந்தப் பாட்டு. "காவிரிப்பூம்பட்டினத்

தையே பெற்றாலும் இவளைப் பிரிய மாட்டேன். நான் போகும் வழியில் உள்ள பாலை நிலம் கரிகால் பெருவளத்தானுடைய வேலைவிடக் கொடுமையை உடையது. என் காதலியின் தோள்கள் அவனுடைய செங்கோலினும் குளிர்ச்சியானவை. ஆகவே, நான் பிரிந்து செல்ல மாட்டேன்'' என்று காதலன் சொல்லுகிறான்.

**''முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்**
**வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே......**
**திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய**
**வேலினும் வெய்ய கானம்; அவன்**
**கோலினும் தண்ணிய தடமென் தோளே.''**

[முட்டாச் சிறப்பு - அழியாத பெருமை. வயங்கிழை - தலைவி. தெவ்வர்க்கு - பகைவரை அழிக்கும் பொருட்டு. ஓக்கிய - ஏந்திய. கானம் - பாலை நிலம். தண்ணிய - குளிர்ச்சியை உடையன[

இந்த அடிகள் அந்தச் செய்திகளை உணர்த்தும்.

பிரிவு பற்றிக் கூறுவதானாலும், பட்டினத்தின் சிறப்பை எடுத்து விரித்து உரைப்பதனாலும் இதற்குப் பட்டினப்பாலை என்ற பெயர் வந்தது.

இது அகத்துறைப் பாட்டு ஆயினும், காதல் சம்பந்தமான செய்தி வரும், 'வார் இருங்கூந்தல் வயங்கிழை ஒழிய, வாரேன் வாழிய நெஞ்சே, அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே' என்ற மூன்று அடிகளைத் தவிர மற்ற எல்லாம் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் கரிகாலனுடைய பெருமையையும் உரைப்பவை.

முதலில் சோழ நாட்டின் வளத்தை விரிக்கிறார் புலவர். பிறகு காவிரிம்பூம்பட்டினத்தின் சிறப்பு

வருகிறது. அப்பால் கரிகாலன் அரசு கட்டில் ஏறின வரலாறும் பகைவரோடு பொருதுவென்ற வீரச் சிறப்பும் விரிவாக உள்ளன.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி சோழ நாட்டுக்கு வளம் ஊட்டுகிறது. விளைவு அறாத கழனி களில் கரும்பு, தென்னமரம், குலைவாழை, கமுகு, மஞ்சள் மாமரம், பனைமரம், சேம்பு, இஞ்சி முதலியவை விளை கின்றன. பகையறியாத நாடு சோழ நாடு. காயப் போட்ட தானியங்களைக் கொத்தும் கோழிகளை ஓட்டு வதற்காக மகளிர் தம் காதில் அணிந்த குழைகளைக் கழற்றி வீசுகிறார்கள். அவை சிறு குழந்தைகள் தள்ளும் மூன்று சக்கர வண்டிகளைத் தடுக்கின்றன. பல சிறிய ஊர்கள் அடுத்தடுத்து உள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தை அணுகும் போது அங்கே கழிகள் இருக்கின்றன. உப்பை விற்றுவிட்டு நெல்லை ஏற்றி வந்த படகுகளைக் கட்டியிருக்கிறார்கள். தோப்பு களும் பூஞ்சோலைகளும் காட்சி தருகின்றன. பொய்கை களும் இரண்டு பெரிய ஏரிகளும் உள்ளன. அப்பால் திண்ணிய மதில் இருக்கிறது.

நகருக்குள் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த மாளிகைகள் உள்ளன. அன்ன சத்திரங்களைக் காண் கிறோம். தவம் செய்வோர்களின் பள்ளிகளையும், முனிவர் வேள்வி புரியும் ஆசிரமங்களையும், காளி கோயிலையும் பார்க்கிறோம்.

நகர்ப்புறங்களில் பரதவர் வாழ்கிறார்கள். பலர் பாவம் போகக் கடல் நீரில் ஆடுகிறார்கள்; பிறகு மாசு நீங்க நன்னீரில் குளிக்கிறார்கள்.

நகருக்குள் சொர்க்கத்தை ஒத்த மாடங்களில் பாடல்களைக் கேட்டும், நாடகங்களைக் கண்டும் இன்புறுகின்றனர் பலர். கள்ளை விட்டு மதுவை நுகர்கின்றனர். பட்டை அகற்றி அதனினும் உயர்ந்த துகிலை உடுக்கின்றனர். ஆண்களும் பெண்களும் ஒன்றி இன்புறுகின்றனர்.

கடலுக்கு அருகில் பண்டசாலை இருக்கிறது. அங்கே ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெறுகின்றன. ஏற்றுமதியாகும் பண்டங்களுக்குப் புலிப் பொறியைப் பொறித்து அனுப்புகிறார்கள். அங்கே சுங்கங் கொள்வோர் நடுவு நிலைமை தவறாமல் தம் கடமையைச் செய்கிறார்கள்.

தெருக்களில் பல வகையான கொடிகள் இருக்கின்றன. முருகனுக்கும் பிற தெய்வங்களுக்கும் விழா எடுக்க ஏற்றியிருக்கும் கொடிகள் ஒரு பால் அசைகின்றன. இல்லுறை தெய்வம் மகிழ மனைவாசலிற் கட்டிய கொடிகள், கடைத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் உள்ள கொடிகள், இன்ன பண்டம் விற்கப்படும் என்பதைப் புலப்படுத்தும் கொடிகள், ஆசிரியர்கள் வாது செய்யக் கருதிக் கட்டிய கொடிகள், கப்பலில் கட்டிய கொடிகள், கள்ளுக் கடையில் கட்டிய கொடிகள்—இவ்வாறு பல கொடிகள் அங்கே செறிந்து விளங்குகின்றன.

கடல் வழியாக வந்த குதிரைகளும் மிளகு மூட்டைகளும், வட திசையிலிருந்து வந்த மாணிக்கமும் பொன்னும், பொதியில் மலையிலே விளைந்த சந்தனமும் அகிலும் தென் கடலில் தோன்றிய முத்தும், கீழ் கடலிற் பிறந்த பவளமும், கங்கையில் விளைந்த பொருள்களும், ஈழத்திலிருந்து வந்த உணவுப்பொருளும், காழக நாட்டிலிருந்து

வந்தவையும், வேறு நாடுகளிலிருந்து வந்த அரிய பெரிய பொருள்களும் குவிந்து கிடக்கின்றன. பல மொழிகளைப் பேசும் பல நாட்டு மக்களும் கலந்து உலவுகிறார்கள்.

வியாபாரம் மிகுதியாக உள்ள இந்த மாநகரில் பல வணிகர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் கொலை, களவு ஆகிய பாவங்களைச் செய்பவர்களுக்குப் பொருள் தந்தும் நல்லுரை வழங்கியும் அந்தக் கொடுந்தொழில்களைச் செய் யாமல் இருக்கச் செய்கிறார்கள். தமக்குரிய வேள்வியைச் செய்கிறார்கள். தேவர்களை வழிபடுகிறார்கள். பசுக் களையும் எருதுகளையும் பேணிக் காக்கிறார்கள். அந்தணருக்கு நலம் செய்கிறார்கள். தானம் பண்ணு கிறார்கள்.

தம் பண்டங்களையும் பிறர் பண்டங்களையும் நன்கு ஆராய்ந்து நடுநிலை பிறழாமல் அவர்கள் வியாபாரம் செய்கிறார்கள். தாம் கொடுக்கும் பண்டங்களின் மதிப்புக்கு அதிகமான விலையை வாங்காமலும், அதிக விலை வாங்கிப் பொருளைக் குறைவாகக் கொடுக்கா மலும் இத்தனை லாபம் என்று வெளிப்படையாகச் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

இவ்வாறு காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு மேலே கரிகாலனைப் பற்றிச் சொல்கிறார் புலவர்.

கரிகாலன் இளம் பருவத்தில் அரசுரிமையைப் பெற்றான். அப்பருவத்திலேயே பகைவர்மேற் படை யெடுத்துப் போர் செய்து வென்றான். "மலைகளைப் பறிப்பேன்; கடலைத் தூர்ப்பேன்; தேவருலகத்தை இங்கே கொண்டு வருவேன்; காற்றைத் திசை மாற்றுவேன்" என்று மிடுக்காகப் பேசினான். ஒளி நாட்டார், அருவாள நாட்டார், வடநாட்டு அரசர், குடநாட்டு மன்னர் ஐம்பெரு வேளிர் ஆகியவர்களை அடிப்படுத்தினான்.

சோழ நாட்டில் காடாகிய இடங்களை அழித்து நாடாக்கிக் குளங்களை வெட்டி வளம் பெருக்கினான். உறையூர் என்னும் நகரத்தை விரிவு படுத்தினான். பழங் குடிகளை அங்கே நிறுவினான். மதில்களையும் பெரிய வாயில்களையும் அமைத்தான்.

இவ்வாறு சோழன் கரிகாற் பெருவளத்தானுடைய வீரச்செயல்களையும் நாடு காத்தற் செயலையும் விரித் துரைத்து நிறைவுறுத்துகிறார் புலவர்.

பழங் காலத்தில் தமிழ் நாட்டுக்கும் வெளிநாடு களுக்கும் வியாபாரத் தொடர்பு இருந்ததையும், காவிரிப் பூம்பட்டினம் பெரிய துறைமுகமாக இருந்ததையும், கரிகாலன் உறையூரை உள் நாட்டு நகரமாக விரிவுபடுத்தி யதையும், அக்கால மாந்தர்களின் பழக்க வழக்கங்களை யும் தெரிந்துகொள்ள இந்த நூல் உதவியாக இருக்கிறது.

# 12. மலைபடுகடாம்

திருவண்ணாமலைக்கு மேற்கே செங்கம் என்ற ஊர் இருக்கிறது. அதன் பழம் பெயர் செங்கண்மா. அங்கே பழங்காலத்தில் நன்னன் என்ற குறுநில மன்னன் வாழ்ந்திருந்தான். அவனுடைய தந்தைக்கும் நன்னன் என்றே பெயர். குறுநில மன்னனை வேள் என்றும் சொல்வார்கள்

அந்த வேளின் பெருமையைச் சொல்வது, பத்துப் பாட்டின் இறுதி நூலாகிய மலைபடுகடாம் என்பது. இதைப் பாடியவர் பெருங் கௌசிகனார் என்னும் புலவர். 'இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார்' என்பது அவர் முழுப் பெயர்.

மலைபடுகடாத்துக்குக் கூத்தர் ஆற்றுப்படை என்ற வேறு பெயரும் உண்டு. நன்னனிடம் சென்று பரிசில் பெற்று வந்த கூத்தன் ஒருவன் வறுமையால் வாடிய மற்றொரு கூத்தனைக் கண்டு, 'நீ நன்னனிடம் போனால் என்னைப் போல நலம் பெறுவாய்' என்று சொல்லி, நன்னன் ஊருக்குப் போகும் வழியையும் நன்னனுடைய இயல்பையும் சொல்லி ஆற்றுப்படுத்துவதனால் இது கூத்தராற்றுப்படை என்னும் பெயர் பெற்றது. மலையிலே கேட்கும் பலவகை ஓசைகளை இடையிலே புலவர் வருணிக்கிறார். ''மலைபடு கடா அம்மா திரத் தியம்ப''

என்று ஓரடி அங்கே வருகிறது. 'மலையிலே உண்டாகும் ஓசைகள் திசைகளிலெல்லாம் ஒலிப்ப' என்பது பொருள். அங்கே வரும் 'மலைபடுகடாம்' என்ற தொடரே இந்தப் பாட்டுக்குப் பெயராயிற்று. கடாம் என்பது ஓசையைக் குறிக்கும் சொல் என்று தோன்றுகிறது. 'மலையாகிய யானையிடத்தில் தோன்றும் மதம் போன்ற ஓசை' என்று பொருள் செய்து, கடாம் என்பது ஆகுபெயராக நின்று ஓசையைக் குறித்தது என்று உரையாசிரியர் சொல்வார். மலைபடுகடாம் என்ற பெயரே கடபடா என்ற ஒலியைத் தோற்றுவிக்கிறது.

கூத்தருடன் பாடுபவரும் விறலியரும் வருகிறார்கள். அதைச் சொல்லும் போது பலவகை வாத்தியங்களைப் பற்றிய செய்திகள் வருகின்றன. மலைச்சாரலின் வருணனை வருகிறது. அங்குள்ள மக்களும் வேறு இடங்களில் உள்ள கோவலர் வேடர் முதலியவர்களும் வருவாருக்கு உணவளித்து உபசரிக்கும் அன்பைப் பார்க்கிறோம். வழியிலே நேரக் கூடிய இடையூறுகளையும் அவற்றினின்றும் தப்பிச் செல்லும் உபாயங்களையும் அறிகிறோம்.

நன்னனுடைய ஊராகிய செங்கண்மாவின் சிறப்பைப் பாட்டு விவரிக்கிறது. அவனைக் காண்பதற்காக வந்தவர்கள் பலவகையான கையுறைகளைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். அவன் தன்னிடம் வந்த விறலியருக்கும் கூத்தருக்கும் பல பரிசுகளை நல்குகிறான்.

நன்னனுக் குரியது நவிர மலை. அங்கே காரியுண்டிக் கடவுள் எழுந்தருளி யிருக்கிறார். காரி-நஞ்சு. நஞ்சை உண்ட கடவுள் என்பது பொருள். அவரைப் பற்றிய செய்திகள் வருகின்றன. நவிர மலையைப் பர்வத மலை என்றும், காரியுண்டிக் கடவுளைக் காளகண்டேசுவரர்

என்றும் இப்போது வழங்குகிறார்கள். 583 அடிகளை உடையது இந்தப் பாட்டு.

குறமகளிர் தம் கணவர் பட்ட புண்ணால் உண்டாகிய வருத்தத்தைப் பாட்டுப் பாடி மறக்கச் செய்கிறார்கள். யானையைக் கட்டுத்தறியிற் கட்டும் பாகர்கள் சில வட சொற்களைக் கூறிப் பயிற்றுகிறார்கள். பல வழிகள் சேரும் இடத்தில் தாம் செல்லும் வழியை அடையாளம் காட்டப் புல்லை முடிந்து வைக்கிறார்கள். நன்னன் பாணருக்குப் பொற்றாமரைப் பூவையும் விறலியருக்கு நகைகளையும் வழங்குகிறான்.

பாட்டின் தொடக்கத்தில் மத்தளம், சிறுபறை, கஞ்ச தாளம், கொம்பு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, குழல், கரடிகை, எல்லரி, ஒருகண் மாக்கிணை ஆகிய வாத்தியங்களின் பெயர்கள் வருகின்றன.

கூத்தருக்கு ஐந்து வகையான பொருள்களை எதிர் வரும் கூத்தன் சொல்கிறான். வழியிலுள்ள நன்மை தீமைகள், அங்கங்கே விளைகின்ற உணவுப் பொருள்கள், மலைகளின் தன்மை, சோலைகளின் தன்மை, காட்டின் தன்மை என்பவை அவை.

விளைகின்ற உணவுப் பொருள்களைச் சொல்லும் போது, ஒரு பிடியில் ஏழு எள்ளுக் காய்களே அடங்கும் என்கிறார் புலவர். வரகுக் கதிர் வாதியின் விரலைப்போல இருக்கிறதாம். தினைக்கதிர் யானைக் கன்றின் துதிக்கை போலத் தோன்றுமாம். அவரைக்காய் அரிவாளைப் போல இருக்கிறது.

வழியிலே போவார்களை அங்கங்கே உள்ள பெண்கள் தம் பிள்ளைகளை அனுப்பி, மாமனென்றும் அண்ணனென்றும் முறை சொல்லி அழைத்துவரச் செய்து விருந்தூட்டுகிறார்கள்.

**"நறுமலர் அணிந்த நாறிரு முச்சிக்**
**குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி**
**அகம்மலி உவகை ஆர்வமொடு அளைஇ**
**மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்"**

என்பது இதைச் சொல்லும் பகுதி.

மலைப் பக்கத்தில் உண்டாகும் ஓசைகள் பல. அருவியில் அரமகளிர் ஆடும்போது தாளத்தைப் போல ஒலிக்கும் ஓசை, யானைத் தலைவனைப் பிடிக்கக் கானவர் செய்யும் ஆரவாரம், முள்ளம் பன்றியின் முள்ளால் புண்பட்ட வேடர் அழும் அழுகை, புலி பாய்ந்ததனால் தம் கணவர் மார்பில் உண்டான புண்ணின் வலியைப் போக்கக் குறமகளிர் பாடும் பாட்டின் இசை, வேங்கை மரத்தில் பூத்த பூவைப் பறிக்கும் மகளிர் புலி புலி என்று கூவும் ஆரவாரம், புலி பாய்ந்ததனால் பிடியும் சுற்றமும் கூப்பிடும் முழக்கம், குரங்குக் குட்டி பாறைப் பிளப்பிலே வீழ்ந்தது கண்டு அதன் தாயும் பிற குரங்குகளும் வருந்திச் செய்யும் ஆரவாரம், ஆண் குரங்கு தேனடையைக் கலைத்து இடும் கூக்குரல், கானவர் பகைவர்களுடைய அரண்களை மோதும் உவகைக் குரல், குறவர் தம் மகளிரோடே ஆடும் குரவைக் கூத்தின் ஓசை, ஆறுகள் பாறைப் பள்ளங்களிலே வீழும் ஓசை, குழியிலே அகப்பட்ட யானையைக் கட்டுத்தறியிலே பிணிக்கும் பாகர் அவற்றைப் பழக்கும் ஓசை, தினைப்புனம் காக்கும் மகளிர் கிளி முதலியவற்றை ஓட்டும் குரல், இடபமும் மரையான் காளையும் பொரும் ஓசை, எருமைக் கடாக்கள் போரிடும் கம்பலை, பலாப்பழத்தின் கொட்டைகளைப் பெறுவதற்காக இளம் பிள்ளைகள் கன்றுக் குட்டிகளைப் பிணைத்துக் கடாவிடும் ஓசை, கரும்பாலையின் ஒலி, தினைக் கதிரைக் கொய்யும் மகளிர் பாடும் வள்ளைப் பாட்டின் இசை, சேம்பையும் மஞ்சளையும் காவல்

புரிவோர் பன்றிகள் வராமல் முழக்கும் பறை ஓசை. இவ்வோசைகளின் எதிரொலிகள் என்னும் இத்தனையும் அங்கே எழுகின்றன.

**"என்றிவ் வனைத்தும் இயைந்துஒருங் கீண்டி**
**அவலவும் மிசையவும் துவன்றிப் பலவுடன்**
**அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த**
**மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப"**

என்று சொல்கிறார் புலவர். 'என்றுள்ள இந்த எல்லா ஓசைகளும் இயைந்து ஒருங்கு சேர்த்து, பள்ளத்திலும் மேட்டிலும் நெருங்கிப் பலவகையாகக் கணக்குக்கு அகப்படாமல் எண்ணற்ற திறத்தில் மலையில் ஒலிக்கும் ஒலி திசைகளில் ஒலிக்க' என்பது இப் பகுதியின் பொருள்.

'நன்னன் தன்னுடைய நவிர மலையின் மேலே மேகம் ஏறி மழை பொழிந்ததைப் போலப் பரிசில் தந்து அனுப்புவான்' என்று பாட்டை முடிக்கிறார் புலவர்.

திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் வரையில் உள்ள பத்துப் பாட்டுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். இந்தப் பத்துப்பாட்டைச் சுவடிகளிலிருந்து எடுத்துச் செப்பஞ்செய்து அழகாகப் பதிப்பித்து வழங்கியவர்கள் **மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.** அவர்கள் அந்தப் பதிப்பின் முகவுரையில் இந்தப் பத்துப் பாட்டை, "அமிழ்தினிற் சிறந்த தமிழ்எனும் மடந்தை, சுந்தரத்து அணிமணிக் கலன் அரசு என்ன, உத்தமர் புகழும் இப்பத்துப்பாட்டு" என்று பாராட்டுகிறார்கள்.

பத்துப் பாட்டில் உள்ள நூல்களின் பெயர்களை நினைப்பூட்டிக் கொள்ளும் வகையில் பழைய வெண்பா ஒன்று உண்டு, அது வருமாறு.

''முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.''

# 13. நற்றிணை

பத்துப்பாட்டு என்ற சங்கநூல் தொகுதிக்கு அடுத்த படியாக வைத்து எண்ணுவது எட்டுத்தொகை. எட்டுத் தொகை நூல்களையும் நினைப்பூட்டிக்கொள்ள ஒரு பழைய வெண்பா உதவுகிறது. அது.

**நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூறு,**
**ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்,**
**கற்றறிந்தோர் ஏத்தும கலியே, அகம், புறமென்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.''**

இந்தப் பாட்டு இந்த நூல்கள் தோன்றிய கால அடைவை முறைப்படுத்திச் சொன்னது அன்று. ஏதோஒரு வகையில் எட்டு நூல்களையும் நினைவுபடுத்திக் கொள்ள யாரோ ஒரு புலவர் பாடியது.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்ற மூன்று நூல்களும் அகத்துறைபற்றிய தனிப்பாடல்களின் தொகுதிகள். ஐங்குறுநூறு, கலித்தொகை என்பன அகத்துறைப் பாடல்கள் அடங்கியவை. அவற்றில் ஒவ்வொரு திணைக்குரிய பாடல்களையும் ஒவ்வொரு புலவர் தனித்தனியே பாடியிருக்கிறார்.

விடுபாடல்களாக உள்ள அகத்துறைக் கவிதைகளைத் தொகுத்து அடியளவுக்கு ஏற்றபடி மூன்று நூலாக அமைத்தார்கள். நாலடி முதல் எட்டடி வரையில் உள்ள

பாடல்களைத் தொகுத்து அதற்குக் குறுந்தொகை என்று பெயர் தந்தார்கள். ஒன்பது அடி முதல்பன்னிரண்டு அடி வரையில் உள்ள பாடல்களைத் தொகுத்து நற்றிணை என்று பெயர் வைத்தார்கள். பதின்மூன்று முதல் முப்பத்தேழு அடிவரையில் தொகுத்த தொகை நூலுக்கு நெடுந்தொகை அல்லது அகநானூறு என்று பெயர் வைத்தார்கள். அடியளவில் நடுவில் இருப்பது நற்றிணை.

அகத்துறைப் பாடல்களில் ஒவ்வொன்றும் ஐந்து திணைகளில் ஏதேனும் ஒரு திணையைச் சார்ந்ததாக இருக்கும், இன்ன பாடல் இன்ன திணையைச் சார்ந்தது என்ற வரையறை இலக்கணப்படி அமைந்திருந்தது; அகநானூற்றில் பழங்காலத்திலேயே இந்த வரையறை அமைந்திருந்தது.

அகத்துறைப் பாடல்களையுடைய நூல்களுக்குத் திணை என்பதனோடு ஒட்டிய பெயரை அமைப்பது பழங்கால வழக்கம் என்று தெரிகிறது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது. திணை மாலை நூற்றைம்பது என்று உள்ளவற்றின் பெயர்களைக் கொண்டு இதை அறியலாம், வகையில் சிறிய பாடல்கள் அமைந்த தொகைக்குக் குறுந்தொகையென்றும், நீண்ட பாடல்கள் அமைந்ததற்கு நெடுந்தொகையென்றும் பெயர் வைத்தார்கள் இடையில் உள்ள நூலுக்கு நற்றிணை என்று பெயர் அமைத்தார்கள். நல்ல திணையில் அமைந்த பாடல்களையுடைய நூல் என்று பொருள் கொள்ள வேண்டும். இந்த நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி. அந்த மன்னன் ஒரு புலவரைக் கொண்டு இப்படித் தொகுக்கச்

செய்திருக்க வேண்டும். அந்தப் புலவர் பெயர் தெரிய வில்லை.

இந்த நூலில் முதலில் கடவுள் வாழ்த்தும் பிறகு நானூறு அகத்துறைப்பாடல்களும் உள்ளன. நற்றிணை நானூறு என்றும் இதனை வழங்குவது உண்டு இப்போது 234-ஆம் பாட்டு முழுவதும், 385-ஆம் பாட்டின் பிற்பகுதியும் கிடைக்கவில்லை, இதனை முதல் முதலில் ஆராய்ந்து உரையுடன் வெளியிட்டவர் **பின்னத்தூர் அ. நாரயணசாமி ஐயர்.**

இந்த நூலில் 56 பாடல்களுக்கு உரிய ஆசிரியர்களின் பெயர் தெரியவில்லை. மற்றப் பாடல்களைப்பாடியவர்கள் 192 புலவர்கள். ஒவ்வொரு பாட்டுக்குப் பின்பும், அந்தப் பாட்டின் துறையை விரிக்கும் குறிப்பு இருக்கிறது. அகத் துறைப் பாடல்கள் எல்லாவற்றிற்கும் இப்படிக் குறிப்பு அமைப்பது பழைய வழக்கம்.

இந்த நூலில் உள்ள கடவுள் வாழ்த்தைப் பாடினவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். திருமாலின் துதியாக அமைந்தது அந்தப் பாட்டு, அப்பெருமான் உலகமே தன் வடிவமாகக் கொண்டவன் என்று போற்றுகிறது அந்தப் பாட்டு. 'அவனுக்கு இந்த விரிந்த பெரிய பூமியே திருவடி; இந்த உலகைச் சூழ்ந்த நீலப் பெருங்கடலே ஆடை; ஆகாயமே திருமேனி; திசைகளே திருக்கரங்கள்; சந்திரனும் சூரியனும் திரு விழிகள்; எல்லா வற்றினூடும் அந்தர்யாமியாய் இருப்பதோடு, எல்லா வற்றையும் தனக்குள் அடக்கியவன் அவன், வேதத்தினால் சொல்லப்பட்ட முதற்பொருள். திருக்கரத்தில் சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலை இப்படியெல்லாம் பெரியோர்கள் சொல்வார்கள்' என்று கூறுகிறார் பெருந்தேவனார்.

"மாநிலம் சேவடி ஆகத் தூநீர்
வளைநரல் பெளவம் உடுக்கை ஆக
விசும்புமெய் ஆகத் திசைகை ஆகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப,
தீதற விளங்கிய திகிரி யோனே."

[வளை நரல் பெளவம்-சங்கு முழங்கும் கடல். சுடர்-சூரியன். என்ப-என்று சொல்லுவார்கள். திகிரியோன்-சக்கரபாணி.]

ஆண்டவனுக்குத் தமிழில் கடவுள் என்ற பெயர் அமைந்திருக்கிறது, அது அவனுடைய இரண்டு இயல்பு களைக் குறிக்கும். அவன் எல்லாப் பொருளையும் கடந்து நிற்கிறான்; என்றாலும் எல்லாப் பொருள்களின் உள்ளும் இருக்கிறான். கட, உள் என்ற இரண்டு சொற்களும் இணைந்தது கடவுள் என்ற சொல். நற்றிணையின் கடவுள் வாழ்த்து, கடவுள் என்ற சொல்லுக்குப் பொருள் உரைப்பதுபோல அமைந்திருக்கிறது. அவன் இயன்ற எல்லாப் பொருளினூடும் பயின்று, சர்வாந்தர்யாமியாய் இருக்கிறான்; அவனே எல்லாவற்றையும் தன் அகத்தில் அடக்கியும் இருக்கிறான். பயின்றதனால் உள்ளிருப்பது தெரியும்; அடக்கியதால் கடந்து நிற்பது தெரியும்.

"இயன்ற எல்லாம் பயின்று அகத்தி அடக்கிய' என்ற அடி இதனைப் புலப்படுத்துகிறது.

நற்றிணையின் முதல் பாட்டு, காதலின் சிறப்பைச் சொல்லுகிறது. காதலி தன் காதலனுக்கும் தனக்கும் உள்ள உறவாகிய காதலைப் பற்றிச் சொல்லுகிறாள், காதல் என்பது ஒரு பண்பு. அது நுட்பமானது.

கண்ணினால் பார்க்க முடியாதது; கருத்தினால் மட்டும் அறியத் தக்கது. அத்தகைய நுட்பமான ஒன்றை எப்படிச் சொல்லுவது?

கவிஞர்கள் நுட்பமானதையும் நாம் உணரும்படி செய்துவிடுவார்கள்.

'என் காதலர் மிக உயர்ந்தவர்; அவர் என்னிடத்தில் வைத்துள்ள உறவாகிய காதல் உயர்ந்தது; உயர்ந்தோருடைய கேண்மை உயர்ந்ததாகத்தானே இருக்கும்?'

**"புரைய மன்ற புரையோர் கேண்மை."**

அதன் உயர்வைக் காதலி சொல்ல வருகிறாள். புள்ளிக்கு அளவு இல்லை ஆனாலும் அதனைக் காட்டுவதற்குக் கணித நூலார் இரண்டு கோடுகளை ஒன்றை ஒன்று வெட்டும்படி போட்டு அவை வெட்டும் இடத்தில் உள்ளது புள்ளி என்று காட்டுவார்கள். நுட்பமானதைத் திட்பமானவற்றின் சார்பு கொண்டு விளக்குவது ஓர் உத்தி. ஆலமரத்தைக் காட்டி அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதில்லையா?

முதற்பாட்டைப் பாடிய கபிலர் என்னும் புலவர் அப்படி ஓர் உத்தியை ஆள்கிறார். உயர்ந்தவையாகவும் இனியவையாகவும் உள்ள பொருள்களை உவமையாகக் காட்டிக் காதலை விளக்க வருகிறார்.

உயர்ந்த சாதி வண்டுகள் தாமரை மலரிலே புகுந்து அதில் உள்ள தண்ணிய பூந்தாதை ஊதி முரல்கின்றன. அதில் உள்ள தேனை உண்ணுகின்றன. அங்கிருந்து மேலே மேலே பறக்கின்றன. மனிதனுடைய காற்புழுதியும் மூச்சுக் காற்றும் படாத மலையின் மேலே செல்லுகின்றன. அங்கே மலை முகட்டில் சந்தன மரம் வளர்கிறது. அதன் உச்சிக்குச் சென்று அடைகட்டித் தேனை வைக்கின்றன. தாமரைத்தேன், புழுதிபடாத

உயர்ந்த இடத்தில், மணம் நிரம்பிய சந்தன மரத்தில் இருக்கிறது. அந்தத் தேனைப் போன்றது அவர்களுடைய காதல்.

**"தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீந்தேன்போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை."**

[மீமிசை-மிகமிக மேலே. சாந்தில்-சந்தன மரத்தில். தொடுத்த-அடைவைத்த புரைய-உயர்ந்தன. புரையோர்-உயர்ந்தோர். கேண்மை-நட்பு; இங்கே காதல்.]

மணமும் இனிமையும் தூய்மையும் உயர்வும் உள்ள பொருள்களை இணைத்துக் காதலின் சிறப்பைக் காட்டி விட்டார் கவிஞர்.

இப்படியே காதலின் சிறப்பையும், காதல் நாடகத்தின் பல வேறு காட்சிகளையும் இந்த நூலில் காணலாம்.

வேறு ஒரு பாட்டு: பொருளை ஈட்டுவதற்காகக் காதலன் தன் காதலியைப் பிரிந்து வேற்றூருக்கு வந்திருக்கிறான். இன்னும் பொருளை முற்றும் ஈட்ட வில்லை. அதற்குள் அவனுடைய உள்ளத்துக்கும் அறிவுக்கும் ஒரு போராட்டம் நடக்கிறது. உணர்ச்சி வசப்பட்ட உள்ளம் சொல்கிறது: 'வா, போகலாம். பிரிவுத் துன்பத்தைப் போக்கிக் கொள்ளலாம். முதுகில் தொங்கும் நீண்ட கரிய கூந்தலையும், தாமரை மலர் போல விளங்கும் மையுண்ட கண்களையும் உடையவளாய் நம் மனத்தைக் கவர்ந்த காதலியிடம் போகலாம்; வா.' என்று சொல்கிறது. அறிவோ நீதியுபதேசம் செய் கிறது. 'ஏன் அவசரப் படுகிறாய்? சிறிது காலம் பொறு. எடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்க வேண்டாமோ? நடுவிலே புறப்பட்டு விட்டால் அது முட்டாள்தனம்.

அது மட்டும் அல்ல. ஊரிலே இருப்பவர்கள் எல்லாம் இழித்துப் பேசுவார்கள்; அவமதிப்பு உண்டாகும்' என்று நியாயம் பேசுகிறது. இப்படி உணர்ச்சியும் அறிவும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுக்க, அவன் தடுமாறுகின்றான்; அவன் உடம்பு மெலிகிறது. பழங் கயிறு ஒன்றை ஒவ்வொரு புரியாக அற்று மெலிவது போல அவன் உடம்பு மெலிகிறது.

உணர்ச்சிக்கும் அறிவுக்கும் உண்டான போராட்டத்தில் அகப்பட்ட அவன் தன் நிலைக்குத் 'தேய்புரிப் பழங்கயிற்றை' உவமை சொல்கிறான்.

**''புறம்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்**
**நிறம்பெறும் ஈர்இதழ்ப் பொலிந்த உண்கண்,**
**உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்கம்; செல்வாம்' என்னும்;**
**'செய்வினை முடியாது எவ்வம் செய்தல்**
**எய்யா மையோடு இளிவுதலைத் தரும்' என,**
**உறுதி தூக்கத் தூங்கி, அறிவே**
**'சிறிதுநனி விரையல்' என்னும்; ஆயிடை**
**ஒளிறு ஏந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய**
**தேய்புரிப் பழங்கயிறு போல,**
**வீவது கொல்என் வருந்திய உடம்பே.''**

[புறம் தாழ்பு-முதுகிலே தழைந்து. போதின்-தாமரைப் பூவின். ஈர் இதழ்-ஈரமான இதழ். செல்லல் தீர்கம்-துன்பம் நீங்குவோம், செல்வாம்-போவோம். எவ்வம்-துயரம். எய்யாமை-அறியாமை. இளிவு-அவமதிப்பு. விரையல்-அவசரப்படாதே. ஆயிடை-அவற்றுக்கிடையில், வீவது கொல்-அழிவதோ]

இதைப் பாடிய புலவரின் பெயர் தெரியவில்லை. இந்தப் பாட்டில் அவர் கூறும் அருமையான உவமையைக்

கொண்டே அவருக்குத் '**தேய்புரிப் பழங் கயிற்றினார்**' என்று பெயர் வைத்துவிட்டார்கள்! 216-ஆவது பாட்டில்,

**"ஏதி லாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை அறுத்த திருமா உண்ணிக்**
**கேட்டோர் அனையர்."**

என்ற பகுதி வருகிறது. அதைப் பாடியவர் மதுரை மருதன் இளநாகனார். இது சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியைக் குறிப்பிடுவதுபோல இருக்கிறது. ஆனால் சிலப்பதிகாரத்தின் காலம் வேறு; நற்றிணையின் காலம் வேறு.

பாடல்களில் இடையிடையே மணி மணியான கருத்துக்கள் பல வருகின்றன.

'பெரிய பெரிய காரியங்களைச் செய்வோம் என்று உறுதிமொழி கூறுவதும், வேகமான ஊர்திகளில் ஏறிப் போவதும் செல்வத்துக்கு அறிகுறி என்று பொதுவாக உலகத்தார் நினைக்கிறார்கள். அவை முன்னை வினைப் பயனால் வருபவை. அவை அல்ல செல்வம்; தம்மைச் சேர்ந்தவர்களுக்கு வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சி அதை நீக்க முற்படும் மெல்லிய பண்புதான் செல்வம்" என்று ஒரு பாட்டில் வருகிறது.

**"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே**
**சான்றோர் செல்வம் என்பது; சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கட் செல்வம் என் பதுவே."** (210)

**"பழகிய பகையும் பிரிவுஇன்னாதே"**

என்பது ஓர் அரிய அடி.

நமக்கு வேண்டாதவர் நம் எதிர் வீட்டில் இருக்கிறார். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நாம்

வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு பத்திரிகை யடிக்கிறோம். எதிர் வீட்டுக்காரர் வாய்நிறையத் தண்ணீரை வைத்துக்கொண்டு வாசலில் வந்து தூவென்று துப்புகிறார். நம்மைக் கண்டு அவமதிப்பாக எண்ணியே அப்படிச் செய்கிறார். ஒவ்வொரு நாளும் இப்படியே செய்து வருகிறார்.

அவர் இறந்து போகிறார். ஒவ்வொரு நாளும் காலையில் அந்த நேரத்தில் நாம் பத்திரிகை படிப்பதும், எதிர் வீட்டுக்காரர் எரிச்சலோடு துப்புவதும் வழக்கமாகி விட்டவை. இப்போது அந்த நேரத்தில் அவர் துப்பும் நிகழ்ச்சி நின்றுவிட்டது. நம் நண்பர் ஒருவர் வருகிறார். எதிர் வீட்டுக்காரரைப்பற்றிக் கேட்கிறார் "ஒவ்வொரு நாளும் இந்த நேரத்தில் வாசலில் வந்து காறித்துப்புவான். இப்போது வெறிச்சோ என்றிருக்கிறது" என்கிறோம். அந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சியைக் கண்டு பழகி விட்டோம். இப்போது அது இல்லாமல் அந்த நேரம் வெறிச்சோடுகிறது.

இத்தகைய அநுபவத்தோடு ஒட்டிப் பார்த்தால், "பழகிய பகையும் பிரிவு இன்னாதே" என்ற அருமையான கருத்து நன்றாக விளங்கும்.

மற்றோர் உதாரணமும் பார்க்கலாம்: மிகவும் கொடிய நோயால் வருந்தும் ஏழைகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அழுகி ஒழுகும் தொழு நோயாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகப் போகிறது. அவர்கள் படுகிற துன்பத்தோடு மற்றவர்கள் அருவருப்பாகப் பார்க்கும் பார்வை வேறு.

இத்தகைய அல்லல்களுக்கு உள்ளான உடம்பை விட்டுப் பிரிவது நல்லது என்று நமக்குத் தோன்றுகிறது. தற்கொலை செய்துகொள்ள வழியா இல்லை? ஆனாலும்

அவர்கள் செய்துகொள்கிறார்களா? இல்லை; அவர்களுக்குத் துன்பத்தைத் தரும் உடலைவிட வேறு பகை வேண்டாம். ஆனாலும் அதைப் பிரிய அவர்களுக்கு மனம் வருவதில்லை.

இப்போது பாருங்கள்: "பழகிய பகையும் பிரிவு இன்னாதே" என்ற மணி மொழி எத்தனை அநுபவ முதிர்ச்சியிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்பது தெரிய வரும்.

# 14. குறுந்தொகை

உள்ளம் ஒன்றுபட்டது காதல் என்று உலகத்துக் கவிஞர்களெல்லாம் பாடியிருக்கிறார்கள். ஆனால் தமிழர் கொள்கை, உயிரும் ஒன்றுபட்டது காதல் என்பது அதாவது, ஒருவனும் ஒருத்தியும் காதல் செய்வது என்பது இந்தப் பிறவியில் புதிதாக ஏற்பட்டது அன்று; முன் பிறவிகளில் உண்டான தொடர்பே, இந்தப் பிறவியில் மறுபடியும் வந்து இசைகிறது. ஒவ்வொரு பிறவியிலும் காதலர்கள் கணவன் மனைவியராகவே வருவார்கள் என்பது தமிழர் நம்பிக்கை. இதனால் காதலின் புனிதத் தன்மையும் சிறப்பும் மிகுதியாகின்றன.

இந்தக் கொள்கையைச் சங்கப் பாட்டு ஒன்றில் காணலாம். அந்தப் பாட்டை ஆலவாயில் எழுந்தருளி யிருக்கும் இறைவனாகிய சுந்தரேசப் பெருமானே பாடினான் என்று சில புராணங்கள் சொல்கின்றன. இந்த அடிப்படையான கொள்கையைத் தெய்வமே வரை யறுத்துச் சொல்லியிருக்கிறது என்று சொல்வதனால் அதற்குத் தனியே ஒரு சிறப்பு உண்டாகும் என்று தமிழர் கருதியிருக்கலாம்.

அது சம்பந்தமாக வழங்கும் கதை வருமாறு:

பாண்டியன் தன் மனைவியின் கூந்தலில் இயற்கை யாக மணம் இருப்பதை அறிந்தான். அதை ஊகித்

தறிந்து புலவர் பாடினால் நன்றாக இருக்கும் என்று எண்ணினான். தன் விருப்பத்தைச் சங்கத்தில் இருந்த புலவர்களுக்குத் தெரிவித்தபோது அவர்கள் பாடினார்கள். அந்தப் பாடல்களால் அரசன் மனநிறைவு பெறவில்லை. அப்போது ஆலவாய்ப் பெருமானைப் பூசிக்கும் தருமி என்ற ஆதிசைவர், தமக்குத் திருமணம் செய்து கொள்ளப் பணம் வேண்டுமென்று இறைவனிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இறைவன், "கொங்கு தேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாட்டை எழுதி, அதைப் பாண்டிய னிடம் கொடுத்து, அவன் அளிக்கும் ஆயிரம் பொன்னைப் பெற்றுத் திருமணம் செய்து கொள்ளும்படி அருளினான். தருமி பாண்டியனிடம் அதைக் காட்ட, அரசன் கிழியை எடுத்துக் கொள்ளும்படி சொன்னான். சங்கமண்டபத்தின் முன் தொங்கிய கிழியைத் தருமி அறுக்கச் சென்றபோது நககீரர் தடுத்துப் பாட்டில் குற்றம் உண்டென்று சொன்னார். தருமி இறைவனிடம் சென்று முறையிட, இறைவனே புலவர் கோலம் பூண்டு வந்து நக்கீரரோடு வாதிட்டான். நக்கீரர் பொறாமையால் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லையென்று மறுக்க, இறைவன் நெற்றிக் கண்ணைக் காட்டினான். உடல் வெதும்பிய நக்கீரர் தம் பிழையை உணர்ந்து வருந்தி னார். பிறகு காளத்தி சென்று பொன் முகலியில் நீராடிப் பழைய மேனி பெற்று மதுரை வந்தார்.

தருமியிடம் ஆலவாய் இறைவன் பாடி அளித்த பாட்டு இது.

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ;**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**
**செறியெயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோநீ அறியும் பூவே?"**

ஒரு காதலன் தன் காதலியுடன் அளவளாவி அவ ளுடைய அழகையும் மென்மையையும் பாராட்டுகிறான். அப்போது அவளுடைய கூந்தல் இயற்கையில் மணம் உடையதாக இருப்பதைச் சொல்லி வியக்கிறான். ஒரு வண்டைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்கிறான்.

'பூந்தாதைத் தேருகின்ற வாழ்க்கையை உடைய அழகிய சிறகைப் பெற்ற தும்பியே, என் விருப்பம் அறிந்து அதற்கு ஏற்பச் சொல்லாமல், நீ உன் அநுபவத் தில் அறிந்ததைச் சொல். பிறவிதோறும் நெருங்கிப் பழகி அமைந்த காதலையும், மயிலின் மென்மையையும், நெருங்கின் பற்களையும் உடைய இந்தப் பெண்ணின் கூந்தலைப் போல மணம் வீசும் பூ நீ அறிந்தவற்றில் உண்டோ?' என்பது பாட்டின் பொருள்.

எந்தப் பூவுக்கும் இல்லாத ஒரு நறுமணம் இயல் பாகவே தன் காதலியின் கூந்தலில் அமைந்திருக்கிறது என்ற கருத்தையே இந்த வகையில் அமைத்துச் சொல் கிறான் காதலன். இங்கே, 'பயிலியது கெழீஇய நட்பு' என்று தம்மிடையே உள்ள காதலைச் சொல்கிறான். இன்றுதான் அவளைக் கண்டிருக்கிறான்; என்றாலும், 'இந்தக் காதல் இன்று உண்டானது அன்று; பிறவி தோறும் பழகி அமைந்தது' என்பதையே அப்படிச் சொல்கிறான். காதலின் சிறப்பை இவ்வாறு சொன்ன தனால் இது தெய்வத்தன்மை பொருந்திய பாட்டாயிற்று.

இந்தப் பாட்டு, எட்டுத்தொகையில் ஒன்றாகிய குறுந்தொகையில் இரண்டாவது பாட்டாக இருக்கிறது. இந்தக் கருத்தையுடைய வேறு ஒரு பாட்டும் இந்த நூலில் இருக்கிறது. அம்மூவனார் என்ற புலவர் பாடியது அது.

**"'அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப,**

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீஆ கியர்என் கணவனை;**
**யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே''**

என்பது பாட்டு. 'அணிலின் பல்லை ஒத்த முள்ளையுடைய தாது முதிர்ந்த முள்ளிச் செடியையும், நீல மணியினது நிறத்தை ஒத்த கரிய நீரையும் உடைய கடற்கரையை யுடைய தலைவனே! இப்பிறவி நீங்கி, நமக்கு வேறு பிறப்பு உண்டானாலும், என்னுடைய கணவன் நீயே ஆகுக! நின்னுடைய மனத்துக்கு ஒத்த காதலி யானே ஆகுக!' என்பது இதன் பொருள்.

இங்கே காதலி தனக்கும் தன் காதலனுக்கும். வரும் பிறவியிலும் தொடர்பு உண்டாக வேண்டும் என்கிறாள். முன்னே சொன்ன பாட்டில் காதலன், முற்பிறவித் தொடர்பைச் சொன்னான். இந்தப் பாட்டில் காதலி வரும் பிறவித் தொடர்பைச் சொல்கிறாள். இவற்றால் காதல் பிறவிதோறும் தொடர்வது என்ற கருத்துப் புலனாகிறது.

இந்த இரண்டு பாடல்களையும் கொண்ட குறுந்தொகை, கடவுள் வாழ்த்து ஒன்றும் அகப்பொருள் அமைந்த 401 பாடல்களும் கொண்டது. நானூறு பாடல்களே இருக்க வேண்டும். ஏதோ ஒரு பாடல் மிகை யென்று தோன்றுகிறது. நாலடி முதல் எட்டடி வரையில் உள்ள பாடல்களை உடையது இந்தத் தொகை நூல். "இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது'' என்ற குறிப்பு ஏட்டுச் சுவடிகளில் உள்ளது. அதனால் இதில் நானூறு பாடல்களே இருக்க வேண்டுமென்று தெரிகிறது. 307-ஆம் பாட்டில் 9

அடிகள் இருக்கின்றன. அதை விலக்கினால் 400 பாடல்கள் என்ற கணக்கு வரும்.

இந்த நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ என்ற புலவர். அவரைத் தொகுக்கும்படி சொன்னவர் இன்னார் என்று தெரியவில்லை. இந்த நூலின் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை எழுதினார் என்றும், பின் இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் எழுதினார் என்றும் தெரியவருகிறது. அவை இப்போது கிடைக்கவில்லை. இந்த நூலை முதல்முதலில் உரை எழுதி அச்சிட்டவர் திரு சௌரிப்பெருமாள் அரங்கன் என்பவர். பிறகு டாக்டர் ஐயரவர்கள் திருத்தமான முறையில் விரிவான உரையுடனும் ஆராய்ச்சியுரை முதலியவற்றுடனும் புலவர்களுக்கு ஒரு கருவூலம் போல இருக்கும்படி பதிப்பித்திருக்கிறார்கள்.

சங்க நூல்களைத் தொகுக்கும்போது முதல் முதலாகக் குறுந்தொகையைத் தொகுத்திருக்க வேண்டும். அதற்குரிய காரணங்களை ஐயரவர்கள் காட்டியிருக்கிறார்கள். உரையாசிரியர்கள் மிகுதியாக இந்த நூற்பாடல்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சிறிய அடியளவுடைய நூலாதலின் 'குறுந்தொகை' என்று பெயர் பெற்றது.

காதலின் சிறப்பை மிக அருமையாகச் சொல்லும் பாடல்கள் பல இந்த நூலில் இருக்கின்றன.

**''நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே, சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''**

என்பது ஒரு பாட்டு. தேவகுலத்தார் என்னும் புலவர் பாடியது இது. 'மலைப்பக்கத்தில் உள்ள கரிய கொம்பு

களையுடைய குறிஞ்சிச் செடிகளின் மலர்களைக் கொண்டு பெரிய தேனடைகளை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டையுடைய காதலனோடு யான் செய்த நட்பானது நிலத்தைக் காட்டிலும் விரிவானது; வானத்தைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது' என்பது இதன் பொருள்.

பாட்டிலே 'மிகவும் இனிய தேனை, பெரிய தேனை, வண்டுகள் இழைக்கும் நாடன், இந்த இனிய பெரிய காதலை என்னிடம் உண்டாக்கினான்' என்ற குறிப்புத் தோன்றுகிறது.

சங்கப் புலவர்களுக்கே உரிய இயற்கை ஓவியமும் உவமைகளும், உள்ளுறையாகிய குறிப்பும் பாடல்களில் விரவி நின்று இன்பம் தருகின்றன.

# 15. ஐங்குறுநூறு

அகப்பொருளுக்குரிய மருதம், நெய்தல், குறிஞ்சி பாலை, முல்லை என்னும் ஐந்து திணைகளுள் ஒவ்வொன்றுக்கும் நூறு நூறு பாடல்கள் அமைந்த நூல் **ஐங்குறுநூறு**. குறும்பாடல்கள் நூறு அடங்கிய ஐந்து பகுதிகளை உடையதாதலின் இந்தப் பெயர் பெற்றது. இதில் உள்ள பாடல்கள் மூன்றடிமுதல் ஆறடி வரையிலும் அமைந்தவை. ஒவ்வொரு திணையையும் ஒவ்வொரு புலவர் பாடியிருக்கிறார். நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக உள்ள பாட்டைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியிருக்கிறார். அதனோடு சேர்ந்து இந்த நூலில் 501 பாடல்கள் உள்ளன. மருதத் திணைக்குரிய நூறு பாடல்களை ஓரம் போகியாரும், நெய்தல் திணைப் பாடல்களை அம்மூவனாரும், குறிஞ்சிப் பாடல்களைக் கபிலரும், பாலைக்குரிய பாடல்களை ஓதலாந்தையாரும் முல்லைக்குரியவற்றைப் பேயனாரும் பாடியுள்ளனர். இந்தத் தொகைநூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். அவரைத் தொகுக்கும்படி செய்தவர் யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர அரசர்.

ஒவ்வொரு பத்துப் பாட்டுக்கும் ஒவ்வொரு தலைப்பு உண்டு. மொத்தம் ஐம்பது தலைப்புக்களை உடைய பத்துப் பத்துப் பாடல்கள் இந்த நூலில் உள்ளன.

முதல் பத்துக்கு வேட்கைப் பத்து என்று பெயர். கடைசிப் பத்துக்கு வரவுச் சிறப்புரைத்த பத்து என்று பெயர். மற்றப் பத்துக்களுக்கும் இப்படியே வேறு வேறு பெயர்கள் உண்டு.

இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது மிகவும் சுருக்கமானது. அதனை இயற்றியவர் யாரென்று தெரியவில்லை. இந்த நூலை முதல் முதலாகக் கண்டெடுத்துப் பதிபித்தவர்கள் மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்.

இந்த நூலின் கடவுள் வாழ்த்து, சிவபெருமானைப் பற்றியது. இறைவனுடைய திருவடி நிழலிலிருந்து மூவகை உலகமும் தோன்றின என்பதை அழகாகச் சொல்கிறார் பெருந்தேவனார். அருவாக இருக்கும் இறைவன் உலகத்தைத் தோற்றுவிக்கத் திருவுள்ளம் கொண்டபோது உருவத்தை மேற்கொண்டான். அப்படி மேற்கொண்ட உருவங்களில் மிகப் பழையது மாதிருக்கும் பாதியனாகிய அர்த்தநாரீசுவரத் திருவுருவம். ஒரு பாதி அம்பிகையும் ஒரு பாதி இறைவனுமாக இணைந்து விளங்குவது அந்தத் தெய்வத் திருவடிவம். இரண்டு பாதி வடிவம் சேர்ந்த ஓருருவத்துக்கு இரண்டு திருவடிகள் உள்ளன. அந்த இரண்டு திருவடிகளிலிருந்து மூவகை உலகங்களும் தோன்றின.

இவ்வாறு சொல்கிறார் பெருந்தேவனார்:

**நீல மேனி வாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழற்கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.**

[நீலத் திருமேனியையும் தூய ஆபரணங்களையும் உடைய அம்பிகையை ஒரு பாகத்தில் உடைய தனிப் பரம்பொருளாகிய சிவபெருமானுடைய இரண்டு

திருவடி நிழலின்கீழ் மேல், நடு, கீழ் என்ற மூன்றுவகை உலகங்களும் முறையாகத் தோன்றின].

இந்தப் பாட்டில் அரை, ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்களை அடுக்கிக் கருத்தை விளக்குகிறார் ஆசிரியர்.

தலைவன் பரத்தையை நாடி சென்றிருந்தபோது இல்லத்திலிருந்து அறம் காக்கும் தலைவி இறைவனை நினைந்து வேண்டிக் கொள்கிறாள். அவளுடைய தோழியர்கள் அந்தத் தலைவிக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறார்கள்.

முதல் பத்தாகிய வேட்கைப் பத்திலுள்ள பாடல்கள் இந்த இருவகையினருடைய வேண்டுகோளையும் சொல்கின்றன. தலைவியின் வேட்கையில் அவளுடைய பரந்த மன இயல்பு வெளிப்படுகின்றது. 'அரசன் வாழ்க' என்று அவள் வாழ்த்தத் தொடங்குகிறாள். பிறகு, 'எங்கும் நெல் நன்றாக விளையட்டும்; பொன் சிறக்கட்டும்' என்று வாழ்த்துகிறாள். 'வயல்கள் விளைக; இரவலர் வருக' என்பதும் அவளுடைய வேண்டுகோள், 'பசு மாடுகள் பால் சுரக்கட்டும்; காளை மாடுகள் சிறப்பாக' வாழட்டும் என்றும் வாழ்த்துகிறாள் 'பகைவர்கள் தோல்வியுறட்டும்; அந்தணர்கள் வேதத்தை ஓதட்டும் என்றும், 'பசி இல்லாமற் போகட்டும்; பிணி நீங்கட்டும்' என்றும், 'வேந்தன் பகை தனியட்டும்' 'அவன் பல ஆண்டுகள் வாழ்க' என்றும், 'அறம் நனி சிறக்க; அல்லது கெடுக' என்றும், 'அரசு முறை செய்க; களவு இல்லையாகுக' என்றும் அவள் வாழ்த்துகிறாள். இறுதியில், 'நன்மை மிகவும் சிறக்கட்டும்; தீமை இல்லாமற் போகட்டும்' என்றும், 'மழை பெய்யட்டும்; வளம் பெருகட்டும்' என்றும் வாழ்த்துகிறாள்.

ஒரு பெண்ணின் இளமைத் தன்மையை அந்தப் பெண்ணின் காதலனுக்கு எடுத்துச் சொல்கிறாள் தோழி.

அந்த இளம் பெண் கடற்கரையில் மணலில் விளையாடுகிறாள். அங்கே சிற்றில் கட்டிச் சிறிய பொம்மையை மணலால் செய்து வைத்து விளையாடுகிறாள். அப்போது கடலலை வந்து மோதி அந்த வீட்டையும் பொம்மையையும் அழித்துவிடுகிறது. அந்த இளம் பெண்ணுக்குக் கடலின்மேல கோபம். கை நிறைய மணலை வாரிக்கடலில் போடுகிறாள்; 'உன்னைத் தூர்த்துவிடுகிறேன், பார்' என்று சொல்லி ஆத்திரத்துடன் மணலைப் போடுகிறாள்! 'இத்தகைய பேதைமையையுடைய உன் காதலியைக் கண்டோம்' என்று சொல்கிறாள் தோழி.

**கண்டிக்கும் அல்லமோ கொண்க நின் கேளே?**
**வண்டற் பாவை வௌவலின்**
**நுண்பொடி அளைஇக் கடல் தூர்ப்போளே!**

(நெய்தல்நிலத் தலைவனே! உன் காதலியை நாங்கள் கண்டோம் அல்லவா? அவள் விளையாட்டுப் பொம்மையைக் கடல் கவர்ந்து கொண்டமையால், நுண்ணிய மணலைக் கையில் எடுத்துக் கடலைத் தூர்க்கிறாள்!]

பேதைத் தன்மையை இரண்டு வரிகளில் அழகாகச் சொல்லிவிடுகிறாள் தோழி.

தன் காதலனோடு சென்று மணம்செய்து கொண்டு மீண்டு வந்திருக்கிறாள் காதலி. அவளுடைய தோழி, "நீ இங்கே வள வாழ்வில் வாழ்ந்தவளாயிற்றே; போன இடத்தில் இந்த வசதிகள் உண்டா? எப்படி அங்கே காலம் கழித்தாய்?" என்று கேட்கிறாள். அதற்கு விடை கூறுகிறாள் காதலி.

''இங்கே எனக்கு எல்லா வசதிகளும் இருந்தன. என்றாலும். என் காதலனுடன் வாழும் இடந்தான் எனக்குச் சிறந்தது. அங்கே வளம் குறைந்திருந்தாலும் அந்த வாழ்வுதான் எனக்கு இனியது'' என்று சொல்ல வருகிறாள். வேறு வகையில் அந்தக் கருத்துப் புலப்படச் சொல்கிறாள். ''இங்கே தேனும் பாலும் கலந்து உண்டேன். அங்கே அவர் ஊரில் மிகத் தாழ்ந்த பள்ளத்தில் தழைகள் விழுந்து ஊறியிருக்கும். அந்தத் தழையின் கீழே நீர் இருக்கும். அதை மான்கள் குடிக்கும். அவை குடித்தது போக எஞ்சிய நீராக இருந்தாலும் அதை உண்டேன். இங்கே உண்ட தேனையும் பாலையும்விட அந்த நீர் எனக்கு இனிமையாக இருந்தது'' என்று கூறுவதாகக் குறிஞ்சித் திணையில் ஒரு பாட்டு வருகிறது.

**அன்னாய் வாழிவேண்டு அன்னை; நம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய, அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே.**

(தோழி, வாழ்க; நான் சொல்வதை விரும்பிக் கேள். நம் தோட்டத்தில் உள்ள தேனோடு கலந்து உண்டபாலை விட அவர் நாட்டில் தழை விழுந்த கிணற்றின் அடியில் உள்ள, மான் உண்டு மிஞ்சிய கலங்கல் தண்ணீர் எனக்கு இனியது.)

தலைவனோடு சேர்ந்து வாழும் வாழ்க்கையே இன்ப மானது என்ற கருத்தை இந்தப் பாட்டுப் புலப் படுத்து கிறது.

இப்படிச் சிறந்த கருத்துக்களைச் சில அடிகளாலே சுவை பெறத் தெரிவிக்கும் பாடல்களை உடையது ஐங்குறுநூறு.

# 16. பதிற்றுப்பத்து

பழந்தமிழ் நாட்டில் மூவேந்தர் அரசாண்டு வந்தனர். சேர சோழ பாண்டியர் ஆகிய மூவரும் முடியுடை மன்னர்கள். அவர்கள் வீரத்தாலும் கொடையினாலும் சிறந்து நின்றவர்கள். அவர்களைப் புலவர் பாடிய பாடல்கள் பல.

இந்த மூன்று குலமன்னர்களில் சேரனைப் பாடிய நூறு பாடல்கள் அடங்கிய தனி நூல் ஒன்று எட்டுத் தொகையில் ஒன்றாக அமைந்திருக்கிறது. அதற்குப் **பதிற்றுப்பத்து** என்பது பெயர். பத்தாகிய பத்து என்று அதற்குப் பொருள் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வகைச் செய்யுளிலும் பத்து அமையப் பத்து வகைச் செய்யுளால் நூறு பாடல்கள் அமைந்த அந்தாதிக்கும் பதிற்றுப் பத்தந்தாதி என்று பெயர் வழங்கும்.

பத்துச் சேரர்களைப் பத்துப்பத்து அகவற் பாக்கள் பாட, அந்த நூறு பாடல்களும் சேர்ந்த தொகை நூலே பதிற்றுப்பத்து. இந்த நூலுக்கு ஒரு கடவுள் வாழ்த்து இருந்திருக்கவேண்டும். இப்போது இந்த நூலின் கடவுள் வாழ்த்தும் முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்க வில்லை. மற்ற எண்பது பாடல்களையும் டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் பழைய உரையுடன் பதிப்பித்திருக்கிறார்கள்.

இதில் உள்ள பாடல்கள் புறத்திணையில் அமைந்தவை. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் இன்ன துறையைச் சேர்ந்தது அது என்ற குறிப்பு இருக்கிறது. அதோடு ஓசை வகையாகிய வண்ணம் இன்னதென்றும், தானமாகிய தூக்கு இன்னதென்றும் காட்டும் குறிப்புகளும் உள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் வரும் சிறப்பான தொடரை அந்தப் பாட்டின் பெயராக அமைத்திருக்கிறார்கள். முன்பு நாம் அறிந்த பத்துப்பாட்டில் ஒன்றுக்கு 'மலைபடுகடாம்' என்ற பெயர் அந்த வகையில் அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு பத்துப்பாட்டின் இறுதியிலும் அந்தப் பாடல்களால் புகழப் பெற்ற அரசனையும், அவனுடைய அரிய செயல்களையும், பிற வரலாற்றையும் அவனைப் பாடினவர் பெயரையும், அவர் பெற்ற பரிசிலையும் அந்தச் சேர அரசர் ஆண்ட ஆண்டுகள் இத்தனை என்பதையும், பத்துச் செய்யுட்களின் பெயர்களையும் புலப்படுத்தும் பதிகம் என்ற உறுப்பு இருக்கிறது. அது அகவலாகத் தொடங்கி, உரைநடையாக முடியும். அந்தப் பதிகங்களின் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. நான்காம் பத்தில் உள்ள பாடல்கள் அந்தாதியாக அமைந்துள்ளன.

இதற்கு உரை எழுதினவர் பெயர் தெரியவில்லை. மிகச் சுருங்கிய அளவில் குறிப்புரையாக இருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குக் கோயில் கட்டிய சேரன் செங்குட்டுவனைப் பற்றிய செய்திகள் அந்நூலின் மூன்றாவது பகுதியாகிய வஞ்சிக் காண்டத்தில் வருகின்றன. அந்தச் செங்குட்டுவன் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவன் புகழைச் சொல்வது இரண்டாம் பத்து. முதல் பத்துக் கிடைக்காமையால் இப்போ

துள்ள நூலில் இந்த இரண்டாம் பத்தே முதலில் இருக்கிறது. அதைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார் என்பவர்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இமயத்தளவும் சென்று தன் வெற்றியை நிலை நாட்டினவன். அவன் யானைமேல் ஊர்ந்து சென்று பகைவரை அழித்ததற்கு யானைமேல் சென்று முருகன் சூரபன்மனை அழித்ததை உவமை கூறுகிறார் புலவர். கடம்பர்களை வென்று அவர்களுடைய காவல் மரமாகிய கடம்பை வெட்டி அதனால் முரசு பண்ணிக் கொண்டான். நயம் இல்லாத வன் சொல்லைச் சொன்ன யவனர்களைப் பின்கட்டாகக் கட்டி அவர்கள் தலையில் எண்ணெயை வழிய விடச்செய்து அழைத்து வந்தான். அவன் ஐம்பத்தெட்டு ஆண்டு ஆட்சி புரிந்தான்.

இந்தப் பத்தைப் பாடிய புலவர்க்கு ஐந்நூறு ஊர் அளித்தான் அரசன். அவற்றோடு தென்னாட்டில் வரும் வருவாயில் பாதியை முப்பத்தெட்டு ஆண்டுகள் அவருக்குக் கொடுத்து வந்தானாம்.

இந்தப் பத்தின் முதல் பாட்டுக்குப் '**புண்ணுமிழ் குருதி**' என்று பெயர். சேர அரசன் தன் வேலால் பகைவர்களைக் குத்தியபொழுது அவர்களுடைய மார்பு கிழிந்து அந்தப் புண்ணிலிருந்து வழிந்து இரத்த வெள்ளம் பாய்ந்து நீலநிறமுடைய உப்பங்கழியின் நீர் குங்குமக் குழம்புபோல நிறம் மாறிவிட்டதாம். இதைச் சொல்லும் பகுதி,

**''செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப**
**அருநிறம் திறந்த புண்உமிழ் குருதியின்**
**மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து**
**மனாலக் கலவை போல''**

என்பது. இங்கே 'புண் உமிழ் குருதி' என்ற தொடர் வருகிறது. அதுவே பாட்டின் பெயராயிற்று. இப்படியே ஒவ்வொரு பாட்டுக்கும் பெயர் உண்டு.

மூன்றாவது பத்தைப் பாடியவர் பாலைக் கௌதமனார். பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடியது அந்தப் பத்து. அந்த அரசன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுடைய தம்பி இப்படியே ஒவ்வொரு பத்தையும் ஒவ்வொரு சேர அரசனைச் சிறப்பித்து வேறு வேறு புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

ஐந்தாம் பத்து செங்குட்டுவனைப் பற்றியது; பரணர் பாடியது. அந்தப் பத்தின் பதிகத்தில், செங்குட்டுவன் கண்ணகிக்குப் படிமம் அமைக்கக் கல் கொள்ளும் பொருட்டு வடக்கே சென்றதும், ஆரிய மன்னரை வென்றதும், படிமக் கல்லைக் கங்கையாற்றில் நீராட்டி வந்ததும் ஆகிய செய்திகள் வருகின்றன.

**''கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்**
**கான்நவில் கானம் கணையிற் போகி**
**ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை**
**இன்பல் அருவிக் கங்கை மண்ணி.''**

இந்தப் பத்தைப் பாடிய பரணருக்கு அரசன் உம்பற் காடு என்னும் பகுதியில் வரும் வருவாயையும், தன் மகனாகிய குட்டுவன் சேரலையும் கொடுத்தானாம்.

இந்த நூலில் உள்ள செய்யுட்கள் சேர மன்னர்களின் வெற்றிச் சிறப்பையும் கொடைப் பெருமையையும் விரிவாகச் சொல்கின்றன. அவர்களால் பகையரசர் நாடுகள் அழிந்து பாழான செய்தியைச் சொல்லும் பகுதிகள் "இப்படியும் செய்திருக்க வேண்டுமா?" என்ற எண்ணத்தை உண்டாக்கும். இது பற்றி டாக்டர்

ஐயரவர்கள் இந்த நூலின் முன்னுரையில் எழுதியிருப்பவை தெரிந்து கொள்வதற்குரியவை :

'பகைவர் நாடுகளின் பழைய நிலையையும் பாழ்பட்ட பின்னர் அவை இருந்த நிலையையும் விரிவாக எடுத்துரைக்கும் செய்யுட்கள் பல இந்த நூலில் உள்ளன. அன்பும் அருளும் கல்வியும் மெய்ஞ்ஞானமும் நல்லொழுக்கமும் ஒருங்கே அமைந்து குடிமக்களால் தெய்வமாக எண்ணப்படும் ஓர் அரசன், பகைவரைப் பொரும் விஷயத்தில் காலனைப் போன்று கடுஞ்சினத்தோடு சென்று போரிட்டு அவர்களின் வாழ்வையும் நாட்டையும் நாட்டு மக்களையும் சிதைத்துக் குலைத்து வெற்றிபெற்று அந்த வெற்றிக் களிப்பினால் தான் பெற்ற பொருளையெல்லாம் யாவருக்கும் வாரி வீசி மகிழ்கிறான். அரசியலில் குடிமக்களைப் பாதுகாக்கும் திறத்தில் அவன் செய்யும் செயல்கள் யாவும் சிந்தைக்கு இனிக்கின்றன. பகைவரைத் துன்புறுத்தும் திறத்தில் அவன் செய்யும் செயல்கள் உள்ளத்தையும் நடுங்கச் செய்கின்றன. போரினால் உண்டாகும் அழிவை அந்த அரசன் எண்ணி இரங்குவதில்லை. புலவர்கள் மாத்திரம் அதனைக் கூறி இரங்குகின்றனர். அவர்களுடைய இரக்கம் பின்னும் அரசனது பெருமிதத்தை வளர்க்க உதவுகிறதேயன்றிக் குறைக்கப் பயன்படுவதில்லை. உலகத்து மக்களுக்கு ஒரு செங்கோலை பிடிக்கும் கையினால் அந்த மக்களை அழிப்பதற்குக் காரணமாகும் மற்றொரு செங்கோலை (சிவந்த அம்பை)ப் பிடிப்பதை அரசன் பெருமையாகக் கொண்டது காலத்தின் இயல்பு; உலகத்தின் இயல்பென்றுகூடச் சொல்லி விடலாம்.''

பதிற்றுப்பத்தில் சேர மன்னர்களின் வீரச் செயல்கள் பல வருகின்றன. அறிவும் வீரமும் நிறைந்த அவர்கள் கலைஞர்களையும் புலவர்களையும் ஆதரித்துப் பரிசு-

வழங்கினார்கள். குடிகளுக்குப் பல வகை நன்மைகளைச் செய்தார்கள். அவர்களுடைய ஈகைத் திறனைப்பற்றி உள்ள பகுதிகள் மிக்க நயமாக இருக்கின்றன.

புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பலவகை உணவுகளை மன்னர்கள் அருத்துவார்கள். அவர்கள் அணிந்த கந்தைத்துணி, மழை நீரில் நனைந்த பருந்தின் சிறகு போல இருக்கும்; மண்ணால் அரிக்கப்பட்டிருக்கும். அதை மாற்றிப் பட்டாடையை உடுத்துவார்கள்.

**"நீர்ப்படு பருந்தின் இறுஞ்சிறகு அன்ன**
**நிலத்தின் சிதாஅர் களைந்த பின்றை**
**நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ"**

என்று புலவர் பாடுகிறார்.

[சிதாஅர்-கந்தை. நூலாக் கலிங்கம்-நூற்காத நூலால் அமைந்த பட்டாடை.]

அரசன் தன் நாட்டில் இரவலர் இல்லாமையால் வேறு நாட்டில் உள்ள இரவலரைத் தேரில் அழைத்து வந்து அவர்களுக்கு உணவை வழங்குவானாம்.

**"வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்**
**தேரில் தந்து அவர்க்கு ஆர்பதன் நல்கும்"**

என்று புலவர் பாடுகிறார்.

மகளிர் ஊடிக் கோபமாகப் பார்த்த பார்வையைக் கண்டு அஞ்சுவதைவிட வறியவர்களுடைய துன்பத்தைக் கண்டு அஞ்சுவானாம்.

**"ஒண்ணுதல் மகளிர் துனிந்த கண்ணினும்**
**இரவலர் புன்கண் அஞ்சும்"**

[துனித்த-சினம் கொண்ட. புன்கண்-துன்பம்]

கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனுடைய கொடைச் சிறப்பைப் பாடுகிறார். மிகவும் நயமாக அமைந்தது அது.

சிலர் யாரேனும் இரவலர் வந்தால் பத்து ரூபாய் கொடுத்துவிடுவார்கள். பிறகு, 'அவ்வளவு கொடுத்திருக்க வேண்டாமே!' என்று எண்ணுவார்கள். வேறொருவன் அந்த மனிதருக்கு ஐந்து ரூபாய் கொடுத்ததாகச் சொன்னால், "அடடா! நான் ஏமாந்து போய்விட்டேனே! நாமும் ஐந்து ரூபாய் கொடுத்திருக்கலாமே!" என்று எண்ணியிரங்குவதும் உண்டு. சேரன் கொடுத்துவிட்டு, ஏன் கொடுத்தோமென்று வருத்தப்பட மாட்டானாம்.

**"ஈத்தது இரங்கான்."**

பிறருக்கு ஒன்றைக் கொடுத்தால் மகிழ்ச்சி உண்டாவது இயல்பு. அதைப் பிறரிடமும் சொல்லி உவகை அடைவது நமக்கு வழக்கம். ஆனால் சேரனோ எத்தனை முறை கொடுத்தாலும் அதற்காக மகிழ்ச்சி கொள்ள மாட்டானாம். இயல்பான காரியம் ஒன்றைச் செய்தது போல இருந்து விடுவானாம். நாம் நடக்கிறோம். அதனால் மகிழ்ச்சி அடைகிறோமா? அது இயல்பான காரியம். அவ்வாறே சேரன், கொடுத்ததை எண்ணி மகிழ்வதில்லையாம்.

**"ஈத்தொறும் மகிழான்."**

இவற்றையெல்லாம் விடப் பெரிய வியப்பு ஒன்று உண்டு. ஓர் இரவலன் ஒரு வள்ளலிடம் கொடை பெற்றுச் செல்கிறான். அன்றே அவன் மறுபடியும் வந்தானானால், "இப்போதுதானே நீ வந்து வாங்கிக் கொண்டு போனாய்?" என்று அவனை வள்ளல் கேட்பான். அப்படிக் கேட்பதும், இல்லையென்பதும் ஒன்றுதான் சேரனோ அப்படிச் செய்வதில்லையாம். ஒருவன் எத்தனை

முறை வந்தாலும் அவனுக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பானாம். இதைக் கபிலர்,

**''ஈத்தொறும் மாவள்ளியனே''**

என்று சொல்லுகிறார். இந்த இயல்பு எல்லா வள்ளல்களிடமும் இருப்பதில்லை. இது மிக மிக அரிய பண்பு.

**''ஈத்தது இரங்கான்; ஈத்தொறும் மகிழான்;**
**ஈத்தொறும் மாவள்ளியனே''**

என்ற அடிகள் கொடையாளிகளின் உயர்ந்த இயல்பைப் புலப்படுத்துகின்றன.

பண்டைத் தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதப் புகுபவருக்கு இந்தப் பதிற்றுப்பத்து, பெரிய சரித்திரப் புதையலாக விளங்குகிறது.

# 17. பரிபாடல்

தமிழில் உள்ள பாக்களை நால் வகையாகப் பிரிப்பார்கள். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை அவை. நாற்கவிராசர், நாலுகவிப் பெருமாள் என்று புலவர்களைச் சிறப்பிப்பது வழக்கம். அதிலிருந்தும் நான்கு வகையான பாக்கள் தலைமையானவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். யாப்பிலக்கணங்களில் இந்த நாலுவகைப் பாக்களையும் இவற்றின் இனமாகிய தமிழிசை, துறை, விருத்தம் என்பவற்றையும் பற்றிய இலக்கணச் செய்திகள் உள்ளன.

ஆனால், தொல்காப்பியத்தில் பரிபாடல் என்ற ஒருவகைப் பாடலுக்குரிய இலக்கணம் சில சூத்திரங்களில் வருகின்றது. தலைச் சங்க காலத்தில் எத்தனையோ பரிபாடல்கள் வழங்கின என்று இறையனாரகப் பொருளுரை கூறுகின்றது. அந்தக் காலத்தில் வழங்கினவற்றில் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. தொல்காப்பியத்தில் மட்டும் பரிபாடலுக்கு இலக்கணம் இருக்கிறதேயன்றி, பிற யாப்பிலக்கண நூல்களில் அதற்கு இலக்கணம் இல்லை. எட்டுத் தொகையில் ஒன்றாகிய பரிபாடல் என்ற நூலில் எழுபது பாடல்கள் இருந்தன. அவற்றில் இப்போது இருபத்துநான்கு பாடல்களும், சில பாடல்களின் பகுதிகளுமே கிடைக்கின்றன. அந்த நூல்

களுக்குப் பின் பரிபாடலில் அமைந்த வேறு நூல்கள் தோன்றவே இல்லை. பிற்காலத்தில் தோன்றிய 'பாப்பா வினம்' என்ற நூலில் பாக்களுக்கும் பாவினங்களுக்கும் எடுத்துக்காட்டாக உள்ள செய்யுட்களை இயற்றியமைத் திருக்கிறார் ஒரு புலவர். அதில் நான்கு பரிபாடல்கள் உள்ளன.

நாளடைவில் இலக்கியம் இல்லாமையால் இலக் கணமும் இல்லையாயிற்று. இதிலிருந்து பரிபாடல் என்ற கவிதை வடிவம் மிகப் பழமையானது என்பதை உணரலாம்.

எட்டுத் தொகையில் ஒன்றாகிய பரிபாடலில் திருமாலுக்கு எட்டுப் பாடல்களும், முருகனுக்கு முப்பத் தொரு பாடல்களும், கொற்றவையாகிய துர்க்கைக்கு ஒரு பாடலும், வையைக்கு இருபத்தாறும், மதுரைக்கு நான்கும் இருந்தன என்று தெரிய வருகிறது. இப்போது கிடைப்பவற்றில் திருமாலுக்குரியவை ஏழு, முருகனுக் குரியவை எட்டு; வையைக்குரியவை ஒன்பது, இவற்றைக் கண்டு பிடித்து ஆராய்ந்து அச்சிட்டுத் தமிழுலகுக்கு வழங்கியவர்கள் மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள். இந்த நூலுக்குப் பரிமேலழகர் உரை எழுதியுள்ளார்.

பரிபாடல் என்பது ஒரு வகை இசைப்பாட்டு; ஆதலின் ஒவ்வொரு பாட்டுக்கும் இராகம் உண்டு. பாடலைப் பாடிய புலவர் வேறு; அதற்கு இசையமைத்தவர் வேறு. ஒவ்வொரு பாட்டின் பின்னும் இவற்றைப் பற்றிய குறிப்பு கள் உள்ளன.

இரண்டாவது பாட்டின்கீழ் உள்ள குறிப்புக்கள் வருமாறு:

**கடவுள் வாழ்த்து; நன்னாகனார் இசை.**
**கீரந்தையார் பாட்டு: பண்ணுப்பாலை யாழ்.**

பரிபாடல் 25 அடி முதலாக 400 அடி வரையில் வரும் என்பது இலக்கணம்.

இப்போது கிடைக்கும் பரிபாடலில் திருமாலைப் பற்றியும் முருகனைப்பற்றியும் பல பாடல்கள் இருப்ப தனால் சங்க காலத்துத் தமிழ் மக்களின் கடவுள் உணர்வு பற்றிய பல கருத்துக்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. வையை அந்தக் காலத்தில் நீரோட்டம் மிகுதியும் உடைய தாக இருந்தது. அதில் மக்கள் நீராடி மகிழ்ந்தார்கள். அந்த நீர் விளையாட்டைப் பற்றிய காட்சிகளையும் மதுரை மாநகர் மக்களின் நீராட்டு விழா ஆர்வத்தையும் இந்த நூலில் காணலாம். அகப்பொருள் துறை அமைந்த பாடல்களும் உள்ளன.

திருமாலிருஞ்சோலை மலை, திருப்பரங்குன்றம்; இருந்தையூர் என்ற தலங்களைப்பற்றிய செய்திகள், சில பாடல்களில் வருகின்றன. அந்தக் காலத்து மக்கள் அந்தத் தலங்களில் உள்ள தெய்வங்களை வழிபடும் வகைகளையும் தெரிந்து கொள்ள இந்தப் பாடல்கள் உதவுகின்றன.

திருமாலைப் பற்றிய பல புராண வரலாறுகளும் முருகனைப் பற்றிய பல கதைகளும் அந்தக் காலத்திலும் வழங்கி வந்தன.

திருமால் காமனுக்கும் பிரமனுக்கும் தந்தை; வராகக்கோலம் கொண்டு நிலத்தை வெள்ளத்தினின்றும் திருமால் மீட்டான்; சக்கராயுதத்தால் அவுணர்களை அழித்தான்; தேவர்களுக்கு அமுதத்தைக் கடைந்து கொடுத்தான்; அவன் உந்திக் கமலத்தினின்றும்

பிரமன் தோன்றினான்; மூவுலகத்தையும் அவன் அளந்தான்; கேசி என்னும் அசுரனை அழித்தான்; மோகினியாக வந்து அமரர்களுக்கே அமுதம் அளித்தான்; ஆய்ச்சியரோடு கண்ணனாக நின்று குரவைக் கூத்தாடினான்; பிரகலாதனுக்காகத் தூணிலிருந்து புறப்பட்டு இரணியனுடைய மார்பைப் பிளந்தான்; காத்தல் தொழிலை உடையவன்; ஆதிசேடன் மேல் அறிதுயில் செய்பவன்; பலராமனாகத் தோன்றினவன்; கருடனைக் கொடியாகவும் வாகனமாகவும் உடையவன்.

இப்படியே முருகனைப் பற்றிய பல செய்திகளும் வரலாறுகளும் வருகின்றன. முருகன் சூரபன்மனாகிய மாமரத்தையும் கிரவுஞ்ச மலையையும் தடிந்தவன்; பிணிமுகமென்னும் யானையின்மேல் எழுந்தருள்பவன்; ஆறு தலையுடனும் பன்னிரு தோள்களுடனும் தாமரைப் பூவில் தோன்றியவன்; சிவபெருமானுக்கு மகன்; சரவணப் பொய்கையில் கார்த்திகை மாதர்களுக்கு மகனாகத் தோன்றியவன்; வள்ளிநாயகியைக் களவின் கண் மணந்தவன்; இந்திரன் மகளாகிய தேவசேனையைத் திருமணம் புரிந்தவன்; கடம்ப மரத்தில் எழுந்தருளியிருப்பவன்; மயில் வாகனத்தையும் கோழிக் கொடியையும் உடையவன்.

ஓரிடத்தில் திருமாலை ஒன்று முதல் நூறாயிரங்கை வரையில் உள்ளவனாய்ப் பாடுகிறார்; கடுவன் இளஎயினனார் என்னும் புலவர்.

**''நகைஅச் சாக நல்லமிர்து கலந்த**
**நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை;**
**இருகை மா அல்,**
**முக்கை முனிவ, நாற்கை அண்ணல்,**
**ஐங்கைம் மைந்த, அறுகை நெடுவேள்,**

எழுகை யாள, எண்கை ஏந்தல்,
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள,
பதிற்றுக்கை மதவலி, நூற்றுக்கை ஆற்றல்,
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள
பதினா யிரங்கை முதுமொழி முதல்வ,
நூறா யிரங்கை ஆறறி கடவுள்!''

திருமால் இப்படிப் பலவகைக் கைகளுடன் எடுத்த அவதாரங்கள் எவை என்று ஆராய்ச்சி செய்ய வேண்டாம். பரிமேலழகர் கூறும் விளக்கத்தைத் தெரிந்து கொண்டால் போதும்; 'தனக்கு ஓர் வடிவும் பெயரும் இன்றி அன்பராயினார் கருதிய வடிவே வடிவமாகவும், அவர் இட்ட பெயரே பெயராகவும் உடையவனாதலின் முக்கை முனிவ என்பது முதலாக நூறாயிரங்கை ஆறறி கடவுள் என்பது ஈறாக வடிவ வேற்றுமையும், பெயர் வேற்றுமையும் சொல்லப்பட்டன' என்பது அவர் உரை.

இன்னும் திருமாலின் பெருமையைச் சொல்கிறார் புலவர்:

''தீயினுள் தெறல்நீ; பூவினுள் நாற்றம்நீ;
கல்லினுள் மணியும்நீ; சொல்லினுள் வாய்மைநீ;
அறத்தினுள் அன்புநீ; மறத்தினுள் மைந்துநீ,
வேதத்து மறைநீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும்நீ; திங்களுள் அளியும்நீ;
அனைத்தும்நீ; அனைத்தின் உட்பொருளும் நீ.''

(தெறல்- சூடு. மறம்—வீரம். மைந்து - வலிமை. மறை உபநிடதம். முதல்-ஆகாயம். வெஞ்சுடர்-சூரியன்)

திருமால் பூஜ்யம் முதலிய பலவகை எண்ணையுடைய பொருள்களாக இருக்கின்றான்.

**"பாழ்எனக் கால்எனப் பாகென ஒன்றென**
**இரண்டென மூன்றென நான்கென ஐந்தென**
**ஆறென ஏழென எட்டெனத் தொண்டென".**

*[பாழ்-பூஜ்யம். பாகு-அரை தொண்டு-ஒன்பது]*

*திருமாலின் வெப்பமும் ஒளியும் கதிரவனில் இருக்கின்றன. அவனுடைய தன்மையும் மென்மையும் சந்திரனில் உள்ளன. அவன் கொடுக்கக் கொடுக்க வளர்தலும் வண்மையும் மழையில் இருக்கின்றன. தாங்கும் ஆற்றலும் பொறுமையும் நிலத்தில் உள்ளன. மணமும் அழகும் காயாம்பூவில் இருக்கின்றன. அவன் வெளிப்படும் தன்மையும் பெருமையும் நீரில் உள்ளன. உருவமும் ஒலியும் ஆகாயத்தில் உள்ளன. அவன் அவதரிப்பதும் மறைவதும் வாயுவில் உள்ளன. இப்படி எல்லாப் பொருளும் அவனிடமிருந்து தன்மைகளைப் பெற்றன.*

*திருப்பரங்குன்றத்தில் ஓவிய மண்டபம் ஒன்று இருந்தது. அதை எழுதெழிலம்பலம் என்றும்; எழுத்து நிலை மண்டபம் என்றும் கூறுவர். அங்குள்ள ஓவியங்களைக் கோயிலுக்கு வருகிறவர்கள் கண்டு களிக்கிறார்கள். அங்கே இந்திரன் பூனையாக ஓடுவதும், அகலிகை கல்லாகப் போவதுமாகிய வரலாற்றைக் காட்டும் ஓவியங்களும் இருக்கின்றன.*

**"இந்திரன் பூசை; இவள்அக லிகை;இவன்**
**சென்ற கவுதமன்; சினனுறக் கல்லுரு**
**ஒன்றிய படிஇது."**

[பூசை-பூனை]

*முருகனிடம் நேர்ந்துகொள்ளும் மக்கள் பலவகையினர். நல்ல கணவன் வேண்டும் என்போரும், வெளியூருக்குச் சென்ற கணவன் இனிது திரும்ப வேண்டும்*

என்போரும், தமக்குக் கர்ப்பம் உண்டாக வேண்டும் என்போருமாகப் பல மகளிர் அங்கே முருகனை வழிபடுகிறார்கள். அங்குள்ள குரங்குகளுக்குத்தின்பண்டங்களைப் போடுகிறார்கள். கோயில் யானைக்குக் கவளம் கொடுத்து மிஞ்சியதைப் பிரசாதமாக உண்ணுகின்றனர். விளக்கு முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்.

வையை வெள்ளத்தைக் கண்டு விழாக் கொண்டாடுகிறார்கள். பாவை நோன்பு நோற்கும் மகளிர் வையைக்குத் தாய்மாருடன் சென்று நீராடுகிறார்கள். அதை அம்பாவாடல் என்று பரிபாடல் குறிக்கிறது.

புலவர்கள் திருமாலையும் முருகனையும் வாழ்த்தித் தம் வேண்டுகோளைக் கூறி முடிக்கின்றனர். ''எம் அறிவு வேறு ஒன்றையும் நினைக்காமல் மெய்யுணர்வுடையதாக இருக்கட்டும்'' என்பது கீரந்தையார் கேட்கும் வரம்.

முருகனைப் பாடிய கடுவன் இளவெயினனார் பாடுகிறார்: ''யாங்கள் நின்னிடம் பொருளையும் பொன்னையும் போகத்தையும் இரக்கவில்லை. அருளும் அன்பும் அறமும் அருளுவாயாக!''

''இறைவனை வழிபடுவதையன்றி வேறாகிய பயன் ஏதும் வேண்டாம்; அதுவே இன்பம்'' என்று கொள்வது சிறந்த அடியாருடைய இயல்பு. ''கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும்வேண்டா விறலின் விளங்கினார்'' என்று சேக்கிழார் பாடுகிறார். இந்த மனநிலை சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது.

திருமாலைப் பாடிய நல்லெழுநியார் பாட்டின் இறுதியில்,

**''அன்னைஎன நினைஇ நின்அடி தொழுதனம்;**
**பன்மாண் அடுக்க இறைஞ்சினெம்; வாழ்த்தினெம்;**
**முன்னும் முன்னும்யாம் செய்தவப் பயத்தால்;**
**இன்னும் இன்னும்எம் காமம் இதுவே''**

*என்று வேண்டுகிறார். 'பண்டும் பண்டும் யாம் செய்த தவத்தின் பயனால் முன்னே சொன்ன அந்தத் தன்மையை உடையாய் என்று உன்னை நினைத்து உன் திருவடியைத் தொழுது, பலமுறை அடுத்து அடுத்து இறைஞ்சி வாழ்த்தினோம். இவ்வாறே தொழுது இறைஞ்சி வாழ்த்துவதே நாங்கள் மேலும் மேலும் ஆசைப்படுகின்ற பொருள்' என்பது இதன் கருத்து.*

*இப்படியே கேசவனார் என்னும் புலவர் முருகனை வேண்டுகிறார்:*

**''...அமர்ந்தியாம் நின்னைத்**
**துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்;**
**இன்னும் இன்னும் அவை ஆகுக;**
**தொன்முதிர் மரபின்நின் புகழினும் பலவே.''**

*[நின்னை விரும்பி நின்னிடம் அடுத்தடுத்து அணுகி வழிபடுவதற்குப் பயன், மீண்டும் மீண்டும் உன்னுடைய பழைய புகழ்களை விடப் பலவாக, நின்னை அவ்வாறு அணுகுதலும் வழிபடுவதும் உண்டாகட்டும்.]*

# 18. கலித்தொகை

எட்டுத் தொகை நூல்களில் ஆறு நூல்கள் ஆசிரியப் பாவால் அமைந்தவை. மற்ற இரண்டும் வெவ்வேறு பாக்களால் அமைந்தவை. அந்த இரண்டு நூல்களின் பெயரும் அவை இன்ன பாடல்களால் அமைந்தவை என்பதைப் புலப்படுத்தும்.ஒன்று பரிபாடல்; மற்றொன்று கலித்தொகை. கலிப்பாக்கள் அமைந்த தொகைநூல் ஆதலால் கலித்தொகை என்ற பெயர் வந்தது. தொகை நூல் என்பதைக் குறிக்கும் பெயர்கள் மூன்று நூல்களுக்கு அமைந்திருக்கின்றன. குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு), கலித்தொகை.

கலித்தொகை அகப்பொருள் அமைந்த நூல். முதலில் கடவுள் வாழ்த்தும் பிறகு ஐந்து திணைகளில் அமைந்த நூற்று நாற்பத்தொன்பது பாடல்களுமாக 150 பாடல்கள் உள்ள நூல் இது. கடவுள் வாழ்த்தைப் பாடியவர் நல்லந்துவனார். அதன்பின் அமைந்த பாலைத் திணைக்குரிய செய்யுட்கள் முப்பத்தைந்தையும் பாடியவர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ. அடுத்துள்ள குறிஞ்சிக்கலியில் உள்ள 29 செய்யுட்களைப் பாடியவர் கபிலர். மூன்றாவதாகிய மருத திணையில் வரும் 35 பாக்களைப் பாடியவர் மருதன் இளநாகனார். நான்காவதாகிய முல்லைக்கலியில் உள்ள 17 செய்யுட்களை இயற்றியவர் சோழன் நல் உருத்திரன். ஐந்தாவதாகிய

நெய்தற்கலியில் வரும் 33 செய்யுட்களை இயற்றியவர் நல்லந்துவனார். அவரே இந்தத் தொகை நூலைத் தொகுத்தவர் என்று தெரிகிறது. இந்த நூலுக்கு நச்சினார்க் கினியர் அழகிய உரை எழுதியிருக்கிறார்.

இதை முதலில் பதிப்பித்தவர் சி.வை.தாமோதரம் பிள்ளை. பிறகு திருத்தமான முறையில் பலவகைக் குறிப்பு களுடன் வெளியிட்டவர் இ. வை. அனந்தராமையர் அவர்கள்.

இன்பச் சுவை தரும் அகப்பொருளைச் சொல்வதற்குப் பரிபாடலும் கலிப்பாவும் உரியவை என்று தொல் காப்பியம் கூறுகிறது. காதற்காட்சிகளை விரிவாகப் பாடு வதற்கு இவ்விரண்டு வகைப் பாடல்களும் ஏற்றவை என்பது அதனால் தெரியவரும். நாடக முறையில் வெவ் வேறு பாத்திரங்கள் மாறி மாறிப் பேசும்படி ஓசை மாற்றங்களுடன் அமைப்பதற்கு இந்த இரண்டு வகைச் செய்யுட்களும் மிகவும் நன்றாகப் பொருந்தியிருக்கின்றன.

கலித்தொகைப் பாடல் ஒவ்வொன்றும் ஓர் அழகிய நாடகக் காட்சிபோல அமைந்திருக்கும். பொதுவாக அகத்துறையமைந்த பாடல்கள் யாவும் காதலன், காதலி, தோழி, தாய், கண்டோர் முதலியவர்களில் யாரேனும் ஒருவர் கூற்றாகவே இருக்கும். கலித்தொகையில் அப்படி ஒருவர் கூற்றாகவே அமைந்துள்ள பாடல்களோடு,இருவர் மாறி மாறி உரையாடுவதாக அமைந்த பாடல்களும் உள்ளன. அந்தப் பாடல்கள் நாடகச்சுவை தருவனவாக இருப்பதைக் காணலாம்.

விரிவான அமைப்புடன் காதற் காட்சியைச் சித்தி ரிக்கும் இயல்பு அமைந்திருப்பதனால் கலித்தொகையைப் புலவர்கள் விரும்பிப் பயிலுவார்கள். அதனால், "கற்றறிந்

தார் போற்றும் கலி'' என்று இதனை ஒரு பாடல் சிறப்பித்துப் பேசுகின்றது.

நாடக முறையில் உள்ள ஒரு பாட்டின் அமைப்பை இங்கே பார்க்கலாம்.

காதலியை அவள் விரும்பிய காதலனுக்கு அவளுடைய பெற்றோர் மணம் புரிந்து தருவார்கள் என்ற உறுதி இல்லாமையால், அவன் அவளை யாரும் அறியாமல் அழைத்துச் சென்றுவிடுகிறான்.

மறுநாள் பெண்ணைப் பெற்ற தாயும் வளர்த்த செவிலித் தாயும் அவளைக் காணாமல் வருந்துகிறார்கள். அவள் தன் காதலனுடன் புறப்பட்டுப் போய்விட்டாள் என்பதை அறிகிறார்கள். அப்போது செவிலித்தாய், ''நான் போய் அவளை அழைத்து வருகிறேன்'' என்று புறப்படுகிறாள்.

இந்தக் காட்சி பாலைத்திணையில் உடன்போக்கு என்னும் பகுதியில் வருவது.

செவிலித்தாய் ஒன்றும் விளையாத ஒரு பொட்டல் காடாகிய பாலையின் வழியே போகிறாள். எதிரே சில துறவிகள்—முக்கோற் பகவர் என்று சொல்வார்கள்— வருகிறார்கள். அவர்களைச் செவிலி கேட்கிறாள்;

''வெயிலைத் தாங்கி ஏந்திய குடை நிழலில் உறியிலே வைத்த கமண்டலமும் திரிதண்டமும் தாங்கிக்கொண்டு வருகிற பெரியவர்களே! என் மகள் ஒருத்தியும் வேறு ஒருத்தியின் மகனும் தமக்குள்ளே இரகசியமாக ஒன்று பட்டவர்கள்; அவர்களை நீங்கள் வழியில் காண வில்லையோ?'' என்று கேட்கிறாள். அவர்கள் கூறும் விடை வருமாறு:

'பார்க்காமல் இல்லை. இந்தக் காட்டு வழியில் பார்த்தோம். அந்த அழகுடைய மைந்தனோடு இந்தக் கடுமையான பாலையில் செல்லத் துணிந்த அந்தப் பெண்ணுக்கு நீங்கள் தாயார்போல இருக்கிறது. நீங்கள் ஏன் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?

''சந்தன மரம் மலையிலே பிறந்தாலும் அதை வெட்டிக்கொண்டு போய்ப் பயன்படுத்துபவர்களுக்கு அல்லாமல் அந்த மலைக்கு எவ்வாறு உதவும்? யோசித்துப் பார்த்தால் உம்முடைய மகளும் உமக்கு அப்படி இருப்பவள் தான்.

''வெள்ளையான முத்து, நீரிலே பிறந்தாலும் அதை அணிபவருக்குத்தான் அது பயன்படுமேயல்லாமல் அந்த நீருக்கு அதனால் என்ன பயன்? உங்கள் மகளும் உங்களுக்கு அவ்வாறு இருப்பவள் தானே?

''ஏழிசை யாழிலே பிறக்கிறது; இசைப்பவர்களுக்குத் தான் இசை பயன் தருமேயன்றி யாழுக்கு என்ன செய்யும்? உங்கள் மகளும் அத்தகையவள் தானே?

''இவ்வாறு நினைக்கும்படி, கற்புடையவளாக உங்களை விட்டுப் போனவளுக்காக வருத்தப்படாதீர்கள்; எல்லாரினும் தனக்குச் சிறந்தவனாகிய காதலனைப் பின் பற்றி அவள் போனாள். அறத்தினின்றும் மாறுபடாத வழியும் அதுதான்.''

செவிலித்தாய் கேட்பதும், முக்கோற் பகவர் விடை கூறுவதுமாக உரையாடற் பாணியில் இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

**''......அந்தணீர்,**

**வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர், இவ்விடை**

**என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்**
**தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்;**
**அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!''**

*என்பது செவிலியின் கேள்வி.*

**''காணேம் அல்லேம்; கண்டனம் கடத்திடை;**
**ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய**
**மாண்இழை மடவரல் தாயிர்நீர் போறிர்''**

*என்று விடை கூறுகிறார் முக்கோற் பகவர். அதைக் கேட்ட செவிலிக்கு உயிர் வருகிறது. ஆனால் அடுத்தபடி பகவர் அந்தப் பெண் செய்தது சரி என்றும் அதுவே அறத்தின் வழிப்பட்டது என்றும் சொல்கிறார்:*

**''பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம்**
**என்செய்யும்?**
**நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு**
**அனையளே.''**

*இப்படியே முத்தையும் யாழிசையையும் உவமையாக எடுத்துக் காட்டுகிறார்:*

**''சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை**
**நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?**
**தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.**
**ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை**
**யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?**
**சூழுங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கு அனையளே.''**

*இவ்வாறு சொல்லிவிட்டு உணர்த்த வேண்டியதை இறுதியில் உணர்த்துகிறார் முக்கோற் பகவர்:*

**''.......என ஆங்கு,**
**இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்;**
**சிறந்தாளை வழிபடஇச் சென்றனள்;**
**அறந்தலை பிரியா ஆறும்மற்று அதுவே.''**

இப்படி உள்ள காட்சிகளை ஐந்து திணைப் பாடல் களிலும் காணலாம். முல்லைத் திணையில் ஏறு தழுவும் காட்சிகள் விரிவாக வருகின்றன.

கடவுள் வாழ்த்தில், இறைவன் பலவகை நடனங் களை ஆட, அம்பிகை அருகிருந்து தாளம் கொட்டு கிறாள் என்ற செய்தி வருகிறது. ஆடல்வல்லானைப் பற்றிய செய்தியை அந்தப் பழங்காலத்திலேயே தமிழர் கள் அறிந்திருந்தார்கள் என்பதை இதனால் உணரலாம். ஒரு பாட்டில், துரியோதனனுடைய சூழ்ச்சியால் பஞ்ச பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் அகப்பட்டதும், அது தீப்பற்றி எரிய அதிலிருந்து வீமன் யாவரையும் மீட்டதுமாகிய வரலாறு உவமையாக வருகிறது. இரா வணன் கைலை மலையை எடுத்ததையும், இறைவன், காலால் அமிழ்த்த, அவன் நசுங்கி அலறியதையும் ஒரு பாட்டில் உவமையாக ஆள்கிறார் ஒரு புலவர்.

மாதர் தம் மைந்தரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று வலம் சுற்றி வரும்படி தம் தோழிமாரை அனுப்பும் வழக்கத்தைச் சில பாடல்கள் சொல்லு கின்றன. ஈகை, வீரம் ஆகியவற்றைப் பற்றியும் வேறு பண்புகளைப்பற்றியும் அரிய கருத்துக்கள் பல அங்கங்கே ஒளிவிடுகின்றன.

இரவிலே மரங்கள் தலைசாய்ந்து நிற்கின்றன. இதற்குத் தம் புகழ் கேட்ட சான்றோர்கள் நாணித் தலை கவிழ்வதை உவமையாக்குகிறார் ஒரு புலவர். நாட்டார்க் குத் தோற்றலை நாணாதான் என்று நட்பின் திறத்தைச் சிறப்பிக்கிறார் ஒரு புலவர். பிறர் நோயும் தம் நோய் போற் போற்றும் பெருந்தகைமையை ஓரிடத்தில் புலவர் எடுத்துக்காட்டுகிறார்.

அக்காலத்து வழக்கங்கள் பலவற்றை இடையிடையே காணலாம். மணம் புரிவார் எரிவலம் செய்தலும், இசையால் மானை மயக்கிப் பிறகு அதைக் கொல்வதும், ஏறு தழுவினவருக்குத் தம் பெண்ணை மணம் செய்து கொடுத்தலும் போன்றவையும், பழந்தமிழர் வாழ்க்கை முறைகளைக் காட்டும் வேறு பல செயல்களும் கலித்தொகையில் விரவி வருகின்றன.

சங்ககாலத்துத் தமிழர் நடையைத் தெரிந்துகொண்டு கலித்தொகைப் பூஞ்சோலையிலே புகுந்தால் நேரம் போவது தெரியாமல் அதில் ஈடுபட்டுக் கிடப்போம்.

# 19. அகநானூறு

அவள் மெல்ல அங்கே வந்து நின்றாள். அவள் கால் கட்டை விரல் நிலத்தைக் கீறியது. அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. ஆனால் அது உண்மையான புன்னகை அன்று. அவள் தன் இடுப்பில் குழந்தையை வைத்திருந்தாள். அவனுடைய தலையில் பூமாலையைச் சூட்டியிருந்தாள்.

பொய்யான புன்னகையோடு வந்து நின்ற தன் அன்புக்குரியவளைப் பார்த்தான் கணவன். அவன் வெளிநாட்டுக்குச் சென்று பணம் சம்பாதித்துக்கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தான் அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து விட்டான். ஆனால் அந்தச் செய்தியைத் தன் மனைவிக்கு அவன் வாயால் சொல்லவில்லை. இப்போது சொல்லி விடை பெற வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அவள் வரவை எதிர்பார்த்திருந்தான்.

அவள் வந்து முன்னே நின்றாள். அவளுக்கு, அவனுடைய கருத்துத் தெரியும். ஆனாலும் அதைத் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ''போக வேண்டாம்'' என்று சொல்ல எண்ணந்தான். ''நீங்கள் போகும் வழி மிகவும் கடுமையான வழி ஆயிற்றே! மரங்கள் கரிந்து போன வழி. கற்கள் விரல்

நுனியில் காயத்தை உண்டாக்கும். அத்தகைய வழியில் என்னைப் பிரிந்து செல்வது அறத்தாறு அன்று'' என்று சொல்லலாம். துணிவு வரவில்லை.

ஒன்றும் அறியாதவளைப் போலப் பொய்யான புன்முறுவலைக் காட்டிக் கொண்டு வந்து நின்றாள். அவன் அவளை ஏறெடுத்துப் பார்த்தான். அவள் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. உள்ளே உள்ள துன்பம் இப்போது உடைத்துக் கொண்டு வரத் திமிறியது. அவள் கண்ணில் நீர் மல்கியது. சட்டென்று குனிந்து கொண்டாள். குழந்தையின் உச்சியை மோப்பது போலக் குனிந்தாள்.

அவள் உள்ளத்தில் உள்ள துயரம் பெருமூச்சாக வெளிப்பட்டது. அதில்தான் எத்தனை வெப்பம்!

மார்பிலே அணைத்துப் பிடித்திருந்த குழந்தையின் உச்சியிலே அவள் பெருமூச்சுத் தாக்கியது. அங்கே சூட்டி யிருந்த மெல்லிய மலர் அந்த மூச்சினால் மிக நுட்பமாக வாடியது.

கணவன் இதைக் கவனித்தான். குபுக்கென்று அவன் கண்களில் சுரந்த நீர் அவள் பார்வையை மறைத்ததைக் கண்டான். அவள் குனிந்து பெருமூச்சு விட்டபோது குழந்தையின் தலையில் உள்ள மலர் வாடுவதையும் கண்டான். நுட்பமான அறிவுடையவன் ஆதலால் அந்த மலரின் வாட்டத்திலிருந்து அந்த மங்கையின் இதயமலர் எவ்வளவு தூரம் வாடியிருக்கும் என்பதை உணர்ந்தான்.

'இங்கே நாம் இருக்கும் போதே இப்படி வருந்து கிறாளே! நாம் பிரிந்து போனால் உயிர் பிழைத்திருப் பாளா?' என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது.

'இப்போதைக்குப் போக வேண்டாம்' என்று தீர்மானித்தான்.

இதை, காதல் நிரம்பிய அந்த ஆடவன் சொல்கிறான்.

**"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு**
**ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்**
**தூநீர் பயந்த துணையமை பிணையல்**
**மோயினள் உயிர்த்த காலை, மாமலர்**
**மணிஉரு இழந்த அணியழி தோற்றம்**
**கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி**
**உழையம் ஆகவும் இனைவோள்**
**பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே."**

"'கண்மணிப் பாவையை மறைத்த குளிர்ந்த நீரையுடைய கண்ணோடு மார்பிலே அணைத்த புதல்வனுடைய சிவந்த தலையில் தூய நீரிலே விளைந்த இரட்டையாகக் கட்டிய பூமாலையை மோந்து பெருமூச்சு விட்டபோது, அந்த அழகிய மலர் நீலமணி போன்ற நிறத்தை இழந்து அழகு அழிந்த தோற்றத்தைக் கண்டு 'ஒளிமிக்க வளையலை அணிந்த இவள், நாம் அருகில் இருக்கும் போதே வருந்துகிறவள், நாம் பிரிந்து போனால் பிழைத்திருக்க மாட்டாள்' என்று எண்ணி வெளிநாடு போவதை நிறுத்திவிட்டோம்" என்பது இதன் பொருள்.

நுட்பமான உணர்வைக் காட்டும் இந்தக் காட்சி அகநானூற்றில் ஒரு பாட்டில் வருகிறது. இவ்வாறு காதல் உலகத்தில் நிகழும் காட்சிகளைச் சொல்லோவியமாகக் காட்டும் 400 பாடல்கள் அடங்கியது அகநானூறு என்ற தொகை நூல். முதலில் உள்ள கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்களை உடையது இந்த நூல்.

இதற்கு நெடுந்தொகை என்றும் ஒரு பெயர் உண்டு. குறுந்தொகையில் உள்ள பாடல்கள் மிகச் சில அடிகளை உடையவை. அவற்றைவிடச் சற்றுப் பெரிய பாடல்களை உடையது நற்றிணை. அந்தப் பாடல்களைவிட அதிகமான அடிகளை உடையவை இந்த நூலில் இருப்பதால் இதற்கு நெடுந்தொகை என்ற பெயர் வந்தது. 13 அடி முதல் 31 அடி வரையில் உள்ள பாடல்களை இந்தத் தொகை நூலிற் காணலாம்.

இந்த நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மர். தொகுக்கும்படி செய்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். 145 புலவர்கள் பாடியவை இதில் உள்ள பாடல்கள். மூன்று பாடல்களுக்கு ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை.

அகத்துறை அமைந்த நானூறு பாடல்களையும் மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்து அமைத்திருக் கிறார்கள். முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை என்னும் பகுதி; 121-ஆம் பாடல் முதல் 300 வரை உள்ளது மணிமிடை பவளம்; கடைசி 100 பாடல்கள் நித்திலக்கோவை என்ற பகுதியாக அமைந்தவை. இவ்வாறு பெயரிட்டுப் பிரித்ததற்குக் காரணம் இன்ன தென்று தெளிவாக விளங்க வில்லை.

அகத்துறைப் பாடல்களில் ஒவ்வொன்றுக்கும் திணை உண்டு. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளில் இப்பாடல்கள் அமைந்திருக் கும். அகநானூற்றில் ஒரு வரையறையாகத் திணைப் பாடல்கள் கோக்கப் பெற்றிருக்கின்றன. பாலைத் திணைப் பாடல்களே மிகுதி. ஒற்றைப்படை எண்களை உடைய

பாடல்கள் எல்லாம் அந்தத் திணையைச் சேர்ந்தன. இரண்டு எட்டு என்று வரும் பாடல்கள் (2, 8, 12, 18, 22, 28, 32, 38, என்று வருபவை போன்றன) குறிஞ்சித் திணையைச் சார்ந்தவை. நான்கு என்னும் எண்களை உடையவை (4, 14, 24, 34, 44 போன்றவை) முல்லைத் திணைப் பாடல்கள். ஆறு என்ற எண்ணாக உள்ளவை மருதத் திணைக்குரியவை. 10, 20, 30 எனவரும் பத்தென்னும் எண் வகைகளை உடையவை நெய்தல் திணைக்கு உரியவை. ஆகவே பாலைத் திணைப் பாடல்கள் இருநூறும், குறிஞ்சித் திணைப் பாடல்கள் எண்பதும், மற்றத் திணைகளில் ஒவ்வொன்றிலும் நாற்பது பாடல்களும் இருக்கின்றன. இத்தகைய வரையறை வேறு எந்த நூலிலும் இல்லை.

இந்த நூலில் முதல் தொண்ணூறு பாடல்களுக்கு பழைய உரை உண்டு. இந்த நூலைச் சேது சம்ஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்காரைக் கொண்டு இராசகோபாலையங்கார் என்பவர் முதல் முதலில் வெளியிட்டார்.

நெடும் பாடல்களாக அமைந்திருப்பதால் செய்திகளை விரிவாகச் சொல்ல இடம் உண்டு. எனவே, இந்த நூலில் உள்ள பாடல்களில் இயற்கை வருணனை மிக விரிவாக இருக்கும். துறைக்குரிய நிகழ்ச்சியும் விரிவாகப் பொருந்தியிருக்கும்.

சிவபெருமான் வேதத்தைச் சொன்னவர். வேதத்தின் ஆசிரியராகிய அவரே அதை எப்போதும் சொல்லிக் கொண்டேயிருக்கிறாராம். மறைப்பாட்டைப் பாடுதலால் அவருடைய கண்டம் யாழைப் போல இருக்கிறது. ஆதலின் அவரை, "யாழ்கெழு மணிமிடற் றந்தணன்"

என்று கடவுள் வாழ்த்தில் பெருந்தேவனார் பாடுகிறார். வேதத்தை அநாதி என்று சொல்வர். அநாதியாக உள்ள இறைவன் எப்போதும் பாடிக் கொண்டிருப்ப தால் அதுவும் அநாதியாக இருக்கிறது. இந்தக் குறிப்பை அந்தத் தொடர் காட்டுகிறது.

தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதலுறவு, இருதலைப் புள்ளுக்குத் தலையிரண்டாகவும் உயிர் ஒன்றாகவும் இருப்பது போன்றது என்று ஒரு பாட்டுக் கூறுகிறது.

**"இருதலைப் புள்ளின் ஓர்உயி ரம்மே."**

இப்போது பழனி என்று வழங்கும் முருகனுடைய திருத்தலத்துக்குப் பழங்காலத்தில் பொதினி என்பது பெயர். அந்த மலைக்குரிய அரசர்கள் ஆவியர் குலத்தில் தோன்றினவர்கள். அவர்கள் வாழும் இடம் ஆதலின் ஊருக்கு ஆவிநன்குடி என்ற பெயர் வழங்குகிறது.

அகநானூற்றில்ஒரு பாட்டில்,

**"முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி**
**பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"**

என்று வருகிறது. வேள் என்பது குறுநில மன்ன னுக்குப் பெயர். இக்காலத்துப் பாளையக்காரர் அல்லது ஜமீன்தாரைப் போன்றவன். பேகன் என்னும் வள்ளல் இந்த ஆவியர் குலத்தில் தோன்றினவன். நகர் என்பது கோயிலைக் குறிக்கும் சொல். 'பொன்னை உடைய உயர்ந்த கோயிலை உடைய பொதினி' என்று பொருள் செய்ய வேண்டும். இதனால் அக்காலத்திலேயே பழனி மலையின்மீது கோயில் இருந்தது என்று தெரியவரும்.

இராமன் கடலில் அணை கட்டியபோது ஓரிடத்தில் இருந்து மற்றவர்களுடன் மந்திராலோசனை செய்தானாம். அவன் தங்கியிருந்தது ஓர் ஆலமரத்தின்

நிழல். அந்த மரத்தின் மேல் இருந்த பறவைகள் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன. இராமன் தன் மந்திராலோசனைக்கு அந்த ஒலி இடையூறாக இருப்பதை அறிந்து கையை உயர்த்தி, "குரல் எழுப்பாமல் இருங்கள்" என்று சொல்லவே, பறவைகள் ஒலியடங்கி இருந்தனவாம். இந்த இடத்தை ஏகாந்த ராமம் என்பார்கள். இந்த வரலாற்றை ஒரு பாடல் கூறும்.

**"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி**
**முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை**
**வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த**
**பல்வீழ் ஆலம் போல**
**ஒலிஅவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே."**

(கவுரியர்-பாண்டியர்; கோடி-தனுக்கோடி; பௌவம்-கடல்; மறைக்கு—இரகசிய ஆலோசனையின் பொருட்டு; அவித்த-அடங்கச் செய்த; வீழ்-விழுது; அவிந்தன்று—அடங்கியது; அழுங்கல் ஊர்-ஆரவாரத்தை உடைய ஊர்.)

பழங்காலத்தில் ஆவண ஓலைகளைப் பானைகளில் வைத்து மேலே மூடி முத்திரையிட்டுப் பாதுகாப்பார்கள். ஆவணங்களைப் பாதுகாக்கும் இடத்துக்கு ஆவணக்களரி என்று பெயர். கல்வெட்டுக்களில் இந்தப் பெயர் இருக்கும். சங்க காலத்திலேயே ஆவண ஓலைகளைப் பானைகளில் இட்டுப் பாதுகாத்து, வேண்டும்போது முத்திரையை நீக்கி ஓலையை எடுத்துப் பார்த்து வந்தார்கள். இந்தச் செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று உவமையாக எடுத்துச் சொல்கிறது.

பாலை நிலத்தில் போரிட்டு வீழ்ந்த வீரர்களின் உடலிலிருந்து கழுகுகள் குடலைக் குத்தி இழுக்கின்றன. கயிற்றால் வாய்மூடிக் கட்டப் பெற்ற பானையிலிருந்து அடையாள முத்திரையைப் பார்த்து நீக்கி, ஓலையை

எடுக்கும் ஆவண மாக்களைப் போல் அவை இருக்கின்றன வாம்.

**''கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்**
**பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்.''**

[பிணிக்-குழிசி-கட்டப்பட்ட பானை; கொண்மார்-கொள்ளும் பொருட்டு; பொறி-அடையாள முத்திரை.]

# 20. புறநானூறு

நூறு ஆண்டுக்குமுன் ஒரு தமிழ்ப் புலவர் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தைப் படித்துக்கொண்டிருந்தார்.

**"கொடுக்கிலா தானைப் பாரியே என்று**

**கூறினும் கொடுப்பார் இலை"**

என்ற பகுதியைப் படிக்கும்போது பாரி என்பவன் ஒரு வள்ளல் என்று தெரிந்துகொண்டார். 'மக்களைப் பாட வேண்டாம்; இறைவனைப் பாடுங்கள்' என்று சுந்தரர் பாடும் பதிகம் அது. அதில் தம்மை அறியாமலே பாரியின் பெருமையை மறைமுகமாகப் பாராட்டியிருக்கிறார் அந்தப் பெருமான். அப்படியானால் அந்த வள்ளல் மிகச் சிறந்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்துச் கொண்டார் புலவர். நிகண்டுகளைப் படித்திருந்த புலவர் கடை ஏழு வள்ளல்களில் ஒருவன் பாரி என்று மட்டும் தெரிந்துகொண்டிருந்தார். பாரி, ஓரி, மலையன், அதிகமான், பேகன், ஆய், நள்ளி என்ற அந்த எழுவரின் பெயர்களும் அவருக்குத் தெரியும். ஆனால், அவர்கள் யார்? அவர்களுடைய வள்ளன்மையைப் புலப்படுத்தும் செயல்கள் எவை? என்று புலவருக்குத் தெரியாது அவருக்கு மட்டுமா? மற்றப் புலவர்களுக்கும் தெரியாது.

ஆனால் இன்று பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பில் படிக்கும் மாணாக்கனை அணுகி, "தம்பி, உனக்குப் பாரியைப்பற்றி ஏதாவது தெரியுமா?" என்று கேட்டுப் பாருங்கள். அவன் உடனே, "தெரியுமே; அவன் பறம்பு மலையில் வாழ்ந்தவன்; முல்லைக்குத் தேர் ஈந்தவன்; கபிலரென்னும் பெரிய புலவருக்கு உயிர் நண்பன்" என்று சொல்லுவான். அப்படியே மற்ற வள்ளல்களைப் பற்றியும் சொல்லுவான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டு அரசியல் வாழ்வு எப்படி இருந்தது? எந்த எந்த அரசர்கள் சிறப்புற்று வாழ்ந்தார்கள்? என்ன என்ன போர்கள் நிகழ்ந்தன? புலவர்களுடைய பெருமை எவ்வாறு இருந்தது?—இத்தகைய வினாக்களுக்குரிய விடைகளை இக்காலத்துப் புலவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் பல வேள்விகளைச் செய்தவன், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்ற சேர அரசன் பாரதப் போர்வீரர்களுக்கு அரிசி அனுப்பினான், அதிகமான் ஔவையாருக்கு நெடுநாள் வாழும் உரத்தைத் தரும் நெல்லிக் கனியைத் தந்தான், குமணன் தன்னை நாடி வந்த புலவனுக்குத் தன்னுடைய தலையையே வழங்க முன் வந்தான், கோவூர் கிழார் போர் செய்யும் மன்னர்களுக்கு அறிவுரை கூறிச் சமாதானத்தை உண்டு பண்ணினார், முடியுடை மூவேந்தர்களும் முற்றுகையிட்டும் பாரி தன் மலையில் விளையும் உணவுப் பண்டங்களை வீரர்களுக்கு வழங்கி அந்த முற்றுகையினால் ஊறு அடையாமல் இருந்தான் என்ற வரலாற்றுச் செய்திகளைத் தமிழ் மாணவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அருமையான தொடர் உலகம் முழுவதும் ஒலிக்கிறது; தமிழ் மக்களின் விரிந்த மனநிலையையும் பண்பாட்டையும் அது காட்டுகிறது.

இவ்வளவுக்கும் முக்கிய காரணமாக இருக்கும் நூல் புறநானூறு. அந்த நூல் முழுவதும் வரலாற்றுக் களஞ்சியம். புலவர்கள், புரவலர்கள் ஆகியவர்களின் இயல்பைக் காட்டும் கண்ணாடி. தமிழ் மக்களின் புற வாழ்க்கையையும் அக வாழ்க்கையையும் தெரிந்து கொள்ள உதவும் வழிகாட்டி. பல சுவையான நிகழ்ச்சிகளைக் காட்டும் கருவூலம்.

எட்டுத்தொகையில் ஒன்றாக இருப்பது புறநானூறு. கடவுள் வாழ்த்தை முதற்பாட்டாக உடையது. அதையும் சேர்த்து நானூறு பாடல்கள் உடையது. புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு என்றும் இந்தத் தொகைக்குப் பெயர் உண்டு.

இதைத் தேடி எடுத்து ஆராய்ந்து பதிப்பித்து உதவியவர்கள் டாக்டர் உ.வே சாமிநாதையரவர்கள். இரண்டு பாடல்கள் கிடைக்கவில்லை. இதற்கு ஒரு பழைய உரை உண்டு. ஆனால் முதல் 266 பாடல்களுக்கு மட்டுமே இருக்கிறது.

புறப்பொருள் பற்றிய பாடல்கள் ஆதலின் ஒவ்வொரு பாட்டுக்குப் பின்னும் அதற்குரிய திணை, துறை இன்னவை என்ற குறிப்பும், இன்னாரை இதன் பொருட்டுப் பாடியது என்ற குறிப்பும் உள்ளன. உதாரணமாக, 65-ஆம் பாட்டுக்குப் பின், "திணை—பொதுவியல்; துறை கையறுநிலை; சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற் பெருவளத்தானோடு பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது" என்ற

குறிப்பு இருக்கிறது. இதிலிருந்து ஒரு முக்கியமான வரலாற்றுச் செய்தி தெரிய வருகிறது.

இந்த நூலைத் தொகுத்தவர் இன்னார் என்றும், தொகுப்பித்தோர் இன்னாரென்றும் தெரியவில்லை.

வரலாற்றுச் செய்திகளைத் தரும் பாடல்களானாலும் சிறந்த கவிதைகளாகவும் இவை இருக்கின்றன. புலவர்கள் ஆகியோரின் வாழ்க்கையோடு தொடர்புடையவை ஆதலின் பாடல்களில் உணர்ச்சியும் உயிரும் துள்ளுகின்றன.

கடவுள் வாழ்த்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமானுடைய புகழைக் கூறுகிறார். சிவபெருமானுடைய ஒரு கூற்றில் அம்பிகை இருக்கிறாள். அந்தக் கோலத்தை மாதிருக்கும் பாதியன் என்கிறோம். படைப்புக் காலத்தில் சிவபெருமான் முதலில் இந்தத் தோற்றத்தை மேற்கொள்கிறான். சக்தியை ஒரு பாதியில் மலரச் செய்கிறான். ஆனால் சங்கார காலத்தில் சக்தியும் சிவபெருமானுக்குள் அடங்கிவிடுவாள். இதைச் சைவ நூல்கள் கூறுகின்றன இந்தக் கருத்தைப் பெருந்தேவனார் சொல்கிறார்:

**"பெண்உரு ஒருதிறன் ஆகின்று: அவ்வுருத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"**

'பெண் உருவம் ஒரு பக்கம் இருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் அந்த உருவத்தைத் தனக்குள்ளே அடக்கி மறைக்கவும் மறைப்பான்' என்பது இதன் பொருள்.

போர் புரிவதற்கு முன்னால், பகைவர் நாட்டிலுள்ள பசுமாடுகளுக்கும் அந்தணர் முதலியோருக்கும் தீங்கு நேராமல் இருப்பதற்காக அவர்களை, 'பாதுகாப்பான

இடங்களுக்குப் போய்விடுங்கள்' என்று முரசறைந்து தெரிவிப்பார்களாம்:

> "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறா அ தீரும்
> எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின் என
> அறத்தாறு நுவலும் பூட்கை மறம்."

['பசு மாடுகளும், பசுவின் தன்மையையுடைய அந்தணர்களும், பெண்களும், நோயாளிகளும், பித்ரர்களுக்குக் கடன் கழிக்கும் பிள்ளைகளைப் பெறாதவர்களும், "உங்களுக்குப் பாதுகாப்பான இடங்களைச் சேர்ந்துவிடுங்கள். நாங்கள் விரைவில் அம்பை எய்து போர் செய்யப்போகிறோம்" என்று அறநெறியில் அறையும் மேற்கோளையுடைய வீரம்.]

தர்மயுத்தம் என்று சொல்வது இதுதான். நெட்டிமையார் என்ற புலவர், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடும் பொழுது (9-ஆம் பாட்டு) இப்படிச் சொல்கிறார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். "தெற்கேயுள்ள கன்யாகுமரி, வடக்கேயுள்ள பெரிய மலையாகிய இமயமலை, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் ஆகியவற்றை எல்லையாகவுடைய குன்றும் மலையும் காடும் நாடும் அடங்கிய இந்தப் பெரிய நாட்டிலுள்ள யாவரும் ஒருங்குபட்டு வழிபாடு கூறத் தீய செயல்களையெல்லாம் போக்கிச் செங்கோல் ஓச்சியவன்" என்று ஒரு புலவர் பாடுவதில் இந்த ஒருமைப்பாட்டைக் காண்கிறோம். அவருடைய சொற்களிலேயே அதைக் கேளுங்கள்!

**''தென்குமரி வடபெருங்கல்**
**குணகுட கடலாஎல்லை**
**குன்றுமலை நாடுகாடு**
**ஒன்றுபட்டு வழிமொழியக்**
**கொடிது கடிந்து கோல்திருத்தி.''**

அரசர்களுக்குப் புலவர்கள் அறிவுரை கூறித் திருத்திய நிகழ்ச்சிகள் பல. நீர் நிலைகளை உண்டாக்கி வயல்களுக்கு நீர் பாயச் செய்து உணவுப் பொருளை மிகுதி யாக விளையும்படி செய்ய வேண்டியது அரசனுடைய கடமை. இதையே நயமாகப் பாண்டியன் நெடுஞ் செழியன் என்ற அரசனுக்குக் குடபுலவியனார் என்ற புலவர் சொல்கிறார்.

''போகிற உலகத்தில் வாழ்வதற்குரிய செல்வம் வேண்டினாலும், இந்த உலகத்தில் வெற்றியுடன் வாழ வேண்டினாலும், புகழை நிலைநிறுத்த வேண்டினாலும் அதற்குத் தக்க செயல் இன்னதென்று சொல்கிறேன். கேள்'' என்று தொடங்குகிறார் புலவர்.

''உடம்புக்கு நீர் வேண்டும். உணவு வேண்டும். உணவினால்தான் உடம்பில் உயிர் நிற்கிறது. ஆகையால் உணவைக் கொடுப்பவர் உயிரையே கொடுத்தவர் ஆவார்'' என்று சொல்கிறார்:

**''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''**

என்ற அடி இங்கே வருகிறது.

மேலே, உணவு எப்படி உண்டாகிறது என்று சொல்லி, நீரும் நிலமும் இணைந்தால் உணவுப்பொருள் விளையும் என்று எடுத்துக் காட்டுகிறார். ''வானம் பார்க் கும் பூமி இருந்தால் அதனால் பெரும்பயன் விளையாது; தம்முடைய விருப்பப்படி நீரைப் பாய்ச்சிப் பயிர் விளைக்

கும்படி இருந்தால்தான் அரசனுடைய முயற்சிகள் பயனைத் தரும்'' என்று சொல்லிவிட்டு, ''ஆகையால் நீ நீரைத் தேக்கி வைக்கும் முயற்சிகளைச் செய்யவேண்டும்'' என்று முடிக்கிறார். அதைப் பொதுவகையில்சொல்கிறார். ''நிலம் பள்ளமாகும் இடத்திலே நீர் நிலை பெருகும்படி அணை முதலியவை கட்டித் தேக்கியவர்கள், இவ்வுலகத்தில் புகழைத் தேக்கியவர்கள், அல்லாதவர்கள் தம் பெயரை நிலைநிறுத்த முடியாதவர்கள்'' என்கிறார்.

**''நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண்தட் டோரே;**
**தள்ளா தோர் இவண் தள்ளா தோரே.''**

[தட்டோர்-தடுத்தவர், தேக்கியவர்; தள்ளாதோர்-தேக்காதவர்]

வீரத்தைப் பற்றியும் ஈகையைப் பற்றியும் உள்ள அற்புதமான பாடல்கள் மிகவும் பெருமைப்படுவதற்குரியவை. பெண்டிரும் வீரம் காட்டிய நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன. ஈகையைப் பற்றிய நுட்பமான கருத்துக்களை இவ்வளவு சிறப்பாகச் சொல்லும் நூல்கள் உலகத்திலேயே மிகச் சிலவாகத்தான் இருக்க முடியும்.

ஒரு புலவர் இழிந்தது, மிக இழிந்தது, உயர்ந்தது, மிக உயர்ந்தது என்று நான்கைச் சொல்கிறார். அந்த நான்கும் ஈகையோடு தொடர்புடைய கருத்துக்கள்.

இறைவன் முயற்சி செய்வதற்குரிய கருவி கரணங்களை நமக்குக் கொடுத்திருக்கிறான். அவற்றைக் கொண்டு நாம் உழைக்கவேண்டும்; முயற்சி செய்து நமக்கு வேண்டியதை நாம் ஈட்டிக்கொள்ள வேண்டும். அப்படியின்றிப் பிறரிடம் கைநீட்டி ஒன்றை வாங்குவதென்பது இழிந்த செயல். ஈ என்பதற்குக் கொடு என்பது பொருள்.

அந்தச் சொல்லைச் சொல்லும் போதே நாம் பல்லை இளிக்க வேண்டியிருக்கிறது. எத்தனை அவமானம்!

**"ஈஎன இரத்தல் இழிந்தன்று."**

[இழிந்தன்று-இழிந்தது.]

செல்வம் படைத்தவன் அதனைத் தானே பயன்படுத்திக்கொண்டு வாழ்தல் அறம் அன்று. "செல்வத்துப் பயனே ஈதல்" என்று ஒரு புலவர் சொல்வார். துன்பப் படுபவர்களின் நிலையை அறிந்து தானே வலியச் சென்று கொடுப்பதுதான் உத்தமமான ஈகை. ஒருவன் மானத்தை விட்டு நம்மிடம் வந்து, 'ஈ' என்று கேட்கும் போது கொடுக்காமல் இருப்பது, அவ்வாறு கேட்பதைவிட இழிவானது.

**"அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று."**

இழிந்ததையும் மிக இழிந்ததையும் சொன்ன புலவர், மேலே, உயர்ந்ததையும் மிக உயர்ந்ததையும் சொல்ல வருகிறார்.

ஒருவர் வறுமையால் வருந்துவதை அறிந்து அவர் கேளாமல் இருந்தாலும் அவர் நிலைக்கு இரங்கி வலியச் சென்று ஈதல் சிறந்த பண்பு.

**"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று"**

[உயர்ந்தன்று - உயர்ந்தது.]

அதைவிட உயர்ந்தது எது தெரியுமா? அப்படி ஒருவன் கொடுக்கும்போது, "வேண்டாம்; எனக்கு வேண்டியதை நானே ஈட்டுவேன்" என்று சொல்கிறானே, அவன் பின்னும் உயர்ந்தவன்.

**"அதன் எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."**

கொடுக்கிறவனை விட அதை வேண்டாம் என்று மறுக்கிறவன் மானம் நிறைந்தவன். மானம் உயிரை விடச் சிறந்ததல்லவா?

இந்த நான்கையும் சேர்த்துப் பார்த்தால், இந்த வரிகளுக்கு அட்சரலட்சம் தரவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

**''ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;**
**கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.''**

ஒருவர் இறந்து போனால் அதற்காக இரங்கிப் பாடும் பாடலைக் கையறுநிலை என்பார்கள், அது புறத்துறையில் ஒன்று. புறநானூற்றின் பிற்பகுதியில் பல கையறுநிலைப் பாடல்கள் உள்ளன. துயரம் கப்பிக்கொண்ட உள்ளத்தைப் பிழிந்து பாட்டாக வடித்திருக்கிறார்களோ என்று தோன்றும்.

மாதிரிக்கு ஒன்று.

ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்ற வீரன், கொடையாளி, இறந்து போனான். குடவாயில் கீரத்தனார் பாடுகிறார். அவன் ஊருக்குப் போகிற வழியில் இந்தச் செய்தி புலவருக்குத் தெரிந்தது. வழியில் ஒரு முல்லைக்கொடி. அதைப் பார்த்துத் தம் துயரக் குரலை வடிக்கிறார் புலவர்.

''ஏ முல்லையே! நீ இன்னுமா மலர்கிறாய்? எதற்காக மலர்கிறாய்? வீரம் நன்றாக வெளிப்படும்படி வீரர்களை வென்ற வலிய வேலையுடைய சாத்தன் இறந்த பிறகும் உனக்குப் பூக்கத் தோன்றுகிறதா? முன்பெல்லாம் நீ கொத்துக் கொத்தாகப் பூத்தபோது சாத்தனைப் பார்க்க எல்லோரும் வருவார்கள். இளைய வீரர்கள் ஒரு

கொத்தைப் பறித்துத் தலையிலே சூடிக்கொள்வார்கள். வளையை அணிந்த பெண்கள் மலர்களைப் பறித்துச் சூடிச் செல்வார்கள். நல்ல யாழை எடுத்து வரும் பாணன் மேலே இருக்கும் பூங்கொத்தை அந்த யாழின் வளைந்த கோட்டினாலே மெல்ல வளைத்துப் பூவைப் பறித்து அணிந்துகொள்வான்; அவனுடன் வரும் பாட்டுக்காரியும் புனைந்து கொள்வாள்; இப்போது யார் உன்னைச் சீண்டுவார்கள்? அப்படி இருக்க இன்னும் நீ பூக்கிறாயோ?'' என்று கேட்கிறார்.

''இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே.''

[இளையோர்—இளைய மைந்தர்; வளையோர்—வளையை அணிந்த இளம் பெண்கள்; மருப்பு—யாழின் கோடு; பாடினி—பாணனுடைய மனைவி; பாட்டுப் பாடுகிறவள்; ஆடவர்க் கடந்த—வீரர்களை வென்று ]

அவர் தம் அவல உணர்ச்சியைக் கொட்டிப் பாடிய பாட்டு இது. இதை அந்த முல்லை கேட்டிருக்காது; நாம் கேட்கிறோம்.

# 21. நாலடியார்

"பழகு தமிழ்ச் சொல் அருமை நாலிரண்டில்" என்ற பழம் பாட்டும், "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்ற பழமொழியும் நாலடியார், திருக்குறள் என்ற இரண்டு நூல்களும் தமிழ்நாட்டில் சிறப்புற்று வழங்கியதைத் தெரிவிக்கின்றன. பதினெண் கீழ்க் கணக்கு என்ற தொகுதியில் உள்ள நூல்களில் உலகம் அறிந்ததாக விளங்குவது திருக்குறள். அதற்கு அடுத்த படி சிறந்து நிற்பது நாலடியார் திருக்குறளின் மதிப்பை அதன் பெயரில் உள்ள திரு என்ற அடையே காட்டும். அப்படியே மதிப்புடைய மக்களுக்குக் கொடுக்கும் ஆர் விகுதியைப் பெற்று, **நாலடியார்** என்று வழங்குவதனால் இந்த நூலுக்குத் தமிழ் நாட்டில் உள்ள மதிப்புப் புலனாகும்.

நான்கு அடிகளால் அமைந்த வெண்பாக்கள் நானூறு அமைந்த நீதி நூல் நாலடியார் தனியே கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும் இருக்கிறது இதற்கு நாலடி நானூறு, வேளாண் வேதம் என்ற பெயர்களும் வழங்கும். நாலடி உள்ள பாடல்கள் அமைந்த பிற நூல்கள் இருந்தும், இதில் உள்ள பாடல்களின் சிறப்பால் அந்த அடியின கணக்கைக் கொண்டே நாலடியார் என்ற பெயர் அமைந்தது.

இந்த நூல் தோன்றியதற்குரிய கதை ஒன்று வழங்கி வருகிறது.

தமிழ் நாட்டில் வேறு இடங்களில் பஞ்சம் உண்டானதால் அங்கங்கே இருந்த எண்ணாயிரம் சைன முனிவர்கள் மதுரைக்கு வந்து வாழ்ந்தார்கள். பாண்டிய மன்னன் அவர்களுக்கு வேண்டிய நலங்களைச் செய்து வந்தான். சில காலம் சென்ற பிறகு, பஞ்சம் நீங்கிப் பழையபடி பிறபகுதிகள் வளம் பெற்றதனால் முனிவர்கள் தம் தம் இடங்களுக்குப் போக விரும்பினார்கள். பாண்டியனுக்கு அவர்களை அனுப்ப மனம் இல்லை. என்றாலும் ஒரு நாள் அவர்கள் யாவரும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடி தம் ஆசனத்தின் கீழ் வைத்து விட்டுப் பாண்டியனிடம் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

அவர்கள் அவ்வாறு போனதை அறிந்து கோபம் கொண்ட பாண்டிய மன்னன் அவர்கள் ஆசனத்தின் கீழ்ப் பாடல்கள் எழுதியிருந்த ஓலைகளைக் கண்டான். கோபத்தால் அவற்றையெல்லாம் சேர்த்து வையை யாற்றில் எறியும்படி சொல்லி விட்டான்.

அவ்வாறு எறிந்த எண்ணாயிரம் ஏடுகளில் நானூறு ஏடுகள் நீரை எதிர்த்து வந்தனவாம். அவைசிறப்பானவை என்று அறிந்த அரசன் அவற்றைத் தொகுத்துப் பாதுகாத்துப் பரவச் செய்தானாம்.

> **"எண் பெருங் குன்றத்து**
> **எண்ணா யிரம்இருடி**
> **பண்பொருந்தப் பாடிய**
> **பாநா னூறும்"**

என்று ஒரு பழம் பாடல் இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறது.

கதை எவ்வாறாயினும் இந்த நூல் ஒருவரால் பாடப் பெற்றது அன்று எனவும், பல சைன முனிவர் பாடிப் பிறகு தொகுக்கப் பெற்றது என்றும் கொள்ளலாம்.

நற்றிணை நானூறு, அகநானூறு, புறநானூறு என்று நானூறு செய்யுட்களையுடைய நூல்கள் இருப்பது போல, இந்த நூலைத் தொகுத்தவர்களும் சில பாடல்களை இயற்றிச் சேர்த்து நானூறாக்கியிருக்கலாம்.

நாலடியாரில் இரண்டு பாடல்களில் பெரு முத்தரையர் என்ற அரசர்களின் பெயர் வருகிறது. அக்குலத்தினர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். ஆகவே இந்த நூல் அதற்குப் பின்பே தோன்றியிருக்க வேண்டும். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம் பந்தர் சைனரோடு வாதம் செய்து தாம் எழுதிய ஏடு வையையால எதிர் ஏறிச் செல்லச் செய்தார். அந்த வரலாற்றைப் போலச் சைனர் பாடல்களுக்கும் ஒரு வரலாறு வேண்டுமென்ற எண்ணத்தால், இந்தப் பாடல்கள் வையையில் எதிர் நீச்சல் போட்டன என்ற கதை எழுந்திருக்கலாம்.

திருக்குறளில் உள்ளவற்றைப் போல இதிலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பால்களும் ஒவ்வொரு பாலிலும் இயல்களும் அதிகாரங்களும் இருக்கின்றன. இவற்றைப் பதுமனார் என்பவர் பிரித்து அமைத்தார் என்று தெரிகிறது. இந்த அமைப்புத் திருக்குறளில் இருப்பது போலச் சிறப்பாக இல்லை. அதிகாரத் தலைப்புக்கும் பாட்டின்பொருளுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லாத இடங்கள் பல உண்டு. பதுமனார், தருமர், பெயர் தெரியாத வேறு ஒருவர் எழுதிய பழைய உரைகள் இந்த நூலுக்கு உள்ளன.

சைனர்கள் துறவறத்தையே சிறப்பாகப் பாராட்டுகிறவர்களாதலால் இந்த நூலில் முதலில் துறவற இயலும் அதன் பின்பே இல்லற இயலும் அமைந்திருக்கின்றன. துறவற இயலில் முதலில் செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்னும் அதிகாரங்கள் உள்ளன.

பொருட்பாலில் அரசனுக்குரிய பண்புகளாகிய சிலவற்றைப் பற்றிய அதிகாரங்கள் வருகின்றனவே அன்றி, அரசியல், அமைச்சியில் முதலிய அரசோடு தொடர்புடைய சிறப்பான கருத்துக்களைச் சொல்லும் பகுதிகள் இல்லை. காமத்துப் பால் முப்பதே பாடல்களில் முடிவு பெறுகிறது. அவற்றிலும் முதல் பத்துப்பாடல்கள் மொது மகளிரைப் பற்றியவை.

நாலடியாரில் உள்ள கருத்துகள் சிறந்தவை. நல்ல உதாரணங்களுடன் சொல்லப்பட்டவை. நாம் அறிந்த பலவற்றை உவமைகளாகக் காட்டி நீதிகளைத் தெளிவாகச் சொல்லும் பாங்கை இந்நூலிலே காணலாம்.

செல்வம் நிலையாமை என்ற முதல் அதிகாரத்தில், "நம் வாழ் நாள் சுருங்கிக் கொண்டே வருவதனால் விரைவில் அறம் செய்ய வேண்டும்" என்ற கருத்தை ஒரு பாடல் சொல்கிறது.

அங்கே, "யமன் உங்கள் வாழ் நாளை அளக்கிறான். சூரியனையே படியாகக் கொண்டு அளந்து அளந்து நம் நாளை உண்டு விடுகிறான்" என்று நயமாகச்சொல்கிறார் சைன முனிவர்.

**"தோற்றம்சால் ஞாயிறு நாழிய வைகலும்**
**கூற்றம் அளந்துநும் நாள்உண்ணும்; — ஆற்ற**
**அறம்செய்து அருள்உடையீர் ஆகுமின்; யாரும்**
**பிறந்தும் பிறவாதார் இல்."**

இளமை நிலையாமையில் ஒரு பாட்டு :

'இப்போது நாம் வயசில் இளையவர்களாக இருக்கிறோம். நல்ல புண்ணியச் செயல்களை இப்போதே ஏன் செய்ய வேண்டும்? வயசான பிறகு செய்து கொள்ளலாமே?' என்று எண்ணக்கூடாது. கையில் பொருள் இருக்கும் போதே அதை மூடி வைத்துக் கொள்ளாமல் தர்மம் செய்து விடவேண்டும்.

இந்த நீதியைச் சொல்லும் போது ஓர் உவமையைப் பாட்டுச் சொல்லுகிறது. 'நீ இளமையுடன் இருக்கும் போது சாக மாட்டாய் என்பது என்ன உறுதி? முதியவர்களே இறந்து போவார்கள் என்ற சட்டம் உண்டா!' என்ற கேள்வி பாட்டில் இல்லை. ஆனால் அந்தக் கருத்தையே உவமை மூலமாகத் தெரிவித்து விடுகிறது.

'பெரிய காற்று அடிக்கிறது. மரத்தில் முற்றியிருந்த பழம் விழாமல் இருக்கவும் காய் உதிர்வதுண்டே?' என்று சொல்கிறது பாட்டு.

**''மற்றுஅறிவாம் நல்வினை, யாம் இளையம் என்னாது**
**கைத்து உண்டாம் போழ்தே கரவாது அறம்செய்மின்**
**முற்றி இருந்த கனிஒழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு.''**

(பிறகு நல்ல செயல்களைச் செய்வதைப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நாம் இளைய வயசுடையோம் என்று எண்ணாமல், கையில் பொருள் இருக்கும் போதே மறைக்காமல் தர்மத்தைச் செய்யுங்கள். முற்றியுள்ள பழங்கள் உதிராமல் மரத்தில் இருக்கவும், கொடுங் காற்றால் நல்ல காய்கள் உதிர்வதும் உண்டு.)

'நீங்கள் சின்ன வயசிலே செத்துப் போனாலும் போகலாம்' என்று அமங்கலமாகச் சொல்லாமல் ஓர்

உவமையை நாகரிகமாகச் சொல்லிக் கருத்தைப் புலப்பட வைக்கிறார் முனிவர்.

வினைகள் தாமே தமக்குரிய பயனை விளைவிக்கும் என்பது சைனர் கருத்து. வினை ஜடமாதலின் அதன் பயனை ஊட்டுவிக்கும் ஒருவன் இருந்தாலன்றி அதுவே ஊட்டாது என்று மற்றச் சமயத்தார் அதை மறுப்பர். வினைதானே பயனை ஊட்டும் என்ற கருத்தை நாலடியாரில் ஒரு பாட்டுச் சொல்கிறது. 'பல பசுமாடுகள் கூடியிருக்கும் மந்தையிலே ஒரு கன்றுக் குட்டியை விட்டால் அது தன் தாய்ப் பசுவைத் தேடி அடையும் ஆற்றலைப் பெற்றிருக்கும். அதுபோல அவரவர் செய்த வினை பிறகு வரும் பிறப்பில் அவரவரைச் சார்ந்து பயனைத் தந்து விடும்' என்பது அந்தப் பாட்டின் கருத்து.

புலால் உண்ணக்கூடாது என்பதை வற்புறுத்துவது சைன சமயம், அதை ஆற்றலுள்ள ஓர் உவமையால் ஒரு பாட்டுச் சொல்கிறது.

'நாம் காணும் சுடுகாடு துக்கத்தை அனுபவித்துத் துறவை மேற்கொள்ளாத மனிதர்களின் பிணத்தைக் கொண்டது. அறிவில்லாதவர்களின் வயிறோ ஆடு முதலிய விலங்குகளுக்கும்; கோழி முதலிய பறவைகளுக்கும் உரிய சுடுகாடு!'

> **''துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா**
> **மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க**
> **விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே, புலம்கெட்ட**
> **புல்லறி வாளர் வயிறு.''**
> [புலம் கெட்ட — அறிவு கெட்ட]

''ஒருவன் நன்றாகப் படிக்கவேண்டும். ஆனால் எதைப் படிப்பது? கல்விக்கு எல்லையே இல்லை. எல்லா

வற்றையும் கற்று விடலாம் என்றாலோ, நம் வாழ் நாள் ஒரு குறுகிய எல்லைக்குள் அடங்கியது. ஆதலால் தெளிவாக ஆராய்ந்து எவற்றைக் கற்றால் நம் வாழ்க்கைக்குப் பொருந்துமோ, அவற்றைக் கற்க வேண்டும். பால் வேறு நீர் வேறு பிரித்துப் பாலை உண்ணும் அன்னம் போல, ஆராய்ந்து கற்க வேண்டும்'' என்று ஒரு பாட்டுச் சொல்கிறது. மலை மலையாக நூல்கள் வெளியாகும் இந்தக் காலத்தில் இந்த நீதி எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!

மகாத்மா காந்தி தம் முன்பு மூன்று சீனக்குரங்குப் பொம்மைகளை வைத்திருப்பார். ஒன்று காதைப் பொத்திக் கொண்டிருக்கும். ஒன்று கண்ணைப் பொத்திக் கொண்டிருக்கும். மற்றொன்று வாயைப் பொத்திக் கொண்டிருக்கும். கெட்டதைக் கேட்க மாட்டேன் என்று காதைப் பொத்தியும், கெட்டதைப் பார்க்க மாட்டேன் என்று கண்ணைப் பொத்தியும், கெட்டதைப் பேச மாட்டேன் என்று வாயைப் பொத்தியும் அவை காட்டுகின்றனவாம்.

நாலடியார் வேறு வகையில் அந்த மூன்று உறுப்புக்களையும் பொத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு பாட்டில் சொல்கிறது. 'பிறருடைய இரகசியத்தின் விஷயத்தில் காது செவிடாகவும், அயலாருடைய மனைவி விஷயத்தில் கண் குருடாகவும், பிறர் இல்லாதபோது அவரைப் பற்றிக் கோள் சொல்லும் திறத்தில் வாய் ஊமையாகவும் ஒருவன் இருந்து அந்த ஒழுக்கத்தில் நிலையாக நிற்பானானால் அவனுக்குப் போய் நீ இதைச் செய், அதைச் செய்யென்று சிறிதும் அறத்தைக் கூற வேண்டாம்' என்பது அப்பாட்டின் பொருள்.

**''பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறன் அறிந்து**
**ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய**

**புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்**

**அறம்கூற வேண்டா அவற்கு.''**

[மறை-இரகசியம். திறன்-நல்ல பண்பு. ஏதிலார் கண்-இற் அயலார் மனைவியின் திறத்தில். புறங்கூற்று-கோள் சொல்லுதல். மூங்கை-ஊமை.]

நண்பர்களில் மூன்று வகையினர் உண்டாம். கமுக மர நண்பர், தென்ன மர நண்பர், பன மர நண்பர் என்று பெயர் வைக்கிறார் முனிவர். எப்போதுமே உதவிபண்ணிக் கொண்டே இருந்தால் நம்மை நண்பரென்று சொல்லிப் பாராட்டும் பேர் வழிகள் இருக்கிறார்கள். அடிக்கடி தண்ணீர் விட்டுப் பாதுகாக்கும் பாக்கு மரத்தைப் போன்றவர்கள் அவர்கள். முதலில் பழகிய போது சில காலம் உதவி புரிந்து, பிறகு எப்போதாவது உதவி செய்ப வர்களிடம் அன்பு பூணும் நண்பர்கள் இரண்டாந்தரம். முதலில் தண்ணீர் விட்டு வளர்த்துப் பிறகு எப்போ தேனும் தண்ணீர் விட்டால் போதும், தென்னை மரம் வளர. அதைப் போன்றவர்கள் அவர்கள். பனமரம் ஆரம் பத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டால் போதும். அது தானே வளரும். அது போல எப்போதோ செய்த உதவியை நினைத்து வாழ்நாள் முழுதும் நண்பு காட்டும் உத்தமர் கள் இருப்பார்கள்.

இந்த மூன்று வகை நண்பர்களை அந்தப் பழங் காலத்தில் சைன முனிவர் பார்த்திருக்கிறார். இந்தக் காலத்தில் நாமும் பார்க்கிறோமே! இந்த உண்மை காலத்தால் மாறாதது அல்லவா?

மிகச் சுருக்கமாக உயர்ந்த நீதிகளைச் சொல்லும் சத்தான தொடர்கள் பல நாலடியாரில் குவிந்து கிடக் கின்றன.

செல்வம் சகடக்கால் போல வரும்.
வாழ்நாள் உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின்.
இளையான் அடக்கம் அடக்கம்.
உரனுடையாளன் பொறுக்கும் பொறையே பொறை.
ஊன் கெடினும் உண்ணார் கைத்து உண்ணற்க.
மூவுலகமும் கேட்கும், கொடுத்தார் எனப்படும் சொல்.
கல்வி அழகே அழகு.
எஞ்ஞான்றும் பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.
தெளிவிலார் நட்பிற் பகை நன்று.
இல்ல புகழ்தலின் வைதலே நன்று.
ஒருவர் பொறை இருவர் நட்பு
இன்னாதே, ஒற்றுமை கொள்ளாதான் நட்பு
மனத்து அனையர் மக்கள் என்பார்.
தன்னைத் தலையாகச்செய்வானும் தான்.
நுண் உணர்வு இன்மை வறுமை.
இலாஅ அர்க்கு இல்லை தமர்.
மகன் அறிவு தந்தை அறிவு.

# 22. நான்மணிக் கடிகை

''துன்பப்பட வேண்டுமா? அதற்கு வழி சொல்கிறேன்'' என்கிறார் புலவர். யாராவது துன்பம் அடைய வழி சொல்வார்களோ? எது செய்யக் கூடாது என்பதைத் தெரிவிக்கச் சமற்காரமாக அப்படிச் சொல்கிறார். இது செய்தால் துன்பம் உண்டாகும் என்பதையே, 'உனக்குத் துன்பம் வேண்டுமென்ற விருப்பம் இருந்தால் இதைச் செய்' என்கிறார்.

**''இன்னாமை வேண்டின் இரவுஎழுக''**

'துன்பம் வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் கையில் கப்பரையை எடுத்துக் கொண்டு புறப்படு' என்கிறார். இரப்பவருக்கு எங்கே போனாலும் துன்பமே காத்திருக்கும் என்ற கருத்தை இப்படி வேறு ஒரு வகையில் எடுத்துச் சொல்கிறார். அடுத்தபடி சிலவற்றை நேராகவே சொல்லி விடுகிறார். 'இந்த உலகத்தில் நீ நிலைபெற வேண்டுமா? புகழை உண்டாக்கி அதை நிறுவு. உன்னோடு மறுமை உலகத்துக்கும் வருவது ஏதாவது வேண்டுமா? தருமம் செய். எந்தக் காரியத்திலும் வெற்றி வேண்டுமா? சினத்தை அடியோடு விட்டுவிடு' என்கிறார். ஒரு வெண்பாவில் இப்படி நான்கு நீதிகளைச் சொல்கிறார்.

**''இன்னாமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்தில்**
**மன்னுதல் வேண்டின் இசைநடுக;—தன்னொடு**

**செல்வது வேண்டின் அறம்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.''**

(இன்னாமை - துன்பம். மன்னுதல் - நிலைபெறுதல் இசை - புகழ். விடல் - விடுக.)

இந்தப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய **நான்மணிக் கடிகையில்** வருகிறது. இப்படியே ஒவ்வொரு பாட்டிலும் நான்கு நான்கு கருத்துக்கள் மணித்துண்டுகள் போல அமைந்திருப்பதனால்தான் இதற்கு அந்தப் பெயர் வந்தது. கடிகை - துண்டு.

இந்த நூலை இயற்றியவர் **விளம்பி நாகனார்** என்பவர். இந்த நூலில் கடவுள் வாழ்த்தாக இரண்டு பாக்களில் திருமாலைத் துதித்திருக்கிறார் இப்புலவர். அதனால் இவர் திருமாலிடம் அன்புடையவர் என்று தெரியவருகிறது. கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இரண்டு, கருத்துக்களைச் சொல்லும் செய்யுட்கள் நூற்றொன்று - ஆக 103 பாடல்களை உடையது இந்த நூல். மூன்று செய்யுட்கள் நாலடிக்குமேல் வந்த பஃறொடை வெண்பாக்கள்; மற்றவை யாவும் நாலடி வெண்பாக்கள்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பல நீதிகளையும், வேறு சில கருத்துக்களையும் சொல்லும் இந்நூலில், ஒவ்வொரு பாட்டும் நான்கு கருத்துக்களை வெளியிடுகிறதென்று சொன்னேன். கடவுள் வாழ்த்தில் கூட நாலு செய்திகளையே சொல்கிறார்.

'திருமாலுடைய முகத்தை ஒத்திருக்கும் சந்திரன்; அவனுடைய சக்கரத்தைப் போல இருக்கும் சூரியன்; அவன் கண்ணைப் போல இருப்பது தாமரை மலர்; காயாம்பூ அவனுடைய நிறத்தை ஒக்கும்' என்று முதற் பாட்டில் சொல்கிறார்.

**''மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்;**
**கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்;**
**முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்**
**எதிர்மலர் மற்றுஅவன் கண்ஒக்கும்; பூவைப்**
**புதுமலர் ஒக்கும் நிறம்,''**

[மதி - சந்திரன். வாள் - ஒளி. கதிர்-கிரணம். பழனம்- மருத நிலம். எதிர் மலர் - தோன்றும் பூ. பூவை - காயாம்பூ.]

தூக்கம் இல்லாமல் பலபேர் தொல்லைப்படு கிறார்கள் முக்கியமாக நான்கு வகையான பேர்வழி களுக்குத் தூக்கம் வருவதில்லை. பிறர் பொருளைத் திருட வேண்டும் என்று ஒருவன் நினைக்கிறான். திருடுவதற்கு இராத்திரி தானே சரியான வேளை? அப்போதுதான் திருடன் தன் தொழிலைச் செய்கிறான். எல்லாரும் துயிலுகின்ற வேளையிலே அவன் உறங்காமல் இருக் கிறான்; அவன் தூங்காத பேர்வழிகளில் முதலில் வரு கிறவன்.

காதலியைப் பிரிந்து வருந்துகிறான் காதலன். இரவில் எப்படித் தூக்கம் வரும்? அவன் மனம் அவளையே நினைந்து கொண்டிருக்கும். இரவு நேரம் அவனுக்கு நீண்டுகொண்டே இருக்கும். தூங்காதவர்களில் அவன் இரண்டாவது பேர்வழி.

எப்படியாவது பணம் சம்பாதித்து முன்னுக்கு வர வேண்டும் என்று முயற்சியோடிருப்பவனும் தூங்கமாட் டான் எப்படி எப்படிப் பொருளை ஈட்டலாம் என்று இராவெல்லாம் எண்ணிக்கொண்டே இருப்பான்.

பணம் ஈட்டினவனுக்கும் தூக்கம் வராது; அதை எப்படிக் காப்பாற்றுவது என்பதையே நினைத்துக்கொண் டிருப்பான். பணத்தைத் திருடன் கொண்டு போய் விடுவானே என்று அஞ்சுவான்.

தூங்காமல் இருக்கிறவர்கள் இன்னும் பலர் உண்டு. என்றாலும் நான்கு பேரை முக்கியமாக எடுத்துச் சொல்கிறார் விளம்பி நாகனார்.

**"கள்வம்என் பார்க்குத் துயில்இல்லை; காதலிமாட்டு**
**உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை; ஒண்பொருள்**
**செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை; அப்பொருள்**
**காப்பார்க்கும் இல்லை துயில்."**

[கள்வம் - திருடுவோம். பொருள் செய்வம் - செல்வத்தைச் சம்பாதிப்போம்.]

எது எது பாழ் என்பதைச் சொல்கிறார்ஒரு பாட்டில். 'வீட்டில் மனைவி இல்லாவிட்டால் அந்த வீடு பாழ். நாம் போகிற திசையில் நமக்கு வேண்டிய நண்பர்கள் இருக்க வேண்டும்; அப்போதுதான் போன இடத்தில் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியும்; அப்படி யாரும் இல்லாவிட்டால் போன காரியம் நிறைவேறுவது அரிது. நியாயம் வழங்குவதற்குப் பழங்காலத்தில் சபைகள் இருக்கும். அந்தச் சபைகளில் அறிவும் அநுபவமும் நிறைந்த முதியவர்கள் இருப்பார்கள். அவர்கள் நடு நிலையில் நின்று தீர்ப்பளிப்பார்கள். அத்தகைய முதியவர்கள் இல்லாவிட்டால் சபையினால் எந்தப் பயனும் விளையாது. மனிதன் சற்று அறிவைப் பெற வேண்டும் இந்த அழகிய உடம்பைப் பெற்றதற்கு அறிவு பெறுவதே சிறந்த நோக்கமாக இருக்கவேண்டும். கல்வியும் அறிவும் இல்லாதவன் மனித உடம்பை எடுத்ததனால் ஒரு பயனும் இல்லை. விலங்காகப் பிறந்திருக்கலாம். அது படிக்கிறதா? படிக்காதவன் பெற்ற மனித உடமபு பாழ்தான்' இப்படி நாலு பாழை நான்மணிக் கடிகை சொல்கிறது.

**''மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றுஅறிவு இல்லா உடம்பு.''**

*[வாள்நுதல்-பெண்; இங்கே மனைவி. இல்லாளே இல்லத்துக்குத் தலைவியாதலால் அவள் இல்லாவிட்டால் மனை பாழாம் என்றார்.]*

இன்னாருக்கு இன்னதைவிடச் சிறந்தது இல்லை என்று சொல்கிறது ஒரு பாட்டு.

'உறுப்புக்களில் கண்ணைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. ஒரு பெண்ணுக்கு எத்தனையோ உறவினர்கள் இருந்தாலும் கணவனைவிடச் சிறந்தவர் யாரும் இல்லை. நாம் ஈட்டும் பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்தவர்கள் குழந்தைகள், தாயைவிடச் சிறந்த தெய்வம் இல்லை.'

**''கண்ணிற் சிறந்த உறுப்புஇல்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மைய வாய்சான்ற பொருள்இல்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்.''**

*[கொண்டான்-கணவன். துன்னிய - பொருந்திய. கேளிர்- உறவினர். ஒண்மை - விளக்கம். வாய் சான்ற - உண்மை மிக்க. என்ன - எத்தகைய.]*

திருக்குறளில், ''தம் பொருள் என்பதம் மக்கள்'' என்று வருகிறது; அதை அடியொற்றியே 'மக்களின் ஒண்மைய வாய்சான்ற பொருள் இல்லை' என்றார் இப்புலவர்.

பொதுவாக எல்லோருக்கும் தம்முடைய சொந்த ஊரில், சொந்த வீட்டில் இருந்தால்தான் எல்லாச் சௌகரியங்களும் கிடைக்கும். வேறு ஊருக்குப் போனால்

அவர்களுக்கும் பொருந்தியே இராது. 'எப்போதடா நாம் ஊருக்குப் போய் அக்கடா என்று படுப்போம்' என்று இருக்கும். ஆனால் சில பேருக்கு எந்த ஊரானாலும் வசதிகள் கிடைக்கும்; செல்வாக்கு இருக்கும், சிங்கத்துக்குத் தன் காடு பிறன் காடு என்று இல்லைஎன்பார்கள். அதுபோல இந்த மனிதச் சிங்கங்களுக்குத் தம் ஊர் பிறர் ஊர் என்ற வேறுபாடு இல்லை. அவர்கள் எங்கே சென்றாலும் அங்குள்ளவர்கள் மதித்து நலம் செய்வார்கள். அவர்கள் யார்?

நல்லவர்கள் எந்த ஊருக்குப் போனாலும் மதிப்பை அடைவார்கள். நல்வழியிலே சென்ற தூயவர்களுக்கும் அப்படியே.

இந்த இரு வகையாரோடு இன்னும் இரண்டு வகையினர் உண்டு. அவர்களுக்கும் தம் ஊர் என்ற வரையறை இல்லை. மட்டமான மக்களுக்கு, இழிகுணம் உடையவர்களுக்கு, தம் ஊர் என்று ஒன்று இல்லையாம். நல்லவருக்கும் நல்ல நெறியிலே செல்வோருக்கும் தம் ஊர் தான் என்ற கட்டுப்பாடு இல்லை; எங்கும் அவர்களுக்கு நன்மை கிடைக்கும். இழிகுணம் உடையவர்களுக்கும் தமக்கென்று ஊர் இல்லையாம். எந்த ஊருக்குப் போனாலும் அவர்களைத் துரத்தி விடுகிறார்கள் ஆகையால் நிலையாகச் சொல்லக்கூடிய ஊர் எதுவும் அவர்களுக்கு இல்லையாம்! எல்லா ஊர்களும் அவர்களுக்குச் சமமே. தம் கையில் நிறையப் பணம் உள்ளவர்கள் எங்கே போனாலும் வசதி செய்து கொள்ளலாம். அவர்களுக்கும் தம் ஊரில்தான் இருக்கவேண்டும் என்பதில்லை.

**''நல்லார்க்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை; நன்னெறிச்**
**செல்வார்க்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை;—அல்லாக்**
**கடைகட்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை; தம்கைத்து**
**உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.''**

[அல்லா-நல்லவர் அல்லாத. கடைகட்கும்-குணத்தால் கடைப்பட்டவர்களுக்கும். கைத்து-கைப்பொருள்.]

ஒன்றுக்கு ஒன்று உவமையாக வைத்து நான்கு பொருள்களைச் சொல்லும் முறையும் நான்மணிக் கடிகையில் இருக்கிறது.

அசுணமா என்ற விலங்கு (பறவை என்றும் சொல்வார்கள்) யாழைக் கேட்டால் மகிழும்; கடிய ஓசையை எழுப்பும் பறையைக் கேட்டால் உயிரை விட்டுவிடும்; அதுபோல, மனத்தில் குறை உண்டானால் அறிவுடையவர்கள் வாழமாட்டார்கள். காட்டில் மூங்கிலில் நெல் முதிர்ந்து உதிர்ந்தால் மூங்கில் வளராமல் பட்டுப் போய் விடும்; அதுபோலத் தனக்கு விரோதமான பழிச் சொல் உண்டானால் சான்றோர் உயிரை விடுவர்.

**"பறைபட வாழா அசுணமா; உள்ளம்**
**குறைபட வாழார் உரவோர்;—நிறைவனத்து**
**நெல்பட்ட கண்ணே வெதிர்சாம்; மாசுறச்**
**சொல்பட்டால் சாவதாம் சால்பு."**

[உரவோர்-அறிவுடையோர், வனம்-காடு, வெதிர்-மூங்கில், சால்பு-சால்புடையோர்.]

ஒன்றனோடு ஒன்று தொடர்பு பட்டு வரும்படி நான்கு கருத்துக்களைச் சொல்வதும் இவ்வாசிரியர் வழக்கம்.

**"மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்;**
**தனக்குத் தகைசால் புதல்வர்;—மனக்குஇனிய**
**காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்**
**ஓதில் புகழ்சால் உணர்வு."**

[மடவாள்-பெண். தகை-தகுதி; குண நலங்கள். மனக்கு-மனத்துக்கு உணர்வு-ஞானம்.]

கள்ளியினிடையே அகில் பிறக்குமாம்; நிலத்துக்கு நெல்லும் கரும்பும் அணி செய்வன; குளத்துக்குத் தாமரை அழகு செய்யும்; பாம்பை மந்திரத்தால் கட்டுப் படுத்துவார்கள்; யானை கொம்பினால் பிறருக்குத் துன்பத்தைத் தரும்; இரும்பை இரும்பால் பிளப்பார்கள்; நீர் இல்லாவிட்டால் நெய்தல் வாடும். இத்தகைய பல கருத்துக்களைத் தாம் சொல்லும் நான்கு என்ற எண்ணுக்குள் அடங்கும்படி சொல்கிறார் ஆசிரியர். ஆனால் அவை அங்கங்கே உவமைகளாக நின்று பொருளை விளக்குகின்றன.

திருக்குறளில் உள்ள பல கருத்துக்களை இவ்வாசிரியர் சில இடங்களில் ஆளுகிறார்.

**''கெட்டுஅறிக கேளிரான் ஆயபயன்''**

என்று இவ்வாசிரியர் கூறுவது,

**''கேட்டினும் உண்டோர் உறுதி, கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்''**

என்ற குறளைப் பின்பற்றியது.

**''வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி''**

என்ற திருக்குறளிலுள்ள சொல்லையும் பொருளையும்,

**''கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம்...வானத்**
**துளிநோக்கி வாழும் உலகம்''**

என்று ஆள்கின்றார்.

**''இன்மையின் இன்னாதது இல்லை''**

என்ற இவ்வாசிரியர் கருத்து,

**''இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையின்**
**இன்மையே இன்னா தது''**

என்பதை அடியொற்றி யிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு நான்மணிக் கடிகை மனத்தில் நிறுத்துவதற்கு எளிய வகையில் கருத்துக்களைக் கொண்டு விளங்குகிறது.

# 23. இன்னா நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாற்பது என்று நான்கு நூல்கள் இருக்கின்றன. அவை இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என்னும் நான்கு. ஒவ்வொரு நூலிலும் நாற்பது பாடல்கள் உள்ளன. முன் உள்ள நூல்கள் இரண்டும் நீதி நூல்கள்.

'இவை இன்னாமையைத் தருவன' என்று ஒவ்வொரு பாட்டிலும் நான்கு இன்னாதவற்றை உணர்த்தும் நூல் இன்னா நாற்பது. கடவுள் வாழ்த்தோடு நாற்பத்தொரு பாடல்கள் இருக்கின்றன. கடவுள் வாழ்த்திலும் நான்கு இன்னா வருகின்றன.

இந்நூலை இயற்றியவர் கபில தேவர். சங்க காலத்தில் இருந்த கபிலர் வேறு; இந்தக் கபில தேவர் வேறு. இந்த நூலுக்குப் பழைய உரை உண்டு.

ஒவ்வொரு பாட்டிலும் இன்னது இன்னா என்று நான்கைக் கூறும் முறையில் நூலில் உள்ள 41 பாடல்களிலும் 164 இன்னா வருகின்றன.

சிவபெருமான், முருகன், பலராமன், கண்ணன் என்ற நான்கு தெய்வங்களையும் சேர்த்துச் சொல்லுதல் ஒரு மரபு. புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் இந்த

மரபைக் காணலாம். இந்த நூலின் ஆசிரியர் கடவுள வாழ்த்தில் அந்த நான்கு கடவுளரையும் குறிக்கிறார். அவர்களை வழிபடாதவர்க்குத் துன்பம் உண்டாகும் என்று சொல்கிறார்.

> ''முக்கட் பகவன் அடிதொழா தார்க்குஇன்னா;
> பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகுஇன்னா;
> சக்கரத் தானை மறப்புஇன்னா; ஆங்குஇன்னா
> சத்தியான் தாள்தொழா தார்க்கு.''

முக்கட் பகவன் என்றது சிவபெருமானை. பனைக் கொடியும் வெள்ளை நிறமும் உடையவர் பலராமர்; அவரை, 'பொற்பனை வெள்ளை' என்றார். ஒழுகு—ஒழுகுதல். சக்கரத்தான் என்றது சக்கரபாணியாகிய திருமாலை; இங்கே கண்ணனைக் கொள்ள வேண்டும். வேலுக்குச் சத்தி என்று ஒரு பெயர் உண்டு. அதை உடையவன் முருகன். இன்னா உண்டாகும் என்று, முதலிலும் இறுதியிலும் வரும் வாக்கியங்களில் ஒரு சொல் வருவித்துப் பொருள் செய்ய வேண்டும்.

இன்னது செய்தல் வேண்டும், இன்னது செய்தல் கூடாது என்று கூறுவது நீதி நூல். இன்னது செய்தால் தீங்கு உண்டாகும் என்ற பொருளில், இன்னவை இன்னா என்று இந்நூல் சொல்கிறது. விலக்க வேண்டியவற்றை இன்னா என்று கூறுவதோடு, செய்ய வேண்டியவற்றை, இதைச் செய்யாமல் இருத்தல் இன்னா என்று இரண்டு எதிர்மறைகளைச் சொல்லிப் புலப்படுத்துகிறார் இதன் ஆசிரியர்.

> ''மூத்த இடத்துப் பிணிஇன்னா''

என்று சொன்னார். இது விலக்கியது.

குலத்தில் பிறந்தவன் கல்வி உடையவனாக இருக்க வேண்டும். இதை எதிர்மறை வடிவில் புலப்படுத்துகிறார்; குலத்தில் பிறந்தவன் கல்லாதிருத்தல் இன்னா என்று சொல்கிறார்.

**"குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா."**

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள் பற்றிய நீதிகளும் இந்த நூலில் உள்ளன. ஈகை, நட்பு, மன்னர் இயல்பு, அந்தணர் இயல்பு, கல்வி பற்றிய கருத்துக்கள் பல இதில் வருகின்றன.

இன்ன இன்ன இடத்தில் உள்ள அழகு இன்னாதன என்று வெவ்வேறு இடங்களில் சொல்கிறார். அவர் கூறுவன:

(1) ஒட்டுறவு இல்லாத மனைவியின் அழகு இன்னாதது. (பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா)

(2) தகப்பன் இல்லாத மகனுடைய அழகு பயனற்றது (தந்தை இல்லாத புதல்வன் அழகு இன்னா.)

(3) மணம் இல்லாத மலரின் அழகு இனியது அன்று (நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா.)

(4) வள்ளல் தன்மை இல்லாதவர் அழகு வீண் (வண்மை இலாளர் வனப்பு இன்னா.)

(5) கண் இல்லாதவன் அழகு பயனற்றது (கண்இல் ஒருவன் வனப்பு இன்னா.)

(6) செல்வம் இல்லாதவன் அழகு மதிப்புப் பெறாது (வளமை இலாளர் வனப்பு இன்னா.)

(7) அறிவில்லாதவன் அழகு பயனற்றது (இன்னா அழகுடையான் பேதை எனல் )

இல்லற வாழ்வுக்கு நல்ல மனைவி இன்றியமையாதவள். மனைவி நற்பண்பை உடையவள் அல்லளானால் வாழ்வே துன்பம் நிறைந்ததாகி விடும். எத்தகைய பெண்டிர் இன்னாமையைத் தருபவர் என்பதைச் சில இடங்களில் கூறுகிறார்.

ஒட்டுறவு இல்லாத மனைவி எவ்வளவு அழகுடையவளாக இருந்தாலும் நன்மை இல்லை (1); கட்டிக் கொண்ட மனைவி தனக்கு அடங்காதவளாக இருந்தால் துன்பந்தான் (2); தன்னுடைய எண்ணங்களோடு ஒத்து வராத மனைவியோடு இணைதல் இன்பத்தைத் தராது (11); உறுப்புவளம் இல்லாத பெண்ணை விரும்புவதில் இன்பம் இல்லை (12); வஞ்சிக்கும் பெண்களால் இன்னலே விளையும் (14); பிறன் மனையாளை விரும்புவதனால் துன்பமே உண்டாகும் (38.)

அக்காலத்தில் கோனாட்சியே சிறந்திருந்தது. மன்னன் நற்குண நற்செய்கைகளோடு இருந்து செங்கோலோச்ச வேண்டும். மன்னர்கள் இன்னபடி இருக்கக் கூடாது என்பதை இந்நூலில் அங்கங்கே காணலாம்.

தன் நாட்டில் வாழும் மக்களுக்குப் பசி, பிணி, பகை அணுகாமல் காப்பாற்ற வேண்டியது மன்னன் கடமை. அவ்வாறு காவல் புரியாவிட்டால் அந்த மன்னனால் தீங்கே உண்டாகும். இதை,

**''இன்னா**
**காப்பு ஆற்றா வேந்தன் உலகு''** (2)

என்று புலப்படுத்துகிறார். கொடுங்கோல் மன்னன் நாட்டில் வாழ்வது துன்பத்தைத்தான் தரும் என்பதை,

**''கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா''**

என்று தெரிவிக்கிறார். தீங்கு செய்வாரைத் தண்டிப்பதை முறை செய்தல் என்று கூறுவர். முறை செய்யாத மன்னன் நாட்டில் குற்றம் புரிபவர்கள் மிகுதியாகி விடுவார்கள். அத்தகைய அரசு இன்னாமையை உண்டாக்கும்.

**"முறைஇன்றி ஆளும் அரசு இன்னா"**

என்று இந்தக் கருத்தைக் கூறுகிறார்.

வணங்கா முடியனாக இருக்கும் ஓர் அரசன் பணிந்து அணுகுகிறான் என்றால் அது நல்லதற்கு அடையாளம் அன்று. ஏதோ ஆபத்துப் பின்னால் வரப்போகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

**"பணியாத மன்னர் பணிவுஇன்னா" (13)**

என்பது இந்தக் கருத்தையே குறிப்பாகச் சொல்கிறது வீரமில்லாத வேந்தன் போர் செய்யப் புகுந்தால் என்ன ஆகும்? இன்னலே உண்டாகும்.

**"மறம்இலா மன்னர் செருப்புகுதல் இன்னா"**

என்பதில் அந்தக் கருத்தை வைத்திருக்கிறார்.

கவிஞர்கள் தம் கவிகளைச் சுவைப்பவர்களிடம் சொல்ல வேண்டும், ரசிகர்கள் அல்லாதவரிடம் சொல்லிப் பயன் இல்லை. இதை,

**"பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா"**

என்று கூறுகிறார். சங்ககாலத்தில் புலாலுணவைப் பற்றிய வருணனைகள் வரும். புலாலுணவை விலக்க வேண்டும் என்று திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். இந்த நூலாசிரியரும்.

**"ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முன்இன்னா"** என்று சொல்கிறார்.

வேடிக்கையான கருத்துக்கள் சிலவற்றை இடையிடையே காணலாம். கள்ளைக் குடித்து ஆட்டம் போடுகிறவர்களுக்குக் கள் இல்லாத ஊர் பிடிக்காதாம்; "கள் இல்லா மூதூர் களிகட்கு நற்குஇன்னா" (9). "வீரம் உடையவன் நிமிர்ந்த மார்புடன் இருக்க வேண்டும்; அவன் எதற்குத் தன் மார்பை ஆடையால் போர்த்துக் கொள்கிறான்? அது நல்லதன்று" என்கிறார் ஓரிடத்தில்; "மறன் உடையான் ஆடையால் மார்பு ஆர்த்தல் இன்னா" (18), குயில் வசந்த காலத்தில் கூவினால் இனிமையாக இருக்கும். மழைக் காலத்தில் கூவினால் கேட்கச் சகிக்காது; "மாரிநாள் கூவும் குயிலின் குரல் இன்னா" (20). பாக்கை மெல்லும் போது கடுக்கென்று கல்லைக் கடித்தால் நன்றாக இருக்காது; "கடித்தமைந்த பாக்கினுள் கற்படுதல் இன்னா" (39).

மணிகட்டாத குதிரையிலும் யானையின் மேலும் ஏறிப் போகக் கூடாது; போனால் வழியில் போவோருக்குத் துன்பம் நேரும் (13, 15); சேணம் முதலியவை போடாமல் குதிரை ஏறக்கூடாது (8, 38); குதிரை ஏற்றம் பழகாமல் குதிரை மீது சவாரி செய்யக்கூடாது (23). இப்படி உபயோகமுள்ள யோசனைகளும் இந்த நீதி நூலில் அடங்கியுள்ளன.

இவ்வாறு பல கருத்துக்களை 'இன்னா' என்று வாக்கியங்களால் புலப்படுத்தும் இந்த நீதி நூல் எல்லாத் துறைகளிலும் உள்ளவற்றை விரிவாகச் சொல்லவில்லை; என்றாலும் சொன்ன அளவில் தெளிவாகவும் சுருக்கமாகவும் நீதிகளைத் தெரிவிக்கிறது.

# 24. இனியவை நாற்பது

இன்னா நாற்பதைப் போல, இவை இனியவை என்று நாற்பது செய்யுட்களில் சொல்வதால் இனியவை நாற்பது என்ற பெயர் இந்த நூலுக்கு ஏற்பட்டது. இதை இனியது நாற்பது, இனிது நாற்பது, இனிய நாற்பது என்று வேறு வகையாகவும் வழங்குவது உண்டென்று தெரிகிறது. இதனை இயற்றியவர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். மதுரையில் தமிழாசிரியராக இருந்த பூதன் என்பவருடைய புதல்வராகிய சேந்தனார் என்று கொள்ள வேண்டும்.

கடவுள் வாழ்த்து ஒன்றும் நீதிகளைச் சொல்லும் நாற்பது பாடல்களுமாக மொத்தம் 41 பாடல்களை உடையது இந்த நூல். 8—ஆவது பாடல் ஐந்து அடிகளையுடைய பஃறொடை வெண்பா; மற்றவை யாவும் நான்கடிகளை உடைய இன்னிசை வெண்பாக்கள்.

நான்கு பாடல்களில் (1,3,4,5) நான்கு நீதிகளும், மற்றப் பாடல்களில் மூன்று நீதிகளும் உள்ளன. இன்னா நாற்பது போன்ற செறிவு இந்த நூலில் உள்ள வெண்பாக்களுக்கு இல்லை.

கடவுள் வாழ்த்தில் முதலில் சிவபெருமானையும், பிறகு திருமாலையும், அப்பால் நான்முகனையும் போற்று

கிறார் புலவர். நான்முகனுக்கு வணக்கம் சொல்லுதல் அருமையாகவே பிற நூல்களில் காணப்படும்.

**"கண்மூன்று உடையான்தாள் சேர்தல் கடிது இனிதே;**
**தொல்மாண் துழாய்மாலை யானைத் தொழல்இனிதே;**
**முந்துறப் பேணி முகம்நான்கு உடையானைச்**
**சென்றுஅமர்ந்து ஏத்தல் இனிது."**

முன் இரண்டடியில் உள்ள செறிவு பின் இரண்டடியில் இல்லை. 'முகம் நான்குடையானை ஏத்தல் இனிது' என்று சொன்னால் போதும்; அடிகள் நிரம்புவதற்காக வார்த்தைகளை மேலும் அடுக்கியிருக்கிறார் புலவர்.

நட்பைப் பற்றியும் கல்வியைப்பற்றியும் கூறும் கருத்துக்கள் இந்த நூலில் மிகுதியாக உள்ளன. அடுத்தபடி ஈகையைப் பற்றிய கருத்துக்கள் வருகின்றன. மன்னரைப் பற்றியும் பெண்களைப் பற்றியும் சில கருத்துக்கள உள்ளன.

மிகவும் உத்தமமானவர்களுடன் சேர்தல் இனிமையைப் பயக்கும் என்பார் இவ்வாசிரியர்.

**"ஆங்கினிதே**
**தெற்றவும் மேலாயார்ச் சேர்வு."**

எங்கே சென்றாலும் அங்கே நண்பர்கள் இருந்தால் நன்மை உண்டாகும்; மயக்கம் இல்லாத மாட்சிமைப் பட்டவர்களைச் சேரும் பாக்கியம் கிடைத்து மாறாமல் இருந்தால் இனிது (12); தம்மைவிட மிக்க பெருமை உடையவரைச் சேர்தல் மிக்க மாட்சியைத் தரும் (16); நண்பர்களுக்கு நன்மை செய்வது இனிது (17); நண்பர்களைப் பற்றிப் புறங்கூறாமல் வாழ்தல் மிகவும் இனிது (19); தன்னை விரும்பி வந்து சேர்ந்தாருடைய விருப்பத்தை மறுக்காமல் இருப்பது இனிது (26); நல்ல

நண்பர்களை உடையவன் படை ஆண்மை இனிதாக இருக்கும் (38); மனத்தில் மாட்சி யில்லாதவரை அஞ்சி நீங்க வேண்டும் (10); வஞ்ச முடையவரோடு சேர்தல் கூடாது (20); மயக்கம் உடையவர்களோடு மறந்தும் சேராமல் வாழ்தல் வேண்டும் (21); எவ்வளவு பொருள் பெற்றாலும் கல்லாதவர்களை விட்டு அகலுதல் நல்லது (25); நல்ல அறிவும் ஒழுக்கமும் இல்லாத மனிதரோடு சேருதல் கூடாது (25); இழி குணமுடையவர்களை விட்டு நீங்க வேண்டும் (29); உலகத்தாரால் மதிக்கப் பெறாதவர்களுடன் நட்புக் கூடாது (34).

இவை நட்பைப் பற்றிய கருத்துக்கள்.

**''பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே''** (1)
**''நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே''** (3)
[நவை போகான்-குற்றம் சாராமல்.]
**''கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே''** (16)
**''புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே''** (20)
**''கற்றறிந்தோர் கூறும் கருமப் பொருள்இனிதே''** (32)
**''பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய**
**கற்றலிற் காழ்இனிய தில்''** (40)

என்பவை கல்வியைப் பற்றி வரும் கருத்துக்கள்.

இந்த நூலின் ஆரம்பத்தில் 'பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும்' என்றவர், நூலை முடிக்கும் போது, 'ஒவ்வொரு நாளும் பற்பல நூல்களைக் குற்றமில்லாமல், பாங்குடையவற்றைக் கற்பதை விடச் சிறப்பாக இனியது வேறு இல்லை' என்று கூறுகிறார். 'கடன் கொண்டும் செய்வன செய்' என்பது ஒரு பழமொழி; இந்த நூலில் ''கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே'' (31) என்பதில் அந்தப் பழமொழியை அப்படியே அமைக்கிறார் ஆசிரியர்.

சில பாடல்களில் ஒன்றனோடு தொடர்புடைய கருத்துக்களை அடுத்தடுத்துச் சொல்கிறார் ஆசிரியர்.

'மனம் ஒத்திருக்கும்படி முடிந்தால் இல்லற வாழ்க்கை இனியது' என்று சொன்னவர் அடுத்தே, 'மாட்சிமைப் பட்ட வாழ்க்கை அமையா விட்டால் உலக நிலை யாமையை எண்ணி உயர்ந்தவர்கள் துறவை மேற் கொள்ளுவது இனிது' என்று அதனோடு தொடர்புடைய கருத்தைச் சொல்கிறார்.

**''ஒப்ப முடிந்தால்**
**மனைவாழ்க்கை முன் இனிது மாறாதாம் ஆயின்**
**நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்**
**தலையாகத் தான்இனிது நன்கு.'' (2)**

'மன்னன் செங்கோல் மாறித் தீயது செய்யாமை இனிது; செங்கோலனாக இருத்தல் இனிது' (5) என்பதில் இனமுள்ள இரண்டு கருத்துக்களைத் தொடர்ந்து சொல் கிறார். அப்படியே, ''குழவிதளர் நடை காண்டல் இனிதே'' என்றவர் தொடர்ந்து, ''அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே'' (14) என்கிறார். ஒரே பாட்டில் மன்னனோடு தொடர்புடைய மூன்று கருத்துக்களைச் சேர்த்துச் சொல்கிறார்.

**''ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியும் மாண்புஇனிதே;**
**முன்தான் தெரிந்து முறைசெய்தல் முன்இனிதே;**
**பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பார்த்துற்றுப் பாங்கறிதல்**
**வெற்றிவேல் வேந்தர்க் கினிது.'' (35)**

இன்னா நாற்பதில் வரும் பல கருத்துக்கள் இந்த நூலிலும் வருகின்றன.

''உடம்பாடு இல்லாத மனைவி தோள் இன்னா'' (11) என்பது இன்னா நாற்பது; ''ஒப்ப முடிந்தால் மனை

வாழ்க்கை முன் இனிது'' (2) என்பது இனியவை நாற்பது. ''ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன் இன்னா'' (22) என்று இன்னா நாற்பதில் சொன்னதையே, ''ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே'' (4) என்றார் இந்த ஆசிரியர்.

''இன்னா, மனவறியாளர் தொடர்''(18) என்று இன்னாதவற்றில் அடக்கிக் கூறியதையே, ''மனமாண் பிலாதவரை அஞ்சி அகறல். எனைமாண்பும் தான்இனிது நன்கு'' (10) என்று கூறினார், இந்த ஆசிரியர். ''குழவிகள் உற்ற பிணி இன்னா''(35) என்பது இன்னா நாற்பது; ''குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே''(12) என்பது இனியவை நாற்பது. ''மற மன்னர் தம்கடையுள் மாமலை போல் யானை, மத முழக்கம் கேட்டல் இனிது''(15) என்று இந்த நூலில் வருவது, ''யானையில் மன்னரைக் காண்டல் நனியின்னா''(22) என்று இன்னா நாற்பதி லுள்ளதை விரித்தமைத்தது. ''பிறன் மனையாள் பின் நோக்கும் பேதைமை இன்னா'' (38) என்பார் அவர்; ''பிறன்மனைப் பின்நோக்காப் பீடு இனிது ஆற்ற''(15) என்பார் இவர். இப்படியே ''இன்னா, கொடும்பா டுடையார்வாய்ச் சொல்''(6), ''மன்றில் கொடும்பாடு உரையாத மாண்பு இனிதே''(30) என்றும், ''அடைக்கலம் வவ்வுதல் இன்னா''(40), ''அன்றறிவார் யார் என்று அடைக்கலம் வெளவாத, நன்றியின் நன்கினிய தில்''(30) என்றும், ''கல்லார் உரைக்கும் கருமப் பொருள்இன்னா'' (15), ''கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள்இனிதே''(32) என்றும் ''மான்றிருண்ட போழ்தில் வழங்கல் பெரிதின்னா''(17), ''எல்லிப் பொழுது வழங்காமை முன்னினிதே''(34) என்றும், ''முக்கட் பகவன் அடி தொழா தார்க்கின்னா''(கடவுள்), ''கண் மூன்றுடையான்

தாள் சேர்தல் கடிதினிதே'' (கடவுள்) என்றும் ஒரே கருத்தை வெவ்வேறு வகையில் சொல்லியிருப்பதைக் காணலாம்.

நீதிகளைச் சொன்னாலும் ஏதோ ஒரு வகையில் தொகுத்து வகைப்படுத்திச் சொல்லும் முறையை இன்னா நாற்பது, இனியவை நாற்பது என்ற இரண்டிலும் காண்கிறோம்.

# 25. கார் நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வரிசையில் ஆறு அகப்பொருள் நூல்கள் உள்ளன என்று முன்னே பார்த்தோம். அவற்றுள் கார் நாற்பது ஒன்று. நாற்பது செய்யுட்கள் உடைய நூல்கள் பதினேண் கீழ்க்கணக்கில் நான்கு உள்ளன. அவற்றில் இது ஒன்று. இதனை இயற்றியவர் மதுரைக் கண்ணங் கூத்தனார். அவருடைய தந்தையார் பெயர் கண்ணன். அவர் இயற் பெயர் கூத்தனார்.

அகப் பொருளுக்குரிய திணைகள் ஐந்தில் ஒவ்வொன்றிற்கும் பெரும் பொழுது, சிறு பொழுது இன்னவை என்ற வரையறை உண்டு. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு இருதுக்களே பெரும் பொழுதுகள். கார் காலம் முல்லைத் திணைக்குயரிது. அந்தத் திணைக்குரிய ஒழுக்கம் இருத்தல். திருமணம் செய்து கொண்ட காதலன் பொருள் ஈட்டவோ, ஓதவோ, வேந்தனுக்குத் துணையாகவோ, நாடு காவலுக்காகவோ காதலியைப் பிரிந்து செல்லும் போது, ''நான் கார் காலத்தில் வந்து விடுவேன்'' என்று சொல்லிச் செல்வான். கார் காலம் வந்தவுடன் தலைவன் வருவான் என்ற நம்பிக்கையோடு தலைவி இல்லில் இருப்பாள். இதுதான் இருத்தல் என்னும் ஒழுக்கம்.

கார் காலம் வந்து விட்டது என்றும், அவர் இன்னும் வரவில்லையே என்றும், அவர் சொன்ன பருவம் இதுவேயாதலால் வந்து விடுவார் என்றும் தோழியும் தலைவியும்

கூறுதலும், தலைவி தனக்காகக் காத்திருப்பாள் என்றும், ஊர் சென்று அவளை அடைய வேண்டும் என்றும், பாகனே தேரை விரைவில் விடுக என்றும் தலைவன் கூறுதலும் இந்தத் திணையில் வரும் பாடல்களில் இருக்கும். தலைவி தலைவன் வரவை எதிர்பார்த்திருப்பதும் தலைவன் தலைவியினிடம் வரமுயல்வதும் ஆகிய இருவகைக்குள் இந்தத் திணையில் உள்ள பாடல்கள் அடங்கும்.

கார் நாற்பதில் இத்தகைய கூற்றுக்களைக்காணலாம். தலைவி, தோழி, தலைவன் ஆகிய மூவரும் கூறும் கூற்றுக்கள் தனித்தனியே உள்ளன.

ஒவ்வொரு திணைக்கும் முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று உண்டு. நிலமும் பொழுதும் முதற்பொருள். காடும் காட்டைச் சார்ந்த நிலமும் முல்லை நிலமாகும். கார்ப் பருவம் பெரும்பொழுது; மாலை சிறு பொழுது. இவை முதற் பொருள், முல்லை நிலத்திலுள்ள பறவை, விலங்கு, மரம், மக்கள் முதலியவை கருப்பொருள். முன்னே சொன்ன இருத்தல் என்பதே உரிப்பொருள்.

இந்த நூலில் இந்த மூவகைப் பொருள்களும் அங்கங்கே வந்துள்ளன. கார்காலத்தில் மழை பொழிய, இயற்கை வளம் சிறந்து மலர்கள் மலர்ந்து நிற்றலை இந்த ஆசிரியர் காட்டுகிறார்.

மேகங்கள் கடலில் புகுந்து நீரைப் பருகி மலைகளின் மேல் ஏறுகின்றன. வானம் முழுதும் கருநிறம் கொண்டு எங்கும் இருள் செறிந்திருக்கிறது. எல்லாத் திசைகளிலும் மேகங்கள் பரந்து மல்குகின்றன, திருமாலினுடைய மார்பில் உள்ள பல வண்ண மலர் மாலையைப் போல இந்திர வில் தோன்றுகிறது. வேள்வித்

தீயைப்போலவும் மன்னர் யானைகளை வெட்ட வீசுகின்ற வாளைப் போலவும் மின்னல் மின்னுகிறது. இடி இடிக்கிறது. அதன் குரலுக்கு எதிரே காளை மாடுகள் முழங்குகின்றன. பாம்புகள் அஞ்சி நடுங்குகின்றன. வெற்றி முரசைப் போலவும் முருகப் பெருமானுக்குரிய தொண்டகப் பறையைப் போலவும் இடி இடிக்கிறது.

மழை பொழிகிறது. கூந்தலை விரித்தாற் போல மழைத் தாரைகள் இறங்குகின்றன. மழைத் துளிகள் பெரிது பெரிதாக முல்லை நிலம் முழுவதும் வீழ்கின்றன. மழை பெய்ததனால் எங்கும் குளிர் பரவுகின்றது. வறியவர் மேனியைப் போல வாடி நின்ற காடு செல்வர் மனம் போல வளம் பெறுகிறது. பருவ எழிலைப் பெற்ற பெண்களைப் போலக் காடு அழகு பெறுகிறது. செல்வம் உடையவருடைய பொலிவு போல் எங்கும் மலர்களை உடையதாக விளங்குகிறது. மரங்களெல்லாம் மலர்ந்து மணக்கின்றன. யானை மதம் போன்ற நறுமணம் எங்கும் வீசுகிறது. எங்கே பார்த்தாலும் கம் என்று மணக்கிறது காடு.

வேனிற் பூவாகிய பாதிரி வாடுகிறது. கொன்றை மலர் கவின் பெறுகிறது. கருவிளை கண்ணைப் போலப் பூக்கிறது.

செங்காந்தள் பூக்கள் கார்த்திகையன்று ஏற்றிய விளக்கைப் போலத் தோன்றுகின்றன. அவை அடர்த்தியாகப் பூத்த இடத்தைப் பார்த்தால் நெருப்பின் வனப்புத் தெரிகிறது. காந்தளின் கொத்தைப் பார்த்தால் பாம்பின் தலையைப் போல இருக்கிறது. பெண்களின் கூரிய பற்களைப் போல முல்லை அரும்புகள் அரும்புகின்றன. குருந்த மரங்களில் கொத்துக் கொத்தாக மலர்கள் மலர்கின்றன. சிவந்த அடியையுடைய கடம்ப மரங்களிலும் மலர்கள் அலர்கின்றன. வரகுப் பொரி

போலத் தெறுழம் பூவும் பொன்னாற் செய்த குழையைப் போலக் குமிழம் பூவும், மீன் கொத்திப் பறவை வாயைத் திறந்தாற் போலச் செம்முல்லையும் பூக்கின்றன நண்டின் கண்ணைப் போல நொச்சி அரும்புகள் விளங்குகின்றன. ஒரு பக்கம் பிடாமரம் பூத்திருக்கிறது.

காடு முழுவதும் மலர்கள் பூத்துக் குலுங்கினால் வண்டுகளுக்குக் கொண்டாட்டந்தானே?. அவை மலரில் உள்ள தாதை ஊதிப் பாட்டு பாடுவது போல முரல் கின்றன. என்றும் அழியாத புகழை விரும்பிய செல்வரின் மனம் எப்படி மகிழுமோ அப்படி மகிழ்ந்து வண்டுகள் இசையை இசைக்கின்றன.

> **"கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்**
> **படாது மகிழ்வண்டு பாண்முரலும்."**

வசந்த காலத்தில் இன்புறும் குயில்கள் கார் காலத்தில் துன்புறுகின்றன. நிலத்தின்மேல் செக்கச் செவேலென்றுள்ள இந்திர கோபப் பூச்சிகள் ஊர் கின்றன.

மழை பெய்வதனால் மகிழச்சி அடைந்த எருமைகள் தம் கொம்புகளில் கொடிகளை மாட்டிக் கொண்டு வீரர்களைப் போலக் கம்பீரமாக நடை போடுகின்றன.

இவ்வாறு கார் கால நிகழ்ச்சிகளைப் புலவர் வருணிக் கிறார்.

முதல் பாட்டிலேயே முல்லைத் திணைக்குரிய தெய்வ மாகிய திருமாலைப் பற்றிய செய்தியை உவமையாக எடுத்தாளுகிறார் புலவர். 'கடல் வண்ணத்தையுடைய திருமால் தன் மார்பில் அணிந்துள்ள வண்ண மலர் மாலையைப் போல இந்திர வில்லை குறுக்காக ஊன்றி,

இனிய மழையானது விழ, அப்போது வருவேன் என்று சொன்ன தலைவர் மேகம் கருவுற்று முழங்கும் இந்தப் பருவத்தில் வாராரோ! வருவார்' என்று தோழி தலைவிக்குச் சொல்வதாக அமைந்தது பாட்டு.

**''பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்**
**திருவில் விலங்குஊன்றித் தீம்பெயல் தாழ,**
**வருதும் எனமொழிந்தார் வாரார்கொல் வானம்**
**கருஇருந்து ஆலிக்கும் போழ்து?''**

[பொரு கடல்—கரையை மோதும் கடல். திருவில்-வானவில். விலங்கு-குறுக்கே, கரு இருந்து-நீரைக் கருப்ப மாக அடைந்து. ஆலிக்கும்-முழங்கும்.]

ஓரிடத்தில், பூத்த வெண் கடம்பமரத்துக்கு நாஞ்சி லாகிய கலப்பையையுடைய பலராமனை உவமை கூறு கிறார். இடியின் ஓசைக்கு முருகனுக்குரிய தொண்டகப் பறையின் ஒலியை ஒரு பாட்டில் உவமிக்கிறார்.

அந்தக் காலத்தில் கார்த்திகை மாதத்தில் திருக் கார்த்திகையில் இந்த நாட்டு மக்கள் விளக்கேற்றி இறைவனை வழிபட்டார்கள் என்ற செய்தி சங்க நூல் களில் வருகிறது. இந்த நூலிலும் அந்த விளக்கு உவமை யாக வருகிறது. 'கார்த்திகை விளக்கைப் போலச் செங் காந்தள் எங்கும் பூத்திருக்கின்றது. கார்காலம் வந்து விட்டது. உன் காதலர் வருகிறார் என்பதை உணர்த்தும் தூதுவரைப் போல மேகம் வந்திருக்கிறது' என்று தலைவிக்குத் தோழி சொல்வதாக அமைந்தது ஒரு பாட்டு.

திருமணம் செய்து கொண்டு வாழும் காதலன் இல் வாழ்வில் அறம் செய்வதற்கும் இன்பம் பெறுவதற்கும் பொருள் இன்றியமையாதது என்று உணர்வான். முன்னோர்கள் வைத்த பொருளில் அறம் செய்வதை

விரும்பாமல் தானே பொருள் ஈட்டி அறம் செய்து புகழ் பெற வேண்டும் என்று நினைப்பான். ஆகவே செல்வத்தை ஈட்டுவதற்குச் சில காலம் தன் மனைவியைப் பிரிந்து செல்வான்.

**"புணர்தரு செல்வநும் தருபாக்குச் சென்றார்"** (*11*)
**"செல்வம் தரல் வேண்டிச் சென்றநம் காதலர்."** (14)

ஓதுவதற்காகத் தலைவன் பிரிந்து செல்வதும் உண்டு. கற்று ஐயம் நீங்கித் தெளிந்து பின்பு வருவான்.

**"ஐயந்தீர் காட்சி அவர்வருதல் திண்ணிதாம்"**(13)
என்ற இடத்தில் இதைக் காணலாம்.

அரசன் ஆணையை மேற் கொண்டு போர் செய்வதற்குப் பிரிவதும் உண்டு.

**"வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன"** (*20*)
**"வேந்தன் அருந்தொழில் வாய்த்த நமர்"** (*37*)

என்பவற்றில் தலைவன் வேந்தனுக்காகப் போர் புரியச் சென்ற செய்தி வருகிறது.

பல அழகான உவமைகளை இந்த நூலில் புலவர் ஆளுகிறார்.

நடனம் ஆடும் மகளிரைப் போல அழகிய மயில்கள் ஆலுகின்றனவாம். பவழத்தைச் சிதறினாற் போலத் தரையில் இந்திர கோபப் பூச்சிகள் ஊர்கின்றனவாம். மாவடுவை இரண்டாகப் பிளந்து வைத்தால் எப்படி இருக்குமோ, அப்படிப் பெண்ணின் கண்கள் இருக்கின்றன. கண்ணுக்கு இடும் மையில் தோய்த்தது போலக் காயாவின் அரும்பு தோன்றுகிறது.

இந்த நூலுக்கு ஒரு சிறப்புப் பாயிரம் உண்டு. அது கார் நாற்பதையும் காராகிய மேகத்தையும் ஒப்பிட்டுச் சொல்கிறது. மின்னால் அழகு பெற்றகாரானது முல்லைக்

கொடி மகிழவும், வண்டு மொய்க்கும் கூந்தலையுடைய மகளிர் உள்ளம் மகிழவும் மெல்ல மழையைப் பொழியும்; அதுபோல் சொற்களை ஆய்ந்து பாடும் கூத்தர் இயற்றிய இந்தக் கார் எங்கும் பரவி, பழைய நூல்களைப் பயின்று வல்லவர் உள்ளம் மகிழ இனிய தமிழைப் பெய்கிறது' என்ற பொருளுடையது அந்தப் பாட்டு.

**''முல்லைக் கொடிமகிழ மொய்குழலார் உள்மகிழ**
**மெல்லப் புனல்பொழியும் மின்எழில்கார்—தொல்லைநூல்**
**வல்லார் உளம்மகிழத் தீந்தமிழை வார்க்குமே**
**சொல்ஆய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.''**

# 26. களவழி நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கில், புறத்துறையில் அமைந்த ஒரே நூல் களவழி நாற்பது. போர்க்களத்தில் நிகழும் காட்சிகளை நாற்பது பாடல்களால் பாடியதால் இந்தப் பெயர் பெற்றது. நாற்பது என்ற பெயர் இருந்தாலும் நூலில் 41 பாடல்கள் உள்ளன. இதைப் பாடியவர் பொய்கையார்.

சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர் என்ற இடத்தில் போரிட்ட போது, கோச்செங்கட் சோழன் சேரமானை வென்று சிறையில் இட்டான். அப்போது பொய்கையார் என்னும் புலவர் சோழன் செய்த போரில் போர்க்களத்தில் நிகழ்ந்ததை இந்த நூலால் பாடிச் சோழனுடைய வீரத்தைப் புலப்படுத்திச் சிறையிலிருந்து சேரனை மீட்டார். இவ்வாறு நூலின் பின் உள்ள குறிப்புச் சொல்கிறது. 'சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் திருப்போர்ப் புறத்துப் பொருது உடைந்துழி, சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் சிறை வைத்துழி, பொய்கையார் களம் பாடி வீடுகொண்ட களவழி நாற்பது' என்பது அந்தக் குறிப்பு.

இந்தச் செய்தியை ஒட்டக்கூத்தர் தாம் பாடிய மூவர் உலாக்களிலும் பாடியிருக்கிறார்,

''மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்''

என்பது விக்கிரம சோழன் உலா.

''அணங்கு
படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்''

என்பது குலோத்துங்க சோழன் உலா.

''நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் கால்தளையை விட்டகோன்''

என்பது இராசராச சோழன் உலா. கலிங்கத்துப் பரணியிலும் தமிழ் விடு தூதிலும் இந்தச் செய்தி வருகிறது.

ஆராய்ச்சியாளர்கள் இந்தச் செய்திக்கு ஆதாரம் ஒன்றும் இல்லை என்று கூறுவர். சங்கப் பாடல்களில் சிலவற்றைப் பாடிய பொய்கையார் என்ற புலவர் ஒருவர் உண்டு. அவரும் இந்த நூலாசிரியரும் வேறு என்று எண்ணுவர் ஆராய்ச்சியாளர்.

போர்க்களத்துக் காட்சியை வருணிக்கும் இந்த நூலில் ஒவ்வொரு பாட்டும், ''களத்து'' என்று முடிகிறது. நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்னும் மூவகைப் பாக்களாலும் அமைந்தது இந்த நூல். 19 வெண்பாக்கள் பஃறொடை வெண்பாக்கள்; நான்கடிக்கு மேல் உள்ளவை. மற்றவை நான்கடி உள்ள வெண்பாக்கள். பஃறொடை வெண்பாக்களில் மூன்று ஆறடிகள் உள்ளவை; பதினாறும் ஐந்தடிகள் உடையவை.

நூலில் சோழனைப் பெயர் சொல்லிச் சுட்டவில்லை. பொதுவாகச் சோழனைச் சிறப்பிக்கும் தொடர்களும்,

திருமாலாகவும் முருகனாகவும் உவமிக்கும் தொடர்களுமே வந்துள்ளன. புனல் நாடன், காவிரி நீர் நாடன் என்பவை பொதுவாகச் சோழன் என்பதைக் குறிக்கும் தொடர்கள். செங்கண்மால், செங்கண் சினமால் என்று திருமாலாவும், செருமொய்ம்பிற் சேய், தளையவிழ்தார்ச் சேய், அடர்பைம்பூண் சேய் என்று முருகனாகவும் கூறும் தொடர்கள் சோழனைக் குறிக்கின்றன. பகையரசன் இன்னான் என்று குறிப்பிட்டுக் கூறவில்லை. பல பாடல்களிலும் பகைவர் என்னும் பொருளைத் தரும் சொற்களே வருகின்றன. தப்பியார், பிழைத்தார், புல்லார், வேந்தர், பொருநர், நண்ணார், நேரார், தெவ்வர், கூடார், உடற்றியார், செற்றார், மேவார், அடங்கார், ஒன்னார், காய்ந்தார், அரசு, துன்னார் என்று பகையரசர்களைச் சொல்கிறார் புலவர். ஓரிடத்தில், ''கொங்கரை அட்ட களத்து'' என்றும் மற்றோரிடத்தில், ''வஞ்சிக்கோ அட்ட களத்து'' என்றும் வருகின்றன. இவற்றால் சோழனோடு போரிட்டவர்கள் கொங்கு நாட்டு அரசர்களும் சேரரும் என்று தெரிந்து கொள்ளலாம். கொங்கர் சேர மன்னருக்குத் துணையாக வந்திருக்கலாம்.

போர்க்களத்தில் யானைகள் பட்ட பாட்டையும் வீரர்களும் குதிரைகளும் பட்ட அல்லலையும் இதில் உள்ள பாடல்கள் சொல்கின்றன. யானைகளின் நிலையை வருணிக்கும் பாடல்களே மிகுதி.

யானைகள் போரில் இறந்து கிடக்கின்றன. இரத்தம் தேங்கி யிருக்கிறது. யானையின் கீழ் அகப்பட்ட முரசின் தோல் பிய்ந்து விட்டது. தேங்கி நின்ற இரத்தம் அந்தத் துவாரத்தின் வழியே பாய்கிறது. செம்மண் நிலத்திலுள்ள குளத்தில் கரையின் கீழுள்ள கலிங்கின் வழியாகச் சிவந்தநீர் ஓடுவது போல இந்தக் காட்சி இருக்கிறது. கரிய யானைகள் குளத்தங் கரைபோல இருக்கின்றன.

கீழே அகப்பட்ட தோல் போன முரசங்கள் நீர் ஓடும் கலிங்கு போல உள்ளன. இரத்தம் செந்நீர் போல இருக்கிறதாம்.

**''ஞாட்பினுள் எஞ்சிய ஞாலம்சேர் யானைக்கீழ்ப்**
**போர்ப்பில் இடிமுரசின் ஊடுபோம் ஒண்குருதி**
**நீர்த்தூம்பு நீர்உமிழ்வ போன்ற, புனல்நாடன்**
**ஆர்த்துஅமர் அட்டகளத்து.'' (2)**

[ஞாட்பு-சண்டை. எஞ்சிய-அழிந்த. ஞாலம் சேர்-தரையில் விழுந்த. போர்ப்பு-மேலே போர்த்த தோல். நீர்த் தூம்பு-நீர் ஓடும் கலிங்கு. புனல் நாடன்-சோழன்.]

பகைவர்களுடைய உடலின் மேலும் யானைகளின் மேலும் அம்புகள் பாய்ந்து கிழிக்கின்றன; வேல்கள் பாய்கின்றன. இரத்தம் வழிகிறது. காக்கைகள் அந்த இரத்தத்தில் படிந்து நுகர்கின்றன. அப்போது அவற்றின் மேலெல்லாம் இரத்தம் படிந்து நிறம் மாறிச் செந்நிறம் பெற்றுச் செம்போத்துக்களைப் போலத் தோன்றுகின்றன. அவற்றின் வாயெல்லாம் மீன் கொத்திக் குருவிகளின் வாயைப் போலச் செக்கச் செவேலென்று இருக்கின்றன.

**''தெரிகணை எஃகம் திறந்தவாய் எல்லாம்**
**குருதி படிந்துஉண்ட காகம்-உருஇழந்து**
**குக்கில் புறத்த; சிரல்வாய; செங்கண்மால்**
**தப்பியார் அட்ட களத்து.''**

[தெரிகணை-ஆராய்ந்து விடும் அம்புகள். எஃகம்-வேல் குக்கில்-செம்போத்து. சிரல் வாய-மீன் கொத்தியின் வாயைப் போன்ற வாயை உடையவை. தப்பியார்-பகைவர்.]

யானைகளின்மேல் பல அம்புகளைச் சோழன் விட அவை அவற்றின்மேல் தைத்திருக்கும் காட்சி, குன்றுகளின்மேல் குருவிகள் உட்கார்ந்தது போல இருக்கிற

தாம் வேலினாலே வீரர்கள் யானையின் துதிக்கையைக் குத்தி வீழ்த்த, அது இடி பாய்ந்த மலைப்பாம்பைப் போலத் தரையில் புரளுகிறதாம்.

வீரர்கள் வீரர்களைத் தாக்க அவர் உடம்பிலிருந்து விழும் இரத்தம் கார்த்திகை விழாவில் ஏற்றின விளக்குப் போலத் தோன்றுகிறதாம். இதனால் அந்தப் பழங்காலத் திலேயே கார்த்திகை விழா நடந்ததென்றும், அப்போது விளக்கேற்றி வழிபட்டார்கள் என்றும் தெரிந்துகொள்ள லாம்.

யானையின்மேல் ஒரு வீரன் வேலை எறிந்தான். அந்த வேல் யானையின் தந்தத்தினூடே புகுந்து இலைப்பகுதி மறைந்தது. நீளமான பகுதியும் மறைந்தது. அதன் கீழ்க் கடைமணி என்ற வளையம் போன்ற பகுதி இருக்கும். அது வரையில் மறைந்து விட்டது. கடைமணியும் அதன் கீழுள்ள பகுதியும் மாத்திரம் தந்தத்தினிடையே இருக்கின்றன. அப்போது அந்த யானைக்கு மூன்று கொம்புகள் முளைத்தது போல அந்தக் காட்சி இருந்ததாம்.

**''இடைமருப்பின் விட்டுஎறித்த எஃகம்காழ் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோன்றி-நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லாம், நீர்நாடன்
புக்குஅமர் அட்ட களத்து''**

[மருப்பு-கொம்பு. எஃகம்-வேல். காழ்-நீண்ட கோல் போன்ற பகுதி. கடைமணி-கீழே உள்ள முடிச்சுப் போன்ற பகுதி. முக்கோட்ட-மூன்று கொம்புகளை உடையவை.]

வீரர்களின் தலைகள் எங்கும் சிதறிக் கிடக்கின்றன, பெரிய சூறைக் காற்று வீசும் பனந்தோப்பில் பனங் காய்கள் உதிர்ந்து சிதறிக் கிடப்பது போல இருக்கிறது. அந்தக் காட்சி.

"திண்தோள் மறவர் எறியத் திசைதோறும்
பைந்தலை பாறிம் புரள்பவை, நன்குளனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண் ஆர் கமழ்தெரியல் காவிரி நீர்நாடன்
நண்ணாரை அட்ட களத்து."

[மறவர்-வீரர். எறிய-வெட்ட. பாறி-சிதறி. பெண்ணை-பனை. பெருவளி-பெருங் காற்று. கண் ஆர்-அழகையுடைய. தெரியல்-மாலை. நண்ணாரை-பகைவரை,]

கேடயம் பிடித்திருக்கும் கையை ஒரு வீரன் வெட்டி விட்டான். கேடயம் பிடித்தபடியே உள்ள அதை நரி கொண்டு போகிறது. கையில் கண்ணாடியை வைத்துப் பார்க்கிற மாதிரி இருக்கிறது அந்தக் காட்சி.

யானைகள் துதிக்கைகளை இழந்து நிற்பதும், வீரர்கள் புண்பட்டு வீழ்வதும், குருதி ஆறாக ஓடுவதும், குடைகள் காளான்களைப் போல இரத்தத்தில் மிதப்பதும், தம் கணவரை இழந்த மகளிர் மயிலினத்தைப் போலவாடி அழுது புலம்புவதும் முதலிய காட்சிகளை அங்கங்கே காணலாம்.

எல்லாம் போர்க்களத்தில் போர் முடிந்த பிறகு காணும் காட்சிகள். இந்த நூலுக்கு ஒரு பழைய உரை இருக்கிறது. வீரத்தைவிட அவலத்தையும் இளிவரல் சுவையையுமே மிகுதியாகக் கொண்டது இந்த நூல்.

# 27. ஐந்திணை ஐம்பது

அகப்பொருளில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்து திணைகள் வரும். ஆகையால் இவற்றை அகன் ஐந்திணை என்று சொல்வார்கள். அகப் பொருள் அமைதியையுடைய காட்சிகளைத் தொடர்ச்சி யாகக் கதை போல வைத்துப் பாடும் கோவை என்னும் பிரபந்தத்தை ஐந்திணைக் கோவை என்றும் சொல்வது உண்டு. பதினெண் கீழ்க்கணக்கில் அகப்பொருள் அமைந்த நூல்கள் ஆறில் இரண்டு ஐந்திணை என்பத தோடு சார்ந்த பெயரை உடையவை ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது என்பவை அவை.

ஐந்திணை ஐம்பது ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பத்து வெண்பாக்களாக ஐம்பது பாடல்களைக் கொண்ட நூல். முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வரிசையில் திணைகள் இந்நூலில் அமைந்துள்ளன. இதை இயற்றியவர் மாறன் பொறையனார். மாறன் என்பவருடைய புதல்வராகிய பொறையனார் என்றும் இத்தொடருக்குப் பொருள் கொள்ளலாம். மாறன்என்பது பாண்டியனுடைய பெயர். பொறையன் என்பது சேரன் பெயர். இவர் தந்தையார் பாண்டி நாட்டில் வாழ்ந்த பொழுது பிறந்தமையால் இவர் தந்தைக்கு மாறன் என்ற பேயர் வைத்தனர் என்றும், அவ்வாறே இவர் தந்தையார் சேர நாட்டுக்கு வந்த பிறகு இவரைப் பெற்றமையால்

இவருக்குச் சேரன் பெயரை இட்டனர் என்றும் கொள்ளலாம்.

இந்த நூலைச் செந்தமிழ்ப் புலவர்கள் விரும்பிப் பயின்று இன்புற்றார்கள்.

**''பண்புள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய**
**வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த**
**ஐந்திணை ஐம்பதும், ஆர்வத்தின் ஓதாதார்,**
**செந்தமிழ் சேராத வர்''**

என்று இந்நூலுக்கு அமைந்த சிறப்புப் பாயிரம் இந் நூலின் பெருமையைச் சொல்கிறது. இதிலிருந்து இந் நூலாசிரியரின் ஊர் புள்ளி என்று புலனாகிறது.

இந்நூலின் முதல் பாட்டில் ஆசிரியர் திருமால், முருகன், சிவபெருமான் என்ற மூன்று கடவுளரையும் உவமை கூறும் வாயிலாகக் குறிக்கிறார். கடவுள் வாழ்த் தாகச் சொல்லாவிட்டாலும், எடுத்தவுடன் அத்தக் கடவுளரை நினைக்கச் செய்தலின், ஒருவகையில் இதனை மறைமுகமான கடவுள் வாழ்த்தென்றே கொள்ளலாம்.

காதலன் பிரிந்து சென்றிருக்கிறான். அவன் கார் காலத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் போயிருக் கிறான். அவனுடைய பிரிவை ஆற்றாமல் வருந்துகிறாள் காதலி. அப்போது அவளுடைய தோழி, 'இதோ மேகங்கள் வானில் உலாவுகின்றன. கார் காலம் வந்து விட்டது. உன் காதலர் வந்து விடுவார்' என்று கூறித் தெளிய வைக்கிறாள். அங்கே மேகத்தைப் பற்றிச் சொல்லும் போது, ''கஞ்சனுடைய மல்லர்களை வென்ற கண்ணனைப் போலக் கருநிறம் கொண்டு எழுந்து, வளமுடைய கடம்பமலரை விரும்பிய முருகனுடைய வேலைப் போல மின்னி, வானத்தில் பறந்த திரிபுரங்களை எய்த சிவபெருமானுடைய் கொன்றைகள் மலர இதோ

பல மேகங்கள் கலந்து வலமாக வானத்தில் எழுகின்றன'' என்று கூறுகிறாள்.

**''மல்லர்க் கடந்தான் நிறம்போன்று இருண்டுஎழுந்து
செல்வக் கடம்புஅமர்ந்தான் வேல்மின்னி - நல்லாய்
இயங்குஎயில் எய்தவன் தார்பூப்ப ஈதோ
மயங்கி வலன்ஏரும் கார்.''**

[கடந்தான்- வென்றவன்; கண்ணன். அமர்ந்தான்— விரும்பியவன். எயில்—மதில். இங்கே திரிபுரங்கள்; தார்— கொன்றை மாலை. மயங்கி—கலந்து.]

இருண்டு வருகின்றது மாலைக் காலம். அப்போது முல்லை மலர் மலர்ந்து மணக்கிறது. வண்டுகள் அம்மலர் களில் மொய்த்து முரலுகின்றன. அந்த இன்னிசை, தம்முடைய காதலரோடு சேர்ந்து இருப்பவர்களுக்கு இனியதாக இருக்கிறது. ஆனால் காதலரைப் பிரிந்து வாழுபவர்களுக்கு, மாலைக் காலமும் முல்லை மலரும் வண்டின் குரலும் தனிமைத் துயரை மிகுதிப்படுத்தி, உயிரையே அறுக்கின்றன. இதை ஒருத்தி சொல்கிறாள்:

**''முல்லை நறுமலர்ஊதி இருந்தும்பி
செல்சார்வு உடையார்க்கு இனியவாய் நல்லாய்மற்று
யாரும்இல் நெஞ்சினேம் ஆகி உறைவேமை
ஈரும் இருள்மாலை வந்து''**

[இருந்தும்பி—கரிய வண்டுகள். செல் சார்வு உடை யார்க்கு— தாம் சென்று அடையும் பற்றுக்கோடு உடைய வர்களுக்கு; காதலர்கள் அருகில் இருக்கப் பெற்றவர் களுக்கு என்பது பொருள். ஈரும்—பிளக்கும். இருள் மாலை—இருண்டு வரும் மாலைக் காலம். தும்பி இருள் மாலையில் வந்து ஈரும் என்று கூட்டிப் பொருள் செய்ய வேண்டும்.]

காதலன் காதலியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றிருக்கின்றான். முயற்சி பலித்துப் பொருள் ஈட்டிக் கொண்டு திரும்ப எண்ணுகிறான். கார் காலத்தில்

வருவேன் என்று தன் காதலியிடம் சொல்லி வந்தவன் அவன். இப்போது தன் காதலியை விரைவில் சென்று அடைய வேண்டும் என்ற ஆர்வம் உந்துகிறது. தன் தேர ஓட்டியைப் பார்த்து, "விரைவில் தேரை விடு" என்று சொல்கிறான். அவனைத் தட்டிக் கொடுத்துப் புகழ்கிறான். முதலில், 'நீ குதிரையை ஓட்டும் வயணங்களை அறிந்தவன். அதற்குரிய நூல்களைக் கற்றவன் ஆயிற்றே! விரைவாக ஓட்டும் தந்திரம் அறிந்தவன் அல்லவா நீ?' என்று பாராட்டுபவனைப் போல அவனை அழைக்கிறான்.

**"நூல்நவின்ற பாக!"**

[நவின்ற-பயின்ற.]

'நம்முடைய தேர்விரைவாகப் போகட்டும்' என்று அவனிடம் சொல்கிறான்.

**"தேர் நொவ்விதாச் சென்றீக!"**

[நொவ்விதா—விரைவாக. சென்றீக - செல்லட்டும்.]

'அங்கே ஊரில் என் வரவை எதிர் நோக்கிக் காதலி காத்திருப்பாள். அவளைப் போய்ப் பார்ப்போம்' என்று சொல்ல வருகிறான். அங்கே அவள் நிற்கும் நிலையைச் சொல்லினால் ஒரு சிறிய படம் போட்டுக் காட்டுவது போலக் காட்டுகிறான்.

காதலி தன் காதலன் வரவை எதிர் பார்த்து நிற்கிறாள். கற்பு என்னும் தாழ்ப்பாளைப் போட்டுத் தன்னைக் காத்துக்கொண்டு நிற்கிறாள். ஒரு கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு எதிரே தோன்றும் காட்டைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள். தன் காதலன் வரவைக் காட்டும் கடிகாரம் போல அந்தக் கானம் இருக்கிறது. அந்தக் காடு இப்போது கார் காலம் வந்து விட்டமையால் நன்றாகத் தழைத்து மலர் பொதுள எழிலுடன்

விளங்குகிறது. மலர்களில் வண்டுகள் மொய்த்து முரலு கின்றன. அந்தக் கானத்தின் எழிலை நோக்கி, 'இனி நம் காதலர் வருவார்' என்று எதிர் பார்த்து நின்று கொண்டிருக்கிறாள்.

'அவள் நிலையைப் போய்ப் பார்ப்போம்; தேர் வேகமாகப் போகட்டும்!' என்கிறான் தலைவன்.

**"நூல்நவின்ற பாகதேர் நொவ்விதாச் சென்றீக!**
**தேன்நவின்ற கானத்து எழில்நோக்கித்—தான்நவின்ற**
**கற்புத்தாழ் வீழ்த்துக் கவுள்மிசைக் கைஊன்றி**
**நிற்பாள் நிலைஉணர்கம் யாம்."**

[நூல் நவின்ற-குதிரை நூல்களைக் கற்ற. தேன்—வண்டுகள். நவின்ற-ஒலிக்கும். தான் நவின்ற-தான் பயின்ற. கற்புத் தாழ் - கற்பாகிய தாழ்ப்பாளை. கவுள்மிசை—கன்னத்தில்.]

காதலன் பிரிந்து சென்றிருக்கிறான். காதலி பிரிவுத் துயரம் தாங்காமல் வருந்துகிறாள். அது கண்டு அவள் தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். 'அவர் போகும் வழியில் மான்கள் அன்பு கொண்டு செய்யும் செயலைக் கண்டு திரும்பி வந்து விடுவார்' என்ற குறிப்புத் தோன்ற, பாலையில் வழியில் நிகழும் காட்சி ஒன்றை எடுத்துச் சொல்கிறாள்.

நீர் வறண்ட பாலை நிலம். தமிழ்நாட்டில் இயற்கை யான பாலை நிலம் இல்லை. இயற்கையான பாலை நிலமானால் எங்கும் மணல் பரந்திருக்கும். இங்கே கோட்டை மிகுதியால் மலைப்பக்கத்துப் பகுதிகளும் காட்டுப் பகுதிகளும் வறண்டு போய்விடும் அவற்றைப் பாலை என்று சொல்வர்.

தோழி குறிப்பிடும் பாலையில் ஒரு காலத்தில் சுனை களில் நீர் இருந்தது. இப்பொழுது பல சுனைகள்

வறண்டிருக்கின்றன. ஏதோ ஒரு சுனையில் சிறிதளவு நீர் இருக்கிறது. அதன் அருகில் ஆண் மானும் பெண் மானும் வருகின்றன. இரண்டுக்கும் மிக்க நீர் வேட்கை. சுனையில் உள்ள தண்ணீர் இரண்டினுடைய தாகத்தையும் போக்கப் போதாது. ஆண் மான் அந்த நீரைப் பெண் மான் குடிக்கட்டும் என்று எண்ணுகிறது. பெண் மானோ ஆண் குடிக்கட்டும் என்று நினைக்கிறது. இந்த அன்புப் போட்டியில் ஆண் மான் ஒரு தந்திரம் செய்கிறது.

ஆண் மான் குடித்தால்தான் பெண் மான் நீரைக் குடிக்கும். சுனை நீரோ இரண்டுக்கும் போதாது. 'இதைக் குடி' என்று வற்புறுத்தினால் பெண் மான் இனிது உண்ணாது. தன் கணவன் உண்டான் என்பதைக் கண்ட பிறகு பெண் மான் உண்டால் அது இனிது உண்ணும்; அதன் வேட்கை தணியும். இதை அறிந்த ஆண் மான் தண்ணீரைக் குடிப்பது போலப் பாவனை புரிகிறது;பொய்யாக உறிஞ்சுகிறது. இனிப் பெண் மான் இனிது மன மகிழ்ந்து உண்ணும் என்று எண்ணுகிறது. இந்தக் காட்சியைச் சொல்கிறாள் தோழி.

> **''சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதுஎன்று எண்ணிப்**
> **பிணைமான் இனிதுஉண்ண வேண்டிக் கலைமாத்தன்**
> **கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்**
> **உள்ளம் படர்ந்த நெறி.''**

[சுனையிலே உள்ள சிறிதளவு நீரை, நம் இருவருக்கும் போதாது என்று நினைந்து, பெண் மான் இனிதாக உண்ணுவதை விரும்பி, ஆண் மான் பொய்யாக உறிஞ்சும் பாலை வழி என்று சொல்வார்கள், உன் காதலர் போவதாக நெஞ்சில் விரும்பிய வழியை.]

'ஆண் மான் தன் காதலியாகிய பெண் மானுடைய நலத்தை விரும்பித் தன் நலத்தைத் தியாகம் செய்யும்

இந்தக் காட்சியைக் கண்டால் அவர் திரும்பி வந்து விடுவார்' என்ற குறிப்பை உள்ளடக்கி இவ்வாறு சொன்னாள் தோழி.

இப்படி ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு காட்சியாக அமையும்படி இருப்பதை இந்நூலில் பார்க்கலாம்.

இரண்டு பாடல்களில் பொதுவாக நீதிகள் இரண்டை ஆசிரியர் சொல்கிறார். 'அறிய வேண்டியதை அறிந்த அறிஞர்களுடைய உறவை அவர் நடக்கும் முறையே சொல்லாதோ? பிறர் எடுத்துச் சொல்ல வேண்டுமோ?'' என்று பாணனிடம் தோழி கூறுகிறாள். தலைவன் பரத்தையர்பால் நட்புப் பூண்டு ஒழுகுகிறான். அவன் நல்லவன் என்று பாணன் வந்து சொல்கிறான். அப்போது இதைச் சொல்கிறாள் தோழி.

**''யாணர் அகல்வயல் ஊரன் அருளுதல்,**
**பாண, பரிந்துரைக்க வேண்டுமோ?—மாண**
**அறிவது அறியும் அறிவுடையார் கேண்மை**
**நெறியே உரையாதோ மற்று''**

களவுக் காதலில் ஈடுபட்டிருக்கும் காதலனைப் பார்த்துத் தோழி, விரைவில் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். 'காதலி மிகவும் மெலிந்து வருந்துகிறாள். அதைத் தீர்ப்பது உன் கடமை' என்று நேரே சொல்லாமல் குறிப்பாகச் சொல்கிறாள்.

**''எக்கர் இடுமணல்மேல் ஓதம் தரவந்த**
**நித்திலம் நின்றுஇமைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப**
**மிக்க மிகுபுகழ் தாங்குபவோ, தற்சேர்ந்தார்**
**ஒற்கம் கடைப்பிடியா தார்?''**

[மேடாக இட்ட மணல் மேலே அலைகள் கொண்டு வந்து போடத் தங்கிய முத்துக்கள் ஒளி விடும் நீண்ட

கயையுரடைய குளிர்ந்த கடற்கரைக்குத் தலைவனே, தன்னைச் சேர்ந்தவர்களுடைய தளர்ச்சியை அறிந்து அதற்குரிய பரிகாரத்தை மேற்கொள்ளாதவர்கள் அளவுக்கு மிஞ்சிய புகழைத் தாங்குவார்களோ?)

காதலி தளர்ந்திருக்கிறாள் என்பதையும் அவள் தளர்ச்சியை நீக்க அவளை மணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்பதையும் எண்ணியே தோழி இவ்வாறு கூறுகிறாள்.

இப்படியே குறிப்பாகக் கருத்தைப் புலப்படுத்தும் ஆழமுள்ள பாடல்கள் பல இந்நூலில் உள்ளன.

# 28. ஐந்திணை எழுபது

பதினெண் கீழ்க்கணக்கில் அகப்பொருளைப் பற்றிச் சொல்லும் நூல்களில் ஒன்று, ஐந்திணை எழுபது. இந்த நூலின் பெயரிலிருந்தே இது அகத்துக்குரிய ஐந்து திணைகளைப் பற்றியும் பாடிய எழுபது பாடல்களை உடையது என்பதை அறியலாம். திணைக்கு 14 பாடல் களாக ஐந்து திணைகளுக்கும் எழுபது பாடல்களை உடையது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் ஐந்து திணைகளும் இந்த நூலில் அமைந் திருக்கின்றன.

இதனை இயற்றியவர் மூவாதியார் என்பவர். இந்த நூலுக்கு விநாயகரைத் துதிக்கும் காப்புச் செய்யுள் ஒன்று.

> ''எண்ணும் பொருள்இனிதே எல்லாம் முடித்தெமக்கு
> நண்ணும் கலைஅனைத்தும் நல்குமால்; கண்ணுதலின்
> முண்டத்தான், அண்டத்தான், மூலத்தான், ஆலம்சேர்
> கண்டத்தான் ஈன்ற களிறு''

என்பது அந்தப் பாடல். கண்ணையுடைய நெற்றியில் திரிபுண்டரமாகிய திருநீற்றை உடையவனும், எல்லா அண்டங்களுக்கும் தலைவனும், எல்லாவற்றிற்கும் மூலப் பொருளாக உள்ளவனும், நஞ்சு சேர்ந்த திருக்கழுத்தை உடையவனுமாகிய சிவபெருமான் பெற்ற யானையாகிய

விநாயகப் பெருமான், நாம் எண்ணுகின்ற பொருள்கள் எல்லாம் இனிதே நிறைவேற்றி, நமக்கு அடைகின்ற கலைகள் பலவற்றையும் வழங்கியருள்வான்' என்பது இதன் பொருள்.

சில ஆராய்ச்சியாளர்கள், இது பிற்காலத்தில் யாரோ எழுதிச் சேர்த்தது என்று கருதுகின்றனர்.

அகப்பொருளைச் சொல்லும் நூல்களில் இருப்பதைப் போல இந்த நூலில் ஐந்து திணைகளில் உள்ள இயற்கை யமைப்பையும், தலைவன் தலைவியிடையே உள்ள காதலின் நுட்பத்தையும் காணலாம்.

காதலன் காதலியோடு களவுக் காதல் செய்து வருகிறான். அவர்களுடைய அந்தரங்கங்களைத் தெரிந்த தோழி காதலிக்கு உறுதுணையாக இருக்கிறாள். களவுக் காதலில் எத்தனையோ இடையூறுகள் உண்டு காதலன் சில நாள் வரமுடியாமல் போகும். காதலிக்கு அவள் தாய் அமைத்த கட்டுக் காவல் மிகுதியாக இருக்கும். அதனால் அந்தப் பெண் அஞ்சுகிறாள்;மெலிகிறாள். அதைக் கண்ட தோழிக்குக் கவலை உண்டாகிறது, "இப்படியே வந்து கொண்டிருக்கிறாரே; உன்னுடைய கவலையை உணர்ந்து கொண்டவராகத் தெரியவில்லையே!" என்று காதலியிடம் கூறுகிறாள். காதலனுடைய இயல்பைக் குறை கூறுவதனால் இதை இயற்பழித்தல் என்று சொல்வார்கள். அதைக் கேட்ட காதலி தன் காதலன் குறைபாடு உடையவன் அல்லன் என்று சொல்கிறாள். அவனை விட்டுக் கொடுக்க மனம் வருமா? இவ்வாறு சொல்வதை இயற்பட மொழிதல் என்பார்கள்.

காதலன் பகல் நேரத்தில் தன் காதலியைக் கண்டு அளவளாவுவதற்காக வந்து மறைவில் நிற்கிறான். அவன் வந்திருப்பது தெரிந்து தோழி, "உன்னுடைய

வருத்தம் தெரியாதவராக இருக்கிறாரே'' என்று குறை கூறும்போது காதலி, காதலனுக்கும் தனக்கும் உள்ள பிணைப்பைப் பற்றிச் சொல்கிறாள். 'தலைமகன் சிறைப் புறத்தானாக, இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது' என்பது இந்தத் துறைக்குப் பெயர். தலைவி சொல்கிறாள் :

'என் காதலன் என்னிடம் வைத்துள்ள காதலைப் பற்றி நீ நன்றாக உணர்ந்து கொள்ளவில்லை. அவர் சால்புடையவர். சால்புடையவர்களுடைய உறவு எதனாலும் சிதைவுறாதது; நன்றாக நிலைகொள்வது; வலிமையுடையது. அதனால் பின்னாலே நல்ல பயன் உண்டாகும். என் காதலருடைய உறவு மெலிவு இல்லாதது; அவர் பொய்கைகளை உடைய சோலைகள் நிரம்பிய மலைக்குத் தலைவர். அவருடைய மலை குளிர்ச்சியும் தன்னைச் சார்ந்தாருக்கு நிழலும் தருவது போலே அவரும் தம்மைச் சார்ந்தாருக்கு மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் தருபவர். அவருடைய நட்புறவு மிக்க இனிமையை உடையது; நேர்மையானது. இவ்வாறு என்னுடைய மனச்சாட்சி சொல்கிறது' என்று அந்த இளம் பெண் சொல்கிறாள்.

> **''சான்றவர் கேண்மை சிதைவுஇன்றாய் ஊன்றி,**
> **வலிஆகிப் பின்னும் பயக்கும்; – மெலிவுஇல்**
> **கயம்திகழ் சோலை மலைநாடன் கேண்மை**
> **நயம் திகழும் என்னும்என் நெஞ்சு ''**
> [கயம்-பொய்கை. நயம் அன்பு, நேர்மை.]

இது குறிஞ்சித்திணையில் உள்ள பாட்டு.

காதலன் இரவுக் காலத்தில் தன் காதலியைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறான். காடும் மலையும் தாண்டி வருகிறான். வருகிற வழியில் காட்டு விலங்குகள்

இருக்கும்; பாம்பு இருக்கும். இவற்றை யெல்லாம் நினைக்கும்போது தலைவிக்கு அச்சம் உண்டாகிறது. 'இவ்வாறு வருவதைத் தடுக்க வேண்டும்' என்று நினைக்கிறாள். அவன் வராவிட்டால் அவளுக்கு மிகுதியான துன்பம் அல்லவா உண்டாகும்? திருமணம் செய்து கொண்டால் இப்படி வரவேண்டிய அவசியம் இல்லாமல் போகும், அதை அவன் நெஞ்சில் படும்படி சொல்ல வேண்டும், குறிப்பாகச் சொன்னால் போதும் தோழிக்கு இதைச் சொல்லி அவள் மூலமாக இதைச் சாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறாள் காதலி. "தோழி, எனக்கு உன்னால் நடக்க வேண்டிய முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது" என்று தொடங்குகிறாள்.

**"குறைஒன்று உடையேன்மன்; தோழி."**

தோழி அவள் முகத்தைப் பார்க்கிறாள்.

"நான் ஒவ்வொரு கணமும் வருந்துகிறேன், அவருக்கு ஏதாவது தீங்கு நேருமோ என்று என் குலை நடுங்குகிறது. உயிர் துடிக்கிறது. அதை இழுத்துப் பிடித்து நிறுத்தி வைத்திருக்கிறேன். இந்த உயிருக்குப் பாதுகாப்பான ஒரு காரியத்தை நீ செய்யவேண்டும்."

தோழி அவள் சொல்வது ஏதோ பெரிய காரியம் என்று நினைத்து ஆவலுடனும் கவலையுடனும் அவளைப் பார்க்கிறாள்.

"நான் சொல்வதை நீ இப்போதே செய்ய வேண்டும்."

"என்ன செய்ய வேண்டும்; சொல்."

"பாம்புகள் உலாவுகின்ற உயர்ந்த சோலைகளையுடைய மலைநாட்டுக்குத் தலைவராகிய என் காதலரிடம் ஒன்று சொல்ல வேண்டும்."

"என்ன சொல்ல வேண்டும்?"

"அவர் மலையில் பாம்புகள் உலாவும், அவற்றைக் கண்டு அஞ்சாமல் வருகிறார். இந்த இடத்தில் காட்டு விலங்குகள் உலாவும்; இங்கே வந்தால் அவருக்கு என்ன துன்பம் வருமோ என்று என் உள்ளம் நடுங்குகிறது. ஆதலால்—"

"என்ன செய்யவேண்டும் என்று சொல்லச் சொல்கிறாய்?"

"இராத்திரி வேளைகளில் நம்முடைய வீட்டுப்பக்கம் வரவேண்டாம் என்பதைச் சொல்."

இதைக் கேட்டு முதலில் வியப்படைகிறாள் தோழி. 'அவர் ஒரு நாள் வராவிட்டாலும் வருந்துகிற இவளா இப்படிச் சொல்கிறாள்!' என்று வியக்கிறாள். பிறகு உண்மை புலனாகிறது, 'இரவில் வரவேண்டாம், எல்லாரும் கண்டு வரவேற்கும்படி திருமணம் செய்து கொள்ள வா' என்பதையே அவள் சொல்லாமல் சொல்கிறாள் என்பதைத் தோழி தெரிந்து கொள்கிறாள்.

'தலைமகன் வரும் வழியின் ஏதத்திற்குக் கவன்ற தலைமகள், வரைவு வேட்டுத் தோழிக்குச் சொல்லியது' என்பது இந்தப் பாட்டின் துறை. ஏதம்-துன்பம். கவன்ற-கவலையுற்ற. வரைவு வேட்டு-திருமணத்தை விரும்பி.

பாட்டு வருமாறு;

**"குறைஒன்று உடையேன்மன் தோழி; நிறைஇல்லா**
**மன்உயிர்க்கு ஏமம் செயல்வேண்டும்; இன்னே**
**அராவழங்கு நீள்சோலை நாடனை, நம்இல்**
**இராவாரல் என்பது உரை."**

(குறை ஒன்று-ஒரு காரியம், நிறை-நிறுத்துதல். ஏமம்—பாதுகாப்பு. இன்னே - இப்பொழுதே. வாரல்-வராதே,)

பிரிந்து போன தலைவன் கார்காலத்தில் வந்து விடுவேன் என்று சொல்லிப் போயிருக்கிறான். கார்காலம் வந்து விட்டது. அவன் வரவில்லை கார்காலத்தில் வானத்தில் மேகங்களைக் கண்டால் மயில்கள் ஆடும். இப்போது இளைய மயில்கள் ஆடுகின்றன கடலில் உள்ள நீரை முகந்துகொண்டு கரிய அழகிய மேகங்கள் வானத்தில் மின்னலோடு உலாவுகின்றன. அவற்றை எல்லாம் கண்டு வருந்துகிறாள் காதலி. ''இந்தச் சமயத்தில் எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லையே! எப்படி இருக்கிறாய் என்று கேட்க யாரும் இல்லையே!'' என்று சொல்லி நைகிறாள். தோழியைப் பார்த்து இப்படிச் சொல்கிறாள்.

தோழியை, ''தடமென் பணைத்தோளி'' என்று அழைக்கிறாள். விசாலமான மெல்லிய மூங்கிலைப் போன்ற தோளை உடையவளாக இருக்கிறாள் அந்தத் தோழி. தலைவியோ தோள் மெலிந்து வாடுகிறாள். தன்னுடைய தோளையும் தோழியுடைய தோளையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள், அவளுக்குத் தோள் மெலிந்ததற்குக் காரணம், அவளுடைய காதலன் இன்னும்வராதது, தோள் மெலிந்த அவள் தோள் வளமுடைய தோழியைப் பார்க்கும்போது தன் நிலை நன்றாகத் தெரிகிறது. அந்தத் தோளையே சுட்டித் தோழியை அழைக்கிறாள், 'தடமென் பணைத் தோளி' என்று

''என்னைப் பிரிந்து சென்றவர் இன்னும் வரவில்லை; ஆனால் அவர் சொன்ன கார்காலம் வந்து விட்டது. அந்தக் காலத்தில் என்ன என்ன நடக்குமோ அவை நிகழ்கின்றன.''

**''நீத்தாரோ வாரார்;**
**மட்நடை மஞ்ஞை அகவக் கடல்முகந்து**
**மின்னோடு வந்தது எழில்வானம்.''**

[மடநடை-மெத்தென்ற நடையையுடைய. அகவ-அகவிக் கொண்டு ஆட.]

"இவற்றை யெல்லாம் கண்டு வருந்துகிறேன் யான். இப்போது எப்படி இருக்கிறாய் என்று கேட்பவர் இல்லையே!"

**"வந்துஎன்னை**

**என் ஆதி-என்பாரும் இல்"**

[என் ஆதி-என்ன ஆகிறாய், எப்படி இருக்கிறாய் என்பது கருத்து]

'என் காதலர் வரவில்லை, எனக்கு ஆறுதல் கூறுபவரும் இல்லை' என்று சொல்லித் தலைவி துன்புறுகிறாள்.

**"தடமென் பணைத்தோளி, நீத்தாரோ வாரார்;**
**மடநடை மஞ்சை அகவ—கடல்முகந்து**
**மின்னோடு வந்தது எழில்வானம்; வந்துஎன்னை**
**'என்ஆதி?' என்பாரும் இல்."**

மருதத்திணை ஊடலைச் சொல்வது. தலைவன் பரத்தையின் உறவுடையவனாக இருக்கிறான். தலைவிக்கு மகன் பிறந்திருக்கிறான். தலைவனிடம் தலைவிக்கு ஊடல் உண்டாகிறது. அதைத் தீர்ப்பதற்குப் பாட்டுப் பாடும் பாணன் தலைவனுடைய தூதாக வருகிறான், தலைவன் மிகவும் நல்லவன், குற்றம் இல்லாதவன் என்று சொல்கிறான். அதைக் கேட்டுக் கோபம் வருகிறது, தலைவிக்கு.

"எனக்குத் தெரியும் ஐயா. அவருடைய இயல்பு. பலரும் புகுந்து மூழ்கும் பொய்கையை உடைய ஊருக்குத் தலைவர் அவர். அவரும் அப்படித்தான், நீ வந்து அவருடைய பெருமைகளை இங்கே வந்து அளக்க வேண்டாம்" என்று தொடங்குகிறாள்.

**"பொய்கைநல் ஊரன் திறம்கிளத்தல்."**

[திறம்-திறமைகள். கிளத்தல்—சொல்லாதே.]

''நான் துன்பப்படுகிறேன் என்பது உண்மை. என்னுடைய துன்பங்கள் அவை. அவற்றைப் பற்றி உனக்கு என்ன கவலை? நீ எழுந்து போ; உன் புகழ் போதும்.''

**''என்னுடைய**

**எவ்வம் எனினும் எழுந்தீக ''**

[எவ்வம்-துன்பம். எழுந்தீக-எழுந்து போ.]

''நான் தனியே இருப்பதாக நீ எண்ண வேண்டாம், ஒவ்வொரு நாளும் எனக்கு நல்ல துணை இருக்கிறது. அந்தத் துணையும் ஓர் ஆடவன் தான். ஆனால் அவன் சிறிதும் குற்றம் இல்லாதவன். அவன் கையில் உள்ள பொன் வளை கையை வீசி ஆட்டும்போது ஆடும்; அவன் மழலைச் சொல்லைக் குழறிச் சொல்வான்; அவ்வாறு உள்ள என் மகன் சிறுவன், எனக்குத் துணையாக இருக்கிறான், நீ போ.''

**''கைவல்**

**மறுஇல் பொலந்தொடி வீசும், அலற்றும்**

**சிறுவன் உடையேன் துணை.''**

[மறு-குற்றம். தொடி-வளை. மறு இல் சிறுவன், பொலந்தொடி வீசும் சிறுவன், அலற்றும் சிறுவன் என்று கூட்ட வேண்டும்.]

''என் குழந்தைக்கு வளை முதலிய அணிகலன்களைப் பூட்டி அழகு பார்ப்பேன்; அவன் கையை வீசி ஆடும் போது அதைக் கண்டு களிப்பேன்; அவன் வாயிலிருந்து பிதற்றுவது போல வரும் மழலைச் சொற்களைக் கேட்டு இன்புறுவேன்; ஆகவே அவர் வரவில்லையே என்ற கவலை எனக்கு இல்லை'' என்று சொல்லாமல் சொல்கிறாள். இதில் அவளுடைய கோபம் உள்ளூறப் புலப்படுகிறது.

இயற்கையை வருணிக்கிறார் புலவர், அங்கே உள்ள மந்தி பழத்தை நிறைய உண்டு விட்டுக் காட்டுப் பசுவின்

மடியைப் போய் வருடுகின்றதாம்; தன் கன்றுதான் வாய் வைக்கிறதென்று அந்தப் பசு பால் சுரக்கிறது. தேனிறால்கள் கீழே விழ அதைக் காட்டுப் பசு குளம்பால் துகைக்கிறது.

முல்லை நிலத்தில் கொன்றைப்பூ நெருப்பைப் போலப் பூக்கிறது, முல்லை மலர் பல்லைப்போல அரும்பை ஈனுகிறது. பாலை நிலத்தில் வீழ்ந்த வீரர்களுக்குக் கல்நட்டு அவர்களுடைய வீரச்செயலை அதில் எழுதி வைக்கிறார்கள்.

இவ்வாறு இயற்கையைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் உள்ள வருணனைகளை அங்கங்கே இந்த நூலில் பார்க்கலாம்.

# 29. திணைமாலை நூற்றைம்பது

ஐந்து திணைக்கும் உரிய கருத்துக்களை நூற்றைம்பது வெண்பாக்களால் வரிசையாக அமைத்துச் சொல்வதால் திணைமாலை நூற்றைம்பது என்ற பெயர் படைத்த இந்நூலை இயற்றியவர் **கணி மேதாவியார்** என்னும் புலவர். நூற்றைம்பது என்று பெயர் அமைந்தாலும் இப்போது இந்நூலில் 153 பாடல்கள் உள்ளன. இந் நூலாசிரியரே பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள மற்றொரு நூலாகிய ஏலாதியை இயற்றியவர். அது நீதி நூல். இது காதல் நூல்.

கணி என்பது சோதிடரைக் குறிக்கும் சொல். இவ்வாசிரியர் சோதிட நூலில் வல்லவரென்று அந்தப் பெயரால் தெரிந்து கொள்ளலாம். ஏலாதியில் உள்ள கடவுள் வாழ்த்து இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களைத் துதிப்பதனால் இவர் சைனர் என்று தெரிய வருகிறது. இந்த நூலில் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற வரிசையில் ஐந்து திணைகளும் அமைந்துள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கில் அகப் பொருளைச் சொல்லும் நூல்கள் ஆறு உள்ளன. அவற்றில் அதிகமான பாடல்களைக் கொண்ட நூல் இது.

இந்த நூலில் வரும் சில காட்சிகளைப் பார்க்கலாம்.

மலைச் சாரலில் சந்தன மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அவை சோறு போடுமோ? மலையில் வாழும்

மக்கள் அவற்றை வெட்டி அந்த நிலத்தைப் பண் படுத்தித் தினை விதைக்கிறார்கள். தினைப் பயிர் விளைகிறது; பூட்டை வாங்குகிறது. கதிரைக் கொத்தக் கிளிகளும் பறவைகளும் காத்திருக்கின்றன. அவற்றை ஓட்டித் தினைப்புனத்தைக் காப்பதற்காகக் கன்னிப் பெண்களைக் காவலாக வைக்கிறார்கள். சந்தன மரத்தை வெட்டிப் பரண் போட்டு அதன் மேல் அந்தப் பெண்களை இருக்கச் செய்கிறார்கள். அவர்கள் தம் கையில் கவணை ஏந்திக் கிளிகளை ஓட்டுகிறார்கள். அந்தக் கவணிலுள்ள கட்டையும் சந்தனந்தான். அதில் கவண் கல்லை வைத்து வீசும் போது சந்தன மணம் கமழ்கிறது.

இப்படி அந்த இளம் பெண் ஒரு பரணின் மேல் இருந்து கிளியை ஓட்டுகிறாள் அவள் கார் காலத்தைக் கண்டு களித்து ஆடும் மயிலைப் போல விளங்குகிறாள். அவள் குரல் கொடுத்து ஓட்டினால் தினையின்மேல் வந்து படியும் கிளிகள் பறந்து ஓடிவிடும்.

அவள் தினை காக்கும் பொழுதுதான் அந்தக் கட்டிளங் காளையைக் கண்டாள். இருவரும் களவுக் காதலில் ஈடுபட்டனர். அவர்களுக்கு உறுதுணையாக அந்தப் பெண்ணின் தோழி இருந்தாள்.

இப்போது தினை முற்றி விட்டது. அதைக் காக்க வேண்டியதில்லை. அந்த இளம் பெண்ணின் தாய் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவாள். வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே இருக்கும்படி செய்வதை, 'இற்செறிப்பு' என்று சொல்வார்கள்.

"இனி மேல் இவளை வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவார்கள்" என்ற செய்தியைத் தோழி அந்த இளம் பெண்ணின் காதலனுக்குச் சொல்கிறாள். 'பகல் நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சந்தித்து அளவளாவிச் செல்லும்

காதலனைக் கண்டு தோழி, 'காதலியை வீட்டுக்கு அழைத்துப் போகும் செய்தியைச் சொல்வது' என்பது இந்தக் காதல் நாடகத்தில் ஒரு துறை. 'பகற்குறிக்கண் வந்த தலைமகனைக் கண்டு தோழி செறிப்பு அறிவுறீஇயது' என்று அந்தத் துறையைச் சொல்வார்கள். அந்தத் துறையில் அமைந்த பாட்டு, குறிஞ்சித்திணையில் வருகிறது.

'சந்தன மரத்தை வெட்டி உழுத மலைச் சாரலில் விளைந்த சிறிய தினைப் புனத்தில் சந்தன மரத்தை வெட்டிப் பண்ணிய பரணின்மேல் இருந்து, சந்தன மணம் கமழக் கிளிகளை ஓட்டும் கார் மயில் போன்ற உன் காதலி குரல் கொடுக்க, கிளிகள் ஒலிபரப்பி இனி எழா' என்ற பொருளுடைய அப்பாட்டு வருமாறு.

**''சாந்தம் எறிந்துஉழுத சாரல் சிறுதினை**
**சாந்தம் எறிந்த இதண்மிசைச்—சாந்தம்**
**கமழக் கிளிகடியும் கார்மயில் அன்னாள்**
**இமிழக் கிளிஎழா ஆர்த்து''**

[சாந்தம்-சந்தனம். எறிந்த-வெட்டிய. இதண்-பரண். இமிழ-குரல் கொடுக்க.]

களவுக் காதல் செய்து இன்புறும் காதலனுக்கு, 'உன் காதலியை இனி மேல் திருமணம் செய்து கொண்டு வாழ்வாயாக!' என்று அறிவுறுத்த நினைக்கிறாள் தோழி. அதை வெளிப்படையாகச் சொல்லாமல், 'நீ இவ்வாறு வருவதை விட்டு விடு' என்று சொல்கிறாள், அவன் கடலும் கரையும் வளம் பெற்ற நெய்தல் நிலத்தலைவன். கடல் துறையை உடையவனைச் சேர்ப்பன் என்று சொல்வது வழக்கம். தோழி அவன் நாட்டுக் கடற்கரையில் நிகழும் இயற்கை நிகழ்ச்சியைச் சொல்கிறாள்.

கடற்கரையில் தாழை பூத்திருக்கிறது. தாழையின் மொட்டு முள் அடர்ந்த இலைகளுக்கு மேலே நீண்டிருக்-

கிறது. எங்கும் மணம் பரவுகிறது கடற்கரையிலே வாழும் கொக்கு அங்கே வந்து அந்தத் தாழை மொட்டைப் பார்த்துத் தன் குஞ்சென்று எண்ணுகிறது. தான் வாயில் கவ்விக் கொண்டு வந்திருந்த மீனைத் தான் உண்ணாமல் அந்த மொட்டின்மேல் வைக்கிறது. வெயில் வீசுகிறது. தன் குஞ்சின் மேல் வெயில் படக்கூடாது என்ற எண்ணத்தால் அது மனம் உருகி அந்த வெயிலைத் தன் சிறகை விரித்து மறைக்கிறது. 'இத்தகைய கடற் கரையை உடையவனே, நீ இப்போது களவில் வருவது பல காலம் நிலைக்காது. இப்படி வருவதை மறந்து விடு' என்று தோழி சொல்கிறாள்.

**''முருகுவாய் முள்தாழை நீள்முகை பார்ப்புஎன்றே**
**குருகுவாய்ப் பெய்திரை கொள்ளாது—உருகிமிக**
**இன்னா வெயில்சிற கால்மறைக்கும் சேர்ப்ப! நீ**
**மன்னா வரவு மற.''**

[முருகு-மணம். முகை-அரும்பு. பார்ப்பு-குஞ்சு. குருகு-பறவை; இங்கே கொக்கு. சேர்ப்ப-கடற்கரைக்குத் தலைவனே. மன்னா வரவு-நிச்சயம் இல்லாமல் களவாக வரும் வருகை.]

இந்த இயற்கை வருணனையைத் தோழி காரணம் இல்லாமல் சொல்லவில்லை. இதிலிருந்து ஒரு குறிப்பைத் தலைவன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறாள். அந்தக் குருகு தன் குஞ்சைப் போலத் தோன்றுகின்ற தாழை அரும்பையே இரை பெய்து பாதுகாக்கும் நாட்டை உடைய நீ, உன்னுடைய அன்புக்குரிய தலைவியையும் பிறர் மணம் புரிய முயல்வதற்கு முன் மணம் புரிந்து பாதுகாக்க வேண்டும்' என்ற குறிப்பை இதனால் தெரிவித்தாள். இதை இறைச்சி என்று புலவர் கூறுவர்.

பொருளை ஈட்டும் பொருட்டுக் கணவன் வெளியூர் சென்றிருக்கிறான். அவன் பிரிவை ஆற்றமாட்டாமல்

வருந்துகிறாள் மனைவி. அவளுடைய தோழி கணவர் வந்து விடுவார் என்று சொல்கிறாள்; "நல்ல சகுனம் உண்டாகிறது. என்னுடைய இடக்கண் துடிக்கிறது. ஆகையால் அவர் வந்து விடுவார்" என்கிறாள்.

**"உருவவேல் ஒண்கண்ணாய்; ஒருகால்தேர்ச் செல்வன்**
**வெருவவீந்து உக்கநீள் அத்தம்—வருவர்**
**சிறந்து பொருள்தருவான் சேட்சென்றார் இன்றே;**
**இறந்துகண் ஆடும் இடம்."**

[அழகிய வேலைப் போன்ற ஒளியைப் பெற்ற கண்ணை யுடைய பெண்ணே! என் இடப்பக்கக் கண் மிகுதியாகத் துடிக்கும்; ஆகையால் ஊக்கம் மிக்குப் பொருளை ஈட்டுவதற்காக நெடுந்தூரத்தில் உள்ள ஊருக்குச் சென்றவர் ஒற்றைச் சக்கரத்தை உடைய தேரைப் பெற்ற செல்வனாகிய கதிரவன் கோபித்து வெம்மை காட்டியதால் வளம் அழிந்து வீணான நீண்ட பாலை நில வழியைக் கடந்து இன்றே வருவார்.

[உருவம்-அழகு. ஒரு கால்-ஒற்றைச் சக்கரம். வெருவ-கடுமையாக வெயில் வீச. வீந்து-அழிந்து. அத்தம்-பாலை நில வழி. சேண்-நெடுந்தூரம். இறந்து-அளவுக்கு மிஞ்சி கண் இடம் ஆடும்.]

இந்த நூலாசிரியர் சமணரானாலும் திருமால், பலராமன், முருகன் ஆகியவர்களைப் பற்றிய செய்திகளை உவமையாக எடுத்து ஆளுகிறார்.

திருமால் தன்மேல் வெள்ளைத் துகிலைப் போர்த்து நழுவ விட்டது போல, நீல நிறமுடைய மலையிலிருந்து அருவி இழிகிறது (6) என்பார்; கடலுக்கும் அதன் கரையிலுள்ள வெண் மணலுக்கும் திருமாலையும் பலராமரையும் உவமையாக்குவார் (58); இருட்டுக்குக் கண்ணனையும் நிலவுக்குப் பலராமரையும் உவமை கூறுவார் (96); சூரியன் திருமால் வீசிய சக்கரம் போலவும்

நிலா பலராமரைப் போலவும் இருக்கின்றனவாம் (97) மின்னலுக்கு முருகனுடைய வேலை ஒப்புக் கூறுவார் (93).

ஓரிடத்தில் காமன் கணையைச் சொல்கிறார் (8); இந்திரனை ஓரிடத்தில் குறிக்கிறார் (15).

இவர் சோதிடர் ஆகையால் நல்ல நாள் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பல பாடல்களில் சொல்லியிருக்கிறார்.

> **''ஓர் நாள் வேட்டுத் தாழாது வந்தால்**
> **நீ எய்தல் வாயால்''** (46)
>
> [வாய்-நிச்சயம்.]
>
> **''நாள் ஆய்ந்து வரைதல் அறம்'** (52)
>
> (வரைதல்-மணம் புரிதல்.)
>
> **''நாள் நாடி நல்குதல் நன்று,''** (54)

இவர் இசையிலும் வல்லவர் என்று தெரிகிறது. பண், யாழ் முதலிய இசையோடு தொடர்புடையவற்றைப் பல இடங்களில் சொல்கிறார்.

சாதாரி, கந்தாரம், யாழ், துத்தம், செவ்வழி பாலையாழ், பண், பாட்டுஎன்பவற்றைஇவர்ஆளுகிறார்.

சங்க காலப் பாடல்களில் காணப்பெறாத சொல்லணிகளை இந்நூலில் காணலாம். வேங்கையை, தீத்தீண்டுகையார் என்பார். தீத்தீண்டினால் வேகும்; தீத்தீண்டுகை; வேம் கை; வேங்கை. ''மானீலம் மாண்ட துகில்உமிழ்வதொத்தருவி, மானீல மால்வரை நாடகேள்-மாநீலம்'' என்று ஒரு தொடரையே வெவ்வேறு பொருளில் எடுத்தாளுவார். நாள் வேங்கை, கோள் வேங்கை, கடற்கோடு, அடற்கோடு என்பவை போல இரு பொருள் தரும் சொற்களுக்கு அடைதந்து குறிப்பிட்ட பொருளைப் புலப்படுத்த வைப்பார். ஒன்று முதலிய எண்கள் தொடர்ந்து

வருவதை எண் அலங்காரம் என்பர். இவ்வாசிரியர் அந்த அலங்காரம் வரும்படி பாடுகிறார்.

**"ஒருகை இருமருப்பின் மும்மத மால்யானை"** (78)

என்பதில் ஒன்று முதல் மூன்று வரையில் எண்ணணி வந்தது.

**"ஐந்துருவின் வில்எழுதி நாற்றிசைக்கும் முந்நீரை**
**இந்துருவின் மாந்தி இருங்கொண்மூ—முந்துருவின்**
**ஒன்றாய்"** (164)

என்பதில் ஐந்து முதல் ஒன்று வரையில் எண்கள் வந்தன.

மக்களிடையே உள்ள பல பழக்க வழக்கங்களை அங்கங்கே கூறுகிறார் ஆசிரியர்.

அழகான வெண்பாக்களால் ஆன இந்நூல் கற்பனையினாலும் சொல்லாட்சியினாலும் பிற்கால நூல்களோடு ஒப்ப நிற்கிறது; கருத்துச் செறிவினாலும் அகப் பொருட் செய்திகளாலும் சங்க நூல்களின் நெறியைத் தழுவி நிற்கிறது.

# 30. திணைமொழி ஐம்பது

''உன்னுடைய மலையில் ஒரு பெரிய பாட்டுக் கச்சேரியே நடந்து கொண்டிருக்கிறதாமே!'' என்கிறாள், அந்த இளம் பெண். அவள் அவனுடைய காதலிக்கு உயிர்த் தோழி.

''அப்படி ஒன்றும் இல்லையே!'' என்கிறான் அந்தக் கட்டிளங்காளை.

''இல்லை, இல்லை. உங்கள் மலைச்சாரல் ஊருக்குப் போய் வந்தவர்கள் சொல்கிறார்கள். யாழும் குழலும் முழவும் ஒரே சமயத்தில் இணைந்து ஒலிக்கும் அற்புத இசை இடைவிடாமல் கேட்குமாம், உங்கள் மலையில்.''

அந்த ஆணழகன் சற்றே சிந்தித்துப் பார்க்கிறான்; ''எனக்குத் தெரியாமல் அப்படி நடக்கிறதா, என்ன?'' என்று கேட்கிறான்.

''ஆம். உங்கள் மலையிலிருந்து வீழும் அருவியில் இப்படியெல்லாம் இனிய ஓசை கேட்கிறதாம். அந்த அருவிக்கு அருகில் நின்றிருந்தால் கண்ணுக்கினிய காட்சியைக் காணலாம். அதன் தண்மையில் உடம்பு இனிமை பெறும். யாழும் புல்லாங்குழலும் மிருதங்கமும் இணைந்து ஒலிக்கும் இன்னிசையைக் கேட்டுக் காது தேன் பாய்ந்தது போன்ற இன்பத்தைப் பெறும். அருவியின் ஓரத்தில் வளர்ந்து மலர்ந்து மணக்கும் இன்பச்சாரலிலே

நாசி அந்த நறுமணத்தை நுகர்ந்து இன்புறுமாம். அந்த அருவியின் நீர் தேனைப்போல இனிக்குமாம்.''

'ஏது, ஏது? எங்கள் ஊருக்கு வராமலே அதைப் பற்றிய வருணனையை ஒருகவிஞன் மாதிரிசொல்கிறாயே! அங்கே வந்து நேரில் பார்த்தால் உன்னுடைய கற்பனை வளர்ந்து ஓங்கி ஒரு காவியத்தையே உண்டு பண்ணி விடுமே!''

''நான் தனியே வரமுடியுமா? என்னுடைய தோழி, உன்னுடைய ஆருயிர்க் காதலி, அங்கே வந்தால் நானும் வருவேன், நீதான் ஒவ்வோர் இரவும் இங்கே வந்துகொண் டிருக்கிறாய், அதனால் உங்களுக்கு இன்பம் உண்டாக நீ எண்ணுகிறாய்.''

தோழி ஏதோ பொடி வைத்துப் பேசுவது போலத் தெரிகிறது. ''நீ என்ன சொல்கிறாய்? இன்பம் விளைவதாக எண்ணுகிறேனா? உண்மையில் இன்பம் உண்டாக வில்லையா?''

''உன் காதலி வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண் டல்லவா உன்னைச் சந்திக்கிறாள்?''

''எனக்கு நீ சொல்வது விளங்கவில்லை.''

''அவள் கண்ணின் அழகிலே நீ சொக்கிப் போகிறாயே!''

''அதிலே என்ன ஐயம்? அவள் கண்கள் மாவடுவின் பிளப்பைப் போல எவ்வளவு அழகாக இருக்கின்றன! மாழை ஒண் கண் என்றால் அவள் கண்ணுக்குத்தான் தகும்.''

''அது மானின் கண்ணைப் போலவும் இருப்பதை நீ பார்த்திருக்கிறாயா?''

''ஆம்! மான் கண்ணைப் போல நீளமாக, அகலமாக இருக்கிறது.''

''அது மட்டும் அல்ல. மான் கண் எப்போதும் சலித்துக்கொண்டே இருக்கும். அதில் அச்சக்குறி எப்போதும் இருக்கும்.''

''அது போல—?''

''என் தோழியின் கண்ணும் மருண்ட பார்வையுடன் இருக்கும்.''

''ஏன்?''

''அவள் உள்ளத்தில் உள்ள அச்சந்தான் காரணம்.''

''எதற்காக அச்சம்?''

' ஊராரெல்லாம் அவளைக் கண்டால் கிசு கிசு என்று ஏதேதோ பேசிச் சிரிக்கிறார்கள்.''

''ஏன்?''

''இவள் யாரோ ஒருவனை இரவிலே சந்திக்கிறாள் என்று தமக்குள்ளே பேசிக் கொள்கிறார்கள்; பழிச்சொல் சொல்கிறார்கள். இந்தக் கௌவை, நாளுக்கு நாள் அதிகமாகப் பரவிக்கொண்டு வருகிறது.''

''சொன்னால் சொல்லட்டுமே!''

''நீ ஆடவன். உன் ஊரிலிருந்து இரவில் வந்துவிட்டுப் போகிறாய். உனக்குப் பழிச் சொல்லின் கொடுமை தெரியாது. அவளோ பகலெல்லாம் ஊர்ப் பெண்கள் கண்முன் விழிக்க வேண்டியிருக்கிறது. எங்கே போனாலும் அவளைக் கண்டு தங்களுக்குள் கிசுகிசுக்கிறார்கள். அதனால் அவள் மிகவும் வருந்துகிறாள்.''

அந்த இளைஞன் யோசிக்கிறான். இரவு நேரங்களில் வருவது தகாது என்று தோழி சொல்வது அவனுக்கு விளங்குகிறது. அவள் அவனை வரவே கூடாது என்று சொல்கிறாளா? சே! அப்படிச் சொல்வாளா? அவனுக்கும் அவன் காதலிக்கும் இடையே உள்ள காதலின் உரத்தை

நன்கு அறிந்தவளாயிற்றே. அந்தக் காதல் வளர உதவி செய்கிறவளும் அல்லவா? அப்படி இருக்க அவள் அவனை வரவேண்டாம் என்று சொல்வாளா? பின்னே, இரவு வந்தால் பழிச் சொல் பரவுகிறது என்கிறாளே; இதைச் சொல்ல என்ன காரணம்? அவன் யோசிக்கிறான்.

தோழியின் குறிப்பு அவனுக்குப் புலப்படுகிறது. அதை எவ்வளவு நயமாக அவள் குறிப்பிட்டிருக்கிறாள்! அவன் மலையைச் சொல்லும்போது, "யாழும் குழலும் முழவும் இயைந்தாற்போல அருவி ஒலிக்கும் மலை நாடனே" என்று சொன்னாளே, அதில்தான் அவள் உளக்கிடக்கையை நுட்பமாக அமைத்துக் காட்டியிருக்கிறாள். 'இசைக் கருவிகள் இணைந்தாற் போல உன் மலையில் உள்ள அருவி ஒலிக்கிறதே; அது போல நீயும் இவளும் இணைந்து வாழ்ந்தால் வாழ்க்கை இனிமையாக இருக்கும். எல்லாரும் கேட்கும்படி அருவியின் ஒலி இசைக்கிறது போல நீயும் எல்லோரும் காணும்படி இவளைத் திருமணம் செய்து கொண்டால் உங்கள் வாழ்க்கை இன்னிசைபோல இருக்குமே!' என்ற கருத்தைத் தோழி சொல்லாமல் சொல்லி விட்டாள். அந்தக் குறிப்பைத் தலைவன் உணர்ந்து கொள்கிறான். புன்முறுவலுடன் தோழியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுகிறான்.

இனி அவன் திருமணத்துக்குரிய முயற்சிகளைச் செய்வான் என்பதில் என்ன சந்தேகம்?

இந்தக் குறிப்பை வைத்துத் தோழி சொல்லுவதாக அமைந்த பாடல் வருமாறு:

**"யாழும் குழலும் முழவும் இயைந்தென**
**வீழும் அருவி விறல்மலை நன்னாட!**
**மாழைமான் நோக்கியும் ஆற்றாள்; இரவரின்**
**ஊர் அறி கௌவை தரும்."**

[யாழும் புல்லாங்குழலும் மிருதங்கமும் இயைந்து ஒலித்தாற்போன்ற ஒலியுடன் விழுகின்ற அருவியையுடைய வளத்தையுடைய மலைநாடனே, மாவடுவின் பிளப்பைப் போலவும் மானைப் போலவும் பார்வையையுடைய வளாகிய இவளும் நீ இரவு நேரத்தில் வந்தால், பொறுக்க மாட்டாள். ஊர் எல்லாம் அறியும் பழிச்சொல்லை உன் வரவு உண்டாக்கும்.]

இயைந்தென - இயைந்தாலென. விறல் - வளம்; மலை நாடனாகிய தலைவனுக்குரிய அடையாகக் கொண்டு, வெற்றி மிடுக்கையுடைய மலைநாடனே என்றும் கொள்ளலாம்; அப்போது மலை நாடனென்பது அனைத்தும் ஒரு பெயராய்த் தலைவன் என்னும் துணையாய் நின்றதாகக் கொள்ளவேண்டும். மாழை - மாவடுவின் பிளப்பு. மாழைமான் - பொன்மான் என்றும் பொருள் கூறலாம். நோக்கியும் என்ற உம்மை, நானும் இந்தத் துன்பத்தைப் பொறேன் என்பதைச் சுட்டிய எச்ச உம்மை. ஆற்றாள் - பொறுக்க மாட்டாள். இரா என்றது இர என்று செய்யுளில் குறுகி நின்றது. கௌவை- பழிச் சொல்லால் உண்டான ஒலி. ஊர் - ஊரிலுள்ள பெண்கள்; ஆகுபெயர். இராவில் வந்தால் கௌவை தரும்; அதனால் ஆற்றாள்.

தலைவனுடைய மலை நாட்டைச் சொல்லும்போது அருவியின் இயல்பைச் சொல்கிறாள். இசைக் கருவிகள் இணைந்து ஒலிக்கும் இன்னோசையையுடையது என் கிறாள். 'உன்னுடைய நாட்டில் இசைக் கருவி இணைந்து ஒலிப்பது போன்ற இனிய ஓசையை எழுப்பும் அருவி இருக் கிறது. அதுபோல நீயும் இணைந்து இன்பம் பெற வேண்டும்' என்ற குறிப்பை அந்த வருணனைகள் உள்ளடக்கி யிருக்கிறது. இத்தகைய குறிப்பை அகப் பொருட் பாடல்களில் காணலாம். இதை இறைச்சி என்று சொல்வார்கள். சொல்லப்பட்ட பொருளைக் கொண்டு அதற்கு மேலும் ஒரு கருத்தை உள்ளடக்கிச் சொல்வது

இறைச்சி யாகும். இங்கே, ''யாழுங் குழலும் முழவும் இயைந்தென வீழும் அருவி'' என்பது சொல்லப்பட்ட பொருள். இதனால், ''நீயும் திருமணத்தால் இவளோடு இணைந்து வாழவேண்டும்'' என்று அதற்கு மேல் ஒரு கருத்துப் புலனாகிறது.

இந்தப் பாடல், 'தோழி தலைமகனை இரவுக் குறி விலக்கி வரைவு கடாயது' என்னும் துறையில் அமைந்தது. 'இரவு நேரத்தில் தாம் குறிப்பிட்ட இடத்தில் வந்து சந்தித்து அளவளாவும் தலைவனை, அவ்வாறு வருவதை விலக்கி, மணத்தைப் பற்றிய எண்ணத்தை அவன் மனத்தில் தோழி செலுத்தியது' என்பது துறையின் பொருள்.

இந்தப் பாடல் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய திணைமொழி ஐம்பது என்பதில் குறிஞ்சித்திணைப் பாடல்களுள் ஒன்றாக அமைந்திருக்கிறது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பத்துப் பாடல்களாக, ஐம்பது பாடல்களைக் கொண்டது இந்த நூல். இதனை இயற்றியவர் **கண்ணஞ் சேந்தனார்.** இவருடைய தந்தை யார் பெயர் சாத்தந்தையார்.

அங்கங்கே வரும் வருணனைகள் அழகாக அமைந்திருக்கும். அவற்றில் இயல்பானவையும் உண்டு; கற்பனையும் உண்டு.

மலைக் காட்டில் உள்ள சந்தன மரத்தை வெட்டி, அங்குள்ள புல்லை யெல்லாம் எரிக்கிறார்கள். மலைவாணர்கள் நிலத்தைப் பண்படுத்தி உழுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். எரித்தபோது புகை சூழ்கிறது. அப்போது மழை பொழிகிறது. அதைப் பார்த்தால் மலைவாணர் தூபம் போட அதைக் கண்டு மகிழ்ந்து தேவர்கள் மழைத்துளியைப் பெய்வது போல இருக்கிறதாம்.

**"புகழ்மிகு சாந்துள்எறிந்து புல்எரி ஊட்டிப்**
**புகைகொடுக்கப் பெற்ற புலவோர்-துகள்பொழியும்**
**வான்உயர் வெற்ப." (1)**

[சாந்து - சந்தனம். எறிந்து-வெட்டி. புலவோர்-தேவர் துகள் - மழைத்துளி.]

காட்டுப்பன்றி அங்கங்கே தன் கொம்பினால் பூமியைக் கிண்டுகிறது. அப்போது பூமிக்கடியில் புதைந்திருக்கும் மாணிக்கங்கள் வெளிவருகின்றன. அவற்றை நெருப்பு என்று எண்ணி வேடர்கள் தங்கள் கையைக் காய்ச்சிக்கொள்கிறார்களாம்.

**"ஏனம் இடந்திட்ட ஈர்மணிகொண்டு எல்லிடைக்**
**கானவர் மக்கள் கனல்எனக் கைகாய்த்தும்**
**வானஉயர் வெற்பன்." (4)**

[ஏனம்-காட்டுப் பன்றி இடந்திட்ட - பெயர்த்துப் போட்ட. ஈர்மணி - நீரோட்ட முடைய மாணிக்கம். எல் - இரவு. கானவர் - வேடர்.]

ஆண் குரங்கு பலா மரத்தில் ஏறிக் கனிந்த பழத்தைப் பறிக்கிறது. உடனே தன் மனைவியாகிய மந்தியை அழைக்கிறதாம்.

**"பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்**
**எலஎன்று இணைபயிரும் ஏகல்சூழ் வெற்பன்." (10)**

[கடுவன் - ஆண் குரங்கு. எல என்பது எலே என்பது போன்ற விளிச் சொல். இணை-துணை; என்றது பெண் குரங்கை. பயிரும் - அழைக்கும். ஏகல் - உயர்ந்த கல்.)

பாலை நிலத்தில் உள்ள மூங்கில்கள் கதிரவனுடைய வெம்மையான கதிர்களால் வெடித்து முத்துக்களைச் சிதறுகின்றன (18); காடுகளில் காயாம்பூ அஞ்சனத்தைப்

போலவும், மாதவி பெண்களின் பற்களைப் போலவும்; காந்தள் துடுப்பைப் போலவும் மலர்கின்றன (21); மருத மரத்தின் மலரில் உள்ள தாது கீழே மலர்ந்துள்ள நீலோற்பல மலரின் மேல் சொரிகிறது (32); வளைந்த அடிமரத்தையுடைய புன்னை மரம் கடற்கரையில் முத்துக் களைப் போன்ற அரும்புகளைத் தோற்றுவிக்கின்றன (42).

காதலர்களிடையே பிரிவினால் உண்டாகும் துன்பமும், இணைவதனால் உண்டாகும் இன்பமும், தோழி அவர்களை இணைக்க முயலும் அன்பும் பல பாடல்களில் விரவி வருகின்றன.

ஐம்பது பாடல்களில் ஐம்பது காதற் சித்திரங்களைக் காட்டும் நூல் இது.

# 31. திருக்குறள்

தமிழில் உள்ள நூல்களில் பல பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. திருக்குறளைப் போல மிகுதியாக மொழி பெயர்க்கப் பெற்ற நூல் தமிழில் வேறு இல்லை. இந்திய நாட்டு நூல்களில் பகவத் கீதையும் திருக்குறளும் அநேகமாக எல்லா மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் தமக்கு முன் தோன்றிய எல்லா நூல்களையும் படித்தவர் என்று தோன்றுகிறது. இவருக்குப் பின் வந்த தமிழ்ப் புலவர்களில் இவருடைய நூலைப் படிக்காதவர் யாரும் இருக்க முடியாது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளை உடையது, திருக்குறள். திருக்குறள் என்பது பிற்காலத்தில் வழங்கும் பெயர். அதன் பெயர் முப்பால் என்று தெரிய வருகிறது. திருவள்ளுவரின் காலம் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம்.

அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களுமாக 133 அதிகாரங்கள் அடங்கிய இந்த நூலில் அதிகாரத்துக்குப் பத்துக் குறளாக 1330 குறள்கள்

உள்ளன. இந்த நூலைச் சிறப்பித்துப் பாடிய 53 பாடல்கள் உள்ள திருவள்ளுவ மாலை என்ற தனி நூலே இருக்கிறது. அதில் உள்ளவற்றை யன்றி வேறு புலவர்கள் பாடிய பாடல்களும், பிற நூல்களினிடையே வரும் சிறப்புக்களும் திருக்குறளின் மாண்பையும் யாவரும் படித்தறிந்து போற்றிய பெருமையையம் புலப்படுத்தும்.

மிகச் சுருங்கிய அளவில் அமைந்து, மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பல கருத்துக்களையும் கொண்டு, காலம் இடம் இனம் என்ற வேறு பாட்டுக்கு அப்பாற்பட்ட அடிப்படையான உண்மைகளைச் சொல்லுவதானால் இந்த நூல் இன்னும் பயனுடையதாக இருக்கிறது. இந்த நூலின் பெருமையை நாளடைவில் அறிந்து பாராட்டும் மக்கள் உலகத்தில் அதிகமாகிக்கொண்டு வருகிறார்கள்.

வெறும் நீதி நூலாக மட்டும் இருந்தால் இத்தனைச் சிறப்பு வந்திருக்க நியாயம் இல்லை. இனிய கவிச்சுவை அமைந்திருப்பதால் இதற்குச் சிறந்த இலக்கிய மதிப்பும் சேர்ந்திருக்கிறது. ரஷ்யாவிலிருந்து இப்ரஹிமோவ் என்ற அறிஞர் சென்னைக்கு வந்தார். தமிழ் நாவல், சிறு கதை முதலியவற்றை மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டவர் அவர். தமிழை அறிந்தவர். அவர் என்னைப் பார்க்க வந்தார். பேசிக்கொண்டிருந்தோம். ''நீங்கள் பழைய தமிழ் நூல்களைப் படிப்பதுண்டா?'' என்று கேட்டேன். ''திருக்குறளைப் படித்திருக்கிறேன்.'' என்றார். ''அதில் என்ன சிறப்பைக் கண்டீர்கள்?'' என்று கேட்டேன். ''மனித வாழ்கையின் பல துறைகளையும் பற்றிச் சுருக்கமாகக் கருத்துக்களைச் சொல்கிறது'' என்று சொல்வார் என்று எதிர் பார்த்தேன். அவர், ''அதன் கவிச் சுவை என் உள்ளத்தை ஈர்த்தது'' என்றார். அதைக் கேட்டு நான் வியப்படைந்தேன். நீதி நூல் என்பது பயன் உடையதாக இருந்தாலும் பெரும்பாலும் நயன்

உடையதாக இருக்கும் மொழியின் இலக்கணத்தைச் சொல்லும் இலக்கண நூல் மிகவும் பயனுள்ளது; ஆனால் அதை யாரும் விரும்பிப் படிக்க மாட்டார்கள். ஆகவே நயனுடைய தென்று சொல்ல முடியாது. வாழ்க்கையின் இலக்கணத்தைச் சொல்லும் நீதி நூலும் அத்தகையதே. அதிலும் சுவைதரும் நயத்தைக் காணமுடியாது. இதற்கு விலக்காகத் திருக்குறள் மனித சாதிக்கு இன்றியமையாத வாழ்விலக்கணத்தைச் சொல்லுவதால் பயனுள்ள நூலாக; நீதி நூலாக விளங்குகிறது. அதே சமயத்தில் நீதிகளைச் சொல்லும் போது சுவைபடச் சொல்வதால் கவிதையாக, நயமுடையதாக விளங்குகிறது. இதை அறிந்தே அறிஞர் இப்ரஹிமோவ் அப்படிச்சொன்னார் என்று கருதுகிறேன்.

இப்ரஹிமோவ் என்ன? திருக்குறளை ஓதி உணர்ந்த வெளி நாட்டார் பலர் இந்தக் கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். சார்லஸ் இ. கவர் என்பவர் (Charles E. Gover) "குறள் ஓர் இலக்கியக் கருவூலம், கவிதைக் குரல் என்பதில் ஐயமே இல்லை; கிரேக்கர்களுக்கு ஹோமரது காவியம் எத்தகையதோ, அவ்வாறு சொற் சிறப்பும் நீதிச் சிறப்பும் மிகச் சிறந்த முறையில் அமைந்தது." என்கிறார். எம். ஏரியல் என்பவர், "குறள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பு; மனித சிந்தனையின் தூய வெளியீடு" என்கிறார், டாக்டர் கிரௌல். "அதனுடைய உளம் கவர் பண்பை எந்த மொழி பெயர்ப்பும் கொள்ள இயலாது. அது வெள்ளித் தட்டில் வைத்த தங்கக் கனி" என்று பாராட்டுகிறார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி யூ. போப் "இலக்கிய வளாகத்தில் நீதிச் செய்யுளைச் சேர்த்துக் கொள்வதற்குக் கலைஞர்கள் ஒப்பு வதில்லை. ஆனால் வேலைப்பாட்டின் சிறப்பும் கவிதைக் கனலின் ஒளியினால் அங்கங்கே நீதியும் தேசத்தை

செய்யும் தகைமையும் இருக்குமாயின் எந்த நீதிச் செய்யுளையும் உண்மையான கவிதையாக ஏற்றுக் கொள்வது முறையாகும் என்றால், திருக்குறள் அத்தகைய கவிதையாகும்'' என்று தெளிவாகச் சொல்கிறார். வ. வே. சு. ஐயர் கூறும் விமரிசனம் திருக்குறளின் பெருமையை விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது. ''மனிதனால் என்றும் வெளியிடப்படாத மிக ஆழமான கருத்துக்களைச் சுருக்கி இந்த ஆசிரியர் ஏழே சீர்களில் அமைத்திருக்கிறார். இந்தச் சிறிய இன்னிசைக் கருவியை அவர் சிறந்த இசைவல்லுநனைப்போல எவ்வளவு அழகாக வாசித்திருக்கிறார்! ஒளி விடும் சாதுரியம், நகைச்சுவை, அழுத்தமாகச் சொல்லுதல், கற்பனை, முரண்பாட்டு நயம், வினாவுதல், ஓவியம் போன்ற உவமைகளை, இப்படிக் கருவிலே திருவுடைய கலைஞன் ஆளும் ஆயிரம் உத்திகளில் ஒன்றையும் அவர் இந்த முழுமையான கலைப்படைப்பில் ஆளாமல் விட்டு விடவில்லை'' என்று அவர் விமரிசனம் செய்கிறார்.

திருக்குறளின் கவிப்பண்பைத் தமிழ்ப் புலவர்களும் உணர்ந்து பாராட்டியிருக்கிறார்கள் ''நின்று அலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்'' என்று திருவள்ளுவ மாலையில் உள்ள ஒரு பாட்டுச் சொல்கிறது. தேன் பிலிற்றும் நீர்மை யென்பது கவிச்சுவையைச் சுட்டிச் சொன்னது. ''பாவிற் சிறந்த முப்பால்'', ''சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய'', ''வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும், தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்'' என்று திருவள்ளுவ மாலையில் வரும் பகுதிகளும் இந்தக் கருத்தைத் தெளிவாக்குகின்றன.

முதற் குறளே கவிதைச் சிறப்போடு விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் கடவுள் முதல் அல்லது எல்லாம் கடவுளிடத்திலிருந்து தோன்றுகின்றன என்பது ஒரு

கருத்து. அதை அப்படியே சொன்னால் ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்வதாக இருக்கும். கவிஞன் தன் கருத்தை விளக்க ஆளும் உத்திகளில் உவமை ஒன்று. திருவள்ளுவர் முதற் குறளில் உவமையை ஆளுகிறார். 'எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் அகரம் முதலாக அமைந் திருப்பது போல, உலகம் அனைத்திற்கும் கடவுளே முதலாக இருக்கிறான்' என்ற கருத்தை அந்தக் குறள் சொல்கிறது. தமிழ் எழுத்துக்களுக்கு அகரம் முதலாவது போல என்று உவமை கூறாமல், எல்லா எழுத்துக்களுக்கும் அகரம் முதலாக நிற்றல் போல என்று கூறுவது வள்ளுவ ருடைய பரந்த அறிவையும் விரிந்த மனப்பான்மை யையும் புலப்படுத்துகிறது. கடவுளை எல்லாவற்றுக்கும் முதல்வன் என்று சொல்ல வருகிறவர், அந்த இலக்கணம் அவன் பெயரைக் கூறினாலே விளங்கும் என்பாரைப் போல, அந்த முதன்மையைக் காட்டும் ஆதிபகவன் என்ற பெயரால் கடவுளைக் கூறுகிறார்.

> ''அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
> பகவன் முதற்றே உலகு.''

அகரத்தை இறைவனுக்கு உவமையாகச் சொன்னதை வெவ்வேறு வகையில் உரையாசிரியர்கள் விளக்கிக் காட்டு கிறார்கள். அகரம் இயற்கையாக, எதனுடைய விகார மாகவும் இல்லாமல் இருக்கிறது; வாயைத் திறந்தாலே அகரம் ஒலிக்கிறது; அவ்வாறே இறைவன் சுதந்தரனாய், எந்தப் பொருளினுடைய விகாரமாகவும் இல்லாமல் விளங்குகிறான். அகரம் எல்லா எழுத்துக்களின் ஓசை யிலும் மறைந்தும், தெரிந்தும் கலந்திருக்கிறது; தனி யாகவும் இருக்கிறது. அ என்னும் போது அது தனியாக நிற்கிறது; இறைவன் எதனோடும் இணையாமல் தனியா கவும் இருக்கிறான். ப என்று சொல்லும் போது அதில் அகரம் இருக்கிறது; பகரத்தோடு இணைந்திருக்கிறது;

என்றாலும் தன் ஓசையைக் கட்டிக்கொண்டு நிற்கிறது. அப்படியே இறைவனும் பொருள்களோடு இணைந்தும் இணையாமலும் இருக்கிறான். தனி அகரம், உயிர் மெய் அகரம் (க, ங, ச போன்றவை) அல்லாத மற்ற எல்லா எழுத்துக்களிலும் அகரத்தின் ஒலி இருந்தாலும் மறைந்து நிற்கிறது. இறைவனும் பொருள்களில் இணைந்து கரந்து நிற்கிறான்.

அ என்ற ஒலி ஒன்றாக இருந்தாலும் அதற்குரிய வரிவடிவங்கள் வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. அல்லாறே இறைவன் ஒருவனே ஆயினும் வெவ்வேறு பெயர்களும் உருவங்களும் கொள் கிறான். ஒலிக்கு எழுத்து அடையாளமாக நிற்பதைப் போல, இறைவனுக்குப் பலபலவாக உள்ள குறிகளும் உருவங்களும் அடையாளங்களாக இருக்கின்றன.

**''அகர உயிர்போல அறிவாகி எங்கும்**
**நிகரில்இறை நிற்கும் நிறைந்து''**

என்று சைவ சாத்திரம் கூறுகிறது.

இப்படி இந்த உவமையை மேலும் மேலும் விரித்துக் கொண்டே போகலாம்.

வறுமையின் கொடுமையைச் சொல்ல வருகிறார் திருவள்ளுவர். இன்மையைப் போலக் கொடியது ஏதேனும் உண்டா என்று கேட்பவரைப் போல முதலில் ஒரு வினாவை எழுப்புகிறார்.

**''இன்மையின் இன்னாதது யாது?''**

என்பது அவர் கேள்வி. அதைக் கேட்டவுடன் நாம் பலவகை உவமைகளைச் சித்திக்கத் தொடங்குகிறோம். எதை எதையோ நினைக்கிறோம். நம்முடைய அனுபவத் தில் எது எது துன்பமாகத் தோன்றுகிறதோ அதையெல்

லாம் சொல்ல எண்ணுகிறோம். திட்டமாக இது தான் இதற்கு உவமை என்று சொல்ல முடியாமல் யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது, வள்ளுவர் தாமே அந்த வினாவுக்கு விடை அளிப்பவரைப் போலத் தொடங்குகிறார்.

**''இன்மையின் இன்னாதது யாது?—எனின்-''**

ஆம், திருவள்ளுவரே உவமை கூறப் போகிறார் என்று தோன்றுகிறது. அவர் உவமை கூறினால் அது சிறப்பாகத் தானே இருக்கும்? ஆகவே நாம் உவமையைத் தேடிச் சிந்திப்பதை விட்டு, அவர் என்ன சொல்லப் போகிறார் என்ற ஆவலோடு இருக்கிறோம். எனின் என்ற சொல் அந்த ஆவலை எழுப்பி விடுகிறது.

**''இன்மையின் இன்னாதது யாது?—எனின்,**
**இன்மையின்...''**

இதோ வள்ளுவர் சொல்லைத் தொடங்கி விட்டார். கேள்வி கேட்டவரே விடை கூறப் போகிறார். 'இன்மையைப் போல'' என்று ஆரம்பித்து விட்டார். அவர் எதை உவமை கூறப்போகிறாரோ என்று நம்மிடம் ஆர்வம் பெருகுகிறது. விரைவில் சொல்ல மாட்டாரா என்ற வேகம் பிறக்கிறது. அவர் கூறி முடித்து விடுகிறார்' எப்படி?

**''இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னாதது.''**

அவர் உவமையா கூறினார்? இன்மைக்கு உவமை காணப் புகுந்து, அதன் கொடுமைக்கு எதை எதையோ உவமையாக எண்ணி எண்ணி, அவற்றுள் ஒன்றும் அதன் கொடுமைக்கு அருகில் வரமுடியாதென்பதை உணர்ந்து, இறுதியில் அதற்கு அதுவே ஒப்பு என்று சொல்லி முடித்து விடுகிறார். 'இன்மை எல்லாவற்றிலும்கொடியது'

என்று சொல்லியிருந்தால் இத்தனை ஆவலும் சுவையும் உண்டாகுமா?

இவ்வாறு அவர் கவிச் சுவை பொதுளும்படி ஆளும் முறைகள் பலப்பல.

திருக்குறளுக்கு வேறு எந்த நூல்களுக்கும் இல்லாத சிறப்புக்கள் பல உண்டு.

குறளால் ஆன பழைய விரிவான நூல் இது ஒன்று தான்.

(2) தமிழின் முதல் எழுத்தாகிய அகரத்தில் தொடங்கி, இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதில் நூல் முடிகிறது.

**''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு''** (1)
**''ஊடுதல் காமத்துக் கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்.''** (1330)

(3) பழங்காலத்தில் பத்துப் பேர்கள் இதற்கு உரை எழுதியுள்ளனர். அவற்றுள் சிறந்தது பரிமேலழகர் உரை. பிற்காலத்தில் இதற்கு உரை எழுதியவர்கள் எத்தனையோ பேர். இவ்வளவு பேர்கள் உரை எழுதிய நூல் வேறு ஏதும் இல்லை.

(4) சிறப்புப் பாயிரப் பாடல்கள் பல சேர்ந்து திருவள்ளுவமாலை என்ற பெயரோடுஒரு தனி நூலாகவே அமைந்திருக்கின்றன. இதுவும் இதன் தனிச் சிறப்பு.

(5) எல்லாச் சமயத்தினரும் போற்றும் பெருமையுடையது இது.

(6) பிற மொழிகளில் பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களுக்குள், மிகுதியான மொழி பெயர்ப்புக்களை உடையது.

(7) நீதி நூலாக இருப்பதோடு கவிச் சுவையும் உடையதாக விளங்குவது.

(8) குறளை விளக்கும் வகையில் திருக்குறட்பாக்களைப் பின்னே வைத்து முன்னே எடுத்துக் காட்டுக்களைக் கொண்ட சினேந்திரவெண்பா முதலிய 14 நூல்கள் உள்ளன. இப்படி வேறு எந்த நூலுக்கும் அமைந்ததில்லை.

அறத்துப்பாலில் தனி மனிதனுடைய ஒழுக்கத்தையும் பொருட்பாலில் சமுதாய ஒழுக்கத்தையும் காமத்துப்பாலில் ஒருவனும் ஒருத்தியும் உள்ள ஒன்றிக் காதல் செய்யும் ஒழுக்கத்தையும் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

அறத்துப்பாலும் பொருட்பாலும் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுக்கின்றன. காமத்துப்பாலோ காதல் இலக்கியமாகவே அமைந்திருக்கிறது.

இவ்வளவு அற்புதமான நூல் எந்த மொழியில் இருந்தாலும் அந்த மொழிக்குச் சிறப்பைத் தரும். திருக்குறளால் தமிழின் புகழ் உலகம் எங்கும் பரவிக் கொண்டே வருகிறது. தம் தம் மொழியில் திருக்குறள் மொழி பெயர்ப்பைப் படித்தவர்கள் அதன் சிறப்பை அறிந்து, ''இதை மூல நூலாகப் பெற்ற மொழி எது?'' என்று ஆய்ந்து, தமிழ் என்று தெரிந்து பாராட்டுகிறார்கள். உலகம் முழுவதும் ஓதிப் பயன் பெறுவதற்கு ஏற்றது இந்த அரிய நூல் என்ற கருத்தை எண்ணியே.

**''வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.''**

என்று பாடினார் பாரதியார்.

# 32. திரிகடுகம்

சரியாக எழுத்துக்களைச் சேர்த்துப் படிக்காமல், தாறுமாறாக எழுத்துக்களைக் கூட்டி ஒருவன் படித்தால், "என்னடா இது? சுக்குமொ—ளகுதிப்—பிலி என்று படிக்கிறாயே" என்று சொல்வது வழக்கம். சுக்கு, மிளகு, திப்பிலி என்று பிரித்துப் படிப்பது முறை. இந்த உதாரணம் திரிகடுகம் என்ற மூன்று சரக்குகளைச் சுட்டுகிறது. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றுக்கும் திரிகடுகம் என்று பெயர் இந்த மூன்றினால் அமைந்த மருந்துக்கும் திரிகடுகம் என்று பெயர்.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய திரிகடுகம் என்பது ஒவ்வொரு பாட்டிலும் மூன்று மூன்று கருத்துக்களைச் சொல்வதால் அந்தப் பெயரை உடையதாயிற்று. இதனை இயற்றியவர் நல்லாதனார் என்பவர். அவர் திருத்து என்னும் ஊரைச் சேர்ந்தவர். கடவுள் வாழ்த்தாக உள்ள பாடல் திருமாலின் புகழைச் சொல்வதால் அவர் திருமாலை வழிபடுகிறவர் என்று தெரிகிறது.

ஒவ்வொரு பாடலிலும் மூன்று கருத்துக்களைச் சொல்லி, 'இம்மூன்றும் இத்தகையவை' என்று அவற்றினூடே உள்ள பொதுமையை இறுதியடியில் சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.

திரிகடுகமாகிய மூன்று மருந்துப் பண்டங்களைப் போல மூன்று கருத்துக்களைக் கூறி நன்மை செய்வது

இந்த நூல் என்பதை இதற்கு அமைந்த சிறப்புப்பாயிரம் ஒன்று தெளிய வைக்கிறது.

**''உலகில் கடுகம் உடலின்நோய் மாற்றம்;**
**அலகில் அகநோய் அகற்றும் நிலைகொள்**
**திரிகடுகம் என்னும் திகழ்தமிழ்ச் சங்கம்**
**மருவும்நல் லாதன் மருந்து''**

என்பது அந்தப் பாடல். இந்த நூலின் முதற்பாட்டிலும் இந்தக் கருத்தை ஆசிரியர் குறிப்பிக்கிறார். 'அருந்ததி போன்ற கற்புடைய மங்கையரின் தோளும், பழங்குடிப் பிறந்து சிறப்புற்றார்களுடைய உறவும், நம்முடைய சொற்களில் உள்ள குறைகளைப் போக்கும் கேள்விச் செல்வர்களுடைய நட்பும் திரிகடுகம் போன்ற மருந்து" என்று அந்தப் பாட்டில் சொல்கிறார்.

**''அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய**
**தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் சொல்லின்**
**அரில் அகற்றும் கேள்வியார் நட்பும்இம் மூன்றும்**
**திரிகடுகம் போலும் மருந்து ''**

கடவுள் வாழ்த்திலும் மூன்று செய்திகளைச் சொல்கிறார். காயாம்பூ மேனியனாகிய கண்ணனுடைய திருவடிப் பெருமையைச் சொல்ல வருகிறார். அது ஞாலத்தை அளந்தது, குருந்த மரத்தைச் சாய்த்தது, சகடாசுரனை உதைத்தது. இந்த மூன்று செயல்களையும் எடுத்துக் காட்டி, கடவுள் வாழ்த்தையும் மற்றப்பாடல்களின் போக்கிலே மூன்றைச் சொல்லும் செய்யுளாகவே அமைத்து விடுகிறார் ஆசிரியர்.

**''கண் அகன் ஞாலம் அளந்ததூஉம், காமருசீர்த்**
**தண் நறும் பூங்குறுந்தம் சாய்த்ததூஉம்-நண்ணிய**
**மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்**
**பூவைப்பூ வண்ணன் அடி.''**

'இம்மூன்றும், அறியாமையால் வரும் கேடு' என்று மூன்று கருத்துக்களை இணைத்துச்சொல்கிறார். அறிவின்மையால் செய்கிற தீய செயல்கள் மூன்றை அங்கே சொல்கிறார். படிக்காத பேதையர்களுக்கு நண்பனாக இருத்தல், கோபம் கொண்ட மனைவியைக் கோலால் அடித்தல், சிறுமையான குணம் உடையவர்களை வீட்டுக்குள் அழைத்துச் செல்லுதல் ஆகிய இம்மூன்றும் முட்டாள் தனமான காரியங்களாம்.

**''கல்லார்க்கு இனனா ஒழுகலும் காழ்க்கொண்ட**
**இல்லாளைக் கோலால் புடைத்தலும் இல்லம்**
**சிறியாரைக் கொண்டு புகலும் இம் மூன்றும்**
**அறியாமை யால்வரும் கேடு.''**

முட்டாள் என்று நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொல் முற்றாள் என்பதன் திரிபு. அவன் தன் உடம்பு முழுதும் ஆளாக இருப்பவனே அன்றி, அறிவுக்கு இடமில்லை என்பது கருத்து. அதையே முழுமகன் என்றும் சொல்வார்கள். முட்டாள்கள் முழுமக்கள் என்று திரிகடுகம் ஆசிரியர் குறிக்கிறார். அவர்களைப் பற்றி இரண்டு பாடல்களை அவர் சொல்கிறார்.

பெருமையை உடையவர்கள் தொடர்பினின்றும் நீங்குவது, தமக்கு உரிமையில்லாத அயற்பெண்டிரை விரும்புதல், மேலானவை அல்லாதவற்றைச் செய்யத் துணிதல். ஆகிய மூன்றும் முட்டாள்கள் விரும்பிச் செய்யும் காரியங்களாம். இப்படி 9-ஆவது பாடலில் சொல்லியிருக்கிறார்.

யார் யார் முட்டாளாகச் சொல்வதற்குரியவர்கள்? 87-ஆம் பாட்டில் அதைச் சொல்கிறார். 'கொலைத் தொழிலுக்கு அஞ்சாதவன் கல்வியில்லாதவர்களுடைய கூட்டத்தில் சேர்ந்து கொள்பவன், ஒரு முயற்சியும்

செய்யாமல் இருந்து கொண்டு முன்னோர் ஈட்டிய செல்வத்தைக் குறையச் செய்பவன் இம் மூவரும் முட்டாள்கள் ஆக்கத்தக்கவர்' என்கிறார். இப்படியே மேல் முறையாளர் தொழில் இவை என்று மூன்றைச் சொல்லுவார் (2); சாகப் போகிறவன் காரியங்கள் என்று மூன்றைச் சேர்த்துரைப்பார் (4); அருந் துயரம் காட்டும் நெறி என்று மூன்று செய்கைகளைச் சொல்வார். (5)

மக்களுக்குக் கல்வி இன்றியமையாதது. கல்வியைக் கற்பிக்கிறவன் ஆசிரியன். ஆசிரியன் இருந்தால் சும்மா இருக்க மாட்டான்; மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பித்து வருவான். கல்வியில்லாத மக்கள் ஓரூரில் இருந்தால் அந்த ஊரில் நன்மையே உண்டாகாது. இப்படியே, அவைக் களத்தில் மூத்தோர்கள் இல்லாவிட்டால் அந்த அவைக்களத்தினால் எந்தப் பயனும் உண்டாகாது. உண்ணும் போது பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்பதை இல்லறத்தின் இன்றியமையாத பண்பாகச் சொல்வார்கள். அத்தகையவர்கள் அருகிருக்க வாழ்ந்தால் அவர்களால் நன்மை உண்டாகும். தம் வயிற்றையே நிரப்பிக் கொள்ளும் சுயநல வாதி அடுத்த வீட்டுக் காரனாக இருந்தால் நமக்கு என்ன நன்மை? இந்த மூன்று கருத்தையும் இணைத்து, 'நன்மை பயத்தல் இல்' என்று சொல்லுகிறார்.

**"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும் பாத்துண்ணாத்**
**தன்மையி லாளர் அயல்இருப்பும் இம்மூன்றும்**
**நன்மை பயத்தல் இல."**

நாடகம் ஆடுகிறவனுக்கும் பாடத் தெரிந்திருக்க வேண்டும். குடிநீரின் பொருட்டுக் கிணறு வெட்டியவன் சாவா உடம்பாகிய புகழுடம்பை அடைவான். நமக்கு

வரும் வருவாயில் கால் பங்கு பிறருக்குக் கொடுத்து வாழ வேண்டும். தர்மத்துக்கு விட்ட சொத்துக்களைப் பற்றிக் கொண்டவனது வீட்டில் கற்றறிந்த பெரியோர்கள் உண்ணமாட்டார்கள். சூதாட்டத்தில் வரும் பொருளுக்காக ஆசைப்படாமல் இருப்பதும் உழவிலே ஆசை வைத்து முயற்சி செய்வதும் வேளாண் குடிக்கு அழகு. விருந்தாளியில்லாமல் சாப்பிடுவது கூடாது; அப்படி உண்ணும் நாள், நோய் வந்த நாளைப் போன்றது. கல்வி மறுமைக்கும் உதவியாக இருக்க வேண்டும். தாய்ப்பால் உண்ணாத குழவி வறுமையை உடையது. ஈவதன் பொருட்டே பொருளை ஈட்ட வேண்டும். படித்தவர் அறநெறியில் ஒழுகும்படி செய்வதற்காகவே பெருநூலை இயற்ற வேண்டும்-இப்படிப் பல செய்திகளும் நீதிகளும் இடையிடையே வருகின்றன.

கற்புடைய பெண்மணி கடமையாகக் கொள்ள வேண்டிய இவை என்று ஒரு பாட்டில் சொல்கிறார். நல்விருந்து ஓம்ப வேண்டும்; அதனால் அவள் தோழியைப் போல இருப்பாள். வீட்டில் உள்ளவர்களை நாள்தோறும் அன்போடு காப்பாற்றுவதால் தாயைப் போன்றவள். பழங்கால முதல் புகழ் பெற்று வரும் குடி வளரும் பொருட்டுக் குழந்தைகளைப் பெறுவதால் அவள் மனைக் கிழத்தி ஆகிறாள். இவ்வாறு மூன்று நிலைகளைச் சொல் கிறார்.

**''நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம்; வைகலும்**
**இற்புறம் செய்தலின் ஈன்றதாய்; தொல்குடியின்**
**மக்கட் பெறலின் மனைக்கிழத்தி; இம்மூன்றும்**
**கற்புடையாள் பூண்ட கடன்''**

கற்புடைய மங்கையர் பெருமையை எடுத்துச் சொல்ல வந்த திருவள்ளுவர், ''வேறு தெய்வத்தைத் தொழாமல் தன் கணவனையே கடவுளாக எண்ணித்

தொழுது எழும் பெண்மணி, 'மழையே, நீ பெய்' என்றால் பெய்யும்'' என்று சொல்கிறார். ''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை'' என்பது குறள். வேறு நூல்களிலும் மழை வேண்டு மானால் பெய்யச் செய்யும் ஆற்றலுடையவர்கள் கற்புடைப் பெண்டிர் என்ற கருத்து வருகிறது.

பெய்யென்றால் மழையைப் பெய்யச் செய்யும் ஆற்ற லுடையவர் கற்புடை மங்கையர் மட்டும் அல்லர்; வேறு இருவகையினரும் அத்தகைய அற்புதத்தை நிகழ்த்தக் கூடியவர்களாம். கற்புடை மகளிரையும் சேர்த்து மூவரைச் சொல்கிறார் திரிகடுகத்தின் ஆசிரியர். தன்னைக் கொண்ட கணவனுடைய உள்ளக் குறிப்பை அறிந்து ஒழுகும் கற்புடை மங்கை பெய் என்றால் மழை பெய்யும். தான் மேற்கொண்ட தவத்தை எவ்வாறு கடைப் பிடித்துச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்கிறவன் தவசி; அவன் பெய் என்றால் மழை பெய்யும். கொடிய செயல்களைச் செய்யாமல் விட்டு விட்டு நல்ல காரியங் களையே செய்பவன்தான் நியாயமான அரசன்; அவன் மழையைப் பெய்யச் செய்யும் பெருமையை உடைவன்.

> ''கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி; கொண்டஅ
> செய்வகை செய்வான் தவசி; கொடிதுஒரீஇ
> நல்லவை செய்வான அரசன்; இவர்மூவர்
> பெய்எனப் பெய்யும் மழை.''

கல்வியின் பெருமையையும், கல்லாமையின் இழி தகவையும் பல பாடல்களில் சொல்கிறார் நல்லாதனார்.

ஒரு பாட்டில், 'வாய்ப் பகையுள், சொல்வென்றி வேண்டும் இலிங்கியும்' கல்வி புணை கைவிட்டவன் என்று சொல்கிறார். 'வாக்கு வாதம் செய்யும் சொற் போரில் வாக்கு வன்மையில் வெற்றியைப்

விரும்பும் இலிங்கி கல்வியென்னும் புணையைக் கை விட்டான்' என்பது பொருள். இங்கே இலிங்கி என்பது சைவ சமயத்தினனைக் குறிக்கும். இவர் வைணவ ராதலின் 'வெறும் வாய்ச் சொல்லை உடையவன் இலிங்கத்தை வழி படும் சைவன்' என்று இழிவாகக் கூறினார் போலும்!

நுட்பமும் திட்பமும் ஆகிய பல கருத்துக்களை அடைவு படுத்திக் கூறும் இந்த நூலில் உள்ள பாடல்களின் அடிகள் தனித்தனியே புலவர் பேச்சில் அடிக்கடி வரும். அதனால் இந்த நூல் தமிழ்நாட்டில் நன்றாகப் பரவிய பெருமையை உடையது என்பது தெளிவாகும்.

# 33. ஆசாரக் கோவை

இன்னபடி நடக்க வேண்டும், இன்னபடி நடக்கக் கூடாது என்று விதிகளையும் விலக்குகளையும் சொல்லும் நூல்களுக்குத் தர்ம சாஸ்திரம் என்று வடமொழியில் பெயர் சொல்வார்கள். வட மொழியில் பல தர்ம சூத்திரங்கள் உண்டு. மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகளும் உண்டு. அவற்றை ஒருவாறு ஆராய்ந்து, இன்னபடி நாம் ஒழுக வேண்டும் என்று நூறு வெண்பாக்களால் சொல்லும் இந்த நூல் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார் என்னும் புலவர் இயற்றியது. இவர் முனிவர்கள் இயற்றிய நூல்களை ஆராய்ந்து, யாரும் அறியும் வகையில் முக்கியமானவற்றைத் தொகுத்து இந்நூலை இயற்றினார் என்று இதற்குள்ள சிறப்புப் பாயிரத்தால் தெரிய வருகிறது.

**"ஆர்எயில் மூன்றும் அழித்தான் அடிஏத்தி**
**ஆரிடத்துத் தான்அறிந்த மாத்திரையான் ஆசாரம்**
**ஆரும் அறிய அறன்ஆய மற்றவற்றை**
**ஆசாரக் கோவை எனத்தொகுத்தான், தீராத்**
**திருவாயில் ஆய திறல்வண் கயத்தூர்ப்**
**பெருவாயில் முள்ளிஎன் பான்."**

இதனால் இவர் சிவபெருமானை வழிபடுகிறவர் என்பதும், கயத்தூரை அடுத்த பெருவாயில் என்னும் ஊரினர் என்பதும் தெரியவருகின்றன. ஆரிடம் என்பது ரிஷிகளால் செய்த நூலைக் குறிக்கும்.

ஆசாரம் என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள்; அச்சொல்லை இவ்வாசிரியர் முதற் பாட்டிலும் இறுதிப் பாட்டிலும் இடையில் இரண்டு பாடல்களிலும் ஆள்வர். இரண்டடியாலாகிய குறள் வெண்பா ஒன்றும்; மூன்றடியாலாகிய சிந்தியல் வெண்பா ஐம்பத்து மூன்றும், நான்கடியாலாகிய இன்னிசை நேரிசை சவலை வெண்பாக்கள் முப்பத்தொன்பதும், ஐந்தடியாலாகிய பஃறொடை வெண்பா ஏழும் ஆக நூறு வெண்பாக்கள் இந்த நூலில் உள்ளன.

மக்கள் வாழ் நாளில் மேற்கொள்ள வேண்டிய குணங்களையும், காலை முதல் மாலை வரையில் செய்யத் தக்கவற்றையும், தகாதவற்றையும், பெரியோர் முன் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதையும், இன்ன இன்ன இடங்களில் இன்ன இன்ன காரியங்களைச்செய்தல்கூடாது என்பதையும், இவை போன்ற பலவற்றையும் இந்நூல் சொல்கிறது. நீராடுவது, உண்பது, உறங்குவது போன்றவற்றை எவ்வாறு செய்ய வேண்டும் என்று நியமிக்கும் பாடல்கள் சில சொன்ன செய்திகளைத் தொகுத்து இத்தனை என்று எண்ணிக்கையால் சுட்டிச் சொல்லும் பாடல்கள் பல.

எல்லா ஒழுக்கங்களுக்கும் அடிப்படையானவை எட்டு என்று முதற்பாட்டிலே சொல்கிறார். 'நன்றியறிவு, பொறுமை, இன்சொல், அஹிம்சை, கல்வி, ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்லவர் நட்பு இந்த எட்டும் ஆசாரத்துக்கு வித்துப் போன்றவை' என்கிறார்.

**''நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு**
**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**
**நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்**
**சொல்லிய ஆசார வித்து''**

எவ்வெப்பொழுது நீராட வேண்டும்? தெய்வத்தைத் தொழுவதற்கு முன்னும், தீக்கனாக் கண்டபோதும், தீட்டு உண்டான போதும், வாந்தி எடுத்த சமயத்திலும், மயிர் களைந்த காலத்திலும், உண்ணுவதற்கு முன்னும், துயிலெழுந்த பின்னரும், இன்பம் துய்த்த பின்னரும், தூயரல்லாத மக்கள்மேல் பட்ட போதும், மயக்கம் உண்டான போதும் நீராட வேண்டும்.

நீராடுவதைப் பற்றி வரும் ஆசாரக் கருத்துக்கள் வருமாறு:

ஆடையின்றி நீராடக் கூடாது; உடுத்த ஆடையை நீரில் பிழியக் கூடாது; நீர்க்குள் தம் நிழலைப் பார்க்கக் கூடாது; நீராடும்போது நீந்தக் கூடாது; நீரில் உமிழக் கூடாது; குதித்துக் கூத்தாடக் கூடாது; விளையாடக் கூடாது; தலைமுழுகாமல் நீராடக்கூடாது.

உண்பதைப் பற்றிய விதிகள் பல :

உண்ணும்போது ஒற்றை ஆடை மட்டும உடுத்திருக்கக் கூடாது; நீராடி, காலை அலம்பி, வாயைக் கழுவி, நிலத்தைத் தூயதாக மண்டலம் செய்து உண்ண வேண்டும்; காலில் ஈரம் இருக்கும்போது உண்க; கிழக்குத் திசை நோக்கி உண்க; தூங்காமல் அசையாமல் நன்றாக அமர்ந்துகொண்டு, வேறு எதையும் பாராமல், பேசாமல், இறைவனை நினைந்து, உணவைச் சிந்தாமல் உண்ண வேண்டும்; விருந்தாளிகளுக்கும் மூத்தவர்களுக்கும் பசுவுக்கும் பறவைகளுக்கும் குழந்தைகளுக்கும் உணவு அளித்த பிறகே உண்ண வேண்டும்; படுத்துக் கொண்டும் நின்றுகொண்டும் வெட்ட வெளியிலும் ஒழுக்க முடையார் உண்ணமாட்டார்கள்; அதிகமாக உண்ணார்; கட்டில்மேல் உண்ணார்; பெரியவர்கள் உண்பதற்கு முன் உண்ணார்.

கசப்பான பொருளைக் கடைசியிலும் தித்திப்பான வற்றை முதலிலும் மற்றவற்றை இடையிலும் உண்ண வேண்டும்; விருந்தாளி இல்லாமல் தாம் உண்ணுவதற்காக மட்டும் உலை ஏற்ற மாட்டார்கள்; வீட்டில் காகபலி, இறைவனுக்கு நிவேதனம் ஆகியவை செய்த பின் உண்க.

திருமணம், தெய்வத் திருவிழா, பிதிர் காரியம் செய்யும் நாள், வேள்வி என்ற ஐந்து சமயங்களிலும் விருந்தினரை உண்பிக்க வேண்டும். உணவைப் பழித்தல் கூடாது.

வேறு சில முக்கியமான விதிமுறைகள் வருமாறு:

தலையில் தேய்த்துக் கொண்ட எண்ணெயை உடம்பில் தடவிக் கொள்ளக் கூடாது. செருப்பை இரவல் வாங்குவது தவறு. பௌர்ணமியில் மரத்தை வெட்டுதல் கூடாது. இரண்டு கையால் தண்ணீர் பருகக் கூடாது. உடம்பில் இரு கையாலும் சொறியக் கூடாது. வடக்குத் திசையிலும் கோணத் திசையிலும் தலை வைத்துப் படுப்பது நன்றன்று. பகலில் தெற்கு நோக்கியும் இரவில் வடக்கு நோக்கியும் சிறுநீர் கழித்தல் பிழை. காலோடு காலைத் தேய்த்தல் கூடாது. படியைக் கவிழ்த்து உட்காரக் கூடாது. மணையைக் கவிழ்க்கக் கூடாது. பாழ்மனை யிலும், கோவிலும், சுடுகாட்டிலும், ஊரில்லாத இடத்தில் முளைத்த தனிமரத்தடியிலும் தனியாகப் போகக்கூடாது. தாய், மகள், உடன் பிறந்தாள் ஆனாலும் அவர்களோடு தனியாக இருத்தல் தீங்கு பயக்கும்.

பெரியவர்கள் வீட்டிலும் கோயிலிலும் தாய் தந்தையர் வந்தாலும் வணங்குவது முறையன்று. பெரிய வர்களுக்கு முன் சிரித்தல், கொட்டாவி விடல், காறித் துப்புதல், தும்முதல் இவை செய்தல் கூடாது.

பாம்பு, அரசன், நெருப்பு, சிங்கம் - இந்த நான்கும் இளமையுடையன, எளியனவாக இருக்கின்றன, பழக்கப் பட்டவை என்று எண்ணிக் கவனக்குறைவாக இருந்தால் ஆபத்து உண்டாகும். ஒருவர் தலையில் அணிந்த பூவை அணிவதும், மோந்து பார்த்த பூவைச் சூடுவதும் கூடா.

தன் உடம்பையும், மனைவியையும், அடைக்கலம் என்று புகுந்தோரையும், உயிர் வாழ்வதற்காகச் சேமித்து வைத்த பொருளையும் பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தெய்வத்தைப்போல எண்ணித் தொழுது எழவேண் டியவர்கள் ஐவர். அவர்கள் அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் ஆகிய இவர்கள்.

**''அரசன், உவாத்தியான், தாய்தந்தை, தம்முன்,**
**நிகர்இல் குரவர்இவர் ஐவர்; இவர்இவரைத்**
**தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே**
**யாவரும் கண்ட நெறி.''**

எந்த எந்த இடங்களில் எச்சில் உமிழக் கூடாது? மலசலம் கழிக்கக் கூடாது? பசுமாடு மேயும் புல்வெளி, பயிர் விளையும் இடம், சாணம் உள்ள இடம், சுடுகாடு, நடக்கும் வழி, தீர்த்தம், கோயில், நிழல் உள்ள இடங்கள், பசுக்கொட்டில், சாம்பல் உள்ள இடம் என்று பத்து இடங்களைச் சொல்கிறார்.

பஞ்ச மகாபாதகங்கள் எவை? பிறர் மனைவிழைதல், கள், களவு, சூது, கொலை என்பன.

பொய், கோள் சொல்லுதல், திருடுதல், பொறாமை இந்த நான்கையும் தெளிவான அறிவுடையார் சிந்திக்க மாட்டார்களாம். சிந்தித்தால் பிச்சை வாங்க நேரும், நரகத்தில் வீழ நேரும்; தெய்வம் தண்டிக்கும்.

**''பொய், குறளை, வெளவல், அழுக்காறு இவைநான்கும்**
**ஐயம்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்**
**ஐயம் புகுவித்து அருநிரயத்து உயர்த்திடும்;**
**தெய்வமும் செற்று விடும்''**

மகளிரோடு சேரக்கூடாத காலம் இவை என்று ஒரு பாடல் சொல்கிறது. உச்சிப்போது, நள்ளிரவு, காலைச் சந்தி, அந்திமாலை, தாயின் சிராத்தநாள், தந்தையின் சிராத்தநாள், பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி, பிறந்தநாள் ஆகியவை உடனுறைவுக்கு ஆகாதவையாம்.

உயர்ந்த நிலைமை, ஆண்மை, கல்வி, நல்ல குடிப் பிறப்பு இவை உடையவர்களை அறிந்து கொள்வதற்கு ஏற்ற அடையாளங்கள் எவை? அவர்களை உடையாலும் நடையாலும் கண்டு கொள்ளலாம்; சொல்லின் செல்வாக்கினாலும் உணரலாம்; அவர்கள் வையும் வசவில்கூட இனம் கண்டு கொள்ளலாம்.

**''உடை, நடை, சொற்செலவு, வைதல் நான்கும்**
**நிலைமைக்கும் ஆண்மைக்கும் கல்விக்கும் தத்தம்**
**குடிமைக்கும் தக்க செயல்''**

இவற்றில் வைதல் என்பது மிக நுட்பமானது. இழிந்தவர்கள் வையும் வசவுக்கும், உயர்ந்தவர்கள் வையும் வசவுக்கும் நன்றாக வேறுபாடு தெரியும்.

விருந்தாளிகள் வந்தால் அவர்களுக்கு உணவு மட்டும் ஊட்டினால் போதுமா? அவர்களுக்கு ஐந்து வகையாக உபசாரம் செய்ய வேண்டுமாம். புன்னகை பூக்க வேண்டும்; இனிய உரை பகர வேண்டும்; கால் நீர் தந்து வரவேற்க வேண்டும்; மனையில் இருக்கச் செய்ய வேண்டும்; பாயும் கட்டிலும் கொடுக்க வேண்டும்.

**"முறுவல், இனிதுரை, கால்நீர், மணை: பாய்,**
**கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப, தலைச்சென்றார்க்கு**
**ஊணொடு செய்யும் சிறப்பு."**

நாம் ஒரு வழியில் நடந்து போகிறோம்; எதிரே சிலர் வருகிறார்கள். அவர்களுக்கு வழிவிட்டு நடக்கவேண்டு மாம். அப்படி வழி விடுவதற்குரியவர்கள் அந்தணர், முனிவர், சுமை தூக்கி வருபவர், நோயாளிகள், இளங் குழந்தைகள், பசு, மகளிர்.

இப்படிப் பல வகையான ஆசாரங்களை ஆசிரியர் தொகுத்துச் சொல்கிறார். அவை முழுவதும் இக்காலத் துக்கு ஏற்புடையவை என்று சொல்ல முடியாவிட்டாலும் இக்காலத்திலும் மேற்கொள்வதற்குரிய பல கருத்துக்கள் உள்ளன. மற்றவை, அவ்வக் காலத்தின் நிலைக்கு ஏற்பக் கடைப் பிடித்துவந்தவை என்று தெரிந்து கொள்ள உதவும்.

# 34. பழமொழி

நாட்டில் படித்தவர், படியாதவர், ஆண், பெண், குமரன், கிழவன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் தெரிந்தவை பழமொழிகள். மனிதர்கள் தம் அநுபவத்தால் தெரிந்தவற்றை எளிதான சுருங்கிய வடிவத்தில் அமைத்துச் சொல்ல, பழங்கால முதலே வழங்கி வருபவை பழமொழிகள். பழமொழிகளில் ஒரு நாட்டின் பண்பாட்டையே காணலாம். மனித வாழ்க்கைக்கே பொதுவான பழமொழிகளும் சில வகுப்பினருக்கு உரிய பழமொழிகளும் சில தொழிலைப் பற்றிய பழமொழிகளும் என்று அவை பல வகைப்படும். மிக நுட்பமான வேதாந்தக் கருத்தைச் சொல்லும் பழமொழிகளும் உண்டு. சபையிலே சொல்லத்தகாத இடக்கர்ப் பழமொழிகளும் உண்டு. தமிழில் வழங்கும் பழமொழிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றான பழமொழி என்னும் நூலில் நானூறு வெண்பாக்கள் இருக்கின்றன. அதனால் அதற்குப் பழமொழி நானூறு என்ற பெயரும் வழங்கும். ஒவ்வொரு வெண்பாவிலும் இறுதியில் ஒரு பழமொழி இருக்கும். அந்தப் பழமொழியின் கருத்தை விளக்கும் பகுதி வெண்பாவின் முதலில் இருக்கும். இடையில் ஆடவர் ஒருவரை விளித்துச் சொல்லும் ஆடூஉ

முன்னிலையும், பெண்ணை விளித்துச் சொல்லும் மகடூஉ முன்னிலையும் சில பாடல்களில் இருக்கும்.

இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது அவர் ஊரென்றும், அரையனார் என்பது அவர் பேரென்றும் கொள்ள வேண்டும்.

**"பிண்டியின் நீழற் பெருமான் அடிவணங்கிப்**
**பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா**
**முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்,**
**இன்துறை வெண்பா இவை"**

என்ற சிறப்புப் பாயிரத்தால் அவர் சைன சமயத்தினர் என்று தெரிய வருகிறது.

பழமொழிகளை ஈற்றில் வைத்துப் பாடிய தண்டலையார் சதகம், கோவிந்த சதகம், இரத்தின சபாபதி மாலை முதலிய நூல்கள் தமிழில் இருந்தாலும் இந்தப் பழமொழி நானூறு எல்லாவற்றுக்கும் முந்தியது. அக்காலத்திலே புலவர்களுக்குப் பழமொழியிடம் இருந்த மதிப்பு இதனால் தெரிய வருகிறது.

பழமொழி நானூற்றில் நானூறு பழமொழிகள் வருகின்றன. அவற்றில் இக்காலத்தில் வழங்காத பல பழமொழிகளைக் காணலாம். செய்யுளில் அமைக்கும் போது வழக்கிலுள்ள சொற்களை அப்படியே வைத்துப் பாட முடியாது. ஆதலால் அந்தப் பழமொழிகள் எந்த வடிவத்தில் அக்காலத்தில் வழங்கின என்று தெரியவில்லை. இக்காலத்தில் வழங்கும் பழமொழிகள் வேறு உருவத்தில் வேறு சொற்களோடு அமைந்திருக்கின்றன.

இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. முதல் இரு நூறு செய்யுட்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தலைமையாசிரியராக இருந்த திரு நாராயணையங்கார் எழுதிய அழகான உரை ஒன்று உண்டு. அதில் இந்

நூலில் உள்ள பழமொழிகள் இக்காலத்தில் எப்படி வழங்குகின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

'பாம்பறியும் பாம்பின் கால்' என்ற பழமொழி இப்போதும் வழக்கில் உள்ளது. அந்தப் பழமொழிக்குக் கருத்துக் கூறி அதை இறுதியிலே வைத்து அமைத்த பாட்டு இது:

**''புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்**
**புலம்மிக் கவர்க்கே புலனாம்;—நலம்மிக்க**
**பூம்புனல் ஊர, பொதுமக்கட்கு ஆகாதே;**
**பாம்பறியும் பாம்பின கால்.'' (1)**

'அறிவினால் மிகுந்தவருடைய புலமையைத் தெரிந் துணர்தல் என்பது அறிவில் மிக்கவர்க்கே தெளிவாகும். நன்மை மிக்க பொலிவையுடைய புனல் வளம் பெற்ற ஊருக்குத் தலைவனே, சாதாரண மக்களுக்கு இந்தத் தெளிவு உண்டாகாது. பாம்பு அறியும் பாம்பின் கால்' என்பது இதன் பொருள். இப்பாட்டில், 'நலம் மிக்க பூம்புனல் ஊர' என்பது ஆடூஉ முன்னிலை.

அந்தக் காலத்தில் மாட்டை ஓட்டக் கறக்க மாட்டார்கள்; கன்றுக்கு வேண்டியதை விட்டு விட்டே கறப்பார்கள். ஆகையால் அந்தப் பழங்காலத்தில், ''கன்று சாகக் கறப்பார் உண்டோ?'' என்ற பழமொழி எழுந்தது. சென்னைக்கு வந்து இப்போது பார்த்தால், கன்றைச் சாகச் செய்து அதன் தோலுக்குள் வைக்கோலை அடைத்துப் பசுவை ஏமாற்றிக் கறக்கும் காட்சியைக் காணலாம். அந்தப் பழமொழி இந்தக் காலத்துக்கு உதவாமல் போயிற்று. ஆனாலும் பழமொழி பழமொழி தானே? புலவர் அதை எப்படி வைத்துச் சொல்கிறார் பாருங்கள்.

'நட்புப் பொருந்தித் தாம் ஒரு நல்ல நிலையில் நிறுத்தி வாழச் செய்தவர்களை, நேரே கண்ட பிழைகள் அவர்களிடம் இருந்தன என்றாலும், கோபித்து வெறுக்க மாட்டார்கள். தம்முடைய கன்று சாகும்படி தாய்ப் பசுவின் பாலைக் கறப்பார் யார் இருக்கிறார்கள்?'' என்ற பொருளுடையதாக அமைகிறது அந்தப் பாடல்.

> ''நண்புஒன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
> கண்கண்ட குற்றம் உளஎனினும் காய்ந்தீயார்;
> பண்கொண்ட தீஞ்சொற் பணைத்தோளாய், யார்உளரோ
> தம்கன்று சாக்கறப் பார்?''

[காய்ந்தீயார்-காயார்; வெறுக்க மாட்டார்கள். பண் கொண்ட தீஞ்சொல் பணைத் தோளாய்-இராகத்தின் தன்மையைக் கொண்ட இனிய சொல்லையும் மூங்கிலைப் போன்ற தோளையும் உடைய பெண்ணே; இது மகடூஉ முன்னிலை; பணை-மூங்கில், சாக்கறப்பார்- சாவக் கறப்பவர்.]

'சர்க்கரையோடு சேர்ந்த மணலைத் தின்னலாமோ?' என்று ஒரு பழமொழி முன்பு வழங்கியிருக்க வேண்டும் 'தினல் ஆமோ அக்காரம் சேர்ந்த மணல்' என்று அந்தப் பழமொழியைப் பாட்டுக்கு ஏற்ற வகையில் சொற்களை அமைத்து ஆளுகிறார் ஆசிரியர் அந்தக் கருத்தை விளக்க அவர் கூறும் செய்தி வருமாறு; இழிந்த குணம் உடைய சில சிறுமைத் தன்மை உடையவர்கள் நல்ல சார்புடையவர்களோடு பழகுகிறார்கள், அவர்களுக்கு நண்பராகவே காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் சிறுமைத் தனம் போவதில்லை. அத்தகைய மட்டமான ஆசாமிகளை இவர்கள் நல்லவர்களுக்கு நண்பாகளென்று எண்ணி அவர்களையும் பெரியவர்கள் என்று தெளியலாமோ? அறிஞர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள்' என்று சொல்லி விட்டு, 'சர்க்கரையோடு சேர்ந்திருக்கிறதே

என்று எண்ணி மணலையும் சேர்த்துச் சாப்பிடலாமோ?'
என்று பழமொழியை வைத்துக் கேட்கிறார்.

**''தக்காரோடு ஒன்றித் தமராய் ஒழுகினார்**
**மிக்காரால் என்று சிறியாரைத் தாம்தேறார்;**
**கொக்கார் வளவயல் ஊர, தினலாமோ**
**அக்காரம் சேர்ந்த மணல்?''**

[தக்கார்-குணங்களால் தகுதி பெற்றவர்; யோக்கியர். தமர்-நண்பர். மிக்கார்-மேலானவர், தாம் என்றது அறிஞர் களைக் குறித்தது. தேறார்-தெளிய மாட்டார்கள். கொக்கு ஆர் வளவயல் ஊர-மாமரங்கள் நிறைந்த வளமான வயல் களை உடைய ஊரனே; இது ஆடூஉ முன்னிலை. கொக்குகள் நிரம்பிய வயல் என்றும் சொல்லலாம். அக்காரம்-சர்க்கரை.]

'கடலிலே நீச்சல் போட்டவன் கன்றுக்குட்டி மிதித்த பள்ளத்தில் ஆழ்ந்து விட்டானாம்!'' என்பது ஒரு பழமொழி என்று தெரியவருகிறது. அந்தப் பழமொழியை முடிவில் வைத்து ஆசிரியர் புலால் உண்ணாமையை வற்புறுத்துகிறார். 'விடுவதற்கரிய வலிமையை உடைய பெரிய ஆசைகளை யெல்லாம் நீக்கிவிட்டு, எல்லோரும் எளிதாகப் போக முடியாத சன்மார்க்கத்தில் நின்ற வர்கள், பிற உயிருக்குத் துன்பம் செய்வதை உடையதாய் உள்ள புலாலை உண்ணுதல், கடலை நீந்திக் கடந்தவன் கன்றுக்குட்டி கால் வைத்த பள்ள நீரில் அமிழ்ந்து விடுவதை ஒக்கும்!'

**''விடல் அரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்**
**படர்வரிய நன்னெறிக்கண் நின்றார்-இடர்உடைத்தாய்**
**பெற்ற விடக்கு நுகர்தல் கடல்நீந்திக்**
**கன்றடியுள் ஆழ்ந்து விடல்.''**

[துப்பு - வலிமை. வேட்கை-மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய பெரிய ஆசைகள்.

படர்வு அரிய-செல்லுவதற்கு அரிய. இடர் உடைத்தாய்ப் பெற்ற விடக்கு-பிற உயிருக்குத் துன்பமுடையதாகப் பெற்ற ஊனை. கன்று அடி-கன்றுக்குட்டி அடி வைத்த பள்ளத்து நீர்.]

இந்தப் பாட்டில் எந்த முன்னிலையும் வரவில்லை. இவ்வாறு உள்ள பாடல்கள் பல பழமொழியில் உள்ளன.

'நாய் வாலை நிமிர்த்த முடியுமா' என்பது நாம் அறிந்த பழமொழி. 'கற்பினால் மனத்தை நிறுத்த இயலாத பெண்களைத் தடுத்துச் சிறையினால் அடக்கி விடுதல் முடியாது; வலுவில் நாய் வாலைக் கட்டி வைத்தாலும் அது என்றும் நிமிராது' என்று பழமொழியை இணைத்து ஒரு கருத்தைச் சொல்கிறார்.

**"நிறையான் மிகுகலா நேரிழை யாரைச்**
**சிறையான் அகப்படுத்தல் ஆகா;-அறையோ!**
**வருந்த வலிதினின் யாப்பினும் நாய்வால்**
**திருந்துதல் என்றுமே இல்."**

[நிறையால்-கற்பினால்; மனத்தைப் பிறரிடத்து ஓடாமல் நிறுத்தும் மனவலியால். அறையோ! ஐயோ என்பது போன்ற இரக்கக் குறிப்பு. யாப்பினும்—கட்டினாலும்.]

இந்தப் பாடலில், "சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை" என்ற திருக்குறளின் சொல்லும் பொருளும் கலந்துள்ளன. இப்படியே வேறு சில பாடல்களில் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களில் வரும் சொல்லும் பொருளும் இணைந்து விளங்குவதைக் காணலாம்.

'கற்றவனுக்கு வேண்டாம் கட்டுச் சோறு' என்ற பழமொழியையே விரித்து விளக்கும் பாடல் இது:

**"ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை, அந்நாடு**

**வேற்றுநா டாகா; தமவேஆம். ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவது இல்.''**

[மிகவும் கற்றவர்கள் அறிவுடையவர்கள்; அந்த அறிவுடையவர்கள் நான்கு திசையிலும் போக முடியாத நாடுகள் இல்லை; அவர்கள் எங்கே போனாலும் அந்த நாடுகள் அயல் நாடுகள் ஆகா; தம்முடைய சொந்த நாடுகளாகவே ஆகும்; அப்படி ஆகுமானால் அவர்களுக்கு வழியிலே உண்ணுவதற்குக் கட்டுச்சோறு வேண்டுவதில்லை. ஆற்றவும்-மிகவும், ஆற்றுணா-கட்டுச் சோறு.]

''யாதானும் நாடாமால் ஊராமல்; என்னொருவன்; சாந்துணையும் கல்லாத வாறு'' என்ற குறளின் கருத்தை இதில் பார்க்கிறோம்.

'புலி பசித்தால் புல்லைத் தின்னாது' என்ற பழமொழியை வைத்த பாட்டு வருமாறு:

**''ஒற்கம்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்**
**நிற்பவே நின்ற நிலையின்மேல்;-வற்பத்தால்**
**தன்மேல் நலியும் பசிபெரிது ஆயினும்**
**புல்மேயாது ஆகும் புலி.''**

[பொருள் முதலியவற்றால் தளர்ச்சியைத்தாம் அடைந்த காலத்திலும் குணங்களால் உயர்ந்த பெரியவர்கள் தாம் நின்ற ஒழுக்க நிலையில் மாறாமல் நிற்பார்கள். பஞ்சத்தால் தன்னைத் துன்புறுத்தும் பசி மிகுதியானாலும் புலி புல்லை மேயாதாம். ஒற்கம்-தளர்ச்சி. நிற்ப-நிற்பார்கள். வற்பம்-வறுமை, பஞ்சம்.]

'உயிர் இருந்தால் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம்' என்பதை, ''இல்லை உயிருடையார் எய்தா வினை'' என்ற வேறுருவத்தில் இவர் அமைக்கிறார்.

'மீனுக்குப் பூனையைக் காவல் வைத்தது போல' என்ற

பழமொழியை, ''பூசையைக் காப்பிடுதல் புன் மீன் தலை'' என்ற வடிவத்தில் ஆள்கிறார். இப்படியே, ''திங்களை நாய் குரைத்தற்று'' என்ற வடிவில், 'சந்திரனைக் கண்டு நாய் குரைத்தாற்போல' என்ற பழமொழியும், ''நாய் பெற்ற தெங்கம்பழம்'' என்பதில் 'நாய்க்கு முழுத் தேங்காயை உருட்டினாற் போல' என்று நாம் வழங்கும் பழமொழியும், ''துளி ஈண்டில் வெள்ளம் தரும்'' என்பதில், 'பல துளி பெரு வெள்ளம்'' என்பதும், ''நெடு வேல் கெடுத்தான் குடத்துள்ளும் நாடி விடும்'' என்பதில், 'யானையைக் கெடுத்தவன் பானையிலும் தேடுவான்' என்பதும் அடங்கியிருத்தலைக் காணலாம்.

'நிறை குடம் தளும்பாது' என்பதை, ''நிறை குடம் நீர் தளும்பல் இல்'' என்றும், 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்பதை, ''நாய் காணிற் கல் காணாவாறு'' என்றும் 'ஏறவிட்டு ஏணியை வாங்கினாற் போல' என்பதை ''மச்சேற்றி ஏணி களைவு'' என்றும், 'ஊர் ஓட ஒக்க ஓடு' என்பதை, ''ஓடுக ஊர் ஓடுமாறு'' என்றும் ஆளுவர்.

''நரை ஆன் புறத்திட்ட சூடு மாயா'' (வெள்ளைப் பசுவின் மேல் இட்ட சூடு மறையாது), ''மோரின் முது நெய் தீதாகலோ இல்'' (மோரைப் போல பழைய நெய் தீயதாவது இல்லை), ''முறைமைக்கு மூப்பு இளமை இல்'' (தண்டனை செய்வதற்கு மூத்தவன் இளையவன் என்ற வேறுபாடு இல்லை), ''ஆகாதே உண்டது நீலம் பிறிது'' (நீல நிறம் வேறு நிறத்தோடு சேர்ந்தால் வேறு நிறம் ஆகாது), ''ஈனுமோ வாழை இருகால் குலை.'' ''அணியெல்லாம் ஆடையின் பின்'', ''யானை போய் வால் போகாதவாறு'', ''நல்ல விறகில் அடினும் நனி வெந்நீர் இல்லம் சுடுகலாவாறு'' (நல்ல விறகினால் எவ்வளவு காய்ச்சினாலும் நன்றாகக் கொதிக்கும் வெந்நீர் வீட்டைச்

சுடாதது போல), "வரையகத்து ஈண்டிய கல்தேயும், தேயாது சொல்" என்பன போன்ற பழமொழிகள் இந்தக் காலத்தில் வழங்குவதாகத் தெரியவில்லை,

இவ்வாசிரியர் சில இடங்களில் புராண இதிகாசங்களில் வரும் செய்திகளைக் குறிப்பிடுகிறார். கண்ணன் யமுனையில் விளையாடியது, திருமாலானாலும் குற்றம் செய்தால் பழியுரை போகாமை; உலகத்தை மால் அளந்தது, கண்ணன் பசுமாடுகளைக் காத்தது ஆகியவை திருமாலைப் பற்றிய செய்திகள். சிவபெருமான் உமா தேவியை ஒரு பாகத்தில் வைத்திருப்பதும் இடபக் கொடியை ஏந்துவதும் ஒரு பாட்டில் வருகின்றன.

இராமனுடைய துணைவனாகச் சென்று வீடணன் இலங்கைக்கு அரசன் ஆனது, இராவணன் இராமனைப் பகைத்துப் போரில் தோற்றது ஆகிய இராமாயண நிகழ்ச்சிகள் வரும் பாடல்கள் சில.

பாம்புக் கொடியை உடைய துரியோதனனுக்குப் பலராமன் படைத்துணை ஆகாதது, பஞ்ச பாண்டவரும் துரியோதனாதியரோடு சூதாடிப் பிறகு போர் மூண்டு நூற்றுவர் உயிரிழந்தது, தருமபுத்திரர் நரகத்தைக் கண்டது, பஞ்ச பாண்டவர் அரக்கு மாளிகையில் புகுந்தது ஆகியவை இதில் வரும் பாரதச் செய்திகள்.

கரிகால் சோழன் தன்னை அறங்கூறவையத்தில் முதியவனாகக் காட்டிக் கொள்ள நரை முடித்தது, கழுமலத்திலிருந்து புறப்பட்ட யானை கருவூரிலிருந்த கரிகாலனை ஏற்றி வந்தது, கரிகாலன் இரும்பிடர்த் தலையார் என்ற மாமனால் நலம் பெற்றது, தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் வரலாறு, மனுச் சோழன் தன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்தது, பொற்கைப் பாண்டியன் கதை என்பவை முடி மன்னர்களைப்

பற்றி இந்நூலில் வரும் வரலாற்றுச் செய்திகள். பாரி முல்லைக்குத் தேர் ஈந்ததும், அவன் மகள் ஔவைக்குக் கீரை சமைத்து வழங்கியதும், பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததுமாகிய சங்க காலத்து நிகழ்ச்சிகளை இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார்.

பழைய உரை இல்லாவிட்டால் இதில் உள்ள பல பாடல்களுக்குப் பொருள் விளங்குவது அரிது; அந்தப் பழங்காலத்தில் பழமொழிகளுக்குச் சிறப்பிடம் தந்து தங்கத்திலே மணி பதித்தாற்போல வெண்பாவில் பதித்து அமைத்த புலவரின் திறமையை நாம் பாராட்டத் தான் வேண்டும்.

# 35. சிறு பஞ்ச மூலம்

மருத்துவர்கள் வழங்கும் மருந்துகளையும் மருந்துச் சரக்குகளையும் நினைப்பூட்டும் நூல்கள் மூன்று பதினெண் கீழ்க்கணக்கில் இருக்கின்றன. திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்பன அவை. சிறு பஞ்ச மூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்ற பொருள் உடையது. பெரிய வேர்கள் ஐந்து உண்டு அவற்றைப் பெரும் பஞ்ச மூலம் என்பர் மருத்துவ நூல் உணர்ந்தவர். சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரி வேர் என்னும் ஐந்தும் சிறு பஞ்ச மூலம். பில்வவேர், பெருங்குமிழ் வேர், தழுதாழை வேர், பாதிரி வேர், வாகை வேர் என்னும் ஐந்தும் பெரும் பஞ்ச மூலம்.

சிறு பஞ்ச மூலம் போல ஒவ்வொரு பாட்டிலும் ஐந்து ஐந்து நீதிகளைச் சொல்வதனால் சிறு பஞ்ச மூலம் என்று பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஒரு நூலுக்குப் பெயர் அமைந்தது.

இந்த நூலின் ஆசிரியர் காரியாசான் என்பவர். அவர் பெயர் காரி என்றும் அவர் ஆசிரியர் என்றும் அந்தப் பெயரால் தெரிந்து கொள்ளலாம். அவருடைய ஆசிரியர் மதுரையில் தமிழாசிரியராக இருந்த மாக்காயனார் என்பவர்.

> "மல்இவர்தோள் மாக்காயன் மாணாக்கன், மாநிலத்துப்
> பல்லவர் நோய்தீர்க்கும் பாங்கினால்—கல்லா
> மறுபஞ்சம் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
> சிறுபஞ்ச மூலஞ்செய் தான்"

என்னும் சிறப்புப் பாயிரத்தால் இந்தச் செய்திகள் தெரிய வருகின்றன.

கடவுள் வாழ்த்து ஒன்றும் மேலே 102 பாடல்களு மாக 103 வெண்பாக்கள் அடங்கிய நூல் இது. இதன் கடவுள் வாழ்த்தால் இதன் ஆசிரியர் சைன சமயத்தினர் என்று புலனாகிறது. பல இடங்களில் கொல்லாமையை யும் புலால் உண்ணாமையையும் எடுத்துச் சொல்கிறார் இவ்வாசிரியர்.

பஞ்சாமிர்தம் என்பது நமக்குத் தெரியும்; ஐந்து வேறு சரக்குகள் சேர்ந்து கலந்த அபிடேகப் பொருள் அது. காரியாசான் சிறுபஞ்ச மூலத்தில் ஒரு பஞ்சாமிர் தத்தைச் சொல்கிறார். கற்புடைய பெண் ஓர் அமிர்தம்; நன்றாகக் கற்று அடங்கியவன் ஓர் அமிர்தம்; நல்ல விளைவு முதலிய நன்மைகளை உடைய நாடு ஓர் அமிர்தம் நன்மையுடைய மேகம் மழையைப் பெய்யும்படி ஆட்சி நடத்தும் அரசன் ஓர் அமிர்தம்; நமக்கு நல்லதைச் செய்யும் பணியாள் ஓர் அமிர்தம்.

> "கற்புடைய பெண்அமிர்து; கற்றுஅடங்கி னான்அமிர்து;
> நற்புடைய நாடுஅமிர்து; நாட்டுக்கு—நற்புடைய
> மேகமே சேர்கொடி வேந்துஅமிர்து; சேவகனும்
> ஆகவே செய்யின் அமிர்து."

[நற்பு-நன்மை. மேகமே சேர் கொடி வேந்து-மேகங்கள் சேர்வதற்குக் காரணமான கொடியைப் பிடித்த அரசன். சேவகன்-வீரனும் ஆம். ஆகவே செய்யின்- அழிவின்றி நன்மைக்குரியவற்றையே செய்தால்.]

பிறருடைய குற்றத்தைப் பெருந்தன்மையால் மன் னித்து விடுதல் பெருமையான குணம். ஒருவர் செய்த

தீங்கையே எண்ணிக்கொண்டிருத்தல் சிறுமைக் குணம். பகைவர்கள் கெடும்படி செய்து வாழும் வாழ்க்கையில் அமைதி இருக்கும்; அது நல்லது. பல பொருளை ஈட்டி வேண்டிய வசதிகளோடு, பிறரை இரவாமல், பிறர் நம்மைப் பழி கூறாமல் வாழ்வது நல்லது. இப்படி ஐந்து கருத்துக்களை ஒரு பாட்டிலே சொல்கிறார்.

**"பிழைத்த பொறுத்தல் பெருமை; சிறுமை,**
**இழைத்ததீங்கு எண்ணி இருத்தல்;—பிழைத்த**
**பகைகெட வாழ்வதும், பல்பொருளால், பல்லார்**
**நகைகெட வாழ்வதும் நன்று.**

[பிழைத்த - பிறர் செய்த குற்றங்களை. இழைத்த- செய்த. நகை கெட - பழித்துச் சிரிக்கும் சிரிப்புக் கெடும் படியாக]

மரங்கள் பெரும்பாலும் பூத்துப் பிறகு காய்க்கும். பூத்தாலும் காய்க்காமல் இருக்கும் மரங்களும் உண்டு. நூலைக் கற்றவர்கள் நன்மையை அறிவார்கள்; வயசு ஏற ஏற அவர்களுடைய அறிவு விளக்கம் பெறும். ஆனால். நூல்களைக் கல்லாதவர்கள் விலங்கைப் போல எவ்வளவு வயசானாலும் அறிவு முதிர்ச்சி பெறமாட்டார்கள். சில விதைகள் விதைத்தாலும் முளைப்பதில்லை. அறிவில்லாதவனுக்கு எத்தனை சொன்னாலும் மூளையில் ஏறாது. இப்படி ஐந்து கருத்துக்களை ஒரு பாடல் சொல்கிறது.

**"பூத்தாலும் காயா மரம்உள, நன்றுஅறியார்**
**மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார்;—பாத்திப்**
**புதைத்தாலும் நாறாத வித்துஉள; பேதைக்கு**
**உரைத்தாலும் செல்லாது உணர்வு."**

[மூவார் - அறிவு முதிர்ச்சி பெறார். தேற்றார்-கற்றுத் தெளியாதவர்கள். பாத்தி-செடி வளரும் பாத்தி. நாறாத- முளைக்காத. பேதை-அறிவிலி, உணர்வு-அறிவு.)

"நான் ஏதோ வாயினாலே சொல்லுகிறேன் என்று எண்ணாதீர்கள். இது காலம் காலமாக வந்த வழக்கு; அநுபவத்தால் உணர்ந்த தெளிவு" என்று ஐந்து நீதிகளை ஒரு பாட்டில் சொல்கிறார் இவ்வாசிரியர்.

"பெருமைக்குரிய பண்புடையவர்களை நாடிச்சேர்ந்து வாழுங்கள்; பிறனுடைய பொருளைத் திருடாதீர்கள்; இழிந்த குணம் உடையவர்களுடைய நட்பை விட்டு விடுங்கள்; கெட்ட சொற்களே பேசாமல் ஜாக்கிரதை யாக இருங்கள்; காலன் ஒரு நாள் வருவது நிச்சயம்" என்று அறிவுறுத்துகிறார்.

**"பெருங்குணத்தார் சேர்மின்; பிறன்பொருள் வவ்வன்மின்;**
**கருங்குணத்தார் கேண்மை கழிமின்;—ஒருங்குணர்ந்து**
**தீச்சொல்லே காமின்; வரும்காலன், திண்ணிதே;**
**வாய்ச்சொல்லே அன்று, வழக்கு."**

[சேர்மின்-சேருங்கள். வவ்வன்மின்-பறித்துக் கொள்ளாதீர்கள். கருங்குணத்தார்கேண்மை-இழிந்தகுணமுடையவருடைய நட்பை. ஒருங்கு உணர்ந்து—எல்லாவற்றையும் ஒரு சேரச் சிந்தித்து. காமின்-பேசாமல் அடக்கிக் கொள்ளுங்கள். வரும் காலன்- ஒரு காலத்தில் யமன் வருவான். திண்ணிது-இது உறுதி. வழக்கு-அடிப்பட்ட உண்மை.]

நல்ல நூல்களைக் கற்றவன் நன்றாகவும் அழகாகவும் பேசுவான். சிலர் பேசுவதை அப்படியே எழுதி நூலாக்கலாம். நாம் பேசவேண்டுமானால், பெரியவர்கள் இயற்றித்தந்துள்ள நூல்களில் கூறியுள்ள முறைக்கு ஏற்றபடி பேசவேண்டும் பொய், கடும்சொல், பயனில்லாதசொல் கோள் ஆகியவற்றைச் சொல்லக் கூடாது என்று நூல்கள் கூறும். அவை நூற்கு இசைந்த சொற்கள் அல்ல. இப்படி நினைப்பூட்டிக் கொள்ளும்படி, "நூற்கு இயைந்த சொல்லின் வனப்பே வனப்பு" என்று ஒரு பாட்டில் இவ்வாசிரியர் அடித்துச் சொல்லு

கிறார். 'உடம்பு அழகாக இருந்தால் போதாது; உறுப்புக்கள் அழகாக இருப்பது உண்மை அழகு ஆகாது; நல்ல சொற்களை, பெரியவர்கள் சொன்ன நூல்களோடு பொருந்தி அமைந்த சொற்களை சொல்லுவதுதான் அழகு' என்று சொல்லும்போது, இவை வனப்பு அல்ல என்று ஐந்து வனப்புகளைச் சொல்கிறார்.

**''மயிர்வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும்,**
**உகிர்வனப்பும், காதின் வனப்பும்,—செயிர்தீர்ந்த**
**பல்லின் வனப்பும் வனப்பு அல்ல; நூற்குஇயைந்த**
**சொல்லின் வனப்பே வனப்பு.''**

[உகிர்- நகம். செயிர் தீர்ந்த- குற்றம் நீங்கிய]

ஔவையார் சோழ அரசனுடைய அவைக்களத்தில் அமர்ந்திருந்தார். வேறு பல புலவர்கள் அங்கே இருந்தார்கள். அப்பொழுது புலவர்கள் எல்லோரும் சோழ மன்னனைப் பல படியாக வாழ்த்தினார்கள்; பாட்டாலும் உரையாலும் விரிவாக வாழ்த்திப் பாராட்டினார்கள். கடைசியில் ஔவையார் வாய் திறந்தார்; ''வரப்புயர'' என்று சுருக்கமாகச் சொல்லி விட்டுச் சும்மா இருந்தார். 'இவ்வளவுதானா?' என்ற எண்ணத்தோடு எல்லோரும் அவர் முகத்தையே நோக்கினார்கள். அவர்களுடைய உள்ளக் கிடக்கையை உணர்ந்த ஔவையார், ''நான் சொன்ன வாழ்த்துச் சொல்லளவில் சுருக்கமாக இருந்தாலும், பொருளளவில் விரிவானது. வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோ உயர்வான்'' என்று விளக்கம் கூறவே, யாவரும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள் இப்படி ஒரு வரலாறு வழங்கி வருகிறது.

ஔவையார் கூறிய விளக்கத்தை அப்படியே சொல்லும் பாடல் ஒன்று சிறுபஞ்ச மூலத்தில் இருக்கிறது—

“வார்சான்ற கூந்தல், வரப்புயர, வைகலும்
நீர்சான் றுயரவே நெல்உயரும்;—சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்கரும்சீர்க் கோஉயர்தல்
ஓவாது உரைக்கும் உலகு.’’

[வார் சான்ற கூந்தல் - நீளத்தை உடைய கூந்தலை உடைய பெண்ணே; இது மகடூஉ முன்னிலை. வைகலும்- நாள்தோறும். நீர் சான்று-நீர் நிரம்பி தாவா-குறை வில்லாத. தாங்கு அரும் சீர்க் கோ — மக்களைத் தாங்கு கின்ற அரிய சிறப்பையுடைய அரசன், ஓவாது-நீக்கமின்றி, உலகு-உயர்ந்தோர். இதில் ஐந்து உயர்வுகள் வந்தன.]

இவர் கூறும் கருத்துக்களில் சில வருமாறு : இராகத் துக்கு அழகு, கேட்டவர்கள் நன்றாயிருக்கிறது என்று சொல்லுதல் (பண்வனப்புக் கேட்டார் நன்று என்றல்); ஓர் உயிரைக் கொன்று உண்பவன் நாக்கு வீணாகி விடும் (கொன்று உண்பான் நாச் சாம்); தமிழை நன்றாகக் கற்றுத் தெளியாதவன் கவி இயற்றுதல் சிரிப்புக்கு இடமாகும் (செந்தமிழ் தேற்றான் கவி செயலும் நாவகம் மேய் நாடின் நகை); எல்லாம் அறிபவன் யாரும் இல்லை (ஒருவன் அறிவானும் எல்லாம் இல்) ; தெய்வத்தை எப் போதும் விளக்கமாக வழிபடுதல் பெண்களுக்குச் சிறப்பு (தெய்வத்தை எஞ்ஞான்றும் தெற்ற வழிபாடு செய்வதே பெண்டிர் சிறப்பு); கோயிலையும் சாலையையும் நிறுவுதல் நல்லது (நன்று தளி சாலை நாட்டல்); கன்றுக் குட்டி சாகும்படி பாலை ஓட்டக் கறத்தல் கூடாது (கன்று சாவப் பால் கறவாமை); செத்த கன்றின் தோலைக் காட்டிக் கறப்பது தவறு (தோற்கன்று காட்டிக் கறவார்.,

ஒவ்வொரு பாட்டிலும் ஐந்து கருத்துக்களைச் சொல்லுவது என்ற திட்டத்தோடு பாடியதால், பல பாடல்களில், இதில் சொல்லப் பெற்ற ஐந்து நீதிகள் ஏவையென்று தேட வேண்டியிருக்கும்.

இந்த நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு.

# 36. முதுமொழிக் காஞ்சி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அளவினால் சிறிய முதுமொழிக் காஞ்சி. இந்த நூலில் உள்ள வரிகள் 110. முதுமொழிக் காஞ்சி என்பது புறத்துறைகளில் ஒன்று. அதன் இலக்கணத்தை,

**"பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்**
**உலகியல் பொருள்முடிவு உணரக் கூறின்று"**

என்றுபுறப்பொருள்வெண்பாமாலைசொல்கிறது. 'பலரும் புகழும் அறிவுடைய புலவர் பெருமக்கள் பலபடியாகச் சொல்லி அறியத்தக்க உலக இயல் உண்மைகளைத் தெளிவாகச் சொல்வது' என்பது இதன் பொருள். உலகியலை அறிந்து, எப்படி வாழவேண்டும் என்று கூறும் நீதி என்பது கருத்து. முதுமொழிக் காஞ்சி என்னும் நூல் அத்தகைய நீதிகளைக் கூறுகின்றது.

முதுமொழி என்பதற்குப் பழமொழி என்றும்பொருள் கொள்வர், 'முதுவாய் இரவல' என்று பத்துப்பாட்டில் வரும் தொடருக்கு, 'அறிவு வாய்ந்த புலவனே!' என்று நச்சினார்க்கினியர் பொருள் உரைத்தார். அதனால் முது என்பது அறிவைக் குறிக்கும் என்று தெரிகிறது. அறிவு நிரம்பிய மொழிகள் அமைந்த நூல் எனப்பொருள் கொள்ளலாம். காஞ்சி என்பது இடையில் அணியும் பல மாலைகள் கோத்த மேகலை வகையாகும், பல நீதிகளைக் கோத்த நூலாதலின் காஞ்சி என அமைந்திருக்கலாம்.

இந்த நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார். இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை, பெரியவர்கள் பெயரைப் பற்றிச் சொல்லும்போது. 'ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது' என்ற ஒரு மரபு உண்டு. சங்க நூல்களில் மதுரைக் கணக்காயனார், கோவூர் கிழார், அரிசில் கிழார் என்று ஊரை மட்டும் சொல்லிப் புலவர்களைக் குறிப்பதுபோல இப்புலவரையும் ஊரைச் சுட்டி வழங்கினார் என்று தெரிகிறது. கிழார் என்பது இவர் வேளாளர் என்பதையும், கூடலூர் என்பது இவர் பிறந்த ஊரையும், மதுரை இவர் வந்து வாழ்ந்து சிறந்த ஊரையும் குறிக்கும்.

இந்த நூலில் பத்துப் பத்தாக நீதிகளைச் சொல்லும் பத்துக்கள் பத்து இருக்கின்றன. ஒவ்வொரு பத்தும், "ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்" என்று தொடங்குகிறது. சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப் பத்து, துவ்வாப் பத்து, அல்ல பத்து, இல்லை பத்து, பொய்ப் பத்து, எளியபத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப் பத்து என்பவை இதில் உள்ள பகுதிகள். ஒவ்வொரு பத்திலும் உள்ள நீதிகளில் பொதுவாக ஒரு சொல் வரும். அதையே அந்தப் பத்தின் பெயராக வைத்திருக்கிறார் ஆசிரியர்.

**"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை;**
**காதலிற் சிறந்தன்று கண்அஞ்சப்படுதல்"**

என்பதில் சிறந்தன்று (சிறந்தது) என்று ஒவ்வொரு வரியிலும் வருவதால் இதற்குச் சிறந்த பத்து என்ற பெயர் அமைந்தது. அறிவுப் பத்தில் ஒவ்வொரு நீதியும் அறிப (அறிவார்கள்) என்று முடிகிறது. இப்படியே மற்றவையும் இருப்பதைக் காணலாம்.

முதலில் இவ்வாசிரியர், கற்பதைவிட ஒழுக்கம் சிறந்தது என்று தொடங்குகிறார்; "ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை."

ஒருவன் நல்ல அறிவுடையவனாக, மேதாவிலாசம் உடையவனாக இருக்கிறான்; ஆனால் அந்த அறிவு விளக்கம் பெற வேண்டுமானால் மேலும் மேலும் நூல்களைக் கற்றுச் சிந்தையில் தேக்கிக்கொள்ள வேண்டும். "மதிநுட்பம் நூலோ டுடையார்" என்று வள்ளுவர் கூறுவார். நூல்களைப் படிப்பது மட்டும் போதாது. படித்தவற்றை மறவாமல் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். படிக்கப் படிக்க மறந்து கொண்டே போனால் ஓட்டைக் குடத்தில் நீர் ஊற்றுவது போல ஆகிவிடும். இந்த உண்மையைச் சுருக்கமாக,

**"மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை"**

என்கிறார். மேதை-சிறந்த அறிவு. சிறந்தன்று-சிறந்தது.

நூல்களால் அறிந்து கொள்ளாத பல நுட்பங்களை அநுபவத்தால் அறிந்து கொள்ளலாம். பலருக்கும் பொதுவான அநுபவங்கள் உண்டு: ஒவ்வொருவருக்கும் சிறப்பான சில அநுபவங்களும் உண்டு. அவர்களோடு பழகினால்தான் அந்த அநுபவங்களைத் தெரிந்து கொள்ளலாம். நூல்களைப் படிப்பதனால் தெரிந்து கொள்ள முடியாத பல நுட்பங்களைக் கற்றவர்களை வழிபட்டுப் பழகுவதனால் அறிந்து கொள்ளலாம், குருகுல வாசத்தின் பெருமையே இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதுதான். இதனைத்தெரிவிக்கிறார் ஆசிரியர்:

**"கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று."**

நல்ல குடியில் பிறந்தவனை அவனுடைய அன்பினால் இனம் கண்டு கொள்ளலாம். இதை, "பேர் இல்

பிறந்தமை ஈரத்தின் அறிப'' என்கிறார் ஆசிரியர். உள்ளதை வெளிப்படுத்தாமல் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகம் ஒருவனிடம் இருந்தால் அவனை நிச்சயம் கள்வன் என்று தெரிந்துகொள்ளலாம். ''குத்திரம் செய்தலின் கள்வனாதல் அறிப.'' (அறிப— அறிவார்கள்.)

ஊருக்கு ஊர் சில பழக்கங்கள் வேறுபடலாம். தேசத்துக்குத் தேசம் ஆசாரம் வேறாக இருக்கும். நம்முடைய பழக்கத்துக்கும் அதற்கும் வேறுபாடு இருக்கலாம். ஆனாலும் அது அந்த நாட்டில் அடிப்பட்ட வழக்கமாக இருக்கும். அதை நாம் பழிக்கக் கூடாது. ''அறியாத் தேசத்து ஆசாரம் பழியார்.''

கல்வி கற்பது மிகவும் இன்றியமையாதது. ஆனால் கல்விக்கு எல்லையுண்டோ? ''கல்வி கரையில'' என்று நாலடியாரில் வருகிறது. எல்லாவற்றையும் ஒருவன் கற்றுவிட முடியாது. ஆதலால் நம்முடைய வாழ்வுக்கு எது பயன் தரும் என்று ஆராய்ந்து தேர்ந்து அதற்குரிய கல்வியைக் கற்கவேண்டும். ''ஆராய்ந்து அமைவுடைய கற்பவே'' என்பது நாலடியார். இதையே ஒரு வரியிற் சொல்கிறது முதுமொழிக் காஞ்சி.

**''தேராமல் கற்றது கல்வி அன்று.''**

கல்வியைப் பற்றியும் கொடையைப் பற்றியும் பல கருத்துக்களை இவ்வாசிரியர் சொல்கிறார்.

**''ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை.''**
**''மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.''**
**''கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.''**
**''கற்ற துடைமை காட்சியின் அறிப.''**

(காட்சி— அறிவு.)

**"தேராமல் கற்றது கல்வி அன்று"**
**"பேர் அறிவினோன் இனி வாழாமை பொய்."**
**"கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்."**

(கற்பதை விரும்புகிறவன் தன் ஆசிரியனை வழிபடுவதிற் குறையமாட்டான்.)

கொடையைவிட வாய்மை சிறந்ததாம். ஆகவே, கொடை சிறந்ததென்பதும் அதனால் குறிப்பாகப் பெறப்படும்.

**"வண்மையிற் சிறந்தன்று, வாய்மை உடைமை."**

ஒருவன் நெஞ்சில் தயை உடையவன் என்பதை அவனுடைய ஈகை காட்டுமாம்.

**"ஈரம் உடைமை ஈகையின் அறிப"**

வறியவன் கொடை குணம் இல்லாதவன் என்றால் அவனை யாரும் பழிக்க மாட்டார்களாம்.

**"வறியோன் வள்ளியன் அன்மை பழியார்."**

இப்படியே,

**"அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று"**
**"இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்புஇல்லை"**
**"ஈரம்வெய் யோர்க்கு நசைகொடிது எளிது"**

என்பன இவர் கொடையைப் பற்றிக் கூறும் கருத்துக்கள்.

இளமைக் காலத்தில் உலகியலில் ஈடுபட்டு வாழ்ந்தாலும் முதுமை வந்த பிறகாவது இம்மை, மறுமை முதலியவற்றைப் பற்றி எண்ணி, அதற்கு ஏற்றபடி வாழவேண்டும்.

**"மறுபிறப்பு அறியாதது மூப்பு அன்று"**

என்று முதுமொழிக் காஞ்சி சொல்கிறது. வறுமை யென்பது பொருளின் அளவினால் உண்டாவது அன்று; மனத்தில் நிறைவு இருந்தால் அதுதான் செல்வம். இல்லையே என்ற குறையும் ஆசையும் இருந்தால் அது தான் வறுமை

**''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே**
**அல்கா நல்குரவு அவாஎனப் படுமே''**

என்று குமரகுருபரர் பாடியுள்ளார். இந்தக் கருத்தைப் பலபல ஆண்டுகளுக்கு முன்பே முதுமொழிக் காஞ்சி சொல்கிறது;

**''நசையிற் பெரிதோர் நல்குரவு இல்லை''**

[ஆசையை விடப் பெரிய வறுமை இல்லை]

'தவம் செய்பவர்கள் நிலையாக நின்று புகழ் பெறுவார்கள்'. துன்பத்தைக் கண்டு மனம் அழிகிறவன் இன்பம் பெறமாட்டான். அதை ஏற்றுக் கொள்கிறவனே இன்பத்தை அடைவான்', 'பெருமை அடைந்து உயர்ந்து வாழவேண்டுமானால் பொருளால் உயர்ந்த மொழிகளைப் பேச வேண்டும்' என்பன போன்ற பல அரிய கருத்துக்கள் இந்நூலில் வருகின்றன.

இப்படி மணி மணியாக நூறு நீதிகளைக் கொண்டது இந்த நூலாகிய மணிமாலை.

# 37. ஏலாதி

ஏலாதி சூர்ணம் என்பது ஒரு மருந்து. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு சரக்குகளைக் கொண்டு செய்யும் மருந்து அது பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய ஏலாதி என்னும் நூலுக்கு அந்த ஏலாதி சூர்ணத்தின் பெயரை அதன் ஆசிரியர் அமைத்திருக்கிறார். ஏலாதி என்னும் மருந்தில் ஆறு பண்டங்கள் அமைந்திருப்பது போல, ஒவ்வொரு பாட்டிலும் ஆறு கருத்துக்களை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த நூலை இயற்றினார் என்று தோன்றுகிறது.

இதனை இயற்றியவர் கணி மேதாவியார் என்னும் புலவர். இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். சிறுபஞ்ச மூலத்தை இயற்றிய காரியாசான் என்பவரும் மாக்காயனாரின் மாணாக்கரே. ஒரு ஆசிரியரிடம் பயின்றதில் ஒப்புமை இருப்பது போல, நீதி நூலை இயற்றியதிலும், அந்த நூல்களுக்கு மருந்தின் பெயரை வைப்பதிலும் இருவரும் ஒப்புமை உடையவராக இருக்கிறார்கள். கணி மேதாவியார் என்ற பெயரைக் கொண்டு இவர் சோதிடத்தில் வல்லவர் என்று உயத்துணரலாம். நூற்பெயர் இவர் மருத்துவத்திலும் பயிற்சி யுடையவர் என்பதைத் தெரிவிக்கிறது. இவரே திணைமாலை நூற்றைம்பதையும் இயற்றியவர். இந்த நூல் எண்பது பாடல்களால் அமைந்தது. கடவுள் வாழ்த்தில், "அறு

நால்வர் ஆய்புகழ்ச் சேவடி'' என்று இருபத்து நான்கு தீர்த்தங்கரரைக் குறிப்பதனால் இவர் சைனசமயத்தினர் என்று தெரிய வருகிறது.

இந்த நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு.

முதல் செய்யுளிலேயே கூறப்படுவன ஆறு என்பதைத் தெரிந்து கொள்ள ஆறு என்று தொகுத்து உரைக்கிறார் ஆசிரியர். 'நெடுந்தூரம் சென்று பரவிய புகழ், செல்வம், உயர்வாக மதிக்கப்படும் வார்த்தை, வீரம். கல்வி, கொடைத்தன்மை என்ற ஆறும் மறைவழியே ஒழுகுபவர் களுக்கு அழகு' என்று தொடங்குகிறார்.

**''சென்றபுகழ், செல்வம், மீக்கூற்றம், சேவகம்**
**நின்றநிலை, கல்வி, வள்ளன்மை என்று**
**அளிவந்தார் பூங்குழலாய் ஆறும் மறையின்**
**வழிவந்தார் கண்ணே வனப்பு.''**

[சென்ற புகழ்-நெடுந்தூரம் பரவியபுகழ். மீக்கூற்றம்-மேலாக எடுத்துச் சொல்லும் சொல். சேவகம் நின்ற நிலை-வீரத்தில் நின்ற நிலை. வள்ளன்மை-ஈகை. அளி வந்து ஆர் பூங்குழலாய் - வண்டுகள் வந்து பொருந்தும் பூவை அணிந்த குழலைஉடைய பெண்ணே. மறையின்-வழி வேதநெறி. சைனத்திலும் மறைகளாகிய ஆகமங்கள் உண்டு.]

'அளி வந்தார் பூங்குழலாய்' என்றது மகடூஉ முன்னிலை.

ஆறு கருத்துக்களைச் சொல்லி ஆறு என்று எண்ணால் குறிப்பிடும் வழக்கத்தை முதற்பாட்டில் காணுவதைப் போலவே, வேறு சில பாடல்களிலும் காணலாம். 'இவை ஆறும் பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு' (13) என்று ஒரு பாட்டில் வருகிறது. அன்புடையார்களுக்கு உள்ள குணங்கள் ஆறு என்று கூறுகிறார் (68); அவை சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல், புணர்வு,

உவத்தல், நோதல், பிரிவில் கவறல் என்பவை. அன்புடையார் சாகும் நிலை வந்தால் தாமும் சாதல், அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தல், அவரோடு இனிய சொல் பேசி அளவளாவுதல், அவரோடு சேர்ந்து பழகி அதனால் மகிழ்ச்சி அடைதல், அவர் துன்புற்றால் தாமும் துன்புறல், அவர் பிரிந்தால் அதனால் கவலை அடைதல் என்பன அவை. இவற்றைச் சொல்லிவிட்டு, 'இந்த ஆறும் அன்புடையார்க்கு உள்ளன' என்று எண்ணிக்கையோடு சொல்கிறார்.

**''சாதல், பொருள்கொடுத்தல், இன்சொல், புணவுர்உவத்தல்**
**நோதல், பிரிவிற் கவறலே—ஓதலின்**
**அன்புடையார்க்கு உள்ளன ஆறு குணம் ஆக**
**மென்புடையார் வைத்தார் விரித்து.''**

[கவறல்-கவலை அடைதல், மென்புடையார்-மென்மையான இயல்பை உடையோர்.]

ஆறு கருத்துக்களைக் கூறவேண்டும் என்ற வரையறையை மேற்கொண்டவர் இவ்வாசிரியர் என்பதை ஏலாதி என்ற நூற்பெயர் தெரிவித்தாலும் எல்லாப் பாடல்களிலும் ஆறு கருத்துக்கள் தெளிவாகக் காணப்படவில்லை.

அவாவை அறுக்க வேண்டும் என்ற நீதியை ஒரு பாட்டில் சொல்ல வருகிறார் ஆசிரியர். 'அவாவை அறுக்கத் தொடங்கினவன் தளர்ச்சியை அடைய மாட்டான்; ஐம்பொறி வழியே செல்லும் அவாவை அறுத்தால் மிக்க அமைதியைப் பெறுவான்; ஒருவன் அவா அறாமல் இருப்பானானால் பொறிகளாகிய ஐந்து களிறுகளால் அலைக்கப்பட்டுக் குகைக்குள் செல்பவனைப் போலத் துன்புற்றுப் போவான்' (11)என்று சொல்கிறார்.

**அவா அறுக்கல் உற்றான் தளரான்; அவ் வைந்தின்**
**அவா அறுப்பின் ஆற்ற அமையும்;—அவா அறான்**

**ஆகும் அவனாயின் ஐங்களிற்றின் ஆட்டுண்டு**
**போகும் புழையுள் புலந்து.''**

இந்தச் செய்யுளில் மூன்றே கருத்துக்கள் வரு கின்றன.

அறிவுடையவர்கள் மெய்யையே பேசுவார்கள்; அது இல்லாதவர்கள் பொய், கோள், கடுமையான சொல், பயன் இல்லாத சொல் என்னும் நான்கையும் சொல்வார்கள். இந்தக் கருத்தை சொல்லும் பாடல் வருமாறு:

**''மைஎர் தடங்கண் மயில் அன்ன சாயலாய்,**
**மெய்யே உணர்ந்தார் மிகஉரைப்பர்;—பொய்யே,**
**குறளை, கடுஞ்சொல், பயன்இல்சொல் நான்கும்**
**மறலையின் வாயினவாம் மற்று.''**

*[உணர்ந்தார்-அறிந்தவர். குறளை-புறங் கூறுதல். மறலையின் வாயின-அறத்தை மறுத்த பொல்லாதவர் களின் வாயில் வருவன. மற்று: அசை.]*

இங்கே உணர்ந்தார் மெய்யைச் சொல்வார் என்றும் அல்லாதார் குறளை முதலிய நான்கைச் சொல்வார் என்றும் கூறினார். உணர்ந்தார் பேசுவன, மறலைகள் பேசுவன என்று இரண்டாகப் பிரித்து இதில் இரண்டு கருத்துக்கள் உள்ளன என்று சொல்லலாம்; அல்லது பேசுவனவற்றை எண்ணி, மெய், பொய், குறளை, கடுஞ் சொல், பயனில் சொல் என்று ஐந்தைச் சொன்னதாகவும் கொள்ளலாம். எப்படி ஆனாலும் ஆறு கருத்துக்கள் இதில் உள்ளன என்று சொல்ல இயலாது. மெய்யே உணர்ந்தார் என்று ஒன்றும், மிக உரைப்பர் என்று ஒன்று மாக இரண்டாக்கினால் ஆறு என்ற கணக்கு வரும். ஆனால் அவ்வாறு பிரிப்பதில் தனித்தனிக் கருத்து ஏதும் அமையவில்லை. ஒரு பாட்டில், ''இழிகதி இம்முறையான் ஏழு'' (67) என்று ஏழைச் சொல்கிறார். ஆகவே,

இப்பாடல்களில் உள்ள கருத்துக்கள் தெளிவாக ஆறே என்ற வரையறைக்குள் அடங்காமல் குறைந்தும் கூடியும் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளலாம். என்றாலும் பெரும்பாலான செய்யுட்களில் ஆறு கருத்துக்களே வருவதால் அந்தப் பெரும்பான்மை கருதி, ஆறு கருத்துக் களைச் சொல்லும் நூல் என்று சொல்லலாம்.

இவர் சைன சமயத்தவராதலின் கொலை, புலை இரண்டையும் நீக்க வேண்டும் என்பதைப் பல இடங் களில் வற்புறுத்துகிறார். கொலை செய்யவேண்டும் என்று எண்ணுதலும், அதைச் செய்தலும் வேறு வேறு குற்ற மாகக் கொள்வதற்குரியன என்பது இவ்வாசிரியர் கொள்கை. ஆகையால், "கொலைபுரியான், கொல்லான்" (2), 'கொல்லான் கொலைபுரியான்'' (14) என்று இரண் டையும் தனித்தனியே சொல்கிறார். கொலை புரிதல்— கொலை செய்வதை விரும்புதல்.

எல்லாத் தானங்களிலும் அன்னதானம் மிகச் சிறந்தது. இந்த நூலில் வரும் நீதிகள் பலவற்றிலும் மிகுதியாக இருப்பது பிறருக்கு உணவு அளிக்கும் அறம். இருபத்தைந்து பாடல்களில் ஊணுதவும் அறத்தைச் சொல்கிறார். ஏதும் அற்ற வறியவர்களுக்கு உண்டி, உறையுள், உடுக்கை கொடுக்கிறவர்களையே, 'பண்டித ராய் வாழ்வார்' என்கிறார் (9); ஈத்து உண்பவனைத் தேவாதி தேவனாகத் தேறவேண்டும் என்று சொல்கிறார் (32); பிறருக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்தவர்கள் தேவர்களால் விரும்பப்படுவார்களாம் (36); பசி நீக்கு பவன் விண்ணிலே உயர்வு பெறுவான் (40); பிறருக்கு உணவு ஈந்தவன் அரச பதவியைப் பெறுவான் (42); முனிவர்களுக்கு உணவு வழங்குபவன் மாளிகையில் வாழும் வாழ்வு பெறுவான் (43); நல்ல சோற்றைப்

பிறருக்கு வழங்கிப் பிறகு உண்பான் அரசனாகிப் புகழ் பெறுவான் (44); குற்ற மற்ற உணவை வழங்கியவன் அரசாட்சி செய்து வெற்றி பெறுவான் (45); பிறருக்கு ஈந்து உண்பவன் ஏதும் இலா மண் ஆண்டு குடியுடன் வாழ்வான் (46, 47, 48, 51); தவமுடையாருக்கு உணவு வழங்கினவன் குபேரனாக வாழ்வான் (49); அன்புடன் அசனம் கொடுத்தவன் துணைவியுடன் இன்புற்று வாழ்வான் (50); ஊண் ஈந்தவர் பல்யானை மன்னராய் வாழ்வார் (52); தம் வீட்டில் ஊண் ஈந்து உண்பார் படைப் பலம் உடையவராய் வாழ்வார் (53); ஊண் ஈந்து வாழ்வார் பெருஞ்செல்வம் எய்துவர் (55); நாவலந்தீவை ஆள்வர் (56); அருந்தவர்க்கு ஊண் ஈந்தார் வையமும் வானும் ஆள்வர் (70); இவ்வாறு பலபடியாக அன்ன தானத்தால் உண்டாகும் நற்பலன்களைச் சொல்வார்.

ஒரு பாட்டில் இன்னார் இன்னாருக்கு உணவு வழங்குபவன் நன்றாக வாழ்வான் என்று சொல்கிறார் வழி நடப்பவருக்கும், பாரம் சுமப்பவருக்கும், நோயுற்றுப் படுத்திருப்பாருக்கும், உறவினர்களுக்கும், தேவர்களுக்கும், மாறுபட்டவர்களுக்கும் உணவு வழங்குவதை அங்கே குறிக்கிறார் (71).

**"நடப்பார்க்குஊண், நல்ல பொறைதாங்கி னார்க்குஊண்,**
**கிடப்பார்க்குஊண், கேளிர்க்குஊண்கேடுஇன்று உடல்சார்ந்து**
**வானகத்தார்க்கு ஊணே, மறுதலையார்க்கு ஊண்மைத்தான்**
**தான்அகத்தே வாழ்வான் தக"**

இப்படி எண்பது பாடல்களில் பல வகை நீதிகளைச் சொல்லும் இந்த நூல் மாந்தருக்கு நோய் நீக்கும் மருந்து போல உதவுவது.

# 38. கைந்நிலை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அதிகமாகச் சிதையுற்றுக் கிடைத்த நூல் கைந்நிலை. இதை ஏட்டுச் சுவடியிலிருந்து அறிந்து ஆராய்ந்து முதல் முதலில் பதிப்பித்தவர் அமரர் இ. வை. ஆனந்தராமையர். கைந்நிலை கிடைக்காததற்கு முன்பு, 'இன்னிலை' என்ற பெயருடன் ஒரு நூலை வெளியிட்டார். அது பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்தது என்றும் எழுதினார். ஆனால் அது பல பாடல்களின் தொகுப்பே என்பதும், பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்தது கைந்நிலையே என்பதும் பின்பு ஆராய்ச்சியினாலே தெளிவாயின.

கைந்நிலை என்பதற்கு ஒழுக்கம்நிற்றலைச் சொல்வது என்று பொருள் கொள்ள வேண்டும். இங்கே ஒழுக்கம் என்பது ஐந்திணைக்கும் உரிய ஒழுக்கம்.

இந்த நூலை இயற்றியவர் மாறோக்கத்து முள்ளி நாட்டுக் காவிதியார் மகனார் புல்லங்காடனார். மாறோக்கம் என்பது பாண்டி நாட்டுக் கொற்கையைச் சூழ்ந்துள்ள பகுதி. அதில் ஒரு பிரிவு முள்ளி நாடு. அங்கே வாழ்ந்த ஒருவர் காவிதி என்னும் பட்டத்தை அரசனால் பெற்றுச் சிறப்புற்றார். அவர் இயற்பெயரைக் கூறாமல் காவிதியார் என்றே அவரை வழங்கினர். அவருடைய

புதல்வர் இந்நூலாசிரியராகிய புல்லங்காடனார்.

இந்த நூல் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் ஐந்திணைகளை அமைத்து, ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு வெண்பாக்களாக அறுபது பாட்டுக்கள் உள்ளதாக இயற்றப் பெற்றது. இதில் உள்ள பாடல்களில் 42 பாடல்களே முழுவடிவத்துடன் கிடைக்கின்றன. மற்றவை பலவகையில் சிதைந்துள்ளன.

இதற்கு ஒரு பழைய உரை உண்டு; ஆனால் முற்றும் கிடைக்கவில்லை.

காதலன் குறித்த காலத்தில் வரவில்லை. பிரிவு தாங்காமல் காதலி வருந்துகிறாள். அவள் நெஞ்சு நடுங்குகிறது. தன்னுடைய தோழியைப் பார்த்துப் பேசுகிறாள்.

காதலன் மலைக்குத் தலைவன். அவனுடைய மலைச் சாரலில் தினையைப் பயிர் செய்வதுண்டு. காட்டு மரங்களை எரித்து விட்டு அந்த இடத்தை உழுது தினையை விளைப்பார்கள். அந்தப் புனம் வெந்த புனம். அங்கே மலையிலிருந்து விழும் அருவி நீரைப் பாய்ச்சுவார்கள். அருவி நீரில் மலையின் மேலிருந்து சந்தன மரங்கள் உருண்டு வரும். அருவி நீரோடு சந்தன மரத்தின் துண்டுகள் வெந்த புனத்திலே பாயும். அப்போது சந்தனத்தின் வாசனை கம்மென்று மணக்கும். பல மரங்கள் வெந்து, கரியும் சாம்பலுமாக இருந்த புனத்தில் இப்போது அருவி நீரில் வந்த சந்தனக் கட்டையால் நறுமணம் வீசுகிறது. இது காதலனாகிய தலைவனுடைய மலையில் நிகழும் நிகழ்ச்சி.

தலைவன் என்ன செய்கிறான்? "நான் நிச்சயமாக வருவேன்" என்று சொல்லி விட்டுப் போனவன் வரவில்லை. இது வஞ்சகம் அல்லவா? இனி அவன் வரமாட்டானே!

இதை நினைத்தால் தலைவியின் நெஞ்சம் நடுங்குகிறது. இதை அவள் தோழிக்குச் சொல்கிறாள்.

**"வெந்த புனத்துக்கு வாசம் உடைத்தாகச்**
**சந்தனம் ஏந்தி அருவி கொணர்ந்துஇடூஉம்**
**வஞ்ச மலைநாடன் வாரான்கொல்? தோழி, என்**
**நெஞ்சம் நடுங்கி வரும்."**

தலைவனுடைய மலையைப் பற்றிச் சொல்லும்போது அங்குள்ள அருவியின் செயலைச் சொல்கிறாள், இவ்வாறு வரும் வருணனைகள் தலைவனுடைய மலையின் வளப்பத்தைச் சொல்வதற்காக மட்டும் அமைந்தவை அல்ல. அவை சில குறிப்பை உணர்த்தும். அத்தகைய குறிப்புக்களால் அந்த அடைகளாகிய வருணனைகளை இறைச்சி என்றும் உள்ளுறை உவமம் என்றும் இலக்கணம் சொல்கிறது. வருணனைகளை உவமையாக வைத்து உவமேயத்தை வெளிப்படையாகச் சொல்லாமல், தலைவன் முதலியோர் செய்கைகளைக் குறிப்பனவாகக் கொண்டு, வருணனையில் வரும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உவமேயத்தைப் பொருத்திக் காட்டும்படி அமைந்தால் அது உள்ளுறை உவமம் என்று சொல்லப் படும். 'எருமை தாமரை மலர் உள்ள குளத்தைக் குழப்பி விட்டு வைக்கோல் போரை மேய்ந்து கொம்பில் வைக்கோல் தொங்க வரும் ஊரையுடையவனே' என்று, பரத்தையிடம் போய் விட்டு வந்த ஒரு தலைவனைப் பார்த்துத் தோழி சொல்வதாகப் பாட்டு வரும். அங்கே எருமை தலைவனுக்கும், தாமரை தலைவிக்கும்; குளம் அவள் வாழும் வீட்டுக்கும், வைக்கோற் போர் பரத்தைக்கும் உவமைகள், 'தலைவியும் அவர் வீட்டிலுள்ளாரும் கலக்கம் அடையும்படி செய்து விட்டுப் பரத்தையர் வீடு சென்று இன்புற்ற பிறகு, அந்த அடையாளங்களுடன் வருகிறவனே!' என்று குறிப்பாகப் புலப்படுத்துகிறாள் தோழி.

இதுதான் உள்ளுறை உவமம். பாட்டில் உள்ள வருணனைப் பகுதி ஒவ்வொன்றுக்கும் சரியாக உவமேயத்தில் ஒவ்வொரு பகுதி குறிப்பாகப் புலப்படும்.

இறைச்சியும் இப்படி வந்தாலும் நிகழும் நிகழ்ச்சியையே புலப்படுத்தாது அதற்கு மேல் இன்னது செய்ய வேண்டும் என்ற கருத்தையும் சேர்த்துத் தெளிவிக்கும். உவமேயத்தில் இராத ஒரு கருத்தைப் புலப்படுத்தும்.

**''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே''**

என்று தொல்காப்பியம் இலக்கணம் வகுக்கிறது. அங்கே, பொருள் என்றது உவமேயத்தை.

இப்போது நம் பார்த்த பாட்டில் இறைச்சி அமைந்திருக்கிறது.

தலைவியினுடைய மனம் வெந்த புனம் போல இருக்கிறது; குளிர்ச்சி இல்லை. தலைவன் அருவி போல வந்து அவளுக்கு இன்பமாகிற நறுமணத்தை ஊட்ட வேண்டியவன் ஆனால் அப்படிச் செய்யவில்லை. 'தன் மலை அருவி வெந்த புனத்துக்கு வாசம் ஊட்டும் சந்தனத்தைத் தருவது போல வருந்திய என் மனத்துக்கு உவகை ஊட்டும் செயலைச் செய்ய வேண்டாமோ!' என்ற விருப்பத்தை இந்த அடைகள் காட்டுகின்றன தலைவன் இன்னது செய்கிறான் என்பதை இது குறிக்கவில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. அவன் செய்வதற்கு உவமையாக இருந்தால் உள்ளுறை உவமம். அவன் அருவியைப் போல இருந்தாலும் அவன் இனி இது செய்ய வேண்டும் என்பதை மேலே ஆய்ந்து கொள்ளும்படி அமைந்திருப்பதால் இது இறைச்சி ஆகும். இப்படி அகத்துறைப் பாடல்களில் வரும் இடங்கள் பல உண்டு.

பரத்தையிடம் சென்ற தலைவனைப் பற்றி, "நல்லவன் அவன்; அவனை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று, பாட்டுப் பாடும் பாணன் தலைவியிடம் தூதாக வந்து சொல்லுகிறான். பாணன் தலைவனுக்கு உடந்தையாக இருப்பவன். அவனைக் கண்டு தலைவிக்குக் கோபம் வருகிறது.

'ஏ பாணனே! நீ யாரிடம் வந்து காது குத்துகிறாய்? வெள்ளம் பாயும் ஊரையுடைய தலைவனது நிலைமையையும் இயல்பையும் யாருக்குச் சொல்கிறாய்? நீ சொல்வதைக் கேட்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய்? உனக்கு அவன் நல்லவனாகவே இருக்கட்டும். நீ அவனால் ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால் சாதித்துக் கொள். நீகூத்தாட்டுபவனாக இருந்து அவனை ஆட்டி வை; அதனால் கிடைக்கிறதைக் கொண்டு சாப்பிட்டுப் பிழை' என்கிறாள்.

**"நீத்தநீர் ஊரன் நிலைமையும் வண்ணமும்**
**யார்க்குஉரைத்தி பாண? அதனால் யாம் என்செய்தும்?**
**கூத்தனாக் கொண்டு குறைநீ உடையையேல்**
**ஆடடுவித்து உண்ணினும் உண்."**

'வெள்ளமாக நீர் பாயும் ஊரையுடைய தலைவன் இப்போதுள்ள நிலைமையையும், அவனுடைய இயல்பையும் யாருக்குச் சொல்லுகிறாய், பாணனே? அதைக் கேட்டு அதனால் நாங்கள் என்ன செய்வோம்? அவனைக் கூத்தாடுபவனாகக் கொண்டு, நீ ஏதாவது காரியம் உடையையானால் அவனைத் கூத்தாடச் செய்து அதனால் பிழைத்துச் சாப்பிடு என்பது இதன் பொருள். நீத்த என்பதற்கு என்னைப் பிரிந்து சென்ற என்றும் பொருள் கொள்ளலாம்.

இந்நூலின் கடைசிப் பாட்டு மங்கலமாக முடிகிறது. பிரிந்து சென்ற தலைவன் வந்து விட்டதைத் தோழி தலைவிக்குச் சொல்கிறாள்.

'அவனுடைய பிரிவால் உன் உடம்பில் உண்டான பசலை போய் விட்டது. இதோ அவனுடைய தேர் வந்து விட்டது. பாண்டியனுடைய கொற்கைக் கடற்கரை வழியாக வருகிறது தேர். அங்கே உள்ள பறவைகள் பறந்து ஓடும்படி தேர் வந்து விட்டது. அரசர்களைப் போரில் வென்று வெற்றி மாலை அணிந்து உன்னோடு சேர்வதற்காக வந்து விட்டான் காதலன்' என்று அவள் சொல்கிறாள்.

**''பொன்அம் பசலையும் தீர்ந்தது, பூங்கொடி**
**தென்னவன் கொற்கைக் குருகுஇரிய மன்னரை**
**ஓடு புறம்கண்ட ஒண்தாரான் தேர்இதோ**
**கூடல் அணைய வரவு.''**

[பொன்அம் பசலை-பொன்னைப் போன்ற நிறம் பெற்ற பசலை; இது தலைவர்களைப் பிரிந்த மகளிருக்கு அந்தப் பிரிவுத் துன்பத்தினால் உடம்பில் உண்டாகும் நிறம். தென்னவன்-பாண்டியன், குருகு இரிய-பறவைகள் பறந்து ஓடிப்போக. ஓடு புறம் கண்ட-ஓடும் போது காட்டும் புறத்தைக் கண்ட. கூடல் அணைய வரவு-உன்னோடு சேர்தலைப் பொருந்த வரும் வருகை. தேர் வரவு இதோ என்று முடிக்க வேண்டும்.]

இந்தத் தலைவன் போர்க்களத்தில் மன்னனுக்குத் துணையாகச் சென்று வெற்றி பெற்று வருகிறவன்.

இவர் கொற்கைப் பக்கத்தில் வாழ்ந்தவராதலின் கொற்கையையும், பாண்டி நாட்டவராதலின் பாண்டியனையும் பாட்டில் இணைத்துப் பாடினார்.

கிளியைத் தினைப்புனத்திலிருந்து மகளிர் ஓட்ட ஒரு பக்கம் மான் வந்து துள்ளுகிறது. குரங்குகள் பலா,

பழத்தை உண்ணுகின்றன. பிற கனிகளைச் சுவைக் கின்றன. தினையின் கதிரில் தேன் ஒழுகுகிறது. அதைப் பெண் யானை உண்ண வருகிறது. மலைச்சாரற் சோலை களில் காட்டுப்பசுக்களும் மந்திகளும் துள்ளி ஓடுகின்றன. குரங்கு வாழைப் பழத்தைப் பறித்து வாயில் அடக்கிக் கொண்டு ஓடுகிறது. காந்தள் மலரைப் பாம்பு என்று யானை அஞ்சுகிறது. காட்டுப்பன்றி தோண்டிய புழுதியில் மயில் குடைகிறது—இவை இவர் காட்டும் குறிஞ்சி நிலக் காட்சிகளில் சில.

பாலை நிலக்காட்சிகள் வருமாறு:

கற்களைச் சூழ்ந்த இலைக்குவியலின் பக்கத்தில் வேடர்கள் சீழ்க்கை ஒலி செய்கிறார்கள். வேங்கை யானையைக் கொல்லுகிறது. யானைகள் நிலை கொள்ளாமல் ஓடுகின்றன. காட்டுப்பசு முழங்குகிறது. ஓமையின் செறிவில்லாத நிழலில் களிறு உறங்குகிறது. ஆந்தை குரல் எழுப்புகிறது. கதிரவன் வெங்கதிரை வீசுகிறான். ஆறலை கள்வர் திரிகின்றனர். அவர்கள் தம் கையில் வில்லும் அம்பும் ஏந்திய யமனைப் போல ஓடுகின்றனர் கானலை நீர் என்று எண்ணி மான்கள் ஓடுகின்றன.

இவர் காட்டும் முல்லையில் முல்லைக்கொடி பல்லைப் போல அரும்புகளை விடுகின்றது. குருந்த மரம் அரும்பு கிறது. கார் காலத்தில் முல்லை நிலம் வளம் பெறுகிறது. செங்காந்தளில் இரத்த நிறமுடைய மலர் தோன்று கிறது. மான்கள் தம் பிணைகளைத் தழுவுகின்றன. மேகம் முழங்குகிறது. கோவலர் கொன்றைக் குழல் ஊது கின்றனர். பிடவமும் குருந்த மரமும் அசோக மரமும் மலர்கின்றன. மயில்கள் கூவுகின்றன. மந்திகள் கைகட்டிக் குந்தியிருக்கின்றன.

கழனியில் உள்ள உழவர்கள் செய்யும் ஆரவாரத்தைக் கேட்டு எருமை ஓடிக் குளத்தில் பாயும் மருத நிலத்தில் நீர் நிலைகளில் கயலினமும் வராலும் பாய்வதைப் பார்க்கிறோம். வயல்களில் தாரா (வாத்து)ப் பறவைகள் மேய்கின்றன. தாமரைப் போதுபொய்கையில் மலர்கிறது. வயல்கள் வளம் பெற்றிருக்கின்றன. நீர் நாய்கள் பாய்ந்து ஓடுகின்றன. ஆம்பல், தாமரை, செங்கழுநீர் மலர்கள் வயல்களில் மலர்கின்றன. மாமரங்கள் வளர்கின்றன.

கடலும் அதைச் சார்ந்ததுமாகிய நெய்தல் நிலத்தில் கடலில் நாவாய் ஓடுகிறது. இறாமீனைக் குவிதது வைத்திருக்கிறார்கள். பனை மரத்தில் அன்றிற் பறவை வாழ்கிறது. அது தன் இணையைக் கூவி அழைக்கிறது. நாரை கடற்கரைச் சோலையில் மேய்கிறது. நெய்தல் மலர் கழியில் பூத்திருக்கிறது. புன்னை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. நண்டுகள் மணல் மேட்டில் உலவுகின்றன. அடும்பங் கொடி அந்த மேட்டில் படர்கிறது. இறாமீனையும் பிற மீன்களையும் உலர்த்துகிறார்கள். கொக்குகள் பறக்கின்றன. கடலில் நுரையோடு அலை மோதுகிறது. தாழம்பூ, கொக்கைப் போலத் தோற்றம் அளிக்கிறது.

இவ்வாறு ஐந்து திணையிலும் உள்ள இயற்கைக் காட்சிகளையும் சூழ்நிலையையும் அமைத்துக் காதல் நாடகத்தின் ஐந்து வேறு ஒழுக்க நிலைகளாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பவற்றை அழகிய பாடல்களில் எடுத்துக் காட்டுவது இந்தக் கைந்நிலை என்னும் அகத்துறை நூல்.

★★★

# எமது புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| பராசக்தி பாரதி | நெல்லை கிருஷ்ணன் | 24 00 |
| தேன்பாகு | வி. வா. ஜெகந்நாதன் | 7 00 |
| சகலகலாவல்லி | ,, | 10 00 |
| பேசாத பேச்சு | ,, | 12 00 |
| செந்தமிழ் நாடெனும் போதினிலே... | தி. பட்சிராஜன் | 25 00 |

அமுத நிலையம்